(276)

T. N. L. C.

Debates

Official Report

1984

Vol: 207 NO: 3

D
V211,32'N84
N84.207.3
143894

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 27, 1984—தொகுதி 207-எண் 3

Tuesday, 27th March 1984—Volume 207 - No. 3

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras - 600 009.

விலை ரூ. 2.75]

# பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் | 269—282 |
| 2. கவன ஈர்ப்பு— தமிழாசிரியர்கட்கு தலைமையாசிரியர் பதவி வழங்காததால் தமிழாசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து. | 282—285 |
| 3. அரசின் தீர்மானம்— கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது விவாதம். | 285—402 |
| 4 அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 403 |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1984 மார்ச் 27.

பங்குனி 14, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு-2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மாற்றியமைக்கப்பட்ட தேர்வு முறைகள்

*117 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர் பயிற்சிப் படிப்பு முறையில் 1972-க்குப் பிறகு, தேர்வு சம்பந்தமாக அரசு பின்பற்றும் நடைமுறை என்ன?

(இ) மாற்றியமைக்கப்பட்ட தேர்வுகளில் ஆண்டுதோறும் வெற்றி சதவீதம் குறையக் காரணம் என்ன?

(உ) 1980 ஆம் ஆண்டு, தேர்வில் வெற்றி பெற்றோர் எத்தனை பேர்?

(எ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள், முதன்மைக் கல்வி அதிகாரி (மதுரை) அலுவலகம் முன் உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள் என்பது உண்மையா?

(ஐ) ஆம் எனில், இதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 1972-73 ஆம் கல்வி ஆண்டில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை நிறுத்தி வைக்கப்பட்டது 1973-74 ஆம் ஆண்டில் பயிற்சிப் பள்ளியில் சேர்க்கப்பட்டவர்களுக்கு, 1973-ம் ஆண்டிற்கு முன்பு நடைமுறையில் இருந்த ஆதாரக் கல்வி (Basic Education) மற்றும் சார்பற்ற ஆதாரக்கல்வி (Non-Basic Education) பாடத்திட்டங்களே தொடரப்பட்டு வந்தது. எனவே 1973-75 ஆம் ஆண்டு பயிற்சிக்கால முடிவில் 1973-க்கு முன்பு நடத்தப்பட்ட தேர்வு விதிகளின்படியே இவர்களுக்கும் தேர்வு நடத்தப்பட்டது. இதன்படி ஆதாரக் கல்விப் பாடத்திட்டத்தில் தேர்ச்சி பெற மாணவர் ஒருவர் பொதுவாக ஒவ்வொரு பாடத்திலும் 30 சதவிகிதம் மதிப்பெண்களுக்குக்

143894
சென்னை-600 008.
D
V2:11,32 M84
N84 · 2073

குறையாமலும் மொத்தத்தில் 35 சதவிகிதம் மதிப்பெண்களுக்குக் குறையாமலும் பெற்றிருத்தல் வேண்டும். சார்பு அற்ற ஆதாரக்கல்வி பாடத் திட்டத்தில் தேர்ச்சி பெற 'ஏ' பிரிவில் ஒவ்வொரு பாடத்திலும் 25 சதவிகிதம் மதிப்பெண்களும் அப்பிரிவில் மொத்தத்தில் 35 சதவிகிதம் மதிப்பெண்களும், 'சி' பிரிவில் ஒவ்வொரு பாடத்திலும் 20 சதவிகிதம் மதிப்பெண்களும், அப்பிரிவில் மொத்தத்தில் 30 சதவிகிதம் மதிப்பெண்களும், 'பி' மற்றும் 'டி' பிரிவுகள் இரண்டிலும் 35 சதவிகிதம் மதிப்பெண்களும் பெற்றிருத்தல் வேண்டும். பின் மேற்கண்ட இருமுறைகளையும் ஒருங்கிணைத்து 'முயற்சிப் பாடத்திட்டம்' (Try out Syllabus) ஒன்று 1975-76 ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் படி தேர்வில் வெற்றி பெற ஒவ்வொரு பாடத்திலும் ஒருவர் 50 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற வேண்டும். பின்பு 1977-78 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைக்கப்பட்ட புதிய பாடத்திட்டம் (Final Syllabus) முறைப்படுத்தப்பட்டது. இதன்படி தேர்வில் வெற்றி பெற ஒவ்வொரு பாடத்திலும் 50 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற வேண்டும்.

(இ) மாணவர்கள் தேர்வில் தெரிவிக்கும் விடைகள், செயல்முறைகள் (Performance) மீது மதிப்பெண்கள் அளிக்கப்படுவதால் தேர்ச்சி விழுக்காடு அவற்றையொட்டி கூடும் அல்லது குறையும். 1978, 1979, 1980 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் விழுக்காடு கீழ்க்கண்டவாறு கூடிக்கொண்டுதான் வந்துள்ளது :—

| வருடம். | வெற்றி பெற்றவர் சதவீதம். |
|---|---|
| மே 1978 | 38.5 சதவிகிதம். |
| மே 1979 | 39 சதவிகிதம். |
| மே 1980 | 46 சதவிகிதம். |

(உ) 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் நடைபெற்ற தேர்வில் ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் மூலம் தேர்வு எழுதியவர்கள் 1,716 பேர்; தேர்ச்சி பெற்றவர்கள் 790 பேர்.

(எ) ஆம்.

(ஐ) இக்கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவைகள் நிராகரிக்கப்பட்டு விட்டன.

**திரு. ம. சங்கரலிங்கம் :** உண்ணாவிரதம் இருந்த மாணவர்கள் வைத்த கோரிக்கைகள் என்ன? அதை நிராகரிக்கக் காரணம் என்ன?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவர்கள் எட்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதிலே ஒன்று பட்டயத் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான குறைந்த மதிப்பெண்களை 50 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்பது. அவர்கள் ஆசிரியர்கள் என்ற காரணத்தால் அது நிராகரிக்கப்பட்டுவிட்டது.

அக்டோபர் திங்களில் பரிட்சை நடத்த வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். இப்போது நமக்கு தேவைக்கு மேல் ஆசிரியர்கள் இருப்பதால், அக்டோபர் திங்களில் பரிட்சை வைப்பதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களையே விடைத் தாள்கள் திருத்த நியமிக்க வேண்டும் என்று கேட்டார்கள். இது ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிறது.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் போதிய அளவு ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து 30—35 என்று வைத்திருப்பதால், இரண்டு ஆசிரியர்கள் இருந்தாலே போதும் என்று வைத்திருக்கிறோம்.

ஆசிரியர்கள் கல்வி பட்டய வகுப்புப் பாட நூல்களை தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம் வாயிலாக வெளியிட வேண்டும் என்று கேட்டார்கள். தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனத்தில் இப்போது வேலை அதிகமாக இருப்பதால், இப்போது எடுத்துக்கொள்வதற்கில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆரம்பக் கல்விக்கான பரந்த நோக்கு குறித்த பயிற்று நிகழ்வுகளைப்பற்றி பயிலுவதை நீக்க வேண்டுமென்று கேட்டார்கள். இதுவும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை.

மற்ற பட்டய வகுப்பு மாணவர்களுக்கு அளிக்கப்படுவதுபோல் ஆசிரியர் பயிற்சி பட்டய வகுப்பு மாணவர்களுக்கும் உதவித் தொகை சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட நலத் துறையினரால் (Post Metric Merit Scholarship) உதவித் தொகை அளிக்கப்படுகின்றன என்பதால், அதைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

இரு பருவ முறையை ஆசிரியர் பட்டயப் பயிற்சி கல்விக்கும் நடைமுறைப் படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். அதை மாநில ஆசிரியர்கள் கல்வி வாரியம் ஏற்றுக்கொள்ளவில்லை.

[1984 மார்ச் 27

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சியில் அவர்கள் இரண்டு ஆண்டுகள் இன்டென்சிவ்வாகப் படித்த பிறகு 38.5 சதவீதமும், 39 சதவீதமும் வெற்றி பெறுகிறார்கள் என்றால், அந்தப் பயிற்சி அளிக்கிற முறையிலோ, அவர்கள் பயிலுகிற முறையிலோ ஒரு கோளாறு இருப்பதாக நாம் யூகிக்க முடிகிறது. கல்வித் துறையிலே இப்போது பயில விரும்புகிறவர்கள் அத்தனை பேரும் வெற்றி பெறுகிற நிலையில் அவர்கள் பயில வேண்டுமென்று நாம் நினைக்கிறபோது இந்தத் தொழில் பயிற்சியில் ஈடுபடுகிறவர்கள் 38.5 அல்லது 39 சதவீதத்தில் வெற்றி பெறுகிற நிலையில், ஏன் இந்த நிலை ஏற்படுகிறது என்பதைப்பற்றி ஆராயப்படுமா? அந்த ஆராய்ச்சியின் முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இப்போது நான் கூறுகின்ற மூன்று வருடங்கள் என்று சொல்லப்பட்டது, இதற்கு முன்னால் இருந்ததைவிட ஒரு முன்னேற்றமான நிலை. முன்னாலே 1974-ல் 20 சதவீதமும், 1975-ல் 32.3 சதவீதமும், 1976-ல் 29.1 சதவீதமும், 1977-ல் 22.8 சதவீதமும் தரப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது, 38.5 அல்லது 39 சதவீதம் என்பது அதைவிட முன்னேற்றமான நிலைமைதான். இருந்தாலும் இதற்கான காரணங்களை நாம் ஆராய வேண்டிய நிலை இருக்கிறதென்பதை நாம் ஏற்றுக்கொண்டு அதைப் பரிசீலிப்போம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இப்போது எல்லா இடங்களிலும் யார் யாரோ நினைத்த மாதிரியெல்லாம்—பெட்டிக் கடைகள் திறப்பதுபோல்—திறந்து கொண்டிருக்கிறார்களே. அதுபற்றி அரசு எடுத்துள்ள முடிவு என்ன? அவர்கள் எப்படியும் அனுமதி பெற்று விடுவோம் என்று மாணவர்களிடத்திலே சொல்லி பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை வசூலித்துக்கொண்டு, அவர்கள் ஒரு தொழில் போலவே செய்து கொண்டிருக்கிறார்களே. அதுகுறித்து அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதா? அதனுடைய விவரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே. அவர்களுக்கு நாம் அனுமதி தருவதாக இல்லை என்பதை பத்திரிகை வாயிலாக எல்லோருக்கும் தெரிவிக்கவும் செய்திருக்கின்றோம். ஆனால் அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே அரசைப் பொறுத்தமட்டில், நாம் வைத்திருக்கின்ற சில பள்ளிகளை மூடியிருக்கின்றோம். சிலவற்றில் ஓராண்டு விட்டு ஓராண்டுதான் நாம் மாணவர்களை எடுத்துக்கொண்டிருக்கிற நிலையில், புதிய பள்ளிகள் தேவை இல்லை. அப்படி நமக்கு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் தேவை என்றால், இப்போது இருக்கின்ற பள்ளிகளிலேயே



1984 மார்ச் 27]

வருடா வருடம் மாணவர்களைச் சேர்த்துக்கூட நாம் ஆசிரியர்களைப் பயிற்றுவித்துக்கொள்ளலாம். ஆக புதிய பள்ளிகளுக்கு அவசியம் இல்லை. அப்படி இதுவரை ஆரம்பித்திருக்கின்றவர்கள் அரசினுடைய அனுமதியைப் பெறவில்லை. அரசும் அனுமதியைத் தரவில்லை.

**செல்வி ஆ. லீலாவதி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், வெற்றி பெறுவதற்கு குறைந்த பட்ச மார்க் 50 சதவீதம் என்று சொன்னார்கள். ஆனால் இந்த மாநிலத்திலிருந்து கர்நாடக மாநிலத்துக்குச் சென்று 35 சதவீதத்தில் தேர்ச்சி அடைந்த ஆசிரியர்கள் தமிழ் நாட்டிலே வேலை பார்க்க ஏதுவாக இருக்கின்றார்கள். அதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கர்நாடகத்திலே பயிற்சி பெற்றவர்களுக்கு நாம் இங்கே ஆசிரியர் வேலை தருவதிலே ஒரு தடை ஏற்படுத்தியதன் காரணமே இதுபோன்ற நிலைமைகளினால்தான். ஆகவே இப்போது 50 மார்க் வாங்கியிருந்து பயிற்சி பெற்றிருப்பார்களேயானால், அவர்களுக்கு நாம் இந்தப் பணியிலே வாய்ப்பு தரலாமா என்பதுபற்றி இப்போது அரசு பரிசீலிக்கும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது ஆசிரியர் பயிற்சி என்பது பட்டயப் படிப்பாக ஆக்கப்பட்டிருக்கிறது. சான்றிதழாகக் கொடுக்கப்பட்டு வந்தது இப்போது டிப்ளமோ கோர்ஸ் ஆக ஆக்கப்பட்டு டிப்ளமோ தரப்படுகிறது. டிப்ளமோ தரப்படுவதன் காரணமாக பட்டயம் வாங்கக் கூடியவர்களுக்கு. பட்டதாரித் தொகுதியில் வாக்குரிமை இருப்பது போல் இந்தப் பட்டயம் பெற்றவர்களுக்கும் அத்தகைய உரிமை உண்டா? அதைப்பற்றி அரசின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அதைப் பொறுத்தமட்டில், எல்லா ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை தர வேண்டும் என்பதுதான் எண்ணம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, தனியாரால் நடத்தப்படும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு முழுமையான போதுமான மானியம் தராததின் காரணத்தாலே தேவையான ஆசிரியர்கள் நியமிக்காமல் ஒரு சில ஆசிரியர்களை வைத்துக்கொண்டு எல்லாப் பாடங்களையும் சிறப்பாக நடத்த முடியாத காரணத்தாலே, தேர்வு விகிதம் குறைகிறது என்ற கருத்து இருக்கிறதே. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா? என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்றைக்கு கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது விவாதம் இருப்பது குறிப்பாக ஆசிரியர் பிரதிநிதிகளுக்குத் தெரியும். ஆசிரியர் பிரதிநிதிகள் 12 பேர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார்கள். விவாதம் இன்றே முடிந்தாக வேண்டும். இதனால் கேள்விகளைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு துணை புரிய வேண்டுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, கர்நாடகத்திலே பயிற்சி பெற்றவர்கள் 50 சதவீதப் புள்ளிகள் பெற்றிருந்தால், அவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அது திருத்தப்பட்டிருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே கர்நாடக மாநிலத்திலே பயிற்சி பெற்றவர்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் என்ற முறையிலே அவர்களுக்கு இங்கே பணி அளிக்கப்பட்டு வந்தது. அது குறிப்பிட்ட ஒரு காலவரையறை செய்யப்படாமல் தி.உ.சொன்று அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆகவே இதை நம்பி பணி பார்க்க முடியுமென்று நம்பி ஏற்கெனவே பயிற்சி பெற்றுவிட்ட காரணத்தினாலே, அவர்களுக்கு முன்னாலே பலருக்குப் பணி அளித்திருக்கின்ற காரணத்திலே, இப்போது பின்னாலே ஒரு தேதியை அறிவித்து. அந்தத் தேதிக்கு மேலே பயின்று வருபவர்கட்கு செய்யமாட்டோம், இருப்பவர்களுக்கு வாழ்வளிப்போம் என்ற வகையிலே மீண்டும் அந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்து, அவர்களுக்கு வாழ்வளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கர்நாடகத்திலே போய் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 35 மார்க் வாங்கியிருக்கின்றார்கள் என்பது மட்டுமல்ல, இங்கேயே இருந்து கொண்டு, அங்கே போகாமல் பயிற்சி பெறாமலேயே சான்றிதழ்களை வாங்கிக் கொண்டு வந்துவிடுகின்றார்கள் என்ற புகார் வந்ததற்குப் பிறகு, நான் பெங்களூருக்குப் போயிருந்தபோது, அங்கே அமைச்சர் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்று அவர்களும் சொன்னதற்குப் பிறகுதான் நாம் இந்த உத்தரவைப் போட்டோம் அது நம்மை ஏமாற்றுகின்றதுபோல இருக்கிறது என்பது மட்டுமல்லாது, இங்கே முறையாகப் படித்து 50 மார்க்கு வாங்கி இரண்டு ஆண்டுக்காலம் பயிற்சி பெற்று, ஆசிரியர்கள் பணிக்காக போட்டி போடுகின்றபோது, அவர்கள் வந்து போட்டி போட்டு, கடைசியிலே முறையாகப் படித்தவர்களுக்கு வேலை கிடைக்காமல், அவர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படுகின்ற காரணத்தினாலேதான் நாம் போட்டோம். ஆனால் அதிலே உண்மையிலேயே நல்ல முறையிலே படித்து முறையாகப் பயிற்சி பெற்றிருப்பார்களேயானால், அவர்களைப் பொறுத்தமட்டில், இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்கிறேன்.





### தமிழாசிரியர்கட்குத் தேர்வுநிலை

* 118 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் மற்றும் திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்— .

(அ) தமிழாசிரியர்களுக்குத் தேர்வு நிலை கணக்கிடும்போது, இரண்டாம் நிலை பணிக்காலத்தினையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று, அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) தேர்வு நிலைக்கான நிபந்தனைகள் எல்லாப் பணிகளுக்கும் பொதுவானதாகும். ஒரு பணியில் தேர்வு நிலைக்கு வேறு பணியில் உள்ள காலத்தைக் கணக்கில் கொள்வதில்லை. எனவே இக்கோரிக்கை ஏற்கத் தக்கதல்ல என்று அரசு முடிவெடுத்துள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய இரண்டாம் நிலைப் பணிக்காலத்தை முதல்நிலைப் பணிக்காலமாக மாற்றிய பிறகு, இரண்டும் ஒன்றாகக் கருதப்பட்ட பிறகு, அந்தப் பணிக் காலத்தையும் சேர்த்து எடுத்துக்கொள்வதுதானே முறை. அதை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களை நாம் முதல் நிலைக்கு மாற்றுகிறோம். முதல் நிலைக்கு உயர்த்துகிறோம். அவ்வளவு தானே தவிர, வேறல்ல. நாம் இரண்டாம் நிலையிலே பணி புரிந்த காலத்தை முதல்நிலையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி நாம் அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. அப்படி ஏற்றுக்கொண்டிருந்தால், மற்ற எல்லாத் துறைகளிலும் இதுபோன்று பல்வேறு பிரச்சினைகள் வரும்.

### *B.E. Degree Course.*

* 119 Q.—Thiru M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) the number of Polytechnic students who were selected for admission to the First Year B.E. Degree Course (Regular) during 1981-82 and 1982-83; and

(b) whether there is any proposal with the Government, to reserve a certain percentage of seats in First Year B.E. Degree Course (Regular) for Polytechnic students?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 1981-82 மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளில் பொறியியற் பட்டப்படிப்புக்கு விண்ணப்பித்த பட்டயப்படிப்பு படித்த மாணவர்களின் எண்ணிக்கையும் அவர்களில் தேர்வு செய்யப் பட்டோரின் எண்ணிக்கையும் வருமாறு :—

| | விண்ணப்பித்தோர். | தேர்வு பெற்றோர். |
|---|---|---|
| 1981-82 | 119 | 11 |
| 1982-83 | 115 | 11 |

(இ) பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கையின்போது. தனியாகச் சில இடங்களை பட்டயம்பெற்ற மாணவர்களுக்கென ஒதுக்கும் கருத்துரு எதுவும் அரசிடம் இடையாது.

**திரு. ம. சங்காலிங்கம்:** தலைவர் அவர்களே, பாலிடெக்னிக்கில் மூன்று ஆண்டுகள் படித்து அதற்குப் பிறகு என்ஜினியரிங் கல்லூரியிலே அவர்கள் பி.ஈ. வகுப்பிலே சேர்வதற்கு விண்ணப்பம் செய்கின்றபோது. பாலிடெக்னிக் படித்தவர்களுக்கு முன் உரிமை கொடுக்கின்ற அல்லது ஒரு சதவிகிதத்தை ஒதுக்குகின்ற முறை இருந்தால்தான், ஹையர் செகண்டரி முடித்தவுடனே அல்லது எஸ்.எஸ்.எல்.சி. முடித்தவுடனே, பாலிடெக்னிக்குக்குப் போகின்ற ஒரு முறை உருவாகும். நாம் மேல்நிலைப் பள்ளிக்கு வந்த பிறகு, இன்றைக்கு கல்லூரிக் கல்விக்குள்ளேயே நுழையாமலே, தொழில் கல்வியிலே மாணவர்களை ஈடுபடுத்த. தொழில் பிரிவுக்குச் செலுத்த வேண்டும் என்று நினைக்கின்றபோது, இத்தகைய சதவிகிதத்தை ஒதுக்குவது சிறப்பாக அமையும். அதனை அரசு பரிசீலனை செய்து பாலிடெக்னிக் படிப்புக்கு தொழில் கல்வி கல்லூரிக்கு பி.ஈ. பட்டப் படிப்புக்கு விண்ணப்பிக்கின்றவர் களுக்கு ஒரு சதவிகிதம் ஒதுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, பாலிடெக்னிக்கில் படித்தவர்கள் மூன்று ஆண்டுக் காலம் படித்திருக் கின்றார்கள் என்ற நிலைமைகள் இருக்கின்ற காரணத்தினாலே, அவர்களுக்குப் பகுதி நேரப் பட்டப்படிப்புக்கு நாம் வழி செய்திருக்கிறோம். உண்மையிலேயே இந்த வாய்ப்பு தரவேண்டுமென்று கருதவோமேயானால், அவர்களுக்காக





என்று தரப்படுகின்ற வாய்ப்புக்களை அதிகப்படுத்தலாமே தவிர, மற்ற மாணவர்களுக்குக் கொடுக்கின்ற இடங்களிலே ஒதுக்குவது என்பது இப்போது இருக்கின்ற நிலையிலே இயலாத காரியம். ஏனென்றால், இதுபோலவே சி.பி.எஸ்.ஈ.-யிலே படித்த மாணவர்கள் இடத்தை ஒதுக்கச் சொல்கின்றார்கள். வேறு சில மாணவர்களுக்கு இப்படிக் கேட்டுக்கொண்டிருப்பதால், இன்றைய நிலையில் அது சாத்தியமில்லை.

## *B.Tech. (Textiles) Course.*

* 120 Q.—Thiru S. MUTHUSAMY: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether any percentage of seats has been reserved for Diploma (Textiles) candidates, for admission into B.Tech. (Textiles) Course in Dr. Alagappa Chettiar College of Technology, Guindy; and

(b) if so, the number of students admitted during the academic years 1980-81 and 1981-82?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *Apprentice Teachers.*

* 121. Q.—THIRU P. R. THOMAS (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the services of the B.T. Teachers, who had entered service between 1st April 1970 and 3rd March 1973, and who were subsequently selected by the Tamil Nadu Public Service Commission were regularised from the date of their first entering into service; and

(b) if so, whether such benefit will be extended to the B.T. Teachers also, who entered service as Apprentice B.T. Teachers, during 1st October 1970 to 30th September 1972 and subsequently selected by the Tamil Nadu Public Service Commission during 1973?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) பட்டதாரி பணி பழகும் ஆசிரியர்களுக்கு படிகள் எதும் இல்லாத (Consolidated Monthsy Emoluments) மொத்த மாதச்சம்பளமாக ரூ. 17 மட்டுமே அளிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் பணி பழகும் ஆசிரியராகப்

பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தப்படத் தகுதி பெற்றவர்கள் அல்ல. ஆனால், அவர்கள் "பள்ளி ஆசிரியர்" பதவியில் காலியிடம் ஏற்பட்டதால் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு பின் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின் அவர்களின் பணி முறையானப் பதவியில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் வரன்முறை செய்யப்படுகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, 1—4—1970 முதல் 3—3—1973 வரை 'பி' பிரிவு பள்ளிகளில் மட்டும் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணி வரன்முறை அளிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் 3—3—1973-க்குப் பிறகு சிறப்புத் தேர்வாணைக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியில் வந்து சேர்ந்தவர்களுக்கு, அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணி வரன்முறை மறுக்கப் பட்டிருக்கின்றது. இதனால் இரு சாராருக்குமிடையே முரண்பாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே 1—4—1973-க்குப் பிறகு நியமிக்கப்பட்டுள்ள அத்தனை பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்கள் முதலில் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே அவர்களுக்குப் பணி வரன்முறை அளிப்பதற்கு அரசு முன்வருமா? இந்த பணி பழகு ஆசிரியர்களுக்காக அவர்களுடைய பணிக் காலத்தைப் பொறுத்தவரையில், தேர்வுநிலை, சிறப்புநிலை போன்றவற்றிற்குக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கேள்வியினுடைய முதல்பகுதி நேற்று கேட்கப்பட்ட ஒரு கேள்வியிலேயே கேட்கப் பட்டிருக்க வேண்டும். இதுகுறித்து இப்போது என்னிடத்தில் விவரமில்லை. இரண்டாவது பகுதியைப் பொறுத்து, அந்த ஆசிரியர்களுக்கு அப்படிச் செய்கின்ற எண்ணம் அரசிடம் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே. தேர்வாணைக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டும், இதுவரை பணி வரன்முறை செய்யப் படாமலிருக்கின்ற ஆசிரியர்கள் நிலை வாரியாக எத்தனை பேர் என்ற குறிப்பு அமைச்சர் அவர்களிடத்திலே இருக்கிறதா? பல ஆண்டுகளாகப் பணி வரன்முறை செய்யப்படாமல் இருக்கக்கூடிய காரணங்கள் என்ன? அவர்கள் குறித்து அரசு எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் காலியாகவுள்ள இடங்களிலே தற்காலிகமாக முழு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தேர்வாணைக் குழுவினரால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, முதலிலே எந்தத் தேதியிலிருந்து அவர்கள் பணியிலே முழு ஆசிரியராக சேர்க்கப்பட்டார்களோ அந்தத் தேதியிலிருந்து அவர்களுக்குப் பணி வரன் முறைப்படுத்தப்படுகிறது. மற்ற பணிப் பழகு ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், 175 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த அந்தக் காலத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.



**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, பணிப்பழகு பி.டி. ஆசிரியர்கள் 175 ரூபாய் வாங்கிய காலத்தையும் தேர்வு நிலைக்குக் கணக்கிடும்போது சேர்த்துக்கொள்ளலாம் அல்லவா? அவ்வாறு சேர்த்துக்கொள்வதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அப்படிச் சேர்க்க ஆரம்பித்தால் வேறு பிரச்சினைகள் வருகின்றன. இரண்டாம் நிலை, முதல் நிலை ஆசிரியர்களின் பிரச்சினையும் இதுபோன்றதுதான். அப்புறம் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றிய அந்தக் காலத்தையும்கூட பி.டி. ஆசிரியர்களுக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டியது வரும். எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்லியிருக்கிறோம்.

## பாசனத்திற்குத் தண்ணீர் விடுதல்

*122 **வினா.—திரு. ம. சங்கரலிங்கம் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா சார்பில்) :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்திற்குட்பட்ட, உடுமலை வட்டத்திலுள்ள ஏழுகுளம் (Seven Tanks) ஆயக்கட்டிற்குட்பட்ட நிலங்களின் பாசனத்திற்கு, 1983 ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் இறுதிவரை தண்ணீர் விடப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** (அ) உண்மையல்ல.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே. பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத்திட்டம் பெரியார், கோவை மாவட்டங்களில் வேறு ஏதேனும் புதிய பகுதிகளுக்குப் பயனடையச் செய்கின்ற யோசனை அரசுக்கு உண்டா?

[1984 மார்ச் 27

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, தற்போது இருப்பதைவிட பெரியார் மாவட்டத்திலேயும், கோவை மாவட்டத்திலேயும், காங்கயம், வெள்ளக்கோயில், பொங்களூர் ஆகிய மூன்று தொகுதிகளுக் குட்பட்ட சுமார் 34,000 ஏக்கருக்குக் கூடுதலாகப் பாசன வசதி செய்யக்கூடிய செயற்குறிப்பு ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### நீர் நிர்வாகக் கழகம்

*123 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்:—

(அ) தமிழகத்தில் நீர் நிர்வாகக் கழகம் ஒன்றினை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலிருக்கின்ற நீர்நிலைகளை நாம் முடிந்த அளவிற்குப் பயன்படுத்திவிட்டோம். எனவே இருக்கின்ற நீரைச் சிக்கனமாகச்சேர்த்து வைத்து எப்படி ஜாக்கிரதையாகப் பயன்படுத்துவது என்று அறிவுரை வழங்குவதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறதா ?

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவரவர்களே, ஐக்கிய அமெரிக்க நாட்டு உதவியுடன் தமிழகத்தின் பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறை, மற்றும் ஏனைய துறை அலுவலர்களுக்கு பாசன நீர் நிர்வாகத்தில் பயிற்சி அளிக்க ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. Irrigation Management Training Institute என்ற பெயரில் துவக்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, வெள்ளக் காலங்களில் சில பகுதிகளிலே நீர் அதிகமாக வருகிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே கடைமடைப் பகுதிகளிலே ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வருகிறது. அங்கே வெள்ளத்தால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. தண்ணீரும் வீணாகிறது. அந்தப் பகுதியிலே வெள்ளத்தால் வரும் தண்ணீரைத் தேக்கி, பின்னாலே





அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த வாய்ப்புகளை ஏற்படுத்த முடியுமென்று வல்லுனர்கள் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, நமக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும், அந்த நீரை முறைப்படி பயன்படுத்தவும் ஏதாவது செயற்குறிப்பு, அதாவது நீர் நிர்வாகக் கழகம் என்று ஏற்படுத்த இல்லையென்றாலும், இனிமேலாவது அப்படி ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற பாதகத்திற்கு நீர் நிர்வாகக் குழு ஒன்றுதான் மாற்று என்று நான் கருதவில்லை. அதற்குப் பல்வேறு மாற்று ஏற்பாடுகள் இருக்கக் கூடும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற கருத்து அத்தகைய மாற்று ஏற்பாடுகளில் ஒன்றாக இருக்கக்கூடும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இருக்கக்கூடிய நிலங்களின் அமைப்பை எடுத்துக்கொண்டால், நீரைத் தேக்கி வைக்க நீர்த் தேக்கங்களை அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, இன்ஸ்டிடியூட் அமைப்பது நல்ல முயற்சி. வேறு எந்த மாநிலத்திலாவது அப்படி அமைத்திருக்கிறார்களா ? தமிழகத்தில் அந்த இன்ஸ்டிடியூட் எங்கு அமைய இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவரவர்களே, நான் முன்பே சொன்ன (Irrigation Management Training Institute) என்ற தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள பயிற்சி நிறுவனம் மகாராஷ்டிரத்தில் அவுரங்காபாத்திலுள்ள நீர் மற்றும் நில நிர்வாகத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. 1984 ஏப்ரல் முதல் இந்தப் பயிற்சிக் கழகத்தைத் துவக்க நாம் முன் வந்திருக்கிறோம். சென்னையிலுள்ள தரமணியில் அந்தப் பயிற்சி நிறுவனம் தற்போது நிறுவப்பட்டாலும், இந்த நிறுவனத்தை சென்னை அல்லாத வேறு பகுதியில் மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது. பெரும்பாலும் திருச்சியை அதற்காகத் தேர்ந்தெடுக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, வீணாகின்ற தண்ணீரை தேக்கி வைக்கத் தஞ்சை மாவட்டத்திலே அணைகள் கட்ட வழியில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். குறிப்பாக காவிரி ஆற்றிலே இடைஇடையிலே பத்து இடங்களிலே தடுப்புகளை ஏற்படுத்தி, அந்தத் தண்ணீர் வேகமாகச் செல்லாமல் தடுப்புகளை ஏற்படுத்தி, பின்னால் அதைப் பயன்படுத்த வாய்ப்பு இருப்பதாக பொறியியல் வல்லுனர்கள் கருத்து தெரி

வித்திருக்கிறார்கள். குறிப்பாக கடைமடைப் பகுதியிலுள்ள அலங்கள் என்ற பகுதி திட்டாக, தண்ணீர் இல்லாமல் காய்ந்து கிடக்கிறது. அந்தப் பகுதியிலே தண்ணீரைத் தேக்கி வைத்து, பம்ப்செட் மூலமாக பாசனத்திற்குப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் கருத்திற்கொண்டு அரசு செயற்குறிப்பைத் தயாரிக்குமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** இப்போது வெள்ளத் தடுப்புக்கு என்று தனியாக சிறப்பு தலைமைப் பொறியாளரை தமிழக அரசு நியமித்திருக்கிறது. அவர், தஞ்சையைத் தலைமையகமாகக் கொண்டு பணியாற்றுகிறார். அவரிடம் மாண்புமிகு உறுப்பினரவர்களின் யோசனையை எடுத்துச் சொல்லி, எவ்வளவு தூரத்திற்கு அது சாத்தியக்கூறானது என்பதைக் கண்டறிந்து, தேவைப்பட்டால் உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் (*) உடுக்குறி, அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. கவன ஈர்ப்பு.

### தமிழாசிரியர்கட்கு தலைமையாசிரியர் பதவி வழங்காததால் தமிழாசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்:

"தமிழாசிரியர்கட்கு தலைமையாசிரியர் பதவி வழங்க நீதி மன்றத்தின் தீர்ப்பு வந்த பிறகும், உயர்நிலைப் பள்ளியிலும், மேல் நிலைப் பள்ளியிலும் வழங்கப்படுவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காததனால் தகுதியுடைய தமிழாசிரியர்கள் நூற்றுக் கணக்கில் பாதிக்கப்படுவது குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 403-404 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. செ. முத்துசாமி:** அரசு உத்தரவு வெளியிடுவதற்கு முன்னதாகவே அரசின் கவனத்திற்கு வர வேண்டும் என்பதற்காக இதைக் கொடுத்திருக்கிறேன். ஆனாலும் காலம் தாழ்த்தி உத்தரவு வழங்கிய பிறகு இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதிலைத் தந்திருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றத் தகுதி உண்டு, அவர்கள் முன்பு பணியாற்றிய சர்வீசையும் கணக்கில் எடுத்து தலைமையாசிரியர் பதவியை வழங்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தமிழ் ஆசிரியர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி வழங்க வேண்டுமென்ற கருத்தை ஒப்புக்கொண்டு ஏற்கெனவே இதுபற்றி அறிவித்திருக்கிறார்கள். ஆனாலும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக அரசு அப்பீல் செய்திருப்பதன் நோக்கம் என்ன? உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தவறு என்று கருதி அவ்வாறு கல்வித் துறை அப்பீல் செய்திருக்கிறதா? அவர்கள் பி.டி. பட்டம் பெற்றதற்குப் பிறகும் தலைமையாசிரியர் பதவி அளிக்காமல் வேறு ஏதாவது பட்டம் இன்னும் பெற வேண்டுமென்று அரசு கருதுகிறதா? ஏற்கெனவே அவர்கள் தமிழைப் படித்து, தமிழைப் பயிற்றுவித்து வருகிறார்கள். அவர்களுடைய பழைய சர்வீசைக் கணக்கில் எடுத்து தலைமையாசிரியர் பதவி அளிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் என்ன தவறு இருக்கிறது? ஏன் கல்வித் துறை அப்பீலுக்குச் சென்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** டிப்ளமா பெற்று ஆசிரியராகப் பணியாற்றிய பணிக் காலமும், பட்டம் பெற்று ஆசிரியராகப் பணியாற்றிய பணிக் காலமும் சமமாகக் கருதப்பட வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவு போட்டிருக்கிறது. அரசைப் பொறுத்தவரையில், எந்த நிலையிலும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தகைய நிலைமைகளையும் உண்டு பண்ணவில்லை. ஆகவே அதைத்தான் நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். உயர்நீதி மன்றத் தீர்ப்பு வந்திருப்பதால், உத்தரவைச் செயல்படுத்தியிருக்கிறோம். உயர்நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், அப்பீல் செய்கின்றபோது அப்பீலில் என்ன கருத்தைச் சொன்னார்கள் என்று தெரியாது. மேலும் அதைப்பற்றி நாம் பரிசீலிப்பதற்கு கால அவகாசமும் தேவைப்படுகிறது.

**திரு. செ. முத்துசாமி:** தெளிவாக நான் ஒரு கேள்வி கேட்டேன். தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தெளிவாகத்தான் நானும் பதில் சொன்னேன். பட்டயப் படிப்பு என்பது வேறு. பட்டப் படிப்பு என்பது வேறு.

[1984 மார்ச் 27

திரு. செ. முத்துசாமி : தெளிவாக மீண்டும் வலியுறுத்தி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்கு நன்றி. தமிழ் ஆசிரியர்கள் பழைய நிலையில் மீண்டும் அதே பி.டி. பயிற்சியைப் பெற்ற பிறகு மீண்டும் அதே தமிழைத்தான் போதனா முறையில் சொல்லித் தருகிறார்கள். அப்படி இருக்கும்போது, இன்னும் ஐந்து ஆண்டுக் காலத்தில் அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்று கல்வித் துறையைக் கேட்டேன். கல்வித் துறையிலிருந்து பதில் இல்லை. அதே சமயத்தில் தற்காலிகமாக என்று சொல்லித் தந்திருக்கிறார்கள். மீண்டும் பத்து ஆண்டுக் காலம் சர்விஸ் ஆனால்தான் தலைமையாசிரியர் பதவியைத் தருவோம் என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள். அப்படியானால் தமிழ் மொழியைப் படித்தவர்களை வைத்து சொல்லிக் கொடுக்காமல் பி.டி. ஆசிரியர்களை வைத்துத்தான் சொல்லித் தர வேண்டுமென்று வலியுறுத்துகிறார்களா ? ஆகவே அவர்களுடைய பயிற்சியையும் சர்வீசையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி தர கல்வித் துறைக்கு மனம் இல்லையா ? அப்படி என்றால் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு என்ன பொருள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பட்டயப் படிப்பையும் பட்டப் படிப்பையும் சமப்படுத்துகின்ற நிலை இருப்பதால், அரசு இதில் யோசனை செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் தமிழ் ஆசிரியர், தமிழ் ஆசிரியர் என்று பொதுவாகப் பேசிக் கொண்டிருப்பதால், இந்த அவைக்கு ஒரு தெளிவான கருத்தைச் சொல்வதாகாது. கொடுக்கக்கூடாது என்ற எண்ணமும் நமக்கு இல்லை. இதைப்பற்றி நான் முன்பே பல நிலைகளில் சொல்லி வந்திருக்கிறேன். தமிழ் ஆசிரியர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி கொடுக்கக் கூடாது என்பதல்ல நம்முடைய நோக்கம். கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆனால் முதலில் இதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க வேண்டும். காரணம் இது ஒரே ஒரு பிரிவினருக்கு வரக்கூடிய சலுகை அல்ல. இதைப் போல பல்வேறு பிரிவினர் பணியில் இருக்கிறார்கள். தவிரவும் இப்போது டிப்ளமோ படித்த என்ஜினியர்களும், டிகிரி படித்த என்ஜினியர்களும் இருக்கிறார்கள். ஆகவே இதிலிருந்து அதில் நாம் செல்லும்போது, பல்வேறு நிலைகளை எல்லாம் பரிசீலித்துப் பார்த்து முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு ஆதரவாக உறுப்பினர் பேசுகிறார் என்றால், வலியுறுத்துகிறார் என்றால், அவருடைய கடமையை அவர் செய்து கொண்டிருக்கிறார். ஆனால் இதுகுறித்து முடிவு காணும்போது ஒரு அமைச்சர் என்கிற முறையில் அல்லது ஒரு அரசு என்கிற முறையில்





பதில் சொல்லும் போது, ஒரே ஒரு பிரிவினருக்காக மட்டும் பதில் சொல் இன்ற நிலையில் யாரும் இருக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. அரசின் தீர்மானம்.

### கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது விவாதம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, "சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்விபற்றிய கொள்கைக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இன்று 12 பேர் பேச வேண்டியிருக்கிறது. இன்றைக்கே இது பற்றிய விவாதம் முடிய வேண்டும். உறுப்பினர் நேரத்தை நிர்ணயித்துக் கொண்டாலொழிய வேறு வழியில்லை. உறுப்பினர்களுக்கு 10 நிமிடங்களும், கட்சித் தலைவர்களுக்கு 20 நிமிடங்களும், எதிர்க் கட்சித் தலைவருக்கு முப்பது நிமிடங்களும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. தயவு செய்து உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. அருணாசலம் பேசுவார்.

(திரு. முத்துசாமியும் திரு. மீனாட்சிசுந்தரமும் எழுந்தனர்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒருவர் மட்டும் சொல்லுங்கள்.

(முற்பகல் 10-30)

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்போதுமே நீங்கள் தலைவராக வந்ததிலிருந்து நடைமுறை ரீதியாக கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்தில் இரண்டு நாள் வழக்கமாக ஒதுக்குவது வழக்கம். இந்த ஆண்டு மட்டும் ஒரே ஒரு நாள் என்ற காரணத்தை அறிய முடியவில்லை. கல்விப் பிரச்சினைகள் குறைந்துவிட்டதா ? கல்விப் பிரச்சினைகள் தொடர்ந்து இருப்பது. இது உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், சமுதாயத்திற்கும் இருப்பது. இன்றைக்கு திடீரென்று ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதா? அல்லது

---

@ 405-480 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கல்விப் பிரச்சினைகள் குறைந்துவிட்டனவா ? இரண்டு நாள் விவாதம் என்பதை ஒரு நாளாக்கி விட்டீர்களே, ஆகவே தாங்கள் பெருந் தன்மையுடன் இரண்டு நாள் விவாதம் நடக்க ஆணையிடும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பிரச்சினைகள் ஏராளம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, இதிலே தலைவருடைய பெருந்தன்மை ஒன்றும் வரவில்லை. குறைவும் இல்லை. அலுவல் ஆய்வுக் குழுவினர் நன்றாக ஆலோசனை செய்து, விவாதித்து இந்த மாதிரி முடிவுக்கு வந்திருக்கின்றனர். ஒரு நாள் நஷ்டத்தை ஈடுகட்ட கூடுதலாக இரண்டு மணி நேரமோ ஒரு மணி நேரமோ விவாதத்தை நீட்டித்துக் கொடுக்கலாம். அதுதான் தலைவராகிய நான் செய்யக் கூடியது. அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவை இந்த நேரத்தில் மீறுவதற்கில்லை. நேரம் நீட்டிக்கப்படும் என்ற உறுதியை அளிக்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே சில நெருக்கடியான காரணங்கள் வந்தபோது சில தலைவர்களையும் அழைத்துப் பேசி சில நேரங்களில் ஒரு நாள் கூடுதலாகத் தந்திருக்கிறீர்கள். இங்கே அவை முன்னவரும், எதிர்க் கட்சித் தலைவரும், மற்ற எல்லாரும் இருக்கிறார்கள். தயவு செய்து இந்தக் கொள்கையில் விவாதம் செய்ய மேலும் ஒரு நாள் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தாங்கள் சொன்ன மாதிரி நெருக்கடி யொன்றுமில்லை. நேரத்தை நீட்டி உதவிபுரிகிறேன்.

**திரு. க. அருணாசலம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நான் முதலில் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சொன்னவைகளையே திரும்பத் திரும்பச் சொல்லாமல் சுருக்கமாக என்னுடைய கருத்துக்களை தங்கள் முன்பு வைக்க விரும்புகிறேன்.

1984-85-ல் ரூ. 402 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இது மொத்தத்தில் 21 சதவீதம் ஆகிறது. முந்தைய கணக்குகளைப் பார்த்தால், 1980-81-ல் 23 சதவீதமாகவும், 1981-82-ல் 22 சதவீதமாகவும், 1983-84-ல் 21.5 சதவீதமாகவும், இப்போது 21 சதவீதமாகவும் இருந்து வருகிறது. இந்த முறையில் போனால் கல்விக்கு ஒதுக்குகிற பணம் குறைந்து கொண்டே வருகிறது. இதை மனதில் வைத்து கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கல்வியின் மூலமாகத்தான் மனிதனை உயர வைக்க



முடியும், அதன் மூலமாக நாட்டை உயர்த்த முடியும் என்ற கருத்தில் இந்த ஒதுக்கீடு அதிகம் குறைந்து போகாமல் மேலும் உயர்த்த முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு ரூ. 402 கோடி ஒதுக்கியதில் ரூ. 334 கோடி தொடக்கக் கல்விக்காக ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது. சென்ற ஆண்டுகளைவிட இப்போது 38 ஆயிரம் பள்ளிகள் இருக்கின்றன. இதில் 1,80,000 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்கள் ஒன்று முதல் எட்டு வகுப்பு வரை பணியாற்றுகிறார்கள். இதில் மாணவர்கள் 90 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். சராசரி ஒரு ஆசிரியருக்கு 50 மாணவர்கள் வீதம் இருக்கிறார்கள். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஒருமுறை பேசும்போது 100—200 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்றார்கள். என்ன செய்வது, பழைய காலத்தில் இருந்த முறைகள் தொடருகின்றன என்று ஒருமுறை சொன்னதாக நினைவு இருக்கிறது. இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால், 50 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் வீதம் இருக்கிறார்கள். சில இடங்களில் வேண்டுமானால் அதிகம் இருக்கலாம். நான் ஒரு யோசனையை ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். (மானிடோரியல் சிஸ்டம்) என்று முன்பு நம் நாட்டில் இருந்தது. அது இங்கிருந்து இப்போது லண்டனுக்குச் சென்றுவிட்டது. அந்த முறையை இங்கே பரிசீலிக்க முடியாது என்று அமைச்சர் சொன்னார்கள். ஆனால் நமக்குக் கொடுத்திருக்கிற கொள்கைக் குறிப்பில் அறிவியல் பாடங்களைக் கற்பிக்க மானிடோரியல் சிஸ்டம் இருக்கிறது என்று போட்டிருக்கிறார்கள். என்னுடைய நண்பர் ஒருவர் லண்டனில் உள்ள ஆவணக் காப்பகத்தில் ஆராய்ச்சி செய்து விட்டு இங்கே வந்திருக்கிறார். இங்கிலாந்து நாட்டில் கல்வி முறை சிறப்பாக இருப்பதற்குக் காரணம் நம்மிடமிருந்து எடுத்துக் கொண்டுபோன ‘மானிடோரியல் சிஸ்டம்’ தான் என்று ரிக்கார்டுகளில் இருப்பதாகத் தெரிவித்தார். அவர் இங்கே சென்னைக்கு வந்து சென்னையில் உள்ள ஆவணக்காப்பகத்தில் உள்ள பழைய ரிக்கார்டுகளையும் ஆராய்ச்சி செய்திருக்கிறார். அந்த முறையில் எத்தனையோ முன்னேற்றங்களைக் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய பாரம்பரை பற்றி நாம் நமது இளந்தலைமுறையினர் நிறைய அறிந்து கொள்ள வேண்டும். நாம் என்ன செய்து கொண்டிருந்தோம், 200—300 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டில் எப்படி எல்லோரும் கல்வியறிவு பெற்றவர்களாக இருந்தார்கள் என்ற உண்மையை, அன்றைய, ஆங்கிலேயர்கள் இங்கே கலெக்டர்களாக இருந்தவர்கள், கவர்னராக இருந்த சர் தாமஸ் மன்றோ போன்றவர்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள்.

பள்ளிக்கூடங்களுக்குச் செல்கிறவர்கள் 25 சதவீதத்தினர்தான். எஞ்சிய 75 சதவீதத்தினர் வேறு வழியில் வீடுகளிலும் வேலை செய்யும் இடங்களிலும் கல்வி கற்று அறிவுள்ளவர்களாகவும் ஆற்றல் உள்ளவர்களாகவும் ஆகியிருக்கிறார்கள் என்றெல்லாம் எழுதிய டாக்குமெண்ட்டுகளை எடுத்துப் பெரிய புத்தகமாகப் போட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் நாமும் பார்த்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கல்விக்காக என்று நாம் இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கி செலவிட்டாலும்கூட, நாம் செலவழிப்பதில் 30 சதவீதத் தொகை வியர்த்தமாகப் போகிறது என்று தெரிகிறது. மற்ற மாநிலங்களில் இவ்வாறு வியர்த்தமாகப் போவது அதிகமாக இருக்கலாம். ஆனால் என்னுடைய அனுபவத்தில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகள் வரை படித்து அதற்குப் பிறகு பள்ளிக்குப் போகாமல் இருப்பவர்களின் படிப்பும் வியர்த்தமாகத்தான் போகிறது. அவர்கள் ஐந்து வகுப்பு வரை படிக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் படிக்கிற "கன்டென்ட்ஸ் ஆஃப் எஜுகேஷன்" கொஞ்சமும் பொருத்தமில்லாமல் இருப்பதால் அதைப் பயன்படுத்த வழியில்லாமல், சில ஆண்டுகளில் அவர்களும் தற்குறியாகப் போய்விடுகிறார்கள். எனவே அவர்களின் படிப்பின் "கன்டென்ட்ஸ்"-என்னவாக இருக்க வேண்டும் என்பதையும் அரசு ஆராய்ந்து பார்த்து, தற்போதைய கல்வி முறையின் "கன்டென்ட்ஸ்"-ஐ மாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக நம்முடைய மாநிலத்தில் உள்ள ஆராய்ச்சி நிலையம் 1975 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அவர்கள் இதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்தார்கள்? இத்தகைய வியர்த்தத்தைத் தடுப்பதற்கு என்ன முறைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் அரசு பார்த்து, அதன் மீது உரிய நடவடிக்கை எடுப்பது பயனுடையதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நாம் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களையே இது சம்பந்தமான ஆராய்ச்சிக்கு ஊக்குவிக்க வேண்டும். மேலை நாடுகளில் "ஆக்ஷன் ரிசர்ச்" என்ற முறையில் ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு சிறு "பிராஜெக்டை" எடுத்துக்கொண்டு அல்லது மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு தங்களின் ஆராய்ச்சிக்கும் முழு உருவம் கொடுத்து அதனைப் பயனுடையதாக ஆக்குகிறார்கள். இங்கு மாநில எஜுகேஷனல் ரிசர்ச் அண்டு டிரெயினிங் சென்டர் என்ற ஸ்தாபனத்தின் மூலமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் உள்ள சங்கடம் என்னவென்றால் அத்தகைய ஆராய்ச்சியில் ஆராய்ச்சியாளர்களுக்கு பெரும்பகுதியான நேரம் பயிற்சியிலேயே செலவாகிவிடுகிறது. எதற்கெடுத்தாலும் பயிற்சி, பயிற்சி என்று அதற்கே நேரத்தைச்



செலவிடச் செய்து விடுகிறார்கள். யுனெஸ்கோ பணம் கொடுக்கிறது, அல்லது பிரிட்டிஷ் கவுன்சில் உதவி செய்கிறது என்ற காரணத்திற்காக அதற்கெல்லாம் பயிற்சி தர வேண்டும் என்று அநேகமாக எல்லா நேரமும் பயிற்சியிலேயே போய்விடுகிறது. இதற்குப் பயிற்சிப் பள்ளிகளைப் பயன்படுத்திக் கொண்டு இவர்களையெல்லாம் ஆராய்ச்சியில் முழு நேரமும் ஈடுபடச் செய்தால்தான் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்னவென்றால், சத்துணவுக்காக ரூபாய் 25 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே ரூபாய் 20 கோடிதான் ஒதுக்கியிருந்தார்கள். இப்போது அதை ரூபாய் 25 கோடியாக உயர்த்தி ஒதுக்கியிருக்கிறார்கள். ஒன்று முதல் ஐந்து வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு மட்டும்தான் சத்துணவு என்றில்லாமல், 15 வயது வரை படிக்கிற அனைத்து மாணவர்களுக்கும் சத்துணவு அளிக்கப்படும் என்று சொல்லியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இதைப்பற்றி அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஒரு ஆராய்ச்சி செய்து ஒரு கருத்து தெரிவித்திருக்கிறார்கள். சத்துணவு அளிப்பதன் மூலமாக குழந்தைக் காப்பகங்கள் மற்றும் பள்ளிகளில் உள்ள குழந்தைகளின் உடல் வளமும், உள வளமும் அதிகரித்திருக்கிறது என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாணவர்கள் உடல் வளம் பெற்றிருக்கிறார்கள். உள வளமும்கூட பெற்றிருக்கிறார்கள். ஆனால் உள்ளத்தில் போதிக்கப்படுகிற விஷயங்கள் பொருத்தமுடையதாக இருந்தால்தான் அவர்கள் இந்த நாட்டுக்குப் பிற்காலத்தில் பயன் உள்ளவர்களாகவும், நல்ல குடிமக்களாகவும் ஒழுக்கமுடையவர்களாகவும் இருக்க முடியும். எனவே அதற்குத் தகுந்த மாதிரி நம்முடைய கல்வியின் "கன்டென்ட்ஸ்"ல் எஜுகேஷனல் கரிக்குலத்தில் உரிய மாற்றங்களைச் செய்தாக வேண்டும்.

அடுத்து, 1985-86-க்குப் பின்னால் நம் மாநிலத்தில் கல்வி தொழில் மயமானதாக இருப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகப் படிப்பின் பயன் எல்லோருக்கும் முழுமையாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இதைக் குறித்து எத்தனையோ ஆண்டுகளாக எத்தனையோ ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. எத்தனையோ கமிஷன்கள் எல்லாம் இதற்காக ஏற்படுத்தப்பட்டு அவர்களெல்லாம் தங்களின் சிபாரிசுகளையும் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களின் அனுபவத்தையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு இந்த ரூ. 25 கோடியைச் சத்துணவுக்காகப் பயன்படுத்தினால், அதனால் நல்ல பயன் விளையும். ரூ. 25 கோடியைச் செலவிட்டு உணவு கொடுப்பதனால், மாணவர்களுக்கு ஏற்படும் எனர்ஜி, அல்லது ஆற்றல் பயன்படும்படியாகச் செய்தால், அது நாட்டுக்கு உபயோகமாக இருக்கும். படிப்பில் மட்டும்தான்

[திரு. க. அருணாசலம்] [1984 மார்ச் 27

அவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்று சொல்லவில்லை. விளையாட்டில்கூட நாம் அவர்களை ஈடுபடுத்தலாம். அவர்கள் மண் குண்டு செய்தால்கூட வருவாய் வரும். அதை அவர்கள் பயன்படுத்துவதிலே மனையில் காலை போட்டு உதைக்க வேண்டும், கைகளை வைத்து பிசைய வேண்டும் என்று செயல்படும்போல தங்களுடைய அறிவை நிலைப்படுத்திக் கொள்வார்கள். அப்படிச் சிறந்த முறையில் வேலை செய்கிற போது, உறவு முறையில்

(முற்பகல் 10—40)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

ஒழுக்கம் உண்டாகும். சமுதாய வாழ்க்கைக்கு ஒழுக்கம் இன்றியமையாதது என்று சொல்கிறார்கள். இன்று குழந்தைக் காப்பகங்களிலும், பள்ளிகளிலும் குழந்தைகளை வரிசையாக உட்கார வைத்து ஏ.பி.சி.டி. சொல்லிக் கொடுக்கிறார்கள். சிறு வயதிலேயே ஆங்கிலம் படித்தால்தான் மேதை ஆவார்கள் என்று நினைக்கிறார்கள். பெரிய மேதைகள் கூட பின்னால் ஆங்கிலம் படித்துத்தான் மேதை ஆகியிருக்கிறார்கள். ஆனால் இப்போது புதிதாக ஒன்றை உயிரியல் அறிஞர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆரம்ப முதல் உடல் உழைப்புச் செய்து, வேலை செய்து, அதன் மூலம் அறிவைப் பெருக்கினால், அது நிரந்தரமாக இருக்கும், ஒழுக்கக் கல்வி அப்போது உண்டாகும். இது புதிதாக கண்டுபிடித்துள்ள கருத்து. நீதிப் பாடங்களைப் போதிப்பதால், கதைகளைக் கேட்பதால், பெரியவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படிப்பதால் மட்டும் ஒழுக்கம் வந்துவிடாது என்பது அனுபவத்திலே கண்ட உண்மை.

அடுத்து, தொழிற் கல்வியைப்பற்றி என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இது விஷயமாக டாக்டர் குழந்தைசாமியைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு பரிசீலித்து சிபார்சுகளைத் தந்திருக்கிறது. அதை சட்ட மன்றத்திலே வைத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் படிப்படியாக அமுலாக்குவதற்குப் பதிலாக அவர் சொன்ன கருத்துக்களை உடனடியாக எவ்வளவு பள்ளிக்கூடங்களில் அமுலாக்க முடியுமோ அவ்வளவு பள்ளிக்கூடங்களில் அமுலாக்கினால், அதை வைத்துக்கொண்டு பல மாறுதல்களைச் செய்யலாம். அப்படியில்லாவிட்டால், வேறு ஏதாவது மாறுதல் வந்து இது நின்றுவிடும். ஆகவே அந்த அறிக்கையைப் பயன்படுத்தி, நிபுணர்களையும் கலந்து மானிடோரியல் சிஸ்டத்தையும் இதனுடன் சேர்த்து அமுல்படுத்த வேண்டும். காலம் தாழ்த்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 27] [திரு. க. அருணாசலம்]

நம்முடைய ஆவணக் காப்பகம் ஆசியாவிலேயே ஒரு சிறந்த ஆவணக் காப்பகம். சிறந்த நூலகம் ஒன்றும் அங்கே இருக்கிறது. ஆனால் இவற்றைப் பயன்படுத்த வேண்டிய மாதிரி அங்குள்ள அமைப்புகள் இல்லை என்று அங்கே போய் வருகிறவர்கள் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக ஒரு நிபுணர் குழுவை அமைத்து அவர்களை ஆராயச் சொல்லி, அவர்களுடைய சிபார்சைக் கேட்டு அங்குள்ள ஆவணங்களும், நூல்களும் பயன்படும்படியாகச் செய்தால், நமக்கு மட்டுமல்லாமல் இந்த நாட்டிற்கும், தென் ஆசிய நாடுகளுக்கும் பயன்படத்தக்கதாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். நம்மிடம் இருக்க வேண்டிய சில ஆவணங்கள் இலண்டனில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவற்றையும் இங்கு கொண்டு வர ஏற்பாடுகள் செய்தால் உதவியாக இருக்கும். இப்போது அறிவியலுக்கு அதிக ஆக்கம் தருகிறார்கள். இது ரொம்ப அவசியமானது. தற்காலத்திற்கு வேண்டியது அறிவியல். அறிவியல் வேண்டும் என்ற அவசர உணர்வோடு சோஷியல் சயன்சையும் அமுலாக்க ஊக்கம் அளிக்க வேண்டும். அறிவியலுக்கு எவ்வளவு ஆதரவு கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு சோஷியல் சயன்சுக்கும் கொடுக்க வேண்டும். இப்போது நம்முடைய மாநிலத்தில் உள்ள மதுரை-காமராஜ் பல்கலைக் கழகத்திலே Peace Science (Ahimsology) என்ற புதிய சமுதாய அறிவியல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது வெற்றிகரமாக நடந்து வருகிறது என்று சொல்கிறார்கள். பல்கலைக் கழக மானியக் குழு அதற்கு ஆதரவு அளித்து வருகிறது. நம்முடைய மாநில அரசும் இதிலே அக்கறை காட்டி, இந்த மனித உறவை வளப்படுத்த, இதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று சொல்லி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வித் துறைக் கொள்கைக் குறிப்பின் மீது என் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய மாநில அரசு 1984-85ஆம் ஆண்டு செலவழிக்கும் 1946 கோடி ரூபாயில் 402 கோடி ரூபாயை, 21 சதவீதத்தை கல்விக்காக ஒதுக்கியிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள் இவைகளைச் சேர்த்தால், 492 கோடி ரூபாய் வருகிறது என்றும், தொழில் பயிற்சி, மருத்துவம், வேளாண்மை, கால்நடை போன்ற பல இனங்களைச் சேர்த்தால் 30 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது. இது ஒரு கணிசமான தொகைதான். இதில் 324 கோடி ரூபாய் வரை பள்ளி, கல்லூரிகளுக்குச் செலவிடப்படுகிறது என்றாலும், வளர்ந்து வரும் கல்வித் தேவைகளுக்குத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. கல்வியின் தேவையைப் பற்றி மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியின் காரணமாக, இந்தக்

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 மார்ச் 27

கல்வி போதவில்லை என்ற நிலைமை இருப்பதைத் தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 6—11 வயதுத் தொகுதியிலே 40 ஆயிரம் குழந்தைகளும், 11—14 வயதுத் தொகுதியிலே 1 லட்சத்து 42 ஆயிரம் குழந்தைகளும் 1983-84ஆம் ஆண்டிலே போதிக்கிற பள்ளிகளிலே சேர்ந்திருக்கிறார்கள். ஆக மொத்தம் 1 லட்சத்து 82 ஆயிரம் பேர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஆசிரியர்களின் எண்ணிக்கை இந்தக் கால கட்டத்திலே இந்த வயதுத் தொகுப்புக்கு வெறும் 1100 தான் இருக்கிறது. அதனால் சராசரி பார்த்தால், 350 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற அளவுக்குத் தான் வருகிறது. குழந்தைகள் 6—16 வரையில் இருக்கக் கூடிய வயதுத் தொகுதியில், 1 லட்சத்து 82 ஆயிரம் அதிகரித்திருக்கும்போது, புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிற ஆசிரியர்கள் இந்த வயதுத் தொகுதிக்கு மட்டும் எடுத்துக் கொண்டால், 1100 தான் வருகிறார்கள். அப்படி வரும்போது சராசரியாக 350 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் வேண்டியிருக்கிறது. ஆனாலும் கூட கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் போது, ஒரு ஆசிரியருக்கு 60-ல் இருந்து 50 குழந்தைகள் வரை இருக்கின்ற நிலைமைகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன என்று சொன்னார்கள் என்று நான் நினைக்கிறேன். அதே நேரத்தில் 10 ஆயிரக்கணக்கான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலை இல்லாமல் வெளியே திண்டாடுகிறார்கள். ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் இருந்தும் கூட, நாம் அவர்களைப் பயன் படுத்த முடியவில்லை என்பதை இப்போது கூட மாண்புமிகு உறுப்பினர்களின் கேள்விகளிலேயிருந்து பார்த்தோம். இதற்கெல்லாம் நிதிப் பற்றாக்குறை தான் காரணம் என்று அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். இன்றைய மத்திய மாநில ஒதுக்கீட்டு ஏற்பாட்டிலே பொதுவாக மாநிலத்தில் கல்வித் துறையிலே வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. நாம் இங்கே அதிகமான மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையிலே இருந்தால் தான் இன்டிவிஜுவலாக 'அட்டென்ஷன்' செலுத்தி கவனிக்க முடியும் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட நிலைமையிலும் கூட, அதை அமுல்படுத்த முடியாமல் இருப்பதற்கு, மத்திய மாநில நிதி ஒதுக்கீட்டிலுள்ள மிகப் பெரிய குறைபாடு தான் காரணம். அது இந்தக் கல்வித் திட்டத்தை எப்படிப் பாதிக்கும் என்பதை நாம் பார்க்க முடிகிறது. ஆகவே நாம் இந்த மத்திய மாநில நிதி ஒதுக்கீட்டில் மாற்றங்கள் செய்ய முயற்சிக்கிற போது, கல்வித் துறையிலே ஏற்படுகிற பாதிப்பை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

6—11 வயதுத் தொகுதியில் 1977-78ஆம் ஆண்டு 40 சதவீதம் இருந்தது. 1982-83-ல் 29 சதவீதமாகக் குறைந்துவிட்டது என்று கூறப்பட்டிருக்கிறது. 1983-84ஆம் ஆண்டிலே 14—16



1984 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

கூடத்திற்கு வரவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 17 லட்சம் பேர்கள் இந்த ஐந்தாவது வகுப்பிலிருந்து 1983-84-ல் வெளியே வருவார்கள். பத்து லட்சம் பேர்கள் வரை பள்ளிகளிலே சேரவில்லை என்று குறிப்பிடும்போது, இந்த விழுக்காடு ஐந்தாவது வகுப்புக்கு மேல் எட்டாவது வகுப்புக்குப் போனால், அதிகமாக இருக்கிறதே, இது என்ன என்பதைப்பற்றி அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெற்றோர்கள் வறுமையும் ஒரு புறம் காரணமாக இருக்கலாம். போதிய ஆசிரியர்கள் இல்லாததன் காரணமாக கல்வியின் தரம் குறைவதின் காரணமாகவும் மேற்படிப்புக்கு மாணவர்கள் செல்லாமல் இருக்கலாம் இவைகளையும் சேர்த்து அரசு ஆராய வேண்டும்.

சத்துணவுத் திட்டத்தின் மூலமாக குழந்தைகளைப் பள்ளிக் கூடத்தில் கொண்டு வந்து சேர்த்த பிறகு, குழந்தைகளுக்குத் தனி அட்டென்ஷன் செலுத்திச் சொல்லிக் கொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் இல்லை. அதன் காரணமாக் கல்வியின் தரம் குறைகிறது. மேல் படிப்புக்கு மாணவர்கள் ஆகர்ஷிக்கப்படாத நிலைமையும் இருக்கலாம். இப்போது பையன்கள் ஸ்கூலில் மார்க் வாங்கவில்லை என்று சொல்லும்போது, பெற்றோர்களும் பையன்களை அனுப்பி என்ன பிரயோசனம் என்று எண்ணி குழந்தைகளை அனுப்பப் பின் வாங்குகிறார்கள். குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்ப வருமானம் மட்டும் காரணமாக இருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகையைப் பொறுத்த மட்டிலும், அது அதிகரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது தீர்மானிக்கப்பட்டிருக்கிற இந்த உதவித் தொகை சில வருடங்களுக்கு முன்பு விலைவாசி ஏறாத காலத்திற்கு முன்னே தீர்மானிக்கப்பட்ட விகிதங்கள். இன்றைய விலைவாசிக்குப் போதுமானதாக இல்லாததின் காரணமாக, அந்த மாற்றியமைக்க அரசு பரிசீலிக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

வெளி மாநிலங்களிலிருந்து வரக் கூடிய மாணவர்களுக்கு நம்முடைய மாநிலங்களில் லோன் ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. வேறு மாநிலங்களிலிருந்து இங்கே வந்து படிக்கின்ற மாணவர்களுக்கு அந்த லோன் ஸ்காலர்ஷிப் கிடைப்பதற்கு ஏற்பாடு இல்லை என்ற ஒரு புகார் இருக்கிறது. அது சரிதானா? எதனாலே நிவர்த்திக்க முடியவில்லை என்பதை அரசு பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மலையாள, கன்னடப் பள்ளிகள் நம்முடைய தமிழ் நாட்டு எல்லைகளிலே இருக்கின்றன. அங்கு மொழி அறிந்த ஆசிரியர்கள் போதிய அளவுக்கு இல்லை என்ற குறைபாடும், ஒரு புகாரும் இருக்கின்றது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 மார்ச் 27

(முற்பகல் 10—50)

1982-83 ஆம் ஆண்டு பள்ளிக் கல்விக்கு, பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ. 75 லட்சம் உபயோகப்படுத்தப்படாமலேயே 'சரண்டர்' பண்ணப்பட்டதாக நான் அறிகிறேன். எனக்கு அது எந்தக் குறிப்பிட்ட வருடம் என்று சொல்ல முடியவில்லை. ஆனால் ரூ. 75 லட்சம், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு என்று பணம் ஒதுக்கப்பட்டு, அந்தப் பணம் பயன்படுத்தப்படாமலேயே 'சரண்டர்' பண்ணப்பட்டிருப்பதாக எனக்குத் தெரிகிறது. அதற்கு சிமெண்ட் கிடைக்கவில்லை என்றுதான் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். லெவி சிமின்ட் என்றாலும், அல்லது ஓப்பன் மார்க்கெட் சிமெண்ட் என்றாலும், பொதுத் துறைக் கட்டிடங்கள் என்றால் அதற்கு அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று வந்திருந்தும்கூட, இப்போது இந்த ரூ. 75 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் ஏன் உபயோகப்படுத்தப்படவில்லை? ஏன் இந்தக் காரியத்திற்கு சிமின்ட் கிடைக்கவில்லை என்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனக் குறைவா என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஒரு எச்சரிக்கை தரப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசு பணம் ஒதுக்குவதே சிரமம். அப்படி ஒதுக்கிய பணத்தைச் செலவிடாமலிருப்பதுபற்றி அரசு பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, ஒன்று சொல்கிறேன். டைரக்டர் ஆஃப் ஸ்கூல் எஜுகேஷன் அவர்களுக்கு பணி நீட்டிப்பு கொடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு ரிட்டைர்மென்ட் வயது வந்த பிறகு, பணிக் காலம் ஒரு ஆண்டு நீடிக்கப்பட்டதாக அறிகிறேன். தனிப்பட்ட முறையிலே எனக்கு ஒன்றும் தெரியாது. இதன் காரணமாக அவருக்குப் பிறகு டைரக்டராகின்றவர், அடிஷனல் டைரக்டர்ஸ், ஒரு ஆண்டு இரண்டு வருட காலத்திற்குள் ரிடயர் ஆகப் போகின்றவர்கள், இப்படி நீடிப்பதன் காரணமாக, அவர்களுக்குக் கீழ உள்ள அதிகாரிகள், அடிஷனல் ஜாயின்ட் டைரக்டர், போன்றவர்களின் செயின் ஆஃப் பிரோமோஷன்ஸ் பாதிக்கப்படுகின்றன. நான் இதிலே என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், ரிட்டையர்மென்ட் ஆகின்றவர்களை மேற்கொண்டு நீட்டிப்பது, இந்த மாதிரி செயின் ஆஃப் புரோமோஷன்ஸைப் பாதிப்பதன் காரணமாக, கீழ்மட்டத்திலே உள்ள மற்ற அதிகாரிகள் மத்தியிலே ஒரு அதிருப்தியை ஏற்படுத்துகின்றது. அது அவர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கின்றது. அதே மாதிரி டைரக்டர் ஆஃப் காலிஜியேட் எஜுகேஷனுக்குக் கூட எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்படுவதாக நான் கேள்விப்படுகிறேன். சமீபத்திலே டாக்டர் நரேந்திரன் என்ற ஒரு பீயூரோ சர்ஜனுக்கு ரிட்டையர்மென்ட் ஏஜுக்குப் பிறகு பணி நீடித்ததன்



1984 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

காரணமாக, கீழ் மட்டத்திலே உள்ள அதிகாரிகளால் ஒரு பெரிய குழப்பமே உண்டாக்கப்பட்டுவிட்டது என்பதைப் பார்த்தோம். ஆகவே ரிட்டையர் மென்ட் பிரியடிலே இருக்கக்கூடியவர்களை ரிட்டயர் பண்ணாவிட்டால், கீழே உள்ள அதிகாரிகளுக்கு அது அதிருப்தியை ஏற்படுத்தும் என்பதன் காரணமாக, அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆசிரியர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக சட்டங்களைப் பயன்படுத்துவது என்று வருகின்றபோது, அந்தச் சட்டங்களினுடைய ஷரத்து களிலேயிருந்து தப்புவதற்கு மைனாரிட்டியினர் என்ற பிரச்சினையைக் கிளப்புகின்றார்கள் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது வரையிலே ரிலிஜியஸ் மைனாரிட்டி என்ற பிரச்சினையைக் கிளப்பி வந்ததைப் பார்த்திருக்கிறோம். சமீபத்திலே லிங்குவிஸ்டிக் மைனாரிட்டி பிரச்சினை என்று கிளப்பிக் கொண்டு வருகின்றார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். ராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டியார் டிரஸ்ட் என்று ஒரு டிரஸ்ட் சென்னை நகரிலே இருக்கின்றது. அது தெலுங்கு மொழி பள்ளிக்கூடம் என்று கருதுகிறேன். அது பெரம்பூர், திருவள்ளூர் பகுதியில் உயர்நிலைப்பள்ளி வைத்திருக்கிறது. பட்டாபிராம் பகுதியில் ஒரு காலேஜும் இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். இது எல்லாம் கோர்ட்டிலே போட்டபோது, லிங்குவிஸ்டிக் மைனாரிட்டி, மொழி மைனாரிட்டி என்ற காரணம் காட்டியிருக்கின்றார்கள். "எங்கள் பள்ளிக்கூடத்திற்கு இந்தச் சட்டங்கள் பொருந்தாது" என்று சொல்லி கோர்ட்டிலே ஒரு தடை உத்திரவு வாங்கியிருப்பதாக நான் அறிகிறேன். அது மட்டுமல்ல, முன்பு ரிலிஜியஸ் மைனாரிட்டி என்ற அளவிலேதான், சில இன்ஸ்டிடியூஷன்களை வாங்கியிருந்தார்கள். இப்போது தனி நபர்களும் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும்போது ஒரு சாதாரண பள்ளிக்கூடமாக ஆரம்பித்து, ஆசிரியர்களுடைய உரிமைகள் என்று வந்து அது மறுக்கப்பட்டு ஏதாவது தகராறு ஏற்பட்டால், "நான் மைனாரிட்டி" என்று வாதம் ஆரம்பித்து, அந்த இன்ஸ்டிடியூஷனை 'மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன்' என்று சொல்லி 'ஸ்டே' வாங்கிவிடுகின்றார்கள். குறிப்பாக எலிமென்டரி ஸ்கூலிலே, ஹைஸ்கூலிலே அது நடக்கிறது.

ஆதம்பாக்கத்திலே வினர் மிஷன் ஸ்கூல் என்று இருக்கின்றது. அதற்கு மிஷனும் இல்லை. ஒன்றும் இல்லை. அதன் பெயர்தான் வினர் மிஷன் ஸ்கூல் என்று இருக்கிறதே தவிர, அதனுடைய ஓனர் ஒரு தனி நபர் தான். ஒரு மைனாரிட்டி ஸ்கூல் என்ற பெயரைச் சொல்லி பூந்தமல்லி முன்சீப் கோர்ட்டிலே போய் வழக்குப் போட்டு அங்கே ஒரு 'ஸ்டே' ஆர்டர்

வாங்கிவிட்டார்கள். ஆனால் முதலிலே அந்த கோர்ட்டிலே கவர்ன்மெண்ட் சார்பிலே ஆஜராகி வாதாட வந்த கவர்ன்மெண்ட் பிளீடர் ஆஜராகவில்லை. பின்னாலே ஆஜராகி வந்தபோது, டி.ஈ.ஓ. கொடுத்த தவறான விவரங்களின் அடிப்படையிலே, ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்தார்கள். ஆகவே அந்த முன்சீப் கோர்ட் அந்த மாதிரி ஒரு ஸ்டே ஆர்டர் கொடுத்தது. பிறகு என்ன என்று பார்க்கும்போது, அந்த முன்சீப் கோர்ட்டுக்குக்கூட ஜூரிஸ்டிக்ஷன் இல்லை என்று பிறகு தெரியவருகிறது. அந்தப் பிரச்சினை செங்கற்பட்டு டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிலே அப்பீலில் வந்திருக்கிறது. அரசாங்கத் தரப்பிலே அப்பீல் செய்திருக்கின்றார்கள் என்று கேள்விப்படுகிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதையெல்லாம் ரிலிஜியஸ் மைனாரிட்டி போல லிங்குவிஸ்டிக் மைனாரிட்டி என்று சொல்லிப் போகின்றார்கள். இந்த மாதிரி தனி நபர்கள் மைனாரிட்டி என்று கோர்ட்டுக்குப் போகின்றபோது, டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் என்ன செய்கின்றார்கள்? தனியார் நிறுவனங்களின் செல்வாக்கு, தனி நபர்களின் செல்வாக்கு இந்த அதிகாரிகளிடத்தில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என்கிற சந்தேகத்தின் அடிப்படையில்தான், இதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இவர்கள் தங்களை Linguistic Minorities என்று கூறி, கோர்ட்டுக்குச் செல்கின்றனர். அரசின் சார்பிலே கோர்ட்டுக்கு ஆஜராவதற்கான ஏற்பாடு இல்லை. ஆஜர் ஆகியபோதுகூட மாவட்டக் கல்வி அதிகாரி தவறான தகவலைத் தந்ததன்மூலம், தனியார்களால், 'ஸ்டே ஆர்டர்' வாங்கப்படுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, உயர்நிலைப் பள்ளிகளில் 1978லிருந்து முதுகலைப் பட்டதாரிகள் சுமார் 2,000 பேர், பி.டி. மற்றும் தமிழ் வித்வான்கள் 3,000 பேருக்கு மேல் 10 (ஏ) (1)-ன் கீழ் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அவர்கள் பணி இன்னும் ரெகுலரைஸ் செய்யப்படவில்லை. தமிழ் நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலம் 'ரெகுலரைஸ்' செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு அவர்கள் வருடக்கணக்காக வேலை நிரந்தரம் செய்யப்படாமலிருப்பதன் காரணமாக, வேலைப் பாதுகாப்பு இல்லாததன் காரணமாக மிகவும் சோர்வடைந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் வேலையில் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலம்தான் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று சொன்னால், அதைச் சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு 3,000 பேர் இருப்பதன் காரணமாக அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற ஈட்டிய விடுப்பு சம்பந்தமாக நேற்று கேள்வி-பதில் பகுதியில் விவாதம் நடந்தது. ஆசிரியர்களுக்கு 200 வேலை நாட்கள் இருந்தபோது, மூன்று நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்பட்டது. இப்போது அரசு வேலை நாட்களை 220 என்று ஆக்கி அவர்களுக்கு ஈட்டிய விடுப்பை 10 நாட்கள் என்று ஆக்கியிருக்கிறது. இதுதான் அவர்கள் பிரச்சினை என்று தெரிகிறது. 200 வேலை நாட்களுக்கு அரசு ஊழியர்களுக்கு எந்த விகிதாசாரத்தில் ஈட்டிய விடுப்பு கணக்கிடப்படுகிறதோ அதே விகிதத்தில் ஆசிரியர்களுக்கும் கணக்கிடப்பட வேண்டும் என்றும் அதற்கு அரசு சிபாரிசு செய்ய வேண்டும் என்றும் அங்கீகரிக்க வேண்டுமென்றும் . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதிலே இருக்கின்ற இன்னொரு பிரச்சினை இப்படி ஈட்டிய விடுப்பை நாம் அதிகப்படுத்தும் காரணமாக பல பள்ளிகளில் ஆசிரியர்களுள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஐந்து பேர் அல்லது ஆறு பேர் ஒரே சமயத்தில் அந்த விடுப்பை எடுக்கிறபோது மாணவர்கள் மிகப் பெருமளவிற்குப் பாதிக்கப்படும் நிலைமை உருவாகியிருக்கிறது. ஆசிரியர்கள் தங்கள் உரிமையை அனுபவிக்கிறார்கள், அதை தவறு என்று சொல்வதற்கில்லை. ஆனால் வகுப்புகள் நடைபெற முடியாமல் மாணவர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படுகிறது. அந்தச் சூழ்நிலையில்தான் அத்தகைய நிலைமைகள் ஏற்படக்கூடாதென்பதற்காக 200 நாட்களை 220 நாட்கள் என்று ஆக்கியிருக்கிறோம். இதனால் ஆசிரியர்களின் வேலை நாட்களை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யவில்லை. மாணவர்கள் நிலைமை பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் செய்தோம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதனால்தான் நான்கூட 220 நாட்களைக் குறைக்க வேண்டுமென்று கேட்கவில்லை. அவர்களின் வேலை நாட்கள் 220 நாட்கள் என்று ஆக்கப்பட்டிருக்கிற நிலையில், 220 நாட்களுக்கு அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு கணக்கிடும் விகிதாசாரத்தின்படியே, ஆசிரியர்களுக்கும் கணக்கிடும் முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி அந்த விடுப்பு நாட்களை அதிகப்படுத்துகிறபோது, அதை அவர்கள் அனுபவிக்கத்தான் செய்வார்கள். அப்படி அவர்கள் விடுப்பை அனுபவிக்கிறபோது, பள்ளிகளில் ஆசிரியர்கள் இருக்க மாட்டார்கள். மற்ற அரசு அலுவலகங்களோடு பள்ளிகளை இணைத்துப் பேச முடியாது. அலுவலகங்

களில் வேலை பார்க்கும் ஊழியர், விடுப்பு எடுத்தால், மறுநாள் வந்து அவ் வேலையைச் செய்துவிட முடியும். ஆனால் ஆசிரியர் அப்படிச் செய்ய முடியாது. ஆகவே பள்ளிக்கூடங்களை அரசு அலுவலகங்களோடு முழுமையாக நாம் ஒப்பிட்டுப் பார்க்கமுடியாது.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்வதெல்லாம் வாஸ்தவம்தான். ஆனால் அமைச்சர் அவர்களுக்கு நான் யோசனையாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால், 'லீவ் ரிசர்வ்' என்கிற முறையில் அவர்களுக்கு அந்த விடுப்பை வழங்கி, ஆசிரியர்கள் விடுப்பை அனுபவிக்க விரும்பினால் ஒன்று சரண்டர் செய்வதன் மூலம் மேற்படி விடுப்பை அனுபவிக்கலாம், அல்லது 'லீவ் ரிசர்வ்' என்ற முறையில்

(முற்பகல் 11-00)

அவர்கள் வைத்துக்கொள்ளலாம். ஆசிரியர்கள் விடுப்பில் செல்ல அனுமதிக்கப்படுவதன் மூலமாக மாணவர்கள் படிப்பு பாதிக்கப்படுகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். எனவே ஆசிரியர்களுக்கு வருடத்திற்கு 26 நாட்கள் விடுப்பு எவ்வாறு அனுமதிப்பது என்பதைப்பற்றி அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் ஆசிரியர்களுக்கு இன்சென்டிவ் சமாச்சாரம். ஏற்கெனவே அதுபற்றி இங்கே பேசப்பட்டது என்றாலும், மீண்டும் அதைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பி.ஏ., பி.டி. ஆகும்போது 2 இன்கிரிமென்ட்; எம்.ஏ. பட்டம் பெறும்போது 2 இன்கிரிமென்ட், ஆக 4 இன்கிரிமென்டுகள் 1983 வரை பெற்றார்கள். இந்த இன்சென்டிவ் இன்கிரிமென்ட் கடந்த 15 வருடங்களாக இருந்தது. சென்ற ஆண்டு, 5—3—1983 அன்று, ஆசிரியர்கள் தினத்தன்று, பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணைப்படி அவர்களுக்கு உயர் கல்வித் தகுதிக்கு 'லம்ப் சம்' வழங்குவது என்று முடிவு செய்து, அவர்களுக்கு 2,000 ரூபாய், 3,000 ரூபாய் என்று வழங்குகிறார்கள். ஆசிரியர்களுக்கு 4 இன்க்ரிமென்ட் கிடைக்கிறது என்றால், 35 ரூபாய் வீதத்தில், அவர்களுக்கு 140 ரூபாய் மாதாமாதம் கிடைக்கிறது. இப்படி அவர்கள் வாழ்நாள் முழுவதும் கிடைப்பது, 'லம்ப் சம்' என்று வழங்குவதால் கிடைக்காமல் போகிறது என்ற குறைபாட்டை அரசின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்கள் அனுபவித்த உரிமையை எடுக்க வேண்டாமென்று வலியுறுத்த விரும்புகிறேன். ஒரு சந்தர்ப்பத்தில் மேலவையில் நிதி அமைச்சரவர்கள் பேசும்போது, ஒரு வாக்குறுதி அளித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள்கூட அதுபற்றி கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு 'ப்ரமோஷன்



சான்சஸ்' இல்லை என்பதால், ஆசிரியர்கள் கல்வித் தகுதியை உயர்த்திக்கொள்ளும் போது, இன்சென்டிவ் இன்கிரிமென்ட் அளிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. கல்வித் தகுதியை ஆசிரியர்கள் உயர்த்திக்கொள்வதால், குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதன் தரமும் உயருகிறது. அதனால் ஆசிரியர்களுக்கு 'இன்சென்டிவ் இன்கிரிமென்ட்' கொடுக்கப்பட்டது. ஆனால் 1982 ஆம் ஆண்டு ஆணைப்படி அது இல்லாமல் போகிறது. ஹையர் செகண்டரி வகுப்புகளுக்குப் போகும்போது, 'மினிமம் குவாலிபிகேஷன்' முதுகலைப் பட்டப் படிப்பு தேவை. இவர்கள் அங்கே போகும்போது, ஏற்கெனவே இன்சென்டிவ் இன்கிரிமென்ட் வாங்கியவர்களும் இருப்பதால், இவர்களுக்கு மனத்தாங்கல் ஏற்படும். ஆசிரியர்களுக்கு வேறு ப்ரமோஷன் சான்ஸ் இல்லாததால் போன ஆண்டு அரசு பிறப்பித்த உத்தரவை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் மூலமாக கட்டிடம் கட்ட வசூல் 120 லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக இந்த முயற்சி நல்லதுதான். ஆனால் நடைமுறையிலே 'கேபிடேஷன் பீஸ்' போல இது ஆகிவிடுகிறது. ரூபாய் 40-க்கு மேலே நன்கொடை வசூலிக்கக்கூடாது என்று விதி இருந்தாலும், 6 முதல் 9 வகுப்புகள்வரை இங்லீஷ் மீடியம் வகுப்புக்கு அப்ளை செய்பவர்களிடமும், மேத்ஸ், காமர்ஸ் வகுப்புகளுக்கு அப்ளை செய்பவர்களிடமும் இருந்து 200, 300, 400 ரூபாய் என்று நன்கொடை வாங்கும் நிலை இருக்கிறது. அரசாங்கப் பள்ளிகளிலேகூட இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இலவசக் கல்வி என்று நாம் சொல்லிக்கொண்டு, எல்லோரிடமும் 200 ரூபாய், 300 ரூபாய் என்ற வாங்கும்போது, மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. வசதியுள்ளவர்களிடம் வாங்குவதை நான் ஆட்சேபிக்கவில்லை. மேத்ஸ் குரூப், காமர்ஸ் குரூப் கேட்பவர்களிடம் 200 ரூபாய், 300 ரூபாய் வாங்கும்போது, மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. இந்த வசூலுக்கு அரசு ஆடிட் இல்லை. எங்காவது தகராறு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் தான், 'ஆடிட்' நடக்கும். 1¼ கோடி ரூபாய் வசூலாகும்போது, எப்படி இந்தத் தொகை பயன்படுத்தப்படுகிறது என்பதை ஆடிட் மூலமாகப் பார்க்க வேண்டும். தவறு நடக்கிறது என்று தகவல் வந்த பிறகு, 'ஆடிட்' செய்வது என்பது எப்படி சரியாக இருக்கும் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, அண்ணாமலை யூனிவர்சிட்டி ப்ரோ சான்சலருக்குள்ள அதிகாரத்தை வைஸ் சான்சலருக்குள்ளவாறு மாற்றுவதற்கு சட்டம் திருத்தப்படுமென்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை அதை நிறைவேற்றவில்லை. ஏன் அந்தச் சட்டத் திருத்தத்தை இதுவரை கொண்டுவரவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

அட்டானமஸ் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும், அங்கே நடக்கும் சில தவறுகளை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, அமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தக் கல்லூரிகள் சமுதா யத் தேவைக்கேற்ப புதிய கல்வி முறைகளைத் தேர்ந்தெடுத்து உருவாக்கவும், சமூகத்திற்கு அவை பயன்படவும் உரிய பணிகளைச் செய்யுமென்று அமைச் சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அதைப் பொறுத்தவரையில், இந்தக் காரியம் நீண்ட காலத்திற்கு முன்பாகவே செய்திருக்க வேண்டியது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அட்டானமஸ் கல்லூரிகளைப் பொறுத்த வரையில, அந்த நிர்வாகங்கள் தங்கள் இஷ்டம் போல் அதிகாரத்தைப் பயன் படுத்துவதாகச் சொல்கிறார்கள். 'ரிசர்ச் ஓர்க்குக்காக' சமுதாயத்திற்குப் பயன்படும் காரியத்திறகாக அவர்கள் அதிகம் ஒன்றும் செய்யவில்லை. கல்வி அமைச்சர் அவர்கள் கூட வைஸ் சான்சலர்களை எல்லாம் கூட்டி இவைகளின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் இனிமேலாவது இந்தப் பணிகள் நல்லமுறையில் நடைபெற வேண்டும்.

அடுத்து, தமிழ்நாடு ஆர்க்கைவ்சைப் பொறுத்தவரையில், ஒரு சிக்கல் இருக் கிறது. ரிசர்ச் ஸ்காலர்ஸ் எல்லாம் வெளிமாநிலங்களிலிருந்து அங்கு வந்து ஆராய்ச்சி பண்ணுகிறார்கள். அங்கு சைலன்ஸ் இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் மெதுவாக ரிசர்ச் ஸ்காலர்ஸ் 'கன்சல்ட்' பண்ணினால் கூட, உடனே அங்குள்ள அடிஷனல் கமிஷனர் தகராறு செய்கிறார். திரு. முரளி என்பவர் இவ்வாறு நடந்ததாகச் சொல்லி, அவருக்குக் கொடுக்கப்பட்ட ரெக் கார்ட்சை எல்லாம் பிடுங்கியிருக்கிறார். அதுபோல் அங்கு மைக்ரோபிலிம் போட்டோகிராப் என்கிற கருவி இருக்கிறதாம். ஆனால் அந்தக் கருவியின் மூலம் போட்டோ எடுப்பதற்கான அனுமதி யாருக்கும் கிடையாதாம். அதைப் பயன்படுத்துவதில் ஏதாவது சிரமம் இருந்தால், அந்த சிரமத்தை எல்லாம் போக்கி ரிசர்ச் ஸ்காலர்ஸ் அந்தக் கருவியின் மூலம் தங்களுக்கு வேண்டிய பேப்பர்களை போட்டோ காப்பி எடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். அது போல் அங்குள்ள டாக்குமென்ட்சை 'டைப்' பண்ணுவதற்கு முன்பெல்லாம் 'மெஷின்' கொண்டுபோய் 'டைப்' பண்ணலாமென்று விதி இருந்தது. ஆனால் இப்போது அங்குள்ள டைப்ரைட்டரில் தான் டைப் பண்ண வேண்டுமென்ற முறையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு பக்கத்திற்கு ரூபாய் 1.90 வாங்குகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே ரிசர்ச் ஸ்காலர்களே டைப்ரைட் டர்களைக் கொண்டு போய் மேட்டரை 'டைப்' அடிப்பதில் என்ன கஷ்டம் இந்தத் துறைக்கு வந்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். அதுபோல் "நான் தந்தால்தான் ரெக்கார்ட்சைப் பார்க்க முடியும்" என்று கமிஷனர் சொல்கிறார். 1905, 1904 ஆம் ஆண்டு வந்த புத்தகங்கள், பத்திரிக்கைகள்





எல்லாம் நம்பர் கொடுக்கப்படாத நிலையில் இருக்கின்றன. ஆகவே லிஸ்டைப் பார்த்து இன்னின்ன புத்தகங்களை, இன்னின்ன நம்பர் புத்தகங்களைப் பார்க்க வேண்டுமென்று கேட்க வழி இல்லை. மேலும் 3 நாட்கள் தான் புத்தகங் களைத் தருகிறார்கள். இப்படி வாரத்தில் 3 நாட்கள் அனுமதித்துவிட்டு கடைசியில் தகராறு செய்கின்ற நிலைமையும், "நான் தந்தால்தான் பார்க்க வேண்டு"மென்ற நிலைமையும் சரிதானா? கமிஷனருக்கும் ஆராய்ச்சியாளர் களுக்கும் இடையே இருக்கக்கூடிய ஆரோக்கியமற்ற இத்தகைய போக்கு தவிர்க்கப்படவேண்டும். ஆரோக்கியமான நிலையில் அங்குள்ள புத்தகங் களையும், பத்திரிக்கைகளையும் ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்துவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கி நல்லமுறையில் ரிசர்ச் ஸ்காலர்சுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டுக் குரிய கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது ஒருசில கருத்துக் களைச் சொல்லுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் கல்விக்காக ஒதுக்கிய நிதி போதாது என்பதைக் குறிப்பிட் டார்கள். கல்விக்காக ஒதுக்குகின்ற நிதி என்பது வருங்கால சமுதாயத்தி னுடைய முன்னேற்றத்திற்காக ஒதுக்குகின்ற அல்லது செய்கின்ற முதலீடு என்று பொருள்படும். ஆனால் இங்கே நாளுக்கு நாள், ஆண்டுக்காண்டு கல்விக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி குறைந்துகொண்டே வருகிறது. அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இன்றையதினம் கல்விக்கான நிதி ஒதுக்கீடு 21 சதவிகிதம் என்கின்ற அளவுக்கு வந்திருக்கிறது. ஆனால் குறைந்தபட்சம் 25 சதவிகிதத்திற்குக் குறையாமல் கல்வித் துறைக்கு முதலீடு செய்ய வேண்டு மென்று கருத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார் கள் என்று நான் கருதுகிறேன். அதற்கு தன்னால் இயலவில்லை என்று சொல்லி அவர்கள் விட்டுவிடக் கூடாது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலிருந்து கல்வித் துறைக்காக வாதாடி, இன்னும் அதிகமாகப் போராடி பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு கல்வித் துறைக்காக 21 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறோம். மொத்தம் 402 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னாலுங்கூட உண்மையில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்காகச் செலவிட தனியாகப் பணம் ஒதுக்காமல் இதிலேயிருந்து 25 கோடி ரூபாய் எடுத்துக்கொள்ளப்படும் என் கின்ற நிலை இருப்பதால், உள்ளபடியே கல்வித் துறைக்காக 377 கோடி ரூபாய், அதாவது 19 சதவிகிதம் செலவிடப்படுகின்ற நிலைதான் இருக்கிறது

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1984 மார்ச் 27

(முற்பகல் 11-10)

என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே கல்விக்கு ஒதுக்கிய
தொகை போதவே போதாது, என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி
அப்படிப் போதாத காரணத்தாலேதான் இன்றையதினம் ஆசிரியர்களுக்குரிய
ஒதுக்கீடு மிகமிகக் குறைந்திருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்
1982-83-ல் 7,509 ஆசிரியர்களுக்கு ஒட்டுமொத்தமாக ஒதுக்கீடு செய்த இந்த
அரசு சென்ற ஆண்டு 7,750 பேர்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு தந்து ஆண்டோ
இடைநிலை ஆசிரியர்கள் 1,000, உடல் பயிற்சி ஆசிரியர்கள் 100 பேர்,
தமிழாசிரியர்கள் 150 பேர், பி.டி. தர ஆசிரியர்கள் 200, முழு நேர தொழில்
ஆசிரியர்களுக்கு 100 என்ற வகையில் 1,500 பேர்களுக்குத் தான் ஒதுக்கப்
பட்டிருக்கிறது. இரண்டரை இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றுகிற தமிழகத்
தில், இருக்கிற மாணவர்களுக்கேற்ப மேலும் ஒதுக்கவேண்டிய ஆசிரியர்கள்
ஏராளம் ஏராளம். ஆனால் ஒதுக்கியிருப்பது 1,500 தான். இது கடலிலே
கரைத்த பெருங்காயமாகத் தான் காணப்படுகிறதே தவிர, தேவைக்கேற்ப
ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

ஒருமுறை ரஷ்யாவுக்கு, நமது முன்னாள் கல்வித் துறை இயக்குநராக
இருந்த திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் சென்று வந்தபோது, அளித்த
ஒரு பேட்டியில் குறிப்பிட்டார்கள். ரஷ்யாவில் ஒரு பள்ளியைப் பார்த்தேன்.
அந்தப் பள்ளியில் படித்த மாணவர்கள் 700 பேர். ஆனால் அங்கே பணி
யாற்றிய ஆசிரியர்கள் எண்ணிக்கை 70 பேர்கள் என்று குறிப்பிட்டார்கள்.
70 ஆசிரியர்கட்கு 700 மாணவர்கள் என்றால், ஒரு ஆசிரியருக்கு 10 மாணவர்
கள் தான் என்று சொன்னால், எந்த அளவுக்கு ஆசிரியர்கள் தனித்த முறையில்
மாணவர்களிடத்தில் கவனம் செலுத்தி, கல்வித் தரத்தை அதிகரிக்க முடியும்
என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கேயுள்ள பயிற்சிப் பள்ளிகளில் 38
சதவீதம் தான் தேர்வு பெறுகிறார்கள் என்ற புள்ளி விவரத்தைத் தருகிற
அவலநிலை நமது கல்வி அமைச்சருக்கு ஏற்படுகிறதே, ஏன்? ஆகவே இப்
படிப்பட்ட சூழ்நிலைதான் கல்வித் தரத்தை உயர்த்த வாய்ப்பு இல்லாமல்
போனதற்குக் காரணம், போதிய ஆசிரியர்களை நியமிக்க முடியாமல் நாளுக்கு
நாள் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிற நிலைமைதான். கட்டெறும்பு என்று
கூட தான் சொல்ல மாட்டேன், சிற்றெறும்பு என்றுதான் சுட்டிக்காட்ட விரும்
புகிறேன். ஆகவே ஆசிரியர்களை நியமிக்க முடியாத ஒரு நிலை இன்றைக்கு
இருப்பதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், ஒரு செய்தியை நான்
பார்த்தேன். என்னவென்றால் ஆறாவது திட்ட காலத்தில், கல்விக்கு என
ஒதுக்கப்பட்ட தொகையைச் செலவழிக்காத மாநிலங்களில் நம்முடைய
தமிழகமும் ஒன்று குறிப்பிட்ட செய்திதான் அது. இதைப் பார்த்தபோது
நான் மெத்த வருத்தப்பட்டேன். ஒதுக்கிய தொகையே குறைவு, அதைச்



1984 மார்ச் 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

செலவழிக்கவில்லையென்று சொன்னால், அதைச் செலவழிக்க நடவடிக்கை
எடுக்கவில்லையென்று சொன்னால், அது எந்த அளவுக்கு அபத்தமான ஒன்று
என்று எண்ணிப்பார்க்க வேண்டும், அது நம்முடைய கடமை. 6-வது திட்டத்
தில் ஒதுக்கப்பட்ட கல்விக்கான நிதி ரூபாய் 20.72 கோடி. ஆனால் தமிழகம்
செலவழித்த தொகை ரூபாய் 17.91 கோடி, மீதி தொகை எங்கே? ஏன்
அதைச் செலவு செய்யவில்லை? செலவழிக்காததற்கு என்ன காரணம்
என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கல்வி என்ன அவ்வளவு அலட்சிய
மானதா? அது மட்டுமல்ல, கல்வித் துறையிலே மற்ற நிலைகளில் செல
வழிப்பதைவிட ஆரம்பக் கல்விக்குச் செலவழிக்கும் தொகை ஒதுக்கீடு மிகமிகக்
குறைவு அதற்கென்று ஒதுக்கப்பட்ட தொகை 6-வது திட்ட காலத்தில் ரூபாய்
668.02 இலட்சம். ஆனால் செலவழித்த தொகை 145.76 இலட்சம் ரூபாய்தான்.
இதைப் பார்க்கின்றபோது ஆரம்பக் கல்வி எந்த அளவுக்கு அலட்சியப்
படுத்தப்படுகிறது என்று அறிய முடிகிறது; இது நாம் வியக்கக்கூடிய அளவில்
கூட அல்ல, வேதனைப்படக்கூடிய அளவில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமையால்தான் இன்றைக்குக்
கல்வித் துறையின் தரம் குறைந்து காணப்படுகிறது. பின் எப்படி
வளரும்? ஒரு ஆசிரியருக்கு 60, 70, 80 என்று மாணவர்கள் விதம் இருந்
தால் ஒரு மந்தையை ஒரு ஆசிரியர் மேய்த்தால், எப்படி கல்வித் தரம்
உயரும்? இப்போது சத்துணவுத் திட்டத்தின் மூலமாக 3.82 இலட்சம்
மாணவர்கள் புதிதாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்று பறை சாற்றுகிறோமே
இந்தக் கல்விக்குறிப்பில், ஆனால் 3.82 இலட்சம் மாணவர்களுக்கு எத்தனை
ஆசிரியர்களை அதிகமாக நியமித்தோம் என்று சொல்கிறார்களா? அப்படிச்
சொல்ல முடிந்ததா? சொல்லியிருக்கிறார்களா? அப்படிச் சொல்லாததற்குக்
காரணமென்ன? கேட்டால் நிதி இல்லையென்று சொல்வார்கள். இது
தான் கடைசியாகக் கிடைக்கும் பதில். இருக்கின்ற நிதி வேறு எதெதற்கோ
வேண்டியிருக்கிறது. ஆனால் இதற்கு மட்டும் நிதி இல்லை. ஆகவே இப்
படிப்பட்ட நிலைமையில்தான் இன்றையதினம் கல்வித் துறை நலிந்திருக்
கிறது என்று மீண்டும் மீண்டும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்கி
றேன். ஆனால் கல்வி அமைச்சரைப் பொறுத்தவரையில், ஆசிரியர் சமுதாயத்
திற்கு, கல்வித் துறைக்கு நலன்கள் செய்யவில்லையா என்றால், ஏராளமாகச்
செய்திருக்கிறார்கள். அதைப் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். செய்
திருப்பதையும் நான் நினைவுகூர்ந்து நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கி
றேன். ஆனால் இன்னமும் அவர்கள் அதிகம் செய்ய வேண்டுமென்று அவர்
களிடம் எதிர்பார்ப்பதில் தவறில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பள்ளி ஆசிரியர்களின் நலனுக்காகச்
செய்திருப்பவைகளைப் பாராட்டுகிறேன். அதில் சிலவற்றை இங்கே கோடிட்
டுக் காட்டியும் இருக்கிறார்கள். 1—6—1981 முதல் ஊராட்சி ஒன்றிய ஆசிரி

யர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறோம் என்று இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் அதைப் பெருமையோடு பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இங்குள்ள நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை எப்போது அரசு ஊழியர்களாக ஆக்கப் போகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். நகராட்சிப் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக ஆக்குவது இப்போதில்லை என்றாலும்கூட ஆசிரியர்களையாவது எப்போது அரசு ஊழியர்களாக ஆக்கப் போகிறார்கள் என்றுதான் கேட்க விரும்புகிறேன். அதைப் போலவே தனியார் பள்ளி ஆசிரியர்கள் அன்றாடம் செத்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்களைக் காப்பாற்றும் நடவடிக்கையாக அந்த ஆசிரியர்களை மட்டுமாவது எப்போது அரசு ஊழியர்களாக ஆக்கப் போகிறார்கள்? எங்களுடைய நீண்டநாள் கோரிக்கை தனியார் பள்ளிகளையெல்லாம் தேச உடைமையாக்க வேண்டும் என்றாலும் கூட, எந்த அரசும் அதைச் செய்யப் போவதில்லை. அப்படிச் செய்ய முயன்ற எந்த அரசும் வேறு மாநிலங்களிலும் பிழைத்ததும் இல்லை. எனவே அதை இவர்கள் செய்யப் போவதில்லை என்பதை நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம். எனவேதான் தனியார் பள்ளி ஆசிரியர்களையாவது அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்கிறோம். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கியதைப்போல், தனியார் பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கிடும் ஒரு புரட்சிகாமான காரியத்தைச் செய்யக்கூடாதா? செய்ய முயலுங்கள் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக ஆக்க வேண்டும் என்று நாங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று 10,000 ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக ஆக்க எடுத்துள்ள முயற்சியை நான் பாராட்டுகிறேன். மீதமுள்ளவர்களையும் மிகக் குறைவான காலத்திலேயே இடைநிலை ஆசிரியர்களாக ஆக்க வேண்டும் என்று கோருவதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்வார்கள் என்றும் நம்புகிறேன். அப்படிப் பதவி உயர்வு பெற்றவர்களுக்குப் பணப் பயன் ஏதேனும் உண்டா என்பதையும் அவர் எண்ணிப் பார்க்க வேண்டும். வெறும் தாளில் “சர்க்கரை” என்று எழுதி நக்கிவிட்டால் இனிக்காது. ஆகவே அத்தகைய ஆசிரியர்களுக்குப் பணப் பயன் ஏற்படும் வகையில் ஆணையிட வேண்டும் என்று இந்த நேரத்தில் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1—6—1981 இடைநிலை ஆசிரியர்களுக்கு அவர்கள் பெற்ற ஆசிரியர் பயிற்சிக்காக ஒரு ஊக்க ஊதிய உயர்வு தரப்பட்டது. அது அந்தத் தேதியோடு முடிந்துவிட்டது. பிற்காலத்தில் வருகிறவர்களுக்குக்



கிடையாது என்றும், புதிதாகப் பயிற்சி பெற்று வருகிறவர்களுக்குக் கிடையாது என்றும் சொல்லுகிற நிலை உருவாகியிருக்கிறது. அதையும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இடைநிலைத் தகுதி பெறும் இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதம் தரப்படுகிறது என்றும், மற்றும் பி.டி. தகுதி பெற்ற நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பி.டி. சம்பள விகிதம் தரப்படுகிறது என்றும் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். பி.டி. படித்து, பி.ஏ. படித்து, எம்.ஏ. படித்து, எம்.எட். படித்து பி.லிட். படித்து புலவர் படித்து தங்களின் தகுதியை உயர்த்திக் கொள்ளுகிறவர்களுக்கு அவர்களின் தகுதிக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து கோரி வருகிறோம். அதையும் அரசு விரைவில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அவ்வாறு செய்யும்போது, அவர்களுக்கு அந்த ஊதிய விகிதத்தைக் கொடுப்பதால், அரசுக்குப் பணச் செலவு ஏதும் அதிகமில்லை என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறைந்தபட்சம் 15 ஆண்டுக்காலப் பணியை முடித்தவர்களுக்காவது அதைச் செய்ய வேண்டும். இப்போதே அவர்கள் பி.டி. ஆசிரியர்களின் அளவுக்குத்தான் ஊதியம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால், அரசுக்கு இதனால் நட்டமில்லை என்பதைக் கருத்தில் கொண்டு அந்த ஊதிய விகிதத்தை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலையும் சிறப்பு நிலையும் வழங்கப்படுகிறது. 10 ஆண்டுக் காலம் பணியை முடித்தவர்களுக்குத் தேர்வு நிலையும், 20 ஆண்டுக் காலம் பணியை முடித்தவர்களுக்குச் சிறப்பு நிலையும் வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். ஒரு குறிப்பிட்ட கேடரில் மட்டுமே அந்த அளவுக்குப் பணிக்காலத்தை முடித்திருக்க வேண்டும் என்று கொள்ளாமல், ஒருவர் பணியில் சேர்ந்த காலத்தில் அவர் எந்த நிலையில் சேர்ந்தார் என்று பாராமல், அவர் இன்றைக்கு எந்த நிலையில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் சரி, பணியில் சேர்ந்து மொத்தம் 20 ஆண்டுக் காலம் முடிந்திருந்தால், அவர் தற்போது எந்த நிலையில் இருக்கிறாரோ அந்த நிலைக்கான சிறப்பு நிலையை அளிக்க வேண்டும் என்று கோருகிறோம். அதைப் போலவே அவர் பணியில் சேர்ந்து மொத்தம் 10 ஆண்டுக் காலத்தை முடித்திருந்தால் அவர் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறாரோ அந்த நிலைக்கான தேர்வு நிலையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படித் தந்தால்தான் அவர்களுக்குரிய பணப்பயனும் மற்ற பயன்களும் கிடைக்கும், ஆசிரியர்களும் உற்சாகமாகப் பணியாற்ற வழி ஏற்படும் என்று சொல்லி அதை விரைவில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1984 மார்ச் 27

இப்படி மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் செய்திருப்பது ஏராளம், அதற்கெல்லாம் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது ஈட்டிய விடுப்பைக் கூட உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான காரணத்தை நான் இங்கே கேட்டபோது, கல்லூரி ஆசிரியர்களுக்கு 3 நாள்தான் ஈட்டிய விடுப்பு தந்திருக்கிறார்கள் காரணம் அவர்களின் வேலை நாளை உயர்த்தவில்லை என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்கள். நான் அதன் அடிப்படையில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். 280 நாட்கள் பணியாற்றுகிற என்.ஜி.ஓக்களுக்கு 33 நாட்கள் ஈ.எல். தருகிறார்கள். 220 நாட்கள் பணியாற்றுகிற உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு அதே விகிதாச்சாரத்தில் 28 நாட்கள் தேவை என்றுதான் கேட்கிறோம். அதே அடிப்படையில் 180 நாட்கள் பணியாற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் 21 நாள் தரப்பட வேண்டும் என்று கேட்கிறோம். அதையெல்லாம் தராவிட்டாலும் கூட, ஒரு நிலை ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் அந்தச் சலுகையை கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஏன் கொடுக்கக்கூடாது என்றுதான் கேட்க விரும்புகிறேன். எனவே கல்லூரி ஆசிரியர்களுக்கும் அதே விகிதாச்சாரத்தில் ஈட்டிய விடுப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பேசும்போது, ஆசிரியர்கள் லீவு எடுத்துக்கொண்டு பணியாற்றாமல் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதன் அடிப்படையில் நான் இங்கே ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். தயவு செய்து சி.எல். ஐக்கூட பணமாக்கிக் கொள்ளலாம் என்ற புரட்சிகரமான உத்தரவைப் போடுங்கள் யாரும் லீவு எடுக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு உத்தரவைப் போட்டுப் பாருங்கள், அதனால் நஷ்டம் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்கள் அதை முறையாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றும் உறுதி கூற விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

அரசு ஊழியர்களான ஆசிரியர்கள் அதற்கு முன்பு ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களாக இருந்தபோது, வீடு கட்ட கடன் வசதி கேட்டு விண்ணப்பித்தார்கள். அதற்கு ஊராட்சி ஒன்றியமும் அனுமதி அளித்திருக்கிறது. பின்பு அவர்கள் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது மனையைக் கிரையம் செய்வதற்கு கல்வித் துறை ஒத்துழைக்க மறுக்கிறது. "நீங்கள் உள்ளாட்சித் துறையிலே இருந்தீர்கள் ஆகவே அவர்களிடத்திலேயே அனுமதி வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கல்வித் துறையிலே சொல்லுகிறார்கள். "நீங்கள் எங்களை விட்டுப் போய்விட்டீர்கள். உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை, ஆகவே கல்வித் துறையிலே வாங்கிக்



1984 மார்ச் 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

கொள்ளுங்கள்" என்று ஊராட்சி ஒன்றியத்திலே சொல்கிறார்கள். இப்படி அவர்கள் இரண்டுங் கெட்டான் நிலையில் இருக்கிறார்கள். இதில் கல்வித் துறை கவனம் செலுத்தி அவர்கள் வீடு கட்டுவதற்குக் கடன் வசதி அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களைப்பற்றி நிறைய பேசியிருக்கிறோம். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு, அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குள்ள சலுகைகள் பலவற்றை விரிவாக்கியிருக்கிறோம் என்று இந்தக் குறிப்பிலும் தெரிவித்திருக்கிறார்கள். உண்மைதான். ஆனால் விடுப்புக் கால பயணச் சலுகை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் உள்ளாட்சித் துறை ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறதா? ஏன் விரிவுபடுத்தவில்லை? அவர்கள் ஆசிரியர்கள் இல்லையா? எப்போது செய்யவிருக்கிறார்கள்? உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருத்துவச் செலவைத் திரும்பப் பெறுகிற சலுகை ஏன் அவர்களுக்கு வழங்கப்படவில்லை? அவர்கள் மாற்றாந்தாய்ப் பிள்ளைகளா? ஏன் அவர்களுக்கு இந்தச் சலுகை தரப்படவில்லை? இதையும் தருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சலுகைகள் பல விரிவுபடுத்தப்பட்டிருப்பதாக ஒட்டுமொத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறதே! ஏன் இந்த வசதிகள் எல்லாம் செய்து தரப்படவில்லை? இதையாவது செய்து தர முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்கள் எப்படியெல்லாம் கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்பது அமைச்சருக்கே நன்றாகத் தெரியும். ஏனென்றால் அவரே ஆசிரியராக இருந்தவர். அதனாலே நான் அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சில தனியார் பள்ளி நிர்வாகங்கள் தானாகவே முன் வந்து, "எங்களால் நடத்த முடியவில்லை, ஆகவே அரசே எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்கிறார்கள். சேலம் மாவட்டத்திலே போகனூர் இராமகிருஷ்ணா நிதியுதவி தொடக்கப் பள்ளி என்று ஒன்று இருக்கிறது. அதன் நிர்வாகி, எனக்கு வயதாகிவிட்டது, உடல்நலம் கெட்டுவிட்டது, பள்ளியை நடத்த முடியவில்லை ஆகவே அரசே எடுத்துக்கொள்ளட்டும்" என்று விண்ணப்பித்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. 1981 ஆம் ஆண்டிலே விண்ணப்பித்திருக்கிறார்கள். அதன் மீது இதுவரையும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது ஏன்? இப்படி தனியார் பள்ளி நிர்வாகங்கள் தாங்களாகவே பள்ளியை அரசுக்குக் கொடுக்க முன் வந்தும், அதை அரசு எடுக்காததன் காரணம் என்ன? இதிலே மெத்தனப் போக்கு கல்வித் துறையிலே எந்த இடத்திலே இருக்கிறது? அதையும் கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது நம்முடைய கொள்கைக்கு எதிராக

இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கைக்கு முரணானது. அண்ணா அவர்களின் இறுதிக் காலத்தில் அவருடைய நுங்கம்பாக்கம் இல்லத்திலே அவரைச் சந்தித்த நேரத்தில், தனியார் பள்ளி ஆசிரியர்களுடைய அவல நிலையை எடுத்துச் சொல்லி, அந்த நிர்வாகங்களை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் விவரித்தபோது, "எல்லாப் பள்ளிகளையுமா எடுக்கச் சொல்கிறீர்கள்? பச்சையப்பன் கல்லூரி, இராமகிருஷ்ணா வித்யாலயா போன்றவைகள் நல்ல முறையில் நடைபெறவில்லையா?" என்று கேட்டுவிட்டு, நன்றாக நடைபெறும் கல்வி நிலையங்களை விட்டுவிடுவோம், ஊழல் நடைபெறும் தாபாகவே அரசிடம் ஒப்படைக்கும் கல்வி நிலையங்களை எடுத்துக்கொள்வோம்" என்று தெரிவித்தார். அப்போது அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்தக் கொள்கையை கடைப்பிடிக்காமல் என் இந்த அரசு புறக்கணிக்கிறது? அவர்கள் கொடுத்த விண்ணப்பத்தை ஏற்று ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை? நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாயவரம் கல்வி மாவட்டத்திலே திருச்சிற்றம்பலத்திலே உமா பெண்கள் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கே ஐந்து ஆசிரியர்கள்தான் பணியாற்று கிறார்கள். ஆனால், அந்த ஐந்து ஆசிரியர்களுக்குரிய மாணவர்கள் எண்ணிக்கை அப்பள்ளியில் இல்லை. அங்குள்ள அந்த ஆசிரியைகளை அந்த நிர்வாகம் படுத்துகிற பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அங்கே கொடுங்கோன்மை ஆட்சி நடக்கிறது. இதையெல்லாம் அரசுக்கு எடுத்துச் சொல்லியதன் விளைவாக இப்போது அவர்கள் நேரிடையாக ஊதியம் பெற்றுக் கொண்டிருக் கிறார்கள். என்றாலும் அந்தப் பள்ளியை 'அபாலிஷ்' செய்துவிட்டு அங்குள்ள ஆசிரியைகளை வேறு பள்ளிகளுக்கு ஈர்த்துவிட்டு மாணவர்களைப் பக்கத்திலே உள்ள பள்ளிகளில் சேர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் அரசுப் பணம் பாழாவதையும், ஆசிரியர்கள் அல்லல் படுவதையும் தடுத்து நிறுத்த முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்கள் நலநிதி இருக்கிறது. அதற்கு அளிக்கப் படும் வட்டி வீதம் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் அளவுக்கு இருக்கிறதா என்றால், இல்லை. இதிலே கூட மாறுபாடு என்? "இதை அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பெறும் அளவுக்கு அவர்கள் வட்டியைப் பெற நடவடிக்கை எடுங்கள்" என்று இந்த நேரத்திலே இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே கடன் வழங்குவதிலே கூட நிர்வாகக் குழு, மற்றவர்கள் ஒப்புதல் வழங்கிய பின்னாலேதான் கடன் வழங்க வேண்டுமென்ற நிலையை மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.





**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் ஐந்து நிமிடங்கள் பேசி விட்டார்கள். எல் லோரும் பேச வேண்டும். தயவு செய்து முடித்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் நிறைய பேசுகிறார்கள். மற்றதை அடுத்த சந்தர்ப் பத்திலே பேசலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** * * * என்று நான் நினைக்கிறேன்.

இங்கே ஆசிரியர்களின் இன்சென்டிவ் பற்றி அதிகமாகப் பேசியிருக்கிறேன். இந்த நேரத்திலே ஒரு வேண்டுகோள். எல்லாத் துறைகளிலும் இந்த இன்சென்டிவ் இப்போது வழங்கப்படுகிறது. ஆனால் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், புதிய முறை சரியானது அல்ல.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர், ** என்று கூறிய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுகிறேன்.

உறுப்பினர் பேச்சை முடித்துக்கொள்ளலாம். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் அடுத்த முறையிலே பேசலாம். உறுப்பினர் பேசி 15 நிமிஷம் ஆகிவிட்டது. கரெக்டாக நடந்த வேண்டுமென்று தலைவர் அவர்கள் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். மேல் அடிக்க அடிக்க உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தால் என்ன நியாயம்?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இன்னும் 10 நிமிடங்களிலே முடித்துவிடு கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** நான் மேற்கொண்டு 5 நிமி டங்கள் கொடுத்திருக்கிறேன். இல்லையென்றால் நாளைக்குப் பேசலாமே.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இப்போது கல்வி அமைச்சர் அவர்கள் நிதி அமைச்சர் அவர்களோடு வாதித்து போரிட்டு அந்த ஊக்க ஊதியத்தை உடனடியாக பெற்றுத் தர வேண்டுகிறேன். கல்வித் துறையிலே மட்டும் அந்தப் புதிய ஆணையை அமல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். உடற் பயிற்சி ஆசிரியர்கள் பர்ஸ்டு கிரேடு, செகன்டு கிரேடு என்று இருக்கிறார்கள். பர்ஸ்டு கிரேடு ஆசிரியர்கள்

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

3 ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்கள். செகன்டு கிரேடு ஆசிரியர்கள் 2 ஆண்டு பயிற்சி பெற்றவர்கள். அந்த 2 ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்களுக்கும் அந்தப் பயிற்சிக்கு அளித்த ஒரு ஊதிய உயர்வைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முதல் கிரேடு உடல் பயிற்சி ஆசிரியர்கள் 3 ஆண்டுகள் பயிற்சி பெற்ற காரணத்தினாலே, 2 ஊதிய விகிதமாக அவர்களுக்குத் தர வேண்டுமென்ற வேண்டுகோளினை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு கல்லூரி ஆசிரியர்களைப்பற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடித்துக்கொள்கிறேன். தயவுசெய்து மாற்றுத் தலைவர் அவர்கள் கோபப்பட வேண்டாம். மத்திய மாநில அரசு ஊழியர்களின் ஊதிய விகிதம் அவ்வப் போது மாற்றி உயர்த்தி அமைக்கப்படுகிறது. ஆனால் கல்லூரி ஆசிரியர்களுக்கு உள்ள இத்தகைய ஊதிய விகிதத்தினை மாற்றி அமைப்பது நம்முடைய அரசின் கையிலே இல்லை. பல்கலைக் கழக மானியக் குழு தான் அதைச் செய்ய வேண்டும். அந்தப் பல்கலைக் கழக மானியக் குழுவும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதை மாற்றியமைக்க வேண்டும். அந்தக் குழு 1973 ஆம் ஆண்டில் முதலிலே அதை மாற்றி அமைத்தது. அது மாற்றி அமைத்த ஊதிய உயர்வு விகிதத்தையே 5 ஆண்டுகள் கழித்து, 1978-லேதான் நம்முடைய அரசு அமுல்படுத்த விரும்பியது. ஆகவே அதிலே கூட தாமதம். சட்டப்படி 1978-லே மீண்டும் அந்தப் பல்கலைக் கழக மானியக் குழு கூடி மறு பரிசீலனை செய்து ஊதிய விகிதத்தை மாற்றியிருக்கவேண்டும். அது இதுவரை அப்படிச் செய்யவில்லை. இப்போது 1983-லேதான் சங்கங்கள் எல்லாம் வற்புறுத்தி, அதற்குப் பிறகு செய்ய ஆரம்பித்திருக்கிறது. ஆனால் அதற்கு முடிவு எப்போது வருமென்று தெரியாது. முடிவு எப்போது வந்தாலும், அது நீண்ட காலம் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு இடைக் கால நிவாரணமாக ஒரு ரூபாய் 300 ஐ நம்முடைய அரசு இப்போது வழங்குவதற்கு முன் வரவேண்டும். மத்திய அரசு அலுவலர்களுக்கு அளிக்கின்ற அந்த அகவிலைப் படியினை அதே அளவு இந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டும், அதற்குரிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல கர்நாடகம், ஆந்திரம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய மாநில அரசுகள் வழங்கியிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காலம் கடந்து விட்டது. நான் நிறையப் பேச வேண்டுமென்று கருதினேன். பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே நான் அமைச்சரவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். இதற்கு முன் பல முறை—கேள்வி நேரத்திலே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே, ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கல்விக்



கொள்கை விவாதத்திலே, பட்ஜெட் விவாதத்திலே—அனைத்துப் பிரச்சினைகளிலும் பல்வேறு கோரிக்கைகளை வற்புறுத்தி இருக்கிறோம். அவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு, இவற்றிற்கு விடை அளிக்கின்ற நேரத்திலே அவர்கள் அந்தக் கோரிக்கைகளை ஏற்று ஒரு சில அறிவிப்புகளையாவது இன்றைக்கு அமைச்சர் அவர்கள் வெளியிடவேண்டும். அதை ஆசிரியர்கள் சமுதாயம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்து, 'நீங்கள் அதைச் செய்யுங்கள்' என்று வேண்டி அமைகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு ஒதுக்கிய நேரம் 10 நிமிடம். அவர்கள் 20 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்கள் "எனக்குப் பேச வாய்ப்பு அளிக்கவில்லை" என்று அவையைக் குற்றம்சாட்டுவது அவ்வளவு சரியல்ல என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வாய்ப்பு அளிக்கவில்லை என்று குற்றம் சாட்டவில்லை ; வாய்ப்பு வேண்டுமென்று தான் கேட்டேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது இந்த ஆண்டு பேசுவதற்கான வாய்ப்பு கொடுத்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். கல்வித் துறைக்கு ஒதுக்கியுள்ள நிதி 402 கோடி ரூபாய். இந்த நிதி மொத்த வருமானத்தில் 21 சதவீதமாகக் காட்டப்பட்டிருக்கிறது. நான் பலமுறை கடந்த காலத்திலே கூறியிருந்தேன். குறைந்தது 25 சதவீதமாவது கல்வித் துறைக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டும், எப்போதும் போலவே வாடிக்கையாக, 20, 20½, 21 சதவீதத்திற்கு மேல் செல்லாமல், இதற்கு முன்னால் இருந்த நிலைமை பின்னுக்குத் தள்ளப்பட்டு, தேய்ந்து இருக்கக் கூடிய நிலையில் நிதி உதவியைக் கண்டு நான் வருத்தப்படுகிறேன். நிதி உதவியை அதிகரிக்க வேண்டுமென்று நான் கோருகிறேன். குறைந்தது 25 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும்.

அடுத்தது, 15 வயதுவரை மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தை வழங்கவேண்டுமென்றும், உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் வழங்க வேண்டுமென்றும் அது அறிமுகப்படுத்தி அறிவிக்கப்பட்டபோது, நான் ஒரு கோரிக்கையை எழுப்பினேன். இன்றைக்கு இந்த அமைச்சரவை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி இருப்பதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயத்தில்

(முற்பகல் 11-30)

சத்துணவு அளிப்பதன் காரணமாக, மாணவர்களுடைய வருகை எண்ணிக்கை உயர்ந்துவிட்டது என்றும், பல லட்சக்கணக்கானவர் வந்திருப்பதாகவும் புள்ளிவிவரத்தைத் தந்துகொண்டிருக்கின்ற நிலையில், சத்துணவுத் திட்டம் அமுலாக்கப்பட்ட காலத்திலேயிருந்து ஆசிரியர்கள் எண்ணிக்கை எவ்வளவு உயர்த்தித் தரப்பட்டிருக்கின்றது, புதிய ஆசிரியர்கள் எத்தனை பேர்கள் நியமனம் பெற்றிருக்கின்றார்கள் என்பதை தயவுசெய்து கல்வித் துறை சிந்திக்க வேண்டும். எத்தனை முறைகள் சொன்னாலும் கவனிக்கவில்லை. பிள்ளைகள் படிக்க வருகின்றார்கள். அங்கு சத்துணவு வழங்கப்படுகின்றது. பிள்ளைகள் எண்ணிக்கை அதிகரிக்கிறது. ஆனால் பிள்ளைகள் அதிகமாகி வரும்போது, அங்கே சொல்லித் தர ஆசிரியர்கள் இல்லாமல் என்ன பயன்? ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதம் என்ன ஆயிற்று? ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதத்தின் அடிப்படையில் இன்றைக்குப் பார்ப்போமேயானால், குறைந்தது 20 ஆயிரம் ஆசிரியர்களாவது நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் என்ன நிலைமை நாட்டில் இருக்கிறது? ஒரு பக்கத்திலே வேலையில்லாத ஆசிரியர்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்திலே மாணவர்களைக் கொண்டு வந்து சேர்க்கின்றார்கள். இதைப்பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இன்னொரு பக்கத்திலே ஆசிரியர்களை, ஆயிரம் ஆயிரம் பேர்கள் என்று ஒவ்வொரு ஆண்டுமாகத் தந்து கொண்டிருக்கின்ற, நியமனம் செய்கின்ற பரிதாப நிலை இருக்கிறது. இரண்டும் ஒன்று சேர்ந்து ஒத்துப்போக வேண்டும் என்பதுதான் சரி. நல்ல கல்வி கொடுக்கவேண்டாமா? நல்ல சோறு போட்டால் போதுமா? இதைச் சிந்திப்பதற்கு ஒரு வாக்கியத்தைச் சொன்னாலே புரிந்துகொள்கின்ற ஆற்றலுள்ள அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இதைப்பற்றி அவர்கள் சிந்தித்து, ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டும், நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், 1—6—1984 முதல் நான்காவது ஊதியக் கமிஷன் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. நானும் சென்ற ஆளுநர் அவர்கள் உரையிலே சொன்னேன் இந்த ஆண்டு கடைசி வரை என்று சொல்லியிருப்பது சரியல்ல. "பொதுத் தேர்தலை எதிர்பார்க்கின்றார்களா? அதற்கு ஏற்பத்தான் செய்வார்களா? உடனடியாகச் செய்ய வேண்டும்" என்று கேட்டேன். இந்த அமைச்சரவை இந்த நான்காவது ஊதியக் கமிஷனை நியமித்திருக்கிறது. அதற்காக என்னுடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் 2½ லட்சம் ஆசிரியர்கள், பெரும் எண்ணிக்கையில்





இருக்கக்கூடிய இந்த ஊழியர்களுடைய பிரச்சினையை தனி கமிஷனாக இருந்து பரிசீலனை செய்து, தனி முடிவாகவே அறிவிக்க வேண்டும். இந்திய நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களுடைய எல்லா ஆசிரியப் பெருமக்களுடைய பிரச்சினையாக வைத்து, தேசிய ஊதிய கமிஷன் அமைக்கப் படவேண்டுமென்ற முடிவை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கின்ற நிலைமையில், மாநில அரசு முன்மாதிரியாக ஆசிரியர்களுக்கு என்று தனி கமிஷன் ஒன்று ஏற்படுத்தி பரிசீலனை செய்து நல்ல சம்பளம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எப்போதுமே ஊதியக் கமிஷன் நியமிக்கும்போது, இடைக்கால நிவாரணம் வழங்கப்படும். ஆனால் இன்றைக்கு இடைக்கால நிவாரணம் எதுவும் சொல்லப்படவில்லை. அது சரியல்ல. ஏற்கெனவே இருந்த முந்தைய நடைமுறைகளை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டுப் போகின்றார்கள். குறைந்தது 100 ரூபாய் இங்கே இடைக்கால நிவாரணம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் 100 ரூபாய் என்று சொல்கின்றேன். மேற்கு வங்காள அரசுபற்றிச் சொல்கிறேன். இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட குறிப்பிடுவார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் மேற்கு வங்க அரசைச் சுட்டிக்காட்டி அநேகமாகப் பேசுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் ஏதோ மாற்றி மாற்றிப் பேசுகின்றார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** பரவாயில்லை. அவர் நினைவு மறந்து இருந்தாலும், இங்கே மாற்றி மாற்றிப் பேசுவதாகச் சொல்லி அவர் திருப்திபடுத்திக்கொள்ள விரும்புகின்றார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமை இல்லை. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் வேண்டுமானால் மேற்கு வங்காளத்தைப்பற்றிப் பேசியிருக்கலாம். எனக்கு அப்படித் தேவை யில்லை. அப்படி தேவை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அப்படிச் சொல்லி யிருந்தால் சொல்லலாம்.

**திரு. செ. முத்துசாமி :** பரவாயில்லை. நினைவே இல்லாமல் இருந்தாலும் சரி, ஒப்புக்கொள்கிறேன். நினைவுபடுத்தியே நான் சொல்கின்றேன். அவர்கள் சொல்லவில்லை என்றே வைத்துக்கொண்டு மேற்கு வங்காளத்தை உதாரணம்

காட்டுகிறேன். அங்கே பே கமிஷன் வந்தபோது, கீழே இருப்பவர்களுக்கு ரூ. 200 அதிகமாகவும், மேலே இருப்பவர்களுக்கு ரூ. 2 உயர்வும் தந்திருக்கின்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பே கமிஷன் என்பதுபற்றி இப்போது பேசுவதைவிட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இருக்கின்றபோது, அவருடைய மான்யத்திலே கோரிக்கை வைத்துப்பேசும்போது சொல்வார்களானால், பயன் உடையதாக இருக்கும். இப்போது கல்விக் கொள்கையிலே அதைப்பற்றிப் பேசுவதை விட்டு. பேசினால் நல்லதாக இருக்கும்.

திரு. செ. முத்துசாமி : ஆசிரியர்களுக்கான தனியான ஊதியக் கமிஷன் இருக்க வேண்டும் என்று சொன்னதனால், கல்வி தொடர்புடையது. கூட்டுப் பொறுப்பிலே அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையோடு சொல்கின்றேன். கூட்டுப் பொறுப்பிலே இருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடமும், நிதி அமைச்சர் அவர்களிடமும் சொல்வதற்கு ஆற்றல் அவர்களுக்கு உண்டு என்ற காரணத்தினாலும், தகுதியும் உரிமையும் உண்டு என்ற காரணத்தினாலும், அவர்கள் மூலமாகவும் இங்கே இருக்கக்கூடிய மற்ற அமைச்சர்கள் மூலமாகவும் இதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு இதை நான் பணிவோடு சமர்ப்பிக்கின்றேன். கீழே இருக்கின்றவர்களுக்கு அதிகமான உயர்வையும், மேலே இருக்கின்றவர்களுக்கு குறைவான உயர்வையும் மேற்கு வங்காளத்திலே தந்திருக்கின்றார்கள். அங்கே உள்ள பே கமிஷன்போல் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஓய்வு பெறுகிறவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் தரவேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஏற்று, ஆனால் 5,000 ரூபாய் பெருந்தன்மையோடு தந்திருக்கிறது. அதற்காக நான் நன்றி தெரிவிக்கிறேன். இன்னொரு 5,000 ரூபாய் தருவதற்கு மேலும் ஐந்து கோடி ரூபாய்தானே கூடுதலாக ஆகும். "2,000 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய இந்த ஆட்சியிலே இன்னொரு ஐந்து கோடி ரூபாய் தந்து, மேலும் 5,000 ரூபாய் தந்து, பத்தாயிரம் ரூபாயாகத் தாருங்கள்" என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஐந்து கோடி என்பது அரசுக்கு மிகச் சாதாரணமான நிதி. இந்த அரசின் மனது கொஞ்சம் உயருமானால், இதைத் தர முடியும். இவ்வாறு இன்னும் ஒரு ஐந்து கோடி ரூபாயை ஒதுக்கி, காலமெல்லாம் அரசுக்காகப் பணியாற்றிய அரசு ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாயாகத் தாருங்கள் என்று அந்த சமுதாயத்தின் சார்பாகச் சிபாரிசு செய்கிறேன்.



ஆசிரியர்களுக்குத் தனி வீட்டு வசதி வாரியம் அமைக்கப்படும் என்று சாதனைப் பட்டியலிலே இருந்தது. அரசு அத்தகைய காரியங்கள் எதுவும் செய்யாமல் சாதனைப் பட்டியலிலே போட்டிருக்கிறதே, இத்தகைய உண்மையற்ற போக்கு இருக்கலாமா என்று மாற்றி மாற்றி வீட்டு வசதி வாரிய அமைச்சரையும் கல்வி அமைச்சரையும் கேட்டுப் பார்த்தேன். ஆனால் இது உண்மையற்றது என்பதை ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மையுமில்லை. அதற்கு யார் காரணம் என்பதை ஒப்புக்கொள்ளவில்லை. 'நான் இல்லாதபோது பேசிவிட்டார்' என்று கோபித்துக்கொள்கிறார்கள். இருக்கும்போதும் பேசினேன், இல்லாதபோதும் பேசினேன், சபையிலேயும் பேசினேன், என்று அவர்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதற்கு யார் பொறுப்பு? இல்லாத ஒன்றை இருப்பதாக அறிவித்திருக்கும் தவறு மாபெரும் தவறு அல்லவா? அதற்குக் காரணமான துறை பொறுப்பை ஏற்க வேண்டாமா? அதைப்பற்றி இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறதென்று சாதனைப்பட்டியலில் அறிவித்தார்களே. இந்த வேதனையைத் தானே சபையில் சொன்னேன். அதைச் சொல்லும்போது கோபம் கொள்வது என்ன நியாயம்? என்ன தர்மம்? இப்படிப்பட்ட நிலைமைகளை நான் சொல்லியிருக்கிறேன். ஆசிரியர்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து சபையில் நேரம் கிடைக்கும்போதெல்லாம் பேசியிருக்கிறேன். ஆனால் என்ன சொல்கிறார்கள்? "ஆசிரியராக இருந்திருந்தால் இவர் ஆசிரியருடைய பிரச்சினையைப் பேசுவார்" என்று சொல்கிறார்கள். தர்மம்தானா? தயவு செய்து எண்ணிப் பாருங்கள் என்று கேட்க விரும்புகிறேன். மனச்சாட்சியோடு நான் உங்கள் மத்தியிலே பணிவன்போடு வேண்டுகிறேன். நியாயம்தானா? இப்படிச் சொல்லலாமா? கல்வி அமைச்சராக இருப்பவரே இப்படி ஒரு குற்றச்சாட்டை தேவை இல்லாமல் சொல்வது என்ன நியாயம்? இதைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். பெரிய பொறுப்பிலே இருக்கிறார்கள். நான் ஒருமுறைகூட அமைச்சரவர்களிடத்திலே சொன்னேன். "நான் எத்தனை காலத்திற்கு எம்.எல்.சி.-ஆக இருந்துவிடப்போகிறேன்? நீங்கள்தான் எத்தனை காலத்திற்கு சரித்திரத்திலே இருந்துவிடப்போகின்றீர்கள்?" என்பதை நேரடியாகவே அமைச்சரவர்களிடத்திலே நான் பேசியிருக்கிறேன். சரித்திர நிகழ்ச்சிகளிலே பலர் வருவதும் போவதும் உண்டு, ஆனால்

வந்திருக்கக்கூடிய காலகட்டத்தில் எவ்வளவு செய்திருக்கிறோம் என்பதே முக்கியம். அப்படிப்பட்ட காரியங்களிலே சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். அதிலே நான் எதையும் பேசவில்லை என்ற குற்றச்சாட்டைச் சாட்டுவது நியாயம்தானா? "உங்களுடைய மனச்சாட்சியே உங்களைச் சுடும்" என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வி ஆலோசனைக் குழுவில், 10 (ஏ) (1) ஆசிரியர்களைப் பொறுத்தவரை, சர்வீஸ் கமிஷன்மூலமாகத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பணி வரன்முறை செய்வதற்கு கல்வித் துறையிலே ஒரு முடிவு எடுத்தோம். "அந்த முடிவை உடனடியாகச் செய்வதற்கு முன் வாருங்கள், இதை உங்களுக்கு சிபாரிசாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்."

பள்ளிக் கல்வி இயக்குநர் பணிக் காலத்தை நீட்டித்திருக்கிறார்கள். அவர் நல்லவர். கொள்கை எனக்கு வேறாக இருந்தாலும், ஒரு நல்லவருக்கு நீட்டித்திருக்கிறார்கள் என்பதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அசிஸ்டண்ட் டைரக்டர் பணியிடங்களை எல்லாம் 'பில் அப்' செய்வதற்கு இந்தக் கல்வித் துறையிலே ஆட்களே இல்லையா? ஜாயிண்ட் டைரக்டர் பணியிடங்களை நிறைவு செய்வதற்கு ஆட்களே கிடைக்கவில்லையா? வெளி மாநிலங்களிலிருந்து கொண்டுவர வேண்டுமென்பதற்காகக் காத்திருக்கிறார்களா? அல்லது வெளிநாடுகளிலிருந்து கொண்டுவர வேண்டுமென்று யோசித்துக்கொண்டிருக்கிறார்களா? முதன்மைக் கல்வி அதிகாரி பதவிகள் எல்லாம் நிரப்பப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? என்ன நியாயம்? ஏன் இன்னும் நிரப்பாமல் இருக்கிறார்கள்? கல்வியின் நலன் கருதி விரைவாக அந்தப் பதவிகள் எல்லாம் நிரப்பப்பட வேண்டும் என்பதே என் ஆவல். என்னுடைய இந்த ஆவலைப் பூர்த்தி செய்வார்கள் என்று நம்புகிறேன். நாட்டினுடைய நலனுக்காக, கல்வியினுடைய நலனுக்காக இதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, "நீங்களும் ஆசிரியர்தான்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அமைச்சரவர்களும் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டு அமர்ந்திருந்தார்கள். ஆனால் என்னை ஆசிரியர் அல்ல என்று சொல்லிக்கொள்வதிலே அமைச்சரவர்களுக்கு ஒரு பெருமிதம், ஒரு மகிழ்ச்சி. ஆனால் நான் அமைச்சரவர்களை அப்படிச் சொல்லமாட்டேன். என்னை மோசக்காரன் என்றுகூட சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்களை அப்படி மோசக்காரர் என்று சொல்வதற்கு நான் இந்த சபைக்கு வரவில்லை. ஆனாலும் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.



**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பத்து நிமிடங்கள் முடிந்துவிட்டது. மேற்கொண்டு இரண்டு நிமிடங்கள் வேண்டுமானால் பேசலாம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் இருபது நிமிடங்கள் அளித்திருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே அதைத் தயவுசெய்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு கொடுத்த வாக்குறுதிகளைக் குறித்து கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சில ஆசிரியர் சங்கங்களைச் சார்ந்த சில பேர் வந்தபோது, ஒவ்வொரு சங்கத்திற்கும் சில வாக்குறுதி களைத் தந்திருக்கிறார்கள். "இதைச் செய்தால் நான் இதைச் செய்கிறேன்" என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. அந்த வாக்குறுதிகளை யெல்லாம் அவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். தயவுசெய்து, அந்த

(முற்பகல் 11-40)

வாக்குறுதிகளை எல்லாம் நினைவுபடுத்தி, நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஒரு முத்துசாமி இந்த சபைக்கு வரக்கூடாதென்று சில பேர்கள் எண்ணியிருக்கிறார்கள். அதிலே அமைச்சரவர்கள்கூட ஆட்பட்டு, ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினரவர்கள் கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேச வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: மாற்றுத் தலைவரவர்களே, கல்வி மானியத்திலே தான் பேசுகிறேன். கல்வி அமைச்சரவர்கள்தான் அதை 'ப்ளேஸ்' பண்ணி யிருக்கிறார்கள். அதனால் கல்வி அமைச்சரவர்களைப்பற்றிச் சில விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆதலால்தான் சொல்கிறேன். இது சம்பந்தமில்லை என்று கருதக்கூடாது. வேறு அமைச்சர்களைப்பற்றிச் சொல்லவில்லை. இங்கு இல்லாதவர்களைப்பற்றியும் பேசவில்லை. இங்கே, ஆசிரியர்களுக்கென்று ஓர் இல்லம் கட்டுவதற்காக நான்கு ஆண்டுகளுக்கு முன்பு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளதாக அறிவித்தார்கள். நினைவிருக்கும் என்று நினைக்கிறேன். கொள்கை அறிவிப்பாகவே செய்தார்கள். இதுவரை ஒரு அடிக்கல் நாட்டப்பட்டதுண்டா? ஆசிரியர்கள் நலனில் அக்கறை இருக்கிறது என்று ஒவ்வொரு பட்ஜெட்டிலும் சொல்லுகிறார்களே, கல்விக் கொள்கைக் குறிப்பிலே சொல்கிறார்களே, சென்னைக்கு வந்தால் ஆசிரியர்கள் தங்க வேண்டாமா? அவர்கள் தங்குவதற்கு இல்லம் கட்டப் போகிறோமென்று கல்வித் துறையிலே 10 லட்சம் ரூபாய் ஒரு பெரிய அறிவிப்பு தந்தார்களே,

நிதியா? ஏன் செய்யவில்லை? செய்யாமல் இருக்க என்ன கோபம்? தமிழாசிரியர்கள்மீது கோபப்படுகிறார்கள். இந்தத் தமிழாசிரியர்கள் ஒரு மோசக்காரனை ஆதரிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஜனநாயக உரிமையிலே ஒரு தமிழாசிரியர் கழகத்திற்கு . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாற்றுத் தலைவரவர்களே, நான் இங்கு அப்படி எந்தவிதமான கருத்தும் சொல்லவில்லை. தமிழாசிரியர்கள் யாரை ஆதரித்தால் என்ன, யாரை எதிர்த்தால் என்ன? அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆக, இங்கே சொல்லாததைச் சொல்லி, பேச ஆரம்பிப்பார்களானால். எந்தவிதமான நடவடிக்கையும் ஒழுங்காக நடக்காது.

**திரு. செ. முத்துசாமி:** மாற்றுத் தலைவரவர்களே, ஒழுங்குபற்றிச் சொல்லுகிறார்கள். ஓர் அமைச்சராக இருக்கிறவர்கள் எங்கு சென்றாலும் அமைச்சரே. அவருக்குச் சில பொறுப்புகள் இருக்கின்றன. இந்த அவையிலே உள்ள ஓர் உறுப்பினர்பற்றி . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாற்றுத் தலைவரவர்களே, வெளியே நடந்ததுபற்றி இங்கே யாரும் பேசக் கூடாது. பேசுவதாக இருந்தால், அது முறையுமாகாது, சரியுமாகாது.

**திரு. செ. முத்துசாமி:** மாற்றுத் தலைவரவர்களே, நான் வெளியே நடந்ததுபற்றிப் பேசுவதாகச் சொல்கிறார்கள். ஆக வெளியே சென்று ஓர் அமைச்சராக இருக்கிறவர்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்பது போல் அவர்கள் கருத்து சொல்கிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாற்றுத் தலைவரவர்களே, வெளியே நான் ஆயிரம் பேசுவேன். ஆயிரம் பேசக்கூடிய உரிமை எனக்கு இருக்கிறது. தைரியமிருந்தால் வெளியே பேசட்டும். ஆனால் இங்கே வந்து, இப்போது என்ன பேச வேண்டுமோ அதைத்தான் பேச வேண்டும். இங்கே நேரக் கட்டுப்பாடு இருக்கிறது. எதைப்பற்றிப் பேச வேண்டுமென்ற கட்டுப்பாடு இருக்கிறது. மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆகவே எல்லா உறுப்பினர்களையும் அவமதிக்கும் அளவுக்கு தன் இஷ்டம்போல் பேசுவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.

**திரு. செ. முத்துசாமி:** கல்வி அமைச்சரவர்களைப்பற்றிச் சொல்லும் போது . .

**மாற்றுத் தலைவர் (திரு. ஜி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சப்ஜெக்டுக்கு வர வேண்டும்.



**திரு. செ. முத்துசாமி:** கட்டிடத்திற்கு வந்திருக்கிறேன். ஆசிரியர்கள் இல்லம் கட்டவில்லையே என்ற ஏக்கத்தில் சொல்கிறேன். ஆனால் ஆசிரியர் களுக்காக ஒரு கட்டிடம் வைத்திருப்பதுபற்றி ஒரு தவறான நிலைமை வந்து, கல்வி அமைச்சரவர்கள் வெளியே பேசியிருக்கிறார்கள். ஒரு கல்வி அமைச்சருக்கு இப்படி அவப் பெயர் வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். என்னைப் பார்த்து, "இரண்டு நாளில் பத்திரத்தை எழுதா விட்டால், நீ ஜெயிலுக்குச் செல்வாய்" என்று சொல்லுகிறார்கள். இதை வெளியிலே சொல்லியிருந்தாலும் சொல்கிறேன் . . .

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது வெளியே பேசினதை நான் இங்கே பேச வேண்டியிருக்கிறது. நான் சொன்னது ஒரேயொரு கருத்து. இவரை எதிர்க்கின்ற ஆசிரியர்கள் ஒரு கூட்டம் போட்டிருந்தார்கள். என்னைக் கூப்பிட்டிருந்தார்கள். நான், எல்லா ஆசிரியர் கூட்டங்களுக்கும் போவதுபோல போனேன். அவர்களுடைய குறைபாடு, ஆசிரியர்களிடத்திலே நன்கொடை திரட்டி வாங்கிய கட்டிடத்தை அந்த ஆசிரியர் சங்கத்துக்கு எழுதவில்லை என்பதுதான். இன்னொன்று, அந்த மாநாட்டிலே முதன்முதலாக என் மூலமாகத்தான் பணத்தை வாங்கித் தந்தார்கள். பிராவிடன்ட் பண்டிலே கடன் வாங்கி, ஒவ்வொரு ஆசிரியரும் 1,000, 1,500 ரூபாய் என்று என் மூலம் தந்தார்கள். நான்தான் வாங்கித் தந்தேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சங்கத்திற்குத்தான் எழுதி வைத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். அவர்கள், அப்படி இல்லை என்று சொன்னார்கள். நான் சொன்ன யோசனை "இரண்டு பேருடைய நோக்கமும் ஒன்றுதான். ஆகவே பத்திரத்திலே ஏதாவது தவறு இருந்தால் ஒரு வழக்கறிஞரை வைத்து—பக்கத்திலே சேலம் இருக்கிறது, சென்னை இருக்கிறது—ஏதாவது ஒரு வழக்கறிஞரை வைத்து, அந்தப் பத்திரத்தை மாற்றி எழுதி, அதற்காக எதிர்க்கிற ஆசிரியர்களையும் நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் கூட்டிக் கொண்டுபோய், அவருக்கு ஆதரவாக வைத்துக்கொள்ளலாம், யாருக்கும் ஆட்சேபணை இல்லை" என்ற யோசனையைத்தான் பொதுவாகச் சொன்னேன். அதிலேகூட இப்போது என்ன சிக்கல் இருக்கிறது என்பது தெரியவில்லை.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி உட்கார வேண்டும். தயவுசெய்து நம்முடைய விதிமுறை தெளிவாக இருக்கிறது. வெளியிலே பேசியது பற்றியோ, பத்திரிகைகளில் வந்திருந்தாலும் கூட, தகவலாக இருந்தால் தரலாம். குற்றச்சாட்டாக இருந்தால்

நிதியா? ஏன் செய்யவில்லை? செய்யாமல் இருக்க என்ன கோபம்? தமிழாசிரியர்கள்மீது கோபப்படுகிறார்கள். இந்தத் தமிழாசிரியர்கள் ஒரு மோசக்காரனை ஆதரிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஜனநாயக உரிமையிலே ஒரு தமிழாசிரியர் கழகத்திற்கு . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாற்றுத் தலைவரவர்களே, நான் இங்கு அப்படி எந்தவிதமான கருத்தும் சொல்லவில்லை. தமிழாசிரியர்கள் யாரை ஆதரித்தால் என்ன, யாரை எதிர்த்தால் என்ன? அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆக, இங்கே சொல்லாததைச் சொல்லி, பேச ஆரம்பிப்பார்களானால், எந்தவிதமான நடவடிக்கையும் ஒழுங்காக நடக்காது.

**திரு. செ. முத்துசாமி :** மாற்றுத் தலைவரவர்களே, ஒழுங்குபற்றிச் சொல்லுகிறார்கள். ஓர் அமைச்சராக இருக்கிறவர்கள் எங்கு சென்றாலும் அமைச்சரே. அவருக்குச் சில பொறுப்புகள் இருக்கின்றன. இந்த அவையிலே உள்ள ஓர் உறுப்பினர்பற்றி . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாற்றுத் தலைவரவர்களே, வெளியே நடந்ததுபற்றி இங்கே யாரும் பேசக் கூடாது. பேசுவதாக இருந்தால், அது முறையுமாகாது, சரியுமாகாது.

**திரு. செ. முத்துசாமி :** மாற்றுத் தலைவரவர்களே, நான் வெளியே நடந்ததுபற்றிப் பேசுவதாகச் சொல்கிறார்கள். ஆக வெளியே சென்று ஓர் அமைச்சராக இருக்கிறவர்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்பது போல் அவர்கள் கருத்து சொல்கிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாற்றுத் தலைவரவர்களே, வெளியே நான் ஆயிரம் பேசுவேன். ஆயிரம் பேசக்கூடிய உரிமை எனக்கு இருக்கிறது. தைரியமிருந்தால் வெளியே பேசட்டும். ஆனால் இங்கே வந்து, இப்போது என்ன பேச வேண்டுமோ அதைத்தான் பேச வேண்டும். இங்கே நேரக் கட்டுப்பாடு இருக்கிறது. எதைப்பற்றிப் பேச வேண்டுமென்ற கட்டுப்பாடு இருக்கிறது. மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆகவே எல்லா உறுப்பினர்களையும் அவமதிக்கும் அளவுக்கு தன் இஷ்டம்போல் பேசுவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.

**திரு. செ. முத்துசாமி :** கல்வி அமைச்சரவர்களைப்பற்றிச் சொல்லும் போது . .

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சப்ஜெக்டுக்கு வர வேண்டும்.





**திரு. செ. முத்துசாமி :** கட்டிடத்திற்கு வந்திருக்கிறேன். ஆசிரியர்கள் இல்லம் கட்டவில்லையே என்ற ஏக்கத்தில் சொல்கிறேன். ஆனால் ஆசிரியர் களுக்காக ஒரு கட்டிடம் வைத்திருப்பதுபற்றி ஒரு தவறான நிலைமை வந்து, கல்வி அமைச்சரவர்கள் வெளியே பேசியிருக்கிறார்கள். ஒரு கல்வி அமைச்சருக்கு இப்படி அவப் பெயர் வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். என்னைப் பார்த்து, "இரண்டு நாளில் பத்திரத்தை எழுதா விட்டால், நீ ஜெயிலுக்குச் செல்வாய்" என்று சொல்லுகிறார்கள். இதை வெளியிலே சொல்லியிருந்தாலும் சொல்கிறேன் . . .

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது வெளியே பேசினதை நான் இங்கே பேச வேண்டியிருக்கிறது. நான் சொன்னது ஒரேயொரு கருத்து. இவரை எதிர்க்கின்ற ஆசிரியர்கள் ஒரு கூட்டம் போட்டிருந்தார்கள். என்னைக் கூப்பிட்டிருந்தார்கள். நான், எல்லா ஆசிரியர் கூட்டங்களுக்கும் போவதுபோல போனேன். அவர்களுடைய குறைபாடு, ஆசிரியர்களிடத்திலே நன்கொடை திரட்டி வாங்கிய கட்டிடத்தை அந்த ஆசிரியர் சங்கத்துக்கு எழுதவில்லை என்பதுதான். இன்னொன்று, அந்த மாநாட்டிலே முதன்முதலாக என் மூலமாகத்தான் பணத்தை வாங்கித் தந்தார்கள். பிராவிடன்ட் பண்டிலே கடன் வாங்கி, ஒவ்வொரு ஆசிரியரும் 1,000, 1,500 ரூபாய் என்று என் மூலம் தந்தார்கள். நான்தான் வாங்கித் தந்தேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சங்கத்திற்குத்தான் எழுதி வைத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். அவர்கள், அப்படி இல்லை என்று சொன்னார்கள். நான் சொன்ன யோசனை "இரண்டு பேருடைய நோக்கமும் ஒன்றுதான். ஆகவே பத்திரத்திலே ஏதாவது தவறு இருந்தால் ஒரு வழக்கறிஞரை வைத்து—பக்கத்திலே சேலம் இருக்கிறது, சென்னை இருக்கிறது—ஏதாவது ஒரு வழக்கறிஞரை வைத்து, அந்தப் பத்திரத்தை மாற்றி எழுதி, அதற்காக எதிர்க்கிற ஆசிரியர்களையும் நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் கூட்டிக் கொண்டுபோய், அவருக்கு ஆதரவாக வைத்துக்கொள்ளலாம், யாருக்கும் ஆட்சேபணை இல்லை" என்ற யோசனையைத்தான் பொதுவாகச் சொன்னேன். அதிலேகூட இப்போது என்ன சிக்கல் இருக்கிறது என்பது தெரியவில்லை.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி உட்கார வேண்டும். தயவுசெய்து நம்முடைய விதிமுறை தெளிவாக இருக்கிறது. வெளியிலே பேசியது பற்றியோ, பத்திரிகைகளில் வந்திருந்தாலும் கூட, தகவலாக இருந்தால் தாலாம். குற்றச்சாட்டாக இருந்தால்

பத்திரிகையை வைத்துக்கொண்டு, பேசக் கூடாது. அது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும். எனவே அந்த விஷயத்தை அப்படியே விட்டுவிட்டு, அடுத்த பொருளுக்கு வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் ஒரு செய்தியைச் சொல்லிவிட்ட காரணத்தால், அவர்கள் சொல்லியதை நான் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இல்லையில்லை. ஏற்கெனவே சொன்னதைத் திருப்பிச் சொன்னால், நான் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டி வரும்.

**திரு. செ. முத்துசாமி :** நடந்த உண்மையை, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேனேயல்லாமல் வேறொன்றுமில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னொரு முறையும் சொல்கிறேன். ஏற்கெனவே போதுமான அளவு வெளி விஷயம் பூராவும் பேசியாயிற்று. அதை விட்டுவிட்டு விஷயத்திற்கு வர வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** உண்மையிலேயே கல்வி அமைச்சர்தான் பேசியிருக்கிறார். நான் பேசவில்லை. அந்தப் பத்திரத்தை அவரிடத்தில் நான் கொடுத்துவிடுகிறேன். இங்கே கல்வி அமைச்சர் நான் சொன்னதாகச் சொல்லி . . .

(மாண்புமிகு கல்வி அமைச்சரிடம் திரு. முத்துசாமி பத்திரத்தைக் கொடுத்தார்.)

**திரு. செ. முத்துசாமி :** ஏற்கெனவே கல்வி அமைச்சருடைய கையில்தான் பணம் தந்ததாகச் சொல்லியிருக்கக்கூடிய விஷயத்தைப்பற்றிக் கொஞ்சம் நான் 'பெர்சனல் எக்ஸ்பிளனேஷன்' சொல்ல வேண்டாமா? அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினருக்கு இன்னொரு முறையும் சொல்கிறேன். வெளியில் சொன்னதைப்பற்றித் திருப்பித் திருப்பி இங்கே சொல்வதற்கு விதியில் இடமில்லை. நான் சொன்னதற்குப் பிறகும் 'அவர் அப்படிச் சொன்னார், அதனால்தான் நானும் சொல்கிறேன்' என்று சொல்லிக் கொண்டேயிருந்தால், என்ன அர்த்தம்? அதைப்பற்றி எவ்வளவோ ஏற்கெனவே சொல்லியாயிற்று.





**திரு. செ. முத்துசாமி :** 'பெர்சனல் எக்ஸ்பிளனேஷன்' தான் சொல்கிறேன். நிதியை வாங்கியதாகவும், அமைச்சர் கையிலிருந்து வாங்கியதாகவும் பிரச்சினை வந்ததால்தான் பெர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்கிற முறையில் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான்தான் என்னுடைய நிதியாக இரண்டாயிரம் ரூபாயை முதன் முதலில் தந்தேன். எனக்கு பி.எப்.-லிருந்து எடுப்பதற்கெல்லாம் சக்தி கிடையாது. அவர் கூறிய அடிப்படையிலுள்ள ஓர் ஆசிரியரும் அல்ல நான். ஆனால் அதேநேரத்தில் அவருடைய கரத்தில் இரண்டாயிரம் ரூபாயை நான்தான் தந்தேன். அது உண்மைதான். ஆனால் எந்தத் தமிழ் நாடு ஆசிரியர் கூட்டணியின் பொதுக் குழு நிதியை வசூலிக்கச் சொன்னதோ அதே பொதுக் குழு தமிழ் நாடு ஆசிரியர் கூட்டணி அறக் கட்டளை என்பதை ஏகமனதாக முடிவு செய்து, அதை கட்டிடத்திற்கு எழுத வேண்டுமென்று யுனானிமசாக ரெசல்யூஷனையும் 'பாஸ்' செய்தது. இதை வைத்து இந்தக் கட்டிடத்திற்கு எழுத வேண்டுமென்று டாக்குமெண்ட் எல்லாம் மிகத் தெளிவாகத் தயாரிக்கப்பட்டது. நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிக ஜாக்கிரதையாகவும். நல்லமுறையிலும் ஒரு ஆலோசனையாக இங்கே அவையில் ஒன்றைச் சொன்னார்கள். நான் அதுகுறித்து பெருமைப்படுகிறேன். வெளியே அப்படிச் சொல்லாவிட்டாலும், இங்கே அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சருடைய பெருந் தன்மையைப் பாராட்டுகிறேன். ஆனால் ஒன்று சொல்கிறேன். இந்தப் பிரச்சினையைப்பற்றி அமைச்சரிடத்தில் யார் என்ன சொல்லியிருந்தாலும், ஒன்று சொல்கிறேன். 'அவர்கள் வந்தார்கள், முதலமைச்சரிடத்தில் அவர்களை அழைத்துச் சென்று பேசினேன்' என்றுகூட சொல்லியிருக்கிறார்கள். எனக்கு ஒரு ஆதங்கம். கல்வி அமைச்சராக அவர் இருக்கிறார். என்மீது, கோபம்கூட இருக்கலாம். ஆனால் ஒரே ஒரு விஷயம். சரித்திரத்தில்—இப்படி ஓர் உறுப்பினர் உட்கார்ந்துகொண்டிருக்கிறானே, இவனைப்பற்றி இப்படிச் சொல்கிறார்களே, அவன் கையில் இருக்கக்கூடிய பத்திரத்தை வாங்கிப் படிக்க வேண்டுமென்ற எண்ணம் வந்திருக்க வேண்டாமா? அப்படிப் பார்த்துவிட்டு அமைச்சர் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்திருந்தாலும்கூட, நான் அவர்களை எவ்வளவு பெருமையோடு கருதியிருப்பேன். கல்வி அமைச்சர் அவர்களே, 'நீங்கள் பெரிய பதவியில் இருக்கிறீர்கள். உங்களுடைய பதவி . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதெல்லாம் முறையானதல்ல. அப்புறம் இதற்கு மேலும் பேசினால் நடப்பது வேறாக இருக்கும். அங்கு நான் எடுத்துப் பேசியதை எடுத்துச் சொன்னேன். இது பெரிய பதவியாக இருந்தாலும் சரி, சிறிய பதவியாக இருந்தாலும் சரி, இது வேறு விவகாரம். இப்பொழுது இதே இடத்தில் உறுப்பினர் ஒன்றை மறைத்துவிட்டுப் பேசிவிட்டார். இவர் மட்டும்தான் இரண்டாயிரம் ரூபாய் தந்ததாகச் சொல்கிறார்.

பத்து ஆசிரியர்களுக்கு மேலே என் கையில் தந்தார்கள். நான் அந்த மாநாட்டில் பேசியபோது ஒன்றைச் சொன்னேன். "நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, ஆசிரியர்கள் ஆயிரம் ஆயிரமாகத் தருகின்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறார்கள்" என்றும் சொன்னேன். அதை மறைத்து தைரியமாக உறுப்பினர் பேசுகின்றார். ஆக, இவரிடத்தில் நான் எந்தக் கருத்தைப் பேச முடியும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஒரு பெர்சனல் எக்ஸ்பிளனேஷன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பெர்சனல் எக்ஸ்பிளனேஷன், பெர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்று சொல்லிக்கொண்டே நேரத்தை நீட்டித்துக்கொண்டே போனால் என்ன அர்த்தம்? அந்த விஷயத்தை விட்டுவிட்டு மேலே விஷயத்திற்கு வர வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** நான் பெர்சனல் எக்ஸ்பிளனேஷன் பற்றிப் பேசும்போது கல்வி அமைச்சர் 'நடப்பதே வேறு' என்கிறார். இன்னொரு விஷயத்தையும் இந்த அவையில் சொல்லிவிட்டு நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசி நேரத்தை நீட்டிக்கொண்டே போனால், அப்படித்தான் ஒருவருக்கொருவர் வார்த்தைகள் வந்து விழும். உறுப்பினர் அவர்களும் தான் சொல்கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** முன்புகூட என்னைப்பற்றி ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது * * * என்கின்ற வார்த்தைகள் எல்லாம் வெளிப்பட்டிருக்கின்றன.

*(திரு. ஜேப்பியார் எழுந்தார்)*

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த வாசகத்தை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன். அதைப் பத்திரிகைகளிலும் போடக் கூடாது. இம்மாதிரி போனால் உறுப்பினர் அவர்கள் பேச்சு பதிவாகாது.

**திரு. செ. முத்துசாமி :** சட்டசபை உறுப்பினர்கள் * * * தலைவர் அவர்கள்தான் தகுந்த பாதுகாப்பு தர வேண்டும்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் சொல்கிறேன். உட்கார வேண்டும். பேசுவதானால் கோபப்படாமல் பேச வேண்டும். திரும்பவும் சொல்கிறேன். அவையில் பேசியதைக் கண்டித்து வெளியே யார் பேசினாலும் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் அவைக்கு சம்பந்தமில்லாத, தேர்தல் மேடையிலே பேசியதையெல்லாம் இங்கே வந்து பேசினால் எப்படி பாதுகாப்புத் தர முடியும்? உறுப்பினர் முடிவுக்கு வர வேண்டும். இன்னும் இப்படி இதையே பேசிக்கொண்டிருந்தால் எப்போது முடிவுக்கு வருவது?

**திரு. செ. முத்துசாமி :** வெளியே சென்று இப்படி ஒருவர் பேசுகின்றார் என்றால், எனக்குப் பாதுகாப்பு யார்? * * * என்று சொல்வது போல் நிலைமை . . . அப்படி என்றால் இதற்கு, என்ன அர்த்தம்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் தலைவருக்குக் கட்டுப்படுவதில்லையென்ற முடிவோடு வந்திருக்கிறாரா என்று எனக்குப் புரியவில்லை. எவ்வளவோ அடக்கமாகப் பேசுகிறவர்கள் இப்போது மட்டும் ஏன் இவ்வளவு பிடிவாதமாகத் திரும்பவும் திரும்பவும் பேசுகிறார்கள்?

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நான் பிடிவாதமாக இல்லை. 63 மெம்பர்களிலே நான் ஒரு சாதாரண மெம்பர்.

(முற்பகல் 11-50)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் அவரோடு சண்டை போடுகிறார்களா, அல்லது என்னோடு சண்டைக்கு வருகிறார்களா? (சிரிப்பு)

**திரு. செ. முத்துசாமி :** நான் யாரோடும் சண்டை போடவில்லை, ஐயா. நான் ஒன்றைச் சொல்கிறேன், ஒரு சாதாரண மனிதனை, * * * என்று சொன்னால் . . . (குறுக்கீடுகள்)

*(திரு. ஜேப்பியார் எழுந்தார்)*

*(மணியடிக்கப்பட்டது)*

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பவும் சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் பேசியதையே மீண்டும் சொல்கிறார்கள். அவைகள் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரும்பவும் அதையே உறுப்பினர் பேசினால், வெளிப்பேச்சை இங்கே குறிப்பிட்டுப் பேசுவதில் பயனில்லை.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. செ. முத்துசாமி : அப்போது ஒரு மெம்பருக்கு ஒரு ஆபத்து வருகிறதென்றால் . . . (குறுக்கீடுகள்) பாதுகாப்பது தங்கள் கடமையில்லையா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒரு மெம்பருக்கு எப்போது பாதுகாப்பு தருவது என்ற பிரச்சினை வருகிறதென்றால், சபையில் பேசியதைப் பொறுத்தவரையில்தான், பாதுகாப்பு கொடுக்க முடியும். இதைக் கூட நினைக்காமல் பேசினால், நான் என்ன செய்ய முடியும்?

திரு. செ. முத்துசாமி : . . . (குறுக்கீடுகள்) என்பதை உங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்படியும் நாட்டில் நடக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சீக்கிரம் முடிக்கவேண்டும்.

திரு. செ. முத்துசாமி : இல்லை. இந்த விஷயத்தில் எனக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை, சபைக்குள் இருக்கக்கூடிய ஒருவன், ஏற்கெனவே இப்படி என்னைப் பற்றிச் சொல்கிறார்கள் என்று சொல்லக்கூடாதா? இந்த நாட்டிலே அதற்கு உரிமையில்லையா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்கிறேன். ஏற்கெனவே உறுப்பினர் அவர்கள் சொல்லியாகிவிட்டது. நிறைய சொல்லியிருக்கிறார்கள். சொல்கிறேன், சொல்கிறேன் என்று அதையே சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி? சீக்கிரம் முடிக்கவேண்டும்.

திரு. செ. முத்துசாமி : கல்வியமைச்சர், "நடைபெறுவதே வேறு" என்று கோபப்பட்டுச் சொல்கிறார், வெளியே இப்படிச் சொல்லப்படுகிறது. ஒரு மனிதனுக்கு இப்படிப்பட்ட மிரட்டல்கள் நடக்கலாமா? நான் என்ன தவறு செய்தேன் ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விஷயத்திற்கு வருகிறார்களா ? நான் வேறு உறுப்பினரைக் கூப்பிடவா ? உறுப்பினர் அவர்கள் விஷயத்திற்குப் போகவில்லையென்றால், நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிடவேண்டியிருக்கும். இப்படி அடங்காமல் பேசினால், நான் என்ன செய்ய முடியும்?

திரு. செ. முத்துசாமி : தலைவர் ரொம்ப கோபப்படுகிறீர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்போது என்கிட்டேயே சண்டைக்கு வருகிறார்கள். ஒரு கோபமும் எனக்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் முடிக்க வேண்டும்.





திரு. செ. முத்துசாமி : உங்களுடைய கோபத்திற்கும் வேறு நான் ஆளாக வேண்டியிருக்கிறது. அமைச்சர் பேசும்போது 'நடப்பதே வேறு' என்று சொல்கிறார். என்னுடைய பரிதாபத்தை நினைத்து, எனக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், நான் எங்கே செல்வது?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்போது என்னைத் திட்ட ஆரம்பிக்கிறார். (சிரிப்பு) அமைச்சரும் உங்களிடமிருந்து பாதுகாப்பு வேண்டுமென்று கேட்கிறார். நீங்களும் அமைச்சரிடமிருந்து பாதுகாப்பு வேண்டுமென்று கேட்கிறீர்கள். நான் யாரை யாரிடமிருந்து பாதுகாப்பது?

திரு. செ. முத்துசாமி : அதைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல எனக்குப் பாதுகாப்பு இல்லையே. அப்படிப் பேசினால் 'நடப்பதே வேறு' என்று அமைச்சரே சொல்லலாமா? உங்கள் முன்பே அப்படிப் பேசலாமா? இவ்வளவு பேர் அடங்கிய சபையிலேயே இவ்வளவு வேகமாகப் பேசினாரே, இது நியாயமா? இப்படியென்றால் அவர்களது நடைமுறை எப்படி இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு . . .

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமிக்கு பதில் தரக்கூடிய நேரத்தில் பயன்படுத்திய வார்த்தை கொஞ்சம் கடுமையாக இருந்தது. "நடப்பதே வேறாக இருக்கும்" என்று சொன்னதை, தாங்கள் பரிசீலித்து அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது என்னவென்று அமைச்சர் சொன்னால்தான், அது பார்லிமெண்டரி வார்த்தையா இல்லையா என்று தெரியவரும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் விதிமுறைகளுக்கு மாறாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் விதிமுறைகளுக்குட்பட்டு பேசுவதாக நினைத்து பேசிக்கொண்டிருக்கிறேன். ஆகவே அப்படியே பேசினால் நானும் அப்படியே பேச வேண்டியிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நான்போய் அவரிடத்தில் எதுவும் செய்ய முடியாது. அந்த அளவுக்கு நமக்கு பலமும் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சீக்கிரம் முடிவுக்கு வர வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு நான் பேசியதாக அமைச்சர் சொல்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதை 'எஸ்டாபிளிஷ்' செய்கிறார். அதைப்பற்றி விளக்கமா? நானாக முடிக்கும் நிலைக்கு என்னைக் கொண்டு வருகிறார் உறுப்பினர். சீக்கிரம் முடித்தால் நல்லது. (குறுக்கீடுகள்)

**திரு. செ. முத்துசாமி :** நீங்கள் முடிக்காமல் யாரும் முடிக்க முடியாது. அது உங்களுக்குண்டான அதிகாரம். அதற்கு நானும் தலை வணங்குகிறேன். அந்தப் பத்திரத்தைப் பொறுத்தவரையில் தயவுசெய்து, கல்வியமைச்சர் அவர்கள் என்மீது தவறான கருத்துக்கள் கொண்டிருந்தாலும் அவற்றைவிட்டு, தமிழ்நாடு ஆசிரியர்கள் கூட்டணி அமைப்பு விதிகளின் எண் 15-ன்படி, துணை நிறுவனங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று இருப்பதைப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே சங்கத்தில் இருக்கக்கூடிய விதிதான் அது. இப்போது துணை நிறுவனமாகத்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தயவுசெய்து அதைத் தவறாக எடுத்துக்கொண்டு பேசக்கூடாது. இனிமேலும் தவறாக எடுத்துக் கொள்ளவேண்டாம். உங்களிடத்தில் நியாயத்தைக் கோருகிறேன். ஆகவே இந்தப் பத்திரத்தை நான் கல்வி அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு உங்கள் மூலமாக சமர்ப்பிக்கிறேன். தயவுசெய்து நல்லமுறையில் அதைப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு அமைச்சரிடம் திரு. முத்துசாமி ஒரு ஜெராக்ஸ் காப்பி பத்திரத்தை அளித்தார்)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படி ஒரு பத்திரத்தை நான் பார்க்க வேண்டுமென்ற அவசியமும் இல்லை. தேவையும் இல்லை. எனக்கு அதைப்பற்றி எந்தவிதமான அக்கறையும் இல்லை. ஆனால் இந்தப் பத்திரத்திலிருந்து வேறுபட்டு நிற்கிற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அதற்குப் பணம் கொடுத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பத்திரம் சரியல்லவென்று சொல்கிறார்கள். அவர்களுடைய நோக்கம் கட்டிடம் சங்கத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் சொல்கிற நோக்கத்தைத்தான் அவர்களும் சொல்கிறார்கள். நான் சொல்கிற யோசனை என்னவென்றால், இரண்டு பேருடைய நோக்கமும் ஒன்றாகவே இருந்தால், ஒரு வக்கீலிடத்தில் வைத்து என்ன தக்க மாறுதலைச் செய்யச்சொல்கிறார்களோ அதைச் செய்யச் சொல்கிறார்களே தவிர, அதில் எனக்கு வேறு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. உறுப்பினர் எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. செ. முத்துசாமி :** ஒரு சங்கத்திலிருந்து இன்னொரு சங்கம் பிரிந்திருக்கிறது. அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து அண்ணா தி.மு.க. வந்ததைப்போல,





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்தச் சண்டை வேறு இங்கே வைத்துக்கொள்ளவேண்டுமா? சீக்கிரம் முடிக்க வேண்டும். அதற்கு வேறு யாராவது மறுப்பு தெரிவிப்பார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** மற்றவர்கள் கேட்கிறார்கள், கேட்கிறார்கள் என்று சொல்லும்போது நீங்கள் நீதிபதி ஸ்தானத்தில் இருக்கிறீர்கள். அதற்காகத் தான் உங்களை பரிசீலிக்க வேண்டுமென்று சொல்கிறேன். தாங்கள் வழக்கறிஞரைப்போல் அவர்கள் சொன்னதை மட்டும் கேட்டுவிட்டு முடிவு சொல்ல வேண்டாம். நாங்கள் சொல்வதையும் கேட்டு எது நியாயம் என்பதை முடிவு செய்ய வேண்டும் என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிற அனுதாபம் உணர்வுகளை மதிக்க வேண்டும். மரியாதை தர வேண்டும் என்று அதை மாண்புமிகு உறுப்பினர் அதிகமாக உபயோகப்படுத்திக் காட்டினால், கொள்வது என்பது தப்பாகப் போய் முடியும். விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் . . .

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நியாயமாகச் சொன்னால், நான் பத்திரத்தைக் கொடுப்பதற்குத் தயாராகத்தான் இருக்கிறேன். ஒரு கட்சியில் இருக்கிறவர்கள் அதிலிருந்து பிரிந்து இன்னொரு கட்சிக்குப் போகிறார்கள். அங்கே போய் தனியாகச் சங்கம் அமைக்கிறார்கள். பிறகு அவர்களெல்லாம் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பத் திரும்ப பத்திரம் பற்றியே பேசிக்கொண்டிருந்தால், என்ன அர்த்தம்? இங்கே எல்லோரும் பத்திரமாகத் தான் இருக்கிறோம். விரைவில் அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு முடிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன் . . .

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நீதிபதி ஸ்தானத்தில் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் இந்தப் பத்திரத்தைத் தருகிறேன். அவர் இதை சட்டத் துறைக்கே அனுப்பி வைத்து ஆராய்ந்து பார்க்கட்டும். எங்கள் சங்கத்திலே இருந்து பிரிந்து வெளியே சென்று தனியாகச் சங்கம் அமைத்துக் கொண்டிருப்பவர்கள் இதில் உரிமை கொண்டாட உரிமை இருக்கிறதா என்று அவர்களே ஆராய்ந்து பார்த்து, எனக்கு ஆலோசனை தெரிவித்தால், நான் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களையும்கூட, தவறாகப் புரிந்துகொள்ளும்படி சிலர் செய்திருக்கிறார்கள். ஆகவே அவைத் தலைவர் அவர்களே, தங்களின் மூலமாக இந்தப் பத்திரத்தை நான் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சரி, கொடுத்துவிடுங்கள்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள், கல்வியமைச்சர் அவர் களிடம் சில காகிதங்களைக் கொடுத்தார்.)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது போட்டோ நகல்தானே . . .

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இந்தப் பத்திரத்தைப் பொறுத்தவரையில் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் உறுப்பினரை ஒன்று கேட்க விரும்புகிறேன். உறுப்பினர் எப்போது முடிப்பதாக உத்தேசம்? அதையாவது சொல்லட்டும். உறுப்பினருக்கு இருக்கிற ஆவேசத்தையெல்லாம், அவருக் கிருக்கிற உணர்ச்சியை எல்லாம் இங்கே கொண்டு வந்து காட்டினால், நான் என்ன செய்ய முடியும்? சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தாங்களே இந்த நிலைக்குச் செல்லும்போது, நான் தலைவணங்குகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதற்கும் ஒரு சொற்பொழிவா?

**திரு. செ. முத்துசாமி :** இந்த அவை இருப்பதே வாதிடுவதற்குத்தான். அந்த வகையில்தான் நான் இங்கே வாதிட்டேன். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் இங்கே சொல்லி முடிக்கிறேன். அதற்குமேல் சொல்லுவதற்கு எனக்கும் எந்தச் சக்தியும் இல்லை. இந்தப் பத்திரத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "போட்டோ நகல்தானே" என்று கேட்டார்கள். வேறு ஒரு பத்திரம் இருந்தால், தாங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பத்திரத்தைப் பொறுத்தவரையில், அதன் ஒரிஜினலை வாங்கி வைத்துக் கொண்டு அதற்கெல்லாம் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது. எனவேதான் அதற்கான "போட்டோ நகல்தானே" என்று கேட்டேன். இப்படி ஒவ்வொன்றிலும் பேச ஆரம்பித்தால் இது ஒரு பெரிய நோய் போல் பாவிவிடும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் சீக்கிரமாக முடித்துக் கொள்ள வேண்டும் . . .



**திரு. செ. முத்துசாமி :** இது நோய் அல்ல. நோய்போல் நினைத்துக் கொண்டிருப்பதை மாற்றிக்கொள்ள வேண்டும். நான் இங்கே தந்திருப்பது ஒரு முழுமையான பத்திரம். எனவேதான் அதைப் பரிசீலித்து நல்ல முடிவு எடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, தலைவர் அவர்களே, தாங்கள் என்மேல் சற்றுக் கோபப்பட்டிருந்தாலும்கூட, கோபப்படுகிற சூழ்நிலையை நான் அவையில் ஏற்படுத்தியிருந்தாலும்கூட, இந்த அவையில் கோபம் உண்டாகும்படியான நிலை ஏற்பட்டிருந்தாலும்கூட, ஒன்றை மட்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இவ்வளவு நேரம் என்னைப் பேச அனுமதித்ததற்காக நான் பணிவன்போடு தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்கூட முதலில் கோபப்பட்டு, மீண்டும் கொஞ்சம் கீழே இறங்கி வந்து சாந்தப்பட்டு இதைப் பரிசீலிக்க ஒப்புக் கொண்டிருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். "ஆறுவது சினம்". எனவே என்மீது கோபம் இருந்தாலும் அதை ஆற்றிக்கொண்டு தயவுசெய்து உண்மையைப் பார்த்து அறிவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு அதிலே அவர் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். சரித்திரம், காலம் இவைகள் எல்லாம், பலவற்றைப் படைக்கும். வெற்றிகளை உண்டாக்கும். தோல்விகளையும் உண்டாக்கும். ஆனால் மனிதர்களில் சிலர் சில செயல்களின் மூலமாக வரலாற்றில் இடம் பெறுகிறார்கள். நாங்கள் கட்டிடம் வாங்கியிருக்கிறோம். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஆசிரியர் களுக்காக ரூ. 10 லட்சம் செலவில் கட்ட இருக்கும் கட்டிடத்தை உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டும் என்று கேட்டு, அதன்மூலம் ஆசிரியர்கள் இங்கேவந்து தங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வயதானால் கோபம் வரக்கூடாது என்று ஏதாவது இருக்கிறதா என்ன?

**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சி குறித்த 1984-85 ஆண்டு மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு கல்வியின் மேம்பாட்டிற்காகவும், ஆசிரியர்களுடைய நலனைக் காக்கவும் பெரும் அளவில் முயற்சி எடுத்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. முதலமைச்சர் அவர்களின் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டத்தின் காரணமாக பள்ளியிலிருந்து நின்று விடும் மாணவர்களின் எண்ணிக்கை 29 விழுக்காடு குறைந்திருக்கிறது என்பது உண்மையிலேயே பாராட்டுக்குரிய விஷயமாகும். மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடங்கள் கற்பிக்கப்

படுகின்றன. ஆங்கிலத்தில் நர்சரி ரைம்கள் போதிக்கப்படுகின்றன. பொதுவாக மாணவர்களுக்கு மூன்று "ஆர்"-களைச் சொல்வார்கள். அதாவது ரீடிங், ரைட்டிங், அரித்மிட்டிக் என்பார்கள். எனவே இவைகளை அந்தக் குழந்தைகளுக்கு—மூன்று வயதுக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தால் அவர்களுக்கு அந்த மனப்பக்குவம் இருப்பதால், அது நன்றாக அமையும் என்று சொல்லிக்கொள்கிறேன். அந்தக் குழந்தைகளுக்கு தமிழிலே பாடங்களையும், செய்யுள்களையும் கற்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன்.

(நண்பகல் 12-00)

மேலும் பத்து வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்தியதற்காக நான் பாராட்டுகிறேன். இலவசப் புத்தகங்கள். கற்பலகைகள் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இப்போது கொடுக்கக்கூடிய கற்பலகைகள் சீக்கிரத்திலே உடைந்து விடுகின்றன. ஆகவே வேறுவிதமான கற்பலகைகளைக் கொடுக்க முன்வர வேண்டும். பிளைவுட்டில் கறுப்பு பெயிண்ட் அடித்து கொடுக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களை 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கியதுபோல், தனியார் பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கும் நாள் வெகு தூரத்தில் இருக்காது என்று நான் நம்புகிறேன். இதை எல்லா ஆசிரியர்களும் விரும்புகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அரசு நேரிடையாகச் சம்பளம் கொடுத்து அரசு ஊழியர்களாக ஆக்கினால், இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுபோல், அவலநிலை இல்லாமல் அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு நிரந்தரமாகக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய அவல நிலையைப்பற்றி இங்கே பல உதாரணங்களைக் கொடுக்க முடியும். ஆனால் நேரம் இல்லாததால் ஒரு சில உதாரணத்தோடு நிறுத்திக்கொள்கிறேன். கீழக்கரையில் 17 ஆண்டுகளாக ஓர் ஆசிரியர் வேலை செய்திருக்கிறார். அவர் முஸ்லீம்களால் நடத்தப்படும் மைனாரிட்டி பள்ளியில் ஆசிரியராக இருந்தார். அவரை அங்கிருந்து வேலை நீக்கம் செய்து விட்டார்கள். அவர் ஆறு மாதங்களாக வேலை இல்லாமல் இருக்கிறார். பல ஆசிரியர்கள் இதுபோல் பல ஆண்டுக் காலமாக, எட்டு ஆண்டுக் காலமாக, வேலை இல்லாமல், கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை. இதைப்பற்றி பல முறை பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். நானும் பேசியிருக்கிறேன்.



ஆகவே அரசு இந்த நேரத்திலே அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். கல்விக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இதை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கழிவறைகள் கட்டுவதற்காக அரசு ஏற்கெனவே ஐந்து கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றில் படிக்கும் மாணவிகளுக்குக் கழிவறை மிகமிக அவசியம். கழிவறைகள் இல்லாமல் மாணவிகள் மிகவும் துன்புற்று வருகிறார்கள். இது பல நோய்களுக்கு இடமளிக்கிறது. ஆகவே அரசு நடவடிக்கை எடுத்து எல்லாப் பள்ளிகளிலும் நிரந்தரக் கழிவறைகளை ஏற்படுத்தவும், அதற்கு வேண்டிய தண்ணீர் வசதியை ஏற்படுத்தவும் ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற் கல்வியை அரசு கொண்டுவருவதை நான் வரவேற்கிறேன். இளைஞர்கள் அதிக வேலை வாய்ப்புப் பெற அதற்கான பாடத் திட்டத்தை அமைக்க அரசு முனைந்துள்ளது போற்றத்தக்கது. தொழில் கல்வியை அரசு கட்டாயப் பாடமாகக் கொண்டுவரும்போது, அதற்கான பகுதிநேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பகுதி நேர ஆசிரியர்கள் பலர் பல ஆண்டுகளாக நடுநிலைப் பள்ளிகளில் 280 ரூபாய், 260 ரூபாய், 350 ரூபாய் ஆகிய ஊதிய விகிதங்களைப் பெற்று வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எட்டு ஆண்டுக் காலம், 12 ஆண்டுக் காலம் என்று பல ஆண்டுக் காலமாக வேலை செய்வதால், முழுத் தகுதியுடையவர்களாக இருந்த போதிலும், குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேல் உயர்வு இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட கைத்தொழில் ஆசிரியர்கள் உட்பட அனைத்து ஆசிரியர்களையும், தொழில் கல்வி கொண்டு வரும்போது இதிலே ஈர்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இருபது ஆண்டுகள் ஆனால் ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம் கொடுக்கப்படுகிறது என்பது இந்தக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பணியில் இருந்தாலும் அவர்களுக்குச் சிறப்பு ஊதியம் கொடுக்க வேண்டும். ஒரு தொழில் ஆசிரியர் பத்தாண்டுக் காலம் தொழில் ஆசிரியராக இருந்துவிட்டு பிறகு இடைநிலை ஆசிரியராகச் செல்லும்போது, அவருக்கு, "நீ தொழிலாசிரியராக பத்தாண்டுக் காலம் இருந்திருக்கிறாய் ஆகவே உனக்குச் சிறப்பு ஊதியம் இல்லை" என்று சொல்லுகிறார்கள். எந்த நிலையில் இருந்தாலும் அவர்கள் ஆசிரியர் பணியைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். வேறு எந்தப் பணியையும் செய்யவில்லை. ஆகவே எந்த நிலையில்

கொடுக்கப்படுகிறது. மகாராஷ்டிரத்திலே 200 ரூபாய் கொடுக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் எல்லாம் நம்முடைய மாநிலத்தைவிட ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வு ஊதியம் அதிகமாக இருக்கின்றது. நம் மாநிலத்திலே ரூ. 125 தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு குறைந்தது ஓய்வூதியம் ரூ. 200 ஆகிலும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

கடைசியாக, கல்லூரி ஆசிரியர்களுக்கு யூ.ஜி.சி. ஸ்கேல் 1973-லேயே கொடுத்திருக்க வேண்டும். அதற்காக 1979-லேயாகிலும் ஒரு கமிஷன் போட்டிருக்க வேண்டும். அப்படிப் போடாமல் டிசம்பர் 1983-ல் அவர்களுக்கு என்று ஒரு கமிஷன் போடப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுக்கு 'இண்டரிம் ரிலீப்' ஆக ஒரு 300 ரூபாய் அளவிலாவது கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைப்படி அவர்களுக்கு ஒரு 'இண்டரிம் ரிலீப்' கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாலிடெக்னிக்குகளில் மாணவர்கள், மாணவர்கள் சேர்ந்த பிறகு, அந்த மாணவர்கள் விஞ்ஞானத்தில் 99 மார்க்கும், கணிதத்தில் 99 மார்க்கும் வாங்கினால் பரிட்சைக்குச் செல்ல முடியாது, 100 மார்க்குகள் வாங்கினால்தான் அவர்கள் செல்ல முடியும் என்று சொல்லிவிடுகின்றார்கள். தனியார் பாலிடெக்னிக்குகளில் அப்படிப்பட்ட மாணவர்களைச் சேர்த்துவிட்டு, ஆறு மாதத்திற்குப் பிறகு "இன்னும் 100 மார்க்கு வாங்கவில்லை, ஆகையால் நீ பரிட்சை எழுத முடியாது" என்று சொல்கின்றார்கள். அப்படிப்பட்ட அவல நிலை இருக்கின்றது. அதனை மறுத்து, அதன்மீது முடிவெடுக்க வேண்டும். அதனை அரசு எடுத்து, ஆறு மாதத்திற்குப் பிறகு அவர்கள் இப்படிச் சொல்லாமல் இருக்கச் செய்ய வேண்டும். மாணவர்களைச் சேர்ப்பதற்கு முன்பே இந்த விதியைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லி அறிவுறுத்த வேண்டும். அவர்கள் சேர்ந்த பிறகு அவர்களை பரிட்சைக்கு அனுமதிக்காமல் இருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு எத்தெந்த சலுகைகள் உள்ளனவோ, அதுபோல தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், அப்படிப்பட்ட எல்லா சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணை கொண்டுவர வேண்டும். ஏனென்றால் தனியார் பள்ளி ஆசிரியர்கள் மட்டும் ஆசிரியர்கள் அல்லாமல் அல்ல. அவர்களும் அரசுத் துறை ஆசிரியர்கள் என்று நினைத்து அனைத்து ஆசிரியர்களையும் ஒரு மாதிரியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.





*திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தக் கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பேச எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வரும் ஆண்டிலே கல்விக்கான ஒதுக்கீடானது வெகுவாகக் குறைந்திருக்கின்றது என்று ஏனைய உறுப்பினர்கள் கூறிய கருத்தை நானும் வலியுறுத்துகின்றேன். குறிப்பாக முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு இதிலே 25 கோடி ரூபாய் இடம் பெற்றிருப்பதால், கல்வி ஒதுக்கீடானது 19 விழுக்காடாகக் குறைந்திருப்பது ஓர் அதிர்ச்சியாக இருக்கிறது. ஆனால் கட்டிடங்களுக்காகவும், பிற வசதிகளுக்காகவும் பிற மானியங்களில் ஒதுக்கீடு செய்ததன் அடிப்படையிலே ரூ. 490 கோடி என்று இருப்பது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாக இருக்கின்றது. இருந்தாலும் கல்வியினுடைய வளர்ச்சியை மாநில அடிப்படையிலே எடுத்துப் பார்க்கும்போது, கல்விக்கு ஒதுக்கீடு செய்துள்ள தொகையானது, பள்ளிகளுக்கோ, பள்ளிக் கட்டிடங்களுக்கோ, ஆசிரியர்கள் பணியிடங்களுக்கோ, மாணவர்களுக்கு வேண்டிய பள்ளித் தளவாடங்கள் தேவைக்கோ ஏற்ற அளவுக்கு இல்லை என்பது வருந்தத்தக்க அம்சமாக இருக்கின்றது.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டமானது மாநிலத்திலே ஒரு பெருத்த மாற்றத்தை உருவாக்கியிருக்கின்றது. இப்போதுள்ள கணக்கின்படி அது நமக்குத் தெரியவருகிறது. பள்ளி சேர்க்கை சாதனை என்பது ஆறாவது ஐந்தாண்டு இறுதியில் 1984-85-லே முதல் 5 வகுப்புக்கு 95 விழுக்காடும், 6-வது முதல் 8-வது வரையில் 50 விழுக்காடும் இருக்க வேண்டுமென்ற நிலை இருக்கும்போது, 1982-83-லேயே இந்த மாநிலம் அந்த இலக்கைத் தாண்டியிருக்கிறது என்பது மாநிலத்தினுடைய பெருத்த சாதனை என்பது குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் கல்வித் துறை அலுவலர் பெருமக்களையும் நான் மனமார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். அவர்கள் இந்தச் சாதனைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு செய்யவில்லை, ஆசிரியர் பணியிடங்கள் இல்லை என்பது ஓர் அதிர்ச்சியாக இருக்கின்றது. ஆனால் இந்த இலவசக் கல்வி, கட்டாயமாக அரசியல் சட்டம் வகுக்கப்பட்ட 10 ஆண்டுகளிலே புகுத்தப்படவேண்டுமென்று இருந்தாலும், பல சலுகைகள் வழங்கியும், அந்த சாதனை புரியப்படாத நிலையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டமானது இந்த சாதனையைப் புரிந்திருக்கிறது என்பதை நான் வரவேற்கிறேன்.

கோவையிலே உள்ள அவினாசி மனையியல் கல்லூரியிலே ஒரு ஆராய்ச்சி நடத்தப்பட்டு கருத்தரங்கு நடத்தப்பட்டு எந்த அளவுக்கு சாதனை நடந்திருக்கிறது என்பதை விளக்கமாகக் கூறியிருக்கின்றார்கள். உயர்ந்த

விழுக்காடு குறைந்திருப்பதும், உள்ளம் உடல் வளர்ச்சி பெற்றிருப்பதும், கல்வியிலே சிறப்புப் பெற்றிருப்பதும் வரவேற்கக்கூடிய அம்சங்கள் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக உலகத்திலே 1975 ஆம் ஆண்டின் கணக்குப்படி, கண் பார்வை அற்றோரின் எண்ணிக்கை 40 மில்லியன் என்று சொன்னார்கள். அதில் இந்தியாவில் மட்டும் 9 மில்லியன் ஆகும். ஏறத்தாழ கால் பங்கு பேர் இந்தியாவிலே கண்பார்வையற்றவர்களாக இருந்துவருகிறார்கள். அதிலும் பள்ளிக்கு வருவதற்கு முன்பாகவே அவர்கள் கண்பார்வை இழக்கிறார்கள் என்கிற ஒரு நிலையைப் பார்க்கிறோம். சத்துணவுத் திட்டத்தின்மூலம் கீரை, கேரட் போன்றவற்றைக் கொடுப்பதன் காரணமாக, 'ஏ' வைட்டமின் கொடுத்து, நம் மாநிலத்திலே ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கியிருக்கிறோம் என்பதைக் கூற விரும்புகிறேன். ஒருவேளை பத்தாண்டு காலம் கழித்து, நம்முடைய மாநிலத்திலேயுள்ள பள்ளிக் குழந்தைகளின் கண்பார்வையைச் சோதித்தறிந்தால், நிச்சயமாக 30,000 என்று இப்போதிருக்கக்கூடிய நிலை இராது. இவ்வாறு சத்துணவுத் திட்டமானது கண்பார்வையைக் காக்கக்கூடிய ஒரு திட்டமாக இருக்கிறதென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1983 அக்டோபரிலே மத்திய அரசு பெண்கள் கல்விக்கென ஒரு சிறப்புப் பரிசுத் திட்டத்தை அறிவித்திருக்கிறது. எந்த மாநிலமானது அதிகமான பெண்களை பள்ளிகளிலே சேர்த்து முதியோர் கல்வித் திட்டத்திலே இணைத்து, அதிகமான விழுக்காடு சேர்த்து, எழுதப்படிக்கத் தெரியாத நிலை இல்லை என்ற நிலையை உருவாக்குகிறதோ அந்த மாநிலத்திற்குப் பரிசளிப்பதென்கிற திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. முதல் பரிசாக 1½ கோடி ரூபாய் என்றும் இரண்டாவது பரிசாக 1 கோடி ரூபாய் என்றும், மூன்றாவது பரிசாக 80 லட்சம் ரூபாய் என்றும், மாவட்ட வாரியாக 50,000 என்றும் 25,000 என்றும் வழங்க இருப்பதை நம்முடைய மாநில அரசு பெறுவதற்கு பெரு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே நேரு பெருமகனார் கூறிய ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன்.

"The education of a boy is the education of an individual; but, in the education of a girl lies the future education of the entire family."

இந்த முறையிலே ஒரு பெண்ணுக்குக் கல்வி அறிவு புகட்டுவதன் மூலமாக ஒரு குடும்பத்திற்குக் கல்வி அறிவைப் புகட்டுகிறோம் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, நம்முடைய மாநிலக் கல்வித் துறையானது 1990-இலே மத்திய அரசு அறிவித்திருக்கிற இந்தப் பரிசைப் பெறுவதற்கு பெருமுயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டமாகிய சத்துணவுத் திட்டம் 9, 10 ஆம் வகுப்புகளுக்கும் வர இருக்கிறது. இப்போதுகூட மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளிலே சத்துணவு வழங்கப்படுவதில்லை. அங்கே படிக்கும் மாணவர்களுக்கும் இணைத்து சத்துணவுத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டு மென்கிற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன். இதை ஒரு பெரும் வரப்பிரசாதமாக நான் கருதுகிறேன். பொதுவாக பள்ளிகளுடன் சம்பந்தப்பட்ட நாங்கள் மாணவர்களின் நிலையை நன்கு அறிந்திருக்கிறோம். பள்ளிக்கு வருகிற இந்த வயது மாணவர்கள் 'அடலசண்ட்' வயதை அடைந்தவர்கள். அவர்கள் அதிகமாக தன்மானத்தைக் கருதுபவர்கள். தங்களுக்கு உணவு இல்லாத நிலை மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது என்று தங்களின் இல்லாமையை மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரம் மாணவர்கள் படிக்கும் ஒரு பள்ளியிலே சுமார் நூறிலிருந்து இருநூறு மாணவர்கள் வரை மதிய உணவு இல்லாமலேயே இருக்கிறார்கள். நாள் முழுதும் பட்டினியாக இருக்கிறார்கள். பெற்றோர் முதல்நாள் இரவில் சமைத்ததை இரவு அருந்திவிட்டு, எஞ்சிய உணவை மறுநாள் காலையிலே அருந்திவிட்டு, பள்ளிக்கு வருகிறார்கள். நடுப்பகலிலே உணவு இல்லாமல் இருக்கிறார்கள். எனவேதான் சத்துணவுத் திட்டத்தை அவர்களுக்கும் விரிவு படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்வதன்மூலமாக நாம் சமுதாயத்திற்கு ஒரு மிகப் பெரிய நன்மையைச் செய்கிறோம். ஏழை எளிய மக்கள் உணவு பெறக்கூடிய வாய்ப்பு உருவாகிறது என்று சொல்லி, இந்தத் திட்டத்தை வெகுவாகப் பாராட்டுகிறேன்.

புதிய பணி இடங்கள் என்பதைப்பற்றிக் கூறுகையில், ஏனைய உறுப்பினர்கள் கூறியதுபோல, சென்ற ஆண்டைவிட இப்போது 230 பணி யிடங்கள் குறைவாகத்தான் அனுமதித்திருக்கிறோம். இன்றைக்கு நம் மாநிலத்திலே ஏற்பட்டிருக்கின்ற கல்வி வளர்ச்சிக்கேற்ப, இது இல்லை என்ற கருத்தை நான் வலியுறுத்தி, பணியிடங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கோருகிறேன்.

அடுத்து, குழந்தைகள் காப்பகங்களைப் பொறுத்தவரையில், குழந்தைகள் காப்பகங்கள் உண்டு உறங்கும் இடங்களாக மாறிவிடக் கூடாது. மாணவர்கள் அங்கு வந்து சரியாகக் கல்வி பெறுவதற்கான நிலை ஏற்பட வேண்டும். அங்குள்ள இளம் சிறார் பள்ளிகள் முறையாக நடத்தப்பட வேண்டும். தாலாட்டுங்கள் ஆசிரியர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். கொடுக்கப்பட வேண்டும். விளையாட்டுக் கருவிகள் வழங்கப்பட வேண்டும். இவைகள் எல்லாம் இருந்தால்தான், இந்தக் குழந்தைக் காப்பகங்கள் எதிர்

கால மாணவர்களின் மனத்தை நல்லமுறையிலே வளர்க்க, உணர்வை நல்ல முறையில் வளப்படுத்த உதவியாக இருக்குமென்கிற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

தென் இந்திய அறிவியல் கண்காட்சியிலே நம்முடைய மாநில அரசும் பங்கு கொண்டது. நம்முடைய மாநிலத்தில் இருக்கும் பள்ளிகள் பங்கு கொண்டு, கேரளாவிலே 1984 ஜனவரியிலே நடைபெற்ற அந்தக் கண்காட்சியில் ஐந்து கேடயங்களில் நான்கைப் பெற்றது மிகவும் பெருமைக்குரிய காரியமாகும். நம்முடைய மாநிலத்திலுள்ள கல்வித் துறையினரும், ஆசிரியர்களும், மாணவர்களும் பாராட்டுக்குரியவர்களாக இருக்கிறார்கள். அவர்களைப்

(பிற்பகல் 12-20)

பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். காரணம் என்னவென்றால், தர்மபுரி மாவட்டத்தில்—மிகவும் பின்தங்கிய மாவட்டம் அது—உள்ள அரசு ஔவையார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் முதற் பரிசு, கேடயம் பெற்றிருக்கிறார்கள். மதுரை புனித மேரி அன்னை மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பரிசு பெற்றிருக்கிறார்கள். வரும் ஆண்டு மாநிலத்தில் ஆசிரியர்கள் தினத்தன்று, இதில் பங்கு பெற்ற மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களையும், பரிசுகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'ஓபன் ஸ்கூல் சிஸ்டம்' என்ற முறையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் புதுமையான திட்டத்தை மாநிலக் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலமாகப் புகுத்தியிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஆனால் நேரடித் தொடர்பு என்னும்போது, கல்வி மாவட்ட அடிப்படையிலே செய்ய வேண்டும். 2,500 மாணவர்கள் மாநில அளவிலே பயிற்சி பெறுவார்கள் என்று சொல்லி, அவர்களை சென்னைக்கு வரவழைத்து நேரடித் தொடர்புப் பயிற்சி கொடுப்பது முடியாது என்பதால், கல்வி மாவட்ட அடிப்படையிலே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைக் கல்வியைப் பொறுத்த அளவில், ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. இன்டக்டட் ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கவில்லை. அவர்கள் பெருத்த அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இவர்களில் பலர் அனுபவம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கான ஊதியம் இவர்களுக்கு வழங்கப்படாததால், தலைமை ஆசிரியர் பதவிக்கு இவர்கள் உகந்தவர்கள் அல்ல என்று காரணம் காட்டி, அவர்கள் தள்ளப்படுகிறார்கள். அந்த நிலைமையைப் போக்க அரசு விரைவாக ஆணையிட வேண்டும். அவர்களுக்கு உடனடியாகப் பயிற்சி அளிக்க வேண்டும்.



முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்குரிய ஊதியத்தை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல மேல்நிலைப் பள்ளிகளிலே சிறப்பு ஊதியம் பெறாமல் முதுகலைப் பட்டப் படிப்பு ஆசிரியர் பணியிடங்களில் பலர் வேலை செய்கிறார்கள். பலர் முதுகலைப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். இப்போதுகூட சிலர் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். பின்னாலே அவர்கள் முதுகலைப் பட்டம் பெற்றதால், அந்தப் பணியிடத்தைப் பெறும் வாய்ப்பு இல்லாமல் விரக்தி அடைந்திருக்கிறார்கள். எனவே முதுகலைப் பட்டம் பெற்ற பிறகு, மேல்நிலைப் பள்ளிகளிலே வாய்ப்பு இல்லாமல் போனாலும், அவர்களுக்கு அதற்கான ஊதியத்தை வழங்கும் நிலையை உருவாக்க வேண்டும். இல்லையென்றால் பள்ளிகளில் ஆசிரியர்களிடையே பெருத்த குரோதமும், பகையும் வளருமென்பதை வலியுறுத்த விரும்புகிறேன். 150 பணியிடங்கள் அதற்குப் போதாது என்று வலியுறுத்த விரும்புகிறேன். முதுகலைப் பட்டதாரிகள் ஏராளமான பள்ளிகளில் தேவைப்படுகிறார்கள். எனவே 150 பணியிடங்கள் அதற்குப் போதாது என்று வலியுறுத்தி, அதிகமான பணியிடங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எம்.பி.எட். படித்தவர்களுக்கு 250 இடங்களை வழங்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். பி.பி.எட். படித்தவர்கள் கல்லூரிகளில் 700 ரூபாய் அடிப்படை ஊதியம் வாங்குகிறார்கள். ஆனால் மேல்நிலைப் பள்ளிகளில் எம்.பி.எட். படித்தவர்களுக்கு 600 ரூபாய்தான் அடிப்படைச் சம்பளம் கொடுக்கிறோம். இது பரிதாபமானது. கல்லூரியில் உடற் கல்வி இயக்குநர் 700 ரூபாய் அடிப்படை ஊதியம் வாங்கும்போது, இவர்களுக்கு 600 ரூபாய் கொடுப்பது முறையானதல்ல. எனவே மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற் கல்வி இயக்குநர்களுக்கும் 675 ரூபாய் அடிப்படை ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதவித் தலைமை ஆசிரியர்கள் பணியிடங்களைப் பொறுத்தவரையில், 750 மாணவர்கள் இருந்தால்தான் என்பதை மாற்றி, எல்லாப் பள்ளிகளுக்கும், மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில்லாமல், உதவித் தலைமை ஆசிரியர் பணியிடங்களை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓர்க் லோடைப் பொறுத்தவரையில், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 24 பாட வேளைகள் வேலை செய்ய வேண்டுமென்று சொல்லி, கீழ் வகுப்புகளுக்கு அவர்களை அனுப்புவதால், பி.டி. ஆசிரியர்கள் 'சர்ப்ளஸ்' ஆகிறார்கள். அதனால் அவர்கள் மாற்றத்திற்கு உள்ளாகிறார்கள். அந்த நிலையைத் தவிர்க்க வேண்டும். மேல்நிலை வகுப்புகளைப் பொறுத்தவரையில், முதுகலைப் பட்டதாரிகள் 11, 12 ஆம் வகுப்புகளுக்கு எடுக்கும் பாடவேளை 24-க்கு குறைந்தாலும், அவர்களை கீழே இறக்காமல் பார்த்துக்கொள்ள

வேண்டும். அதைப்பற்றி ஒரு குழு ஆராய்ந்து ஒரு பரிந்துரையைச் செய்திருக்கிறது. முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 18 பாடவேளை வேலை செய்தால் போதுமென்று அந்தக் குழு சொல்லியிருக்கிறது. எனவே அவர்களுக்கு 18 பாடவேளைக்கு மேல் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயிற்சி நோட்டுகளைத் திருத்துதல், சோதனைப் பயிற்சிக் கூடங்களில் மேற்பார்வையிடுதல் போன்ற பணிகள் அவர்களுக்கு இருப்பதால், 18 வகுப்புகளுக்கு மேல் போகாமல் பார்த்துக்கொண்டு, பி.டி. ஆசிரியர்களும் 'சர்ப்ளஸ்' ஆகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் கல்வியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே ஒரு திட்டம் இருக்கிறது. 24 பாடவேளைகளை ஓர் ஆசிரியர் எடுக்க முடியாவிட்டாலும் கூட, பேச் பேச்சாக காலை மாலை இரு வேளைகளிலும் தொழிற் கல்வியைச் கற்றுக் கொடுத்தால், அவர்களுக்குச் சிறப்பூதியம் அளிக்கலாமென்று இருக்கிறது. ஆனால் அண்மையில் திடீரென்று இரண்டு பேர் காலை மாலை இருவேளை தொழிற் கல்வி போதித்தும்கூட, அவர்கள் 24 பாடவேளைகள் தொழிற் கல்வியைச் சொல்லிக் கொடுக்கவில்லை என்று காரணம் சொல்லி, அவர்களுடைய ஊதியத்தை நிறுத்தியிருக்கிறார்கள். அப்படி அவர்களுடைய ஊதியத்தை நிறுத்தியது தவறு. அவர்களுக்குத் தொடர்ந்து ஊதியத்தை வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்னணுவியல் கல்வியைப் பொறுத்தவரையில், சென்னையிலுள்ள ஐ.ஐ.டி.-யைச் சுற்றியுள்ள 50 கிலோமீட்டர் தொலைவுக்குள் இருக்கும் பள்ளிகளில் மட்டும்தான் கற்றுத்தர வேண்டுமென்ற முறை இருக்கிறது. ஆனால் இன்றைக்கு பொறியியல் கல்லூரிகள் தமிழ் நாட்டில் பல இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சென்னை நகரிலுள்ள மக்கள் மட்டும் இத்தகைய வாய்ப்பைப் பெறுவது நல்லதல்ல. திருச்சியில் இதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அதுபோல் காரைக்குடியில் அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரியில் இத்தகைய வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். மதுரை தியாகராஜா பொறியியல் கல்லூரியிலும் இதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும். அந்தவகையில் நாட்டிலுள்ள எல்லாக் கல்லூரிகளிலும் இதற்கான வாய்ப்பு ஏற்பட வேண்டும்.

அரசுத் தேர்வைப் பொறுத்தவரையில், நல்லமுறையில் தேர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு சிக்கல். சென்ற ஆண்டு தேர்வின்போது தங்கப்பன் என்ற ஆசிரியர் தாக்கப்பட்டார். தாக்கியவர்மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த ஆசிரியர் வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்திற்குச் சென்றபோது, அவருக்கு 'ஓ.டி.' வழங்கப்படவில்லை. கேசுவல்



லீவில் செல்ல வேண்டுமென்று கல்வி அதிகாரி வற்புறுத்தியிருக்கிறார். கடைசியில் அவர் குற்றவாளி அல்ல என்று தீர்ப்பு வந்தது. பொதுவாகவே ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை இருந்துவருகிறது. நீதிமன்றங் களிலிருந்து ஆசிரியர்கள் சம்பந்தமாகப் பல தீர்ப்புகள் வந்திருக்கின்றன. கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு லாயராகவும் இருக்கிற காரணத்தால், அதுபற்றி ஒன்றை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"Public servant falling or not? Headmasters, teachers, Principals of Government Colleges are not—A person appointed as Examiner by the University, even if he is a Lecturer of a Government College is not, for the purpose of Prevention of Corruption Act, 1947, when an incriminating act is committed during his service as Examiner in a University."

இந்த அடிப்படையில் நீதிமன்றம்கூட அரசுத் தேர்வுப் பணியை அரசுப் பணி என்று கருதாத நிலை இருக்கிறது. இப்படி இருந்தால், ஆசிரியர்கள் தேர்வுப் பணியைச் செய்யும்போது, அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். இப்போது நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் இதைக் குறிப்பிட்டுக் கேட்கிறேன். தயவுசெய்து தேர்வுப் பணியை அரசுப் பணி என்று ஆக்க வேண்டும்.

அண்மையில் பத்திரிகையில் ஒன்றைப் பார்த்தேன். அனைத்துப் பல்கலைக் கழக ஆசிரியப் பெருமக்களும் அரசுத் தேர்வுகளை, பல்கலைக் கழகத் தேர்வுகளைப் புறக்கணிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதனுடைய நிலைமைகளை தயவுசெய்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நெடுங்காலமாக இருக்கின்ற அவர்களுடைய கோரிக்கைகளை இப்போதாவது நிறைவேற்ற, தீவிரமாகச் சிந்திப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாராக இருக்க வேண்டும். அவர்களை அழைத்துப் பேச வேண்டும். நல்ல முறையில் அவர்களுடைய பிரச்சினைகளுக்கு முடிவு காண வேண்டும்.

அடுத்து. சென்னையில் தேர்வு வட்டார அலுவலகம் அமைக்க இருப்பது குறித்து என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு என்.சி.சி. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் நல்லமுறையில் செயல் படுகிறது. இந்த முன்னேற்றம் அண்மையிலிருந்து ஏற்பட்டிருக்கிறது. என்.எஸ்.எஸ். என்கின்ற தொண்டு நிறுவனத்தைப் பொறுத்தவரையில், மிகவும் மனநிறைவு அளிக்கின்ற வகையில் அது பணியாற்றி வருகிறது. இவற்றிற்கான வசதி வாய்ப்புகளை மாநிலத்திலுள்ள 1,300 பள்ளிகளிலும் ஏற்படுத்த கல்வி அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1984 மார்ச் 27

அடுத்து, 'இன்செண்டிவ்' அளிப்பதைப் பொறுத்தவரையில், பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் சொன்னார். 'இன்செண்டிவ்' அளிப்பது குறித்து பேரறிஞர் அண்ணா ஒன்றைச் சொல்லியிருக்கிறார். "A teacher must be a learner throughout his life." என்கின்ற அடிப்படையில்தான் அண்ணாவால் இந்த 'இன்செண்டிவ்' கொடுக்கப்பட்டது. ஆனால் 1978 ஆம் ஆண்டு பே கமிஷனில் இவ்வாறு கொடுப்பது முரணான ஒன்று, நல்ல காரியம் அல்லாத என்று சொல்லப்பட்டது. ஒன்றை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். "No lamp can light unless it continues to light its own flame" என்று சொல்லுவார்கள். ஒரு ஆசிரியர் கற்றுக்கொடுக்கும் காலத்தில் தானும் கற்றுக்கொண்டே இருந்தால்தான் அவருடைய கல்வியின் தரமும் உயரும், படிக்கின்றவர்களுடைய கல்வித் தரமும் உயரும். அந்த அடிப்படையில் இந்த இன்செண்டிவ்-வை அவசியம் மீண்டும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு 5—9—1983 வரையில் தேறியவர்களுக்கு மட்டும் இந்தச் சலுகையை வழங்குவதாக சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் ஆசிரியர் சமுதாயத்தின் சார்பாக அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குக் காலத்தை ஒன்றும் நிர்ணயிக்காமல் தொடர்ந்து ஆசிரியர்களுக்குக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். இன்றைய தினம் தனியார், நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களிடையே ஒரு விரக்தி ஏற்பட்டிருக்கிறது. ஏன், நாங்களேகூட சங்கம் அமைக்கக் கூடாதா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்.டி.சி.-யும், ஓய்வு பெற்றால் 10,000 ரூபாய் வழங்க வழி செய்யப்படவில்லை.

(பிற்பகல் 12-30)

காரணம் என்னவென்றால் இப்போதுள்ள பயணச் சலுகைக் கட்டணம் அரசுப் பள்ளியாசிரியர்களுக்குக் கிடைக்கிறது. அவர்களுக்குத் தந்துவிட்டு தனியார் பள்ளியாசிரியர்களுக்குத் தராமல் இருக்கிறார்கள். அதேபோல பதவியிலிருக்கும் அரசு ஊழியர்கள் திடீரென்று மரித்துப் போய்விட்டால், அவர்களுக்கு ரூ. 10 ஆயிரம் தருவது போன்ற திட்டங்கள் அரசு ஊழியர்களுக்கும் அரசுப் பள்ளியாசிரியர்களுக்கும் தரப்படுவது தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை. ஓய்வு பெற்றால் ரூ. 10,000 இல்லை. இதைப்பற்றி ஆளுநர் உரையில் நான் பேசும்போதுகூட திட்டவட்டமாகச் சொன்னேன். சில நாட்களுக்கு முன்பு நமது நிதியமைச்சர் அவர்கள் பேசுகிறபோதுகூட, கல்வித் துறையைக் கேட்டுக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே கல்வித் துறையும் கல்வி அமைச்சர் அவர்களும்



1984 மார்ச் 27] [திரு. பா. ரா. தாமஸ்]

இந்த இரண்டு கோரிக்கைகளையும் எல்.டி.சி.-யும், ஓய்வு பெற்றால் ரூ. 10,000 பெற அனுதாபத்துடன் பரிசீலித்து அதற்கான உத்தரவுகளை இட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்கள் ஜி.பி.எப். பணம் போட்டுக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது). இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரையில், அங்குள்ள ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. மதுரையில் தமிழ்க் கல்லூரி சார்பாக ஒரு குறை நடக்கிறது. அங்குள்ள தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களுடைய அவல நிலையைப்பற்றித் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரணமாக கலைக் கல்லூரியின் முதல்வருக்கு ரூ. 1,200-ல் ஆரம்பித்து 1,900 வரை என்று சம்பள விகிதம் இருக்கிறது. ஆனால் தமிழ்க் கல்லூரி முதல்வருக்கு ரூ. 1,100—50—1,600 என்றுதான் இருக்கிறது. ஏன் இந்த வேறுபாடு? இரண்டாவதாக கலைக் கல்லூரி முதல்வர்கள் சிறப்பூதியமாக ரூ. 200 அல்லது ரூ. 250 பெறுகிறார்கள். ஆனால் இந்த சிறப்பூதியம் தமிழ்க் கல்லூரி முதல்வருக்கு வழங்கப்படவில்லை. ஏன் இந்த முரண்பாடு? அதைப்போல யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் அளித்த முடிவின்படி, கலைக் கல்லூரிகளில் 1—1—1972 முதல் அந்த முடிவுகளை அமுல்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் தமிழ்க் கல்லூரியில் 24—1—1982-ல் தான் அமுல்படுத்தியிருக்கிறார்கள். இப்படி வேறுபாடுகளுக்குக் காரணம் தெரியவில்லை. மேலும் கலைக் கல்லூரிகளில் துணைப் பேராசிரியர்களாக 10 ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தால், அவர்கள் பேராசிரியர்களாக வரலாம் என்று இருக்கிறது. ஆனால் இங்கே இன்னும் அது வழங்கப்படவில்லை. இவைகளை உடனடியாக வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் சுந்தராம்பாள் பள்ளி இருக்கிறது. இந்தப் பள்ளி தொடர்ந்து தவறு செய்வதில் முதலிடம் வகிக்கிறது. 1974-ஆம் ஆண்டு 34 ஆசிரியர்களை அங்கிருந்து வெளியேற்றினார்கள். அப்போது அவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று அரசிடம் முறையிட்டோம். அண்மையில் 11 ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். நாங்கள் முறையிட்ட பிறகு கல்வித் துறையினர் அந்த 11 பேர்களுக்கும் மாற்றுப் பணி அளித்து பாதுகாப்பு கொடுத்தார்கள். ஆனால் டிசம்பர் மாதத்தில் சென்னையில் உயர்நீதி மன்றத்தில் இதைத் தடை செய்திருக்கிறார்கள். அவர்களை மாற்றியது தவறு என்று ஹைகோர்ட் சொல்லியிருக்கிறது. அரசாங்கமும் அரசாணை எண் 1664, நாள் 4—9—1978-ல் அவர்களை 'டிப்ளாய்மெண்ட்' செய்திருக்கிறது. ஆனால் நிர்வாகம் அவர்களை வெளியே தள்ளியிருக்கிறது. கல்வித் துறை ஆணையிடுகிறது. அந்த ஆணையை நிர்வாகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்தமுறையில் பணியிடங்களை மாற்றியிருக்கிற ஆசிரியர்களை மாற்றியிருப்பதால் நீதிமன்றம் சென்று அதற்குத் தடை வாங்கியிருக்கிறார்கள். எப்படியென்றால்,

The posts already transferred from the said school have been held by the Court as wrongfully transferred.

பணியிடங்களை மாற்றியது தவறு என்று சொன்ன காரணத்தால். டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய மூன்று மாதங்களும் அந்த ஆசிரியப் பெருமக்கள் ஊதியம் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அந்த ஊதியத்தை அவர்கள் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கல்விபற்றிய கொள்கைக் குறிப்பின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, அமருகிறேன்.

Thirumathi TARA CHERIAN : Hon Chairman, I thank you for giving an opportunity to a Member of this House, who does not belong to the teaching profession, to take part in the discussion on the Policy Note on Education. I wanted to participate in this discussion because of my interest in education at all levels and because of the little part played by me while I was young, especially in the education of the physically handicapped and their rehabilitation, and because of my connection with the Corporation Schools which came under me during my tenure as Mayor in Madras City. The persons living today who had known my work in those days would vouch for what I had done in relation to schools and the education of children and the improvement of the status of the teachers and of the children who were below the poverty line. Everywhere in the world, particularly in India, we always had the greatest respect for teachers. They also enjoyed and commanded respect at our hands. Their interests are in our hearts. They will be looked after and kept above want. There are sufficient number of Members to mention about their grievances and also about the things done for them.

The Chief Minister's Nutritious Meal Scheme caters to the essential need of the poor children and there are no two opinions about its usefulness and great necessity. Children cannot leave in empty stomachs. We will have to do more. Food is being given in the hills and remote and even inaccessible areas but there is still room for improvement and expansion and need for more midday meal cooking centres. I am glad that the Hon. the





Minister for Nutritious Meal Programme has called for a meeting soon and I am sure that he will take up the suggestions and recommendations in the true spirit in which they are offered.

I have great pleasure to note that the universalisation of elementary education finds place in the 20-point programme and I think Tamil Nadu can be proud of having exceeded the target fixed since it was 96.2 per cent in 1982–83 and it will be 97.9 per cent in 1983–84. The N.S.S. is doing good work and there is co-operation not only in the Cities but also in the districts. I am glad that they are increasing the number by 5,000 this year.

Vocationalisation of education in Higher Secondary Plus Two stage is a big change introduced by the Government. The aim was to help the school-leavers to become employed or self-employed. It is a good and useful thing. It will be beneficial to us if we get information as to the number of boys who, after vocational education, have been able to get employment or are self-employed. This will also reduce the rush to Colleges. The aim must be to see that at least 50 per cent of the school-leavers become self-employed and do not drift to the Colleges. We must know whether we have succeeded in this aim. This is a very important thing which the Hon. the Education Minister and the Education Department should look into. Enrolment in Sciencc and Arts Colleges which stood at 1.3 lakhs in 1979–80 has gone up to 1.88 lakhs in 1983–84. This information is given in the Performance Budget and the hon. Members would have seen it. Besides that 1.7 lakh persons joined the Correspondence Courses. The total comes to 3.5 lakhs which is more than double the figure pertaining to 1979–80. With the expansion of Correspondence Courses by the Universities the number of unemployed Graduates is swelling. Therefore, we must have man-power planning in higher education. This is a very essential thing. I hope that the Hon. Minister who has formed a State-level Committee on Education will look into this and see that proper man-power planning in higher education is done.

Sir, regarding job-oriented education, the Hon. the Chief Minister is keen that the children in schools should get job training also so that they may become fit for employment or may get self-employed. Undoubtedly, this is a very good objective. But, unless there is careful planning, preparation and efficient administration at the school-level, this scheme cannot be a great success and it

may become unpopular or even wasteful. Four years ago, vocationalisation of education was started at the Higher Secondary level. How it can be made a real job-oriented education is a thing which has got to be looked into. The number of people who have had higher education and higher secondary education has now crossed the figure of one crore. Therefore, it is important for us to assess the working of the vocational stream in higher education. For this, a massive planning is required. But, what we have to consider is whether this job training which is envisaged now should be a part of the regular school curriculum or whether the training should be given separately outside the school curriculum. Now, even those belonging to the poorer sections want to send their children to school. It is not easy to divert those children from school and make them learn a trade. Their parents want those children to study in school and enter learned professions. They may not want their children to get trained in trades like carpentry and weaving. Parents who are intellectuals may also object to their children being diverted from school and sent for job-training. So, both the groups will resist any compulsory imposition of job-training on children who are at the age level of 14 or 15. It is better to start job-training only for those children who have left school and become drop-outs at the age of 13 or 14. For this, production units should be started and a training-*cum*-learning programme should be launched. Sir, I am glad that the Hon. Minister is listening to what I am saying. This Government headed by the Hon. the Chief Minister want to introduce job-training in all our schools. Before doing it, it is important to see whether it is feasible and whether the parents will agree to it.

(பிற்பகல் 12-40)

Sir, I would like to say a few words about nursery schools. We have not been able to do much for pre-school education. The School Education Department has recognised only 33 pre-primary schools. This information is given in the Performance Budget. Training schools for training pre-primary teachers should be started in each district. Government themselves should do it or should support people who come forward to start such training schools. Pre-primary schools will provide vast self-employment opportunities to girls. For every 20 or 25 pre-primary school children, there may be a teacher. If this ratio is followed, there will be need for a number of pre-primary school teachers. If only Government can start training schools, the girls who get trained can start their own pre-primary schools and become self-employed. Initially, they may need a small loan and other facilities to start pre-primary schools. After that, they will become self-supporting. Therefore, this suggestion may also be looked into. At the same time, we have to see that a proper standard is maintained in the pre-primary and primary schools. English has to be introduced even at the nursery school stage. Nowadays, even poor parents want their children to learn English. I am glad that the Hon. the Education Minister once mentioned on the floor of the House that in most of the nursery schools English would be the medium.





Sir, I now turn to another subject and it is sports. This Government have done very well in establishing a Department of Sports and Youth Welfare. But, this Department should not confine itself to supplying some sports materials and conducting coaching centres at the State level. The Youth Clubs have been neglected. Youth Clubs must be started in each Division of the City and in the villages. The children in the slums do not have the facility to take part in sports. This year, the Government of Kerala have, in their Budget, sanctioned a grant of Rs. 1,000 to each Village Youth Club. Our Corporation playgrounds are not used well. I went and saw some playgrounds and they are being used by unhealthy elements. The Physical Instructors of Schools which have no playground of their own should be put in charge of these public playgrounds so that they may be usefully employed and poor children may be helped.

One other thing is this. I am sure the Hon. Minister will appreciate what I say. Many of our elementary schools are very poorly accommodated. We allocate only 1/2 per cent of the Education Budget for elementary school buildings. This has got to be looked into. I am sure more provision will be made in future years.

I have my own chorus about the physically handicapped. It is unjust, unfair and a great injustice done to the physically handicapped and incurably retarded to switch on the responsibility of educating these physically handicapped to the Social Welfare Department. I am sure and confident that the Education Department would be asked to go through this by the Hon. the Education

Minister. I felt the Minister listened to my arguments and was not averse to it, and he would switch back to the Education Department, the education of the physically handicapped. I hope something will be done for this.

I will stop with this. The children will have to be given inoculation against cholera, smallpox, etc., before the school closes. Drinking water-supply should be ensured to the schools. Wherever there are dry latrines facilities for water supply should be provided. It is a must. The Parent-Teacher Association should be encouraged for all schools and utilised for making the children observe cleanliness and help the school authorities to maintain the standard. One chapter of Ecology could be introduced in the text-books so that the children will know how to keep the land, water and air free from pollution. We must make the school education a little more interesting and the school a joyful place for children to long to attend. Besides playgrounds and games they should be taken on excursion tours. I am sure the Education Minister will set apart some money for that purpose without depending upon the contribution of the children. Education should be combined with giving social status to the teachers and should give the children dignity and self-respect. Thank you.

*** திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு தந்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த சில ஆண்டுகளாகவே மூன்று இலட்சம் ஆசிரியர்கள், ஒரு கோடி மாணவர்கள், ஏராளமான அதிகாரிகள், ஊழியர்கள், தங்களுடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையில் கல்வியில் அதிகம் அக்கறை காட்டாத பெற்றோர்கள், இவர்கள் எல்லாம் வைத்துக்கொண்டிருக்கின்ற வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு இந்தத் துறையில் இதுவரை செய்து வந்துள்ள சாதனைகளுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு உறுதுணையாக இருக்கின்ற அதிகாரிகளுக்கும் எங்களுடைய நன்றியினை நாங்கள் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் செய்துள்ள காரியங்களைப் பட்டியல் போட்டு பாராட்டுகிற அதேநேரத்தில் செய்ய வேண்டிய காரியங்களை நினைவுபடுத்துவது என்பது எங்களுடைய வாடிக்கை, வழக்கம், எங்களுடைய கடமை. எங்களைத் தேர்ந்தெடுத்த ஆசிரியப் பெருமக்களுடைய உணர்வுகளை இந்தச் சபையில் நாங்கள் தெரிவிக்கா விட்டால், எங்களுடைய கடமைகளிலிருந்து நாங்கள் வழுவிவிட்டோம் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாவோம். ஆகவே அதைச் செய்யத் தவறியவர்களையும்,





(மாற்றுத் தலைவர் திரு. ஏ. ஜே. தாஸ் தலைமை)

செய்யவேண்டியவைகளையும் சுட்டிக்காட்டி, செய்தவைகளைப் பாராட்டிப் பேசுவது என்பது என் வழக்கம். செய்தவைகளைப் பாராட்டும்போது, எவ்வளவு முழுமனதுடன் பாராட்டுகின்றோமோ அதேபோன்று செய்ய வேண்டியவைகளை நினைவுபடுத்தும்போது, அதை நீங்கள் நிறைவேற்றுகின்ற வரையில் நாங்கள் உங்களை விடமாட்டோம் என்ற வகையில் உறுதியாக நாங்கள் இருக்கின்றோம். கல்வித் துறையைப் பொறுத்தவரையில், எல்லோரும் சொல்வதைப்போல, நிதி ஒதுக்கீடு குறைந்து வருவதைப் பார்க்கும்போது, ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பதுபோல, எங்கேயாவது செலவைக் குறைக்க வேண்டுமென்றால்—ஒரு Economic Cut, Expenditure-ல் ஒரு Cut ஏற்படுத்த வேண்டுமென்றால்—எல்லோருடைய உள்ளத்திலுமே கல்வித் துறைதான் நினைவுக்கு வருகிறது. ஆகவே கல்வித் துறை அவ்வளவு இளைத்த பொருளாகப்போய், இன்று கல்வித் துறையிலே சிக்கன நடவடிக்கை காரணமாகவோ, நிதி அளவு குறைவு என்ற காரணத்தாலோ, நாம் சாதிக்கவேண்டிய, செய்ய வேண்டிய பல காரியங்களைச் செய்யாமல் இருக்கின்றோம். இது நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் மிகப் பெரிய அபாயம் என்பதை அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டிருக்கின்ற அத்தனை பேரும் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆகவே கல்வித் துறையைப் பொறுத்தவரையில், ஒரு நாடு, அதுவும் முன்னேறி வருகின்ற நாடு, பின்தங்கி இருக்கின்ற நாடு, தன்னுடைய எதிர்கால வளர்ச்சிக்கு, ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு கல்வித் துறைக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதற்கான நிதி உதவியைத் தர வேண்டும்; நிதி வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும். இன்று முன்னேறிய நாடுகளில் கடந்த கால ஆண்டுகளில் அவர்கள் செய்தது இதுதான். அதைப் பார்த்த பிறகும்கூட, நாம் இவ்வாறு கல்வித் துறைக்கு ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துக் கொண்டு வருவது என்பது இந்தச் சமுதாயத்திற்கு நல்லதல்ல என்பதை நான் மீண்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1985 ஆம் ஆண்டிலிருந்து புதிய தொழிற் கல்வித் திட்டத்தை அமல்படுத்த இருக்கிறோம் என்று ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். இன்று இந்த நாட்டுக்குத் தேவையான ஒரு முக்கியமான கல்விக் கொள்கையை தமிழக அரசு மிகத் துணிவாக எடுத்துக்கொண்டு அந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிக முனைப்புடன் செயல்பட்டு வருவது குறித்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். அந்த முனைப்பிலிருந்து வழுவிவிடாமல், என்ன செலவானாலும் சரி, இதைச்

[திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்] [1984 மார்ச் 27

செய்தே ஆகவேண்டும்; இதை நிறைவேற்றியே ஆகவேண்டும் என்ற குறிக்கோளுடன், உறுதியுடன் இந்தப் புதிய கல்வித் திட்டத்தை மிக வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படித் தொழிற் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, கடந்த காலங்களிலே செயல்படுத்தப்பட்டபோது என்னென்ன குறைபாடுகள் ஏற்பட்டன என்பதெல்லாம் நமக்குத் தெரியும். காந்தியடிகளுடைய ஆதாரக் கல்வி எப்படியாயிற்று? எவ்வளவு வேகமாக அந்தத் திட்டம் துவக்கப்பட்டது, எவ்வளவு உற்சாகமாக அந்தத் திட்டம் துவக்கப்பட்டது? ஆனால் அதற்குப் பிற்பாடு அந்தத் திட்டத்திற்கு வந்த கதி என்ன என்ற படிப்பினைகளையும் நாம் கருத்தில் கொண்டு, அப்படிப்பட்ட கடந்த காலப் படிப்பினைகளை மனதில் கொள்வதின் மூலமாக, இந்தத திட்டத்தை செம்மையாகச் செயல் படுத்துவதற்கு நாம் முறையான வகையில் திட்டம் தீட்டிச் செயல்படுத்த முடியும்; அவ்வாறு செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

ஆசிரியர்களுக்கு, எல்லோரும் சொல்லியதைப்போல, நாங்கள் எல்லோரும் ஒரு பொதுவான கருத்தை வலியுறுத்துகின்றோம். நம்முடைய நிதி நிலை அறிக்கையில் நான்காவது ஊதியக் குழு அமைப்பதற்கான அறிவிப்புகளை அளித்ததை நாங்கள் வரவேற்கின்றோம். அதேநேரத்தில் மூன்று லட்சம் ஆசிரியர்களுடைய பல தனித் தன்மை வாய்ந்த பிரச்சினைகள் கடந்த காலங்களில் தீர்க்கப்படாமல் இருந்த காரணத்தினால், கடந்த காலங்களிலே ஊதியக் குழுவினால் ஏற்படுத்தப்பட்ட அந்தக் குறைபாடுகளும், முரண்பாடு களும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அத்தனை குறைபாடுகளையும் நீக்குவதற்கு ஆசிரியர்களுக்கு ஒரு தனி ஊதியக் குழு வேண்டுமென்பதைக் கல்வித் துறை நிதித் துறைக்கு எடுத்துச் சொல்லி அதற்கென்று ஒரு ஊதியக் குழு அமைக்கப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால்,

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நேற்று சில குறிப்பிட்ட கோரிக்கை களைப்பற்றி பதில் அளிக்கும்போது, "கல்வித் துறையானது அதற்குரிய சரியான பரிந்துரைகளைச் செய்தால், கல்வித் துறை அதற்கான குறிப்புகளை வழங்கினால், நாங்கள் அதைப்பற்றிப் பரிசீலனை செய்வோம்" என்று குறிப்பிட்டார்கள். திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார்கள். ஆகவே நிதித் துறைக்கு கல்வித் துறை சரியான முறையில் இந்த ஊதியக் குழு தனியாக அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் நியாயத்தையும் எடுத்துச் சொல்லிச் செய்ய வேண்டும். இந்த முறை, அப்படி ஒரு தனியான ஊதியக் குழு ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தாவிட்டால், பழைய பிரச்சினைகள்தான்



1984 மார்ச் 27] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

மீண்டும் வரும். அதே தலைவலிதான் நமக்கு வரும் என்பதை நான் மீண்டும் மீண்டும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். கல்வித் துறையைப் பொறுத்த வரையில், ஆசிரியர்களுக்குச் செய்துள்ள பல நன்மைகளையும், ஆசிரியர் களுக்குத் தந்துள்ள பல சலுகைகளையும் நான் பாராட்டி நன்றி தெரிவிக்கின்ற நேரத்தில், இன்னும் நிவர்த்தி செய்யவேண்டிய ஒருசில திருத்தப்படவேண்டிய குறைபாடுகளையும், நிர்வாக ரீதியாக நிவர்த்தி செய்ய வேண்டிய சில கோரிக்கைகளையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பணிவரன்முறைப்படுத்தும் பிரச்சினை என்பது ஒன்று Regularisation Issue நம்முடைய 10-ஏ (1) விதிமுறையின்படி, தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் என்ற ஒன்றை வைத்துக்கொண்டு, அவர்களை பணிவரன்முறைப் படுத்துவதற்காக பல ஆண்டுகள் காத்திருக்கவேண்டியதாக இருக்கின்றது. உதாரணமாக 1970-ல் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுடைய பணி வரன்முறை இன்றுவரை, 14 ஆண்டுகள் ஆகியும், செய்யப்படவில்லை. காரணம் அதற்கான சம்பிரதாயங்கள், சடங்குகள், நாமே நிர்ணயித்துக் கொண்ட சட்டங்கள், நம்முடைய தலையில் கை வைத்துக்கொண்டிருக் கின்றன என்பதை அதிகாரத்தில் உள்ளவர்கள் மறந்துவிடக்கூடாது.

அதைப்போலவே இன்றைக்கு போஸ்ட் கிராஜுவேட் டீச்சர்ஸ். 1978-லே நியமிக்கப்பட்டவர்கள், ஐந்து ஆண்டுகள் ஆகியும், அவர்களுடைய பணி வரன்முறை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அதுபோலவே, தமிழ் ஆசிரியர்கள். அதைப்போலவே உடற் கல்வி இயக்குநர்கள். இந்த நான்கு பிரிவினரையும் நாம் தேர்வாணைக் குழுவினுடைய அதிகார வரம்புக்குள் வைத்துக்கொண்டிருப்பதால், இந்தத் தேர்வாணைக் குழுவினுடைய சில சம்பிரதாயங்கள், நடைமுறைகள் காரணமாக பணிவரன்முறைக்கு ஏற்படக்கூடிய காலதாமதங்களும் அதன் காரணமாக ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் படுகின்ற அவதிகளும் இங்கே விவாதிக்கக்கூடிய அளவுக்கு இல்லை. நான் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கின்ற காரணத் தினாலேயே, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பதற்கு, ஒரு உருப்படியான நடவடிக்கையை நாம் எடுத்தாக வேண்டும். தேர்வாணைக் குழுவுக்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்தாக வேண்டும். தாமதத்தைத் தவிர்ப்பதற்காக ஒரு மாற்று ஏற்பாட்டைப் பணி வரன் முறைக்காக நாம் செய்து அத்தனை ஆசிரியர்களையும், தற்காலிக ஆசிரியர் களையும் பணியில் சேர்ந்த தேதியிலிருந்து பணி வரன்முறை செய்து, பணியில் சேர்ந்த தேதியிலிருந்து அவர்களுக்குப் பணப்பயன் கிடைக்கின்ற வகையில் நாம் உரிய நடவடிக்கைகளை விரைவான முறையில் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, இன்று நடுநிலைப் பள்ளியாக இருந்து உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் பணி ஈர்ப்பு ஆணை இன்னும் வராமல், அதன் காரணமாக அவதிப் படுகின்றார்கள். அதைப்போலவே, கல்வித் துறை 17 நகராட்சிப் பள்ளிகளை கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கின்றது. அந்த 17 நகராட்சிப் பள்ளிகளில் ஓரிரு பள்ளிகளைத் தவிர்த்து இதர பள்ளிகளில், பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் பணி ஈர்ப்பு ஆணை, Regularisation ஆணை இன்னும் வழங்காததால், அவர்கள் படும் அவதிகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆகவே இப்படி ஒருபுறம் பணி வரன்முறைப் பிரச்சினை இருக்கின்றது. மறுபுறம் பணி ஈர்ப்புப் பிரச்சினை. இந்த இரண்டு பிரச்சினைகளையும் நாமே தீர்ப்பதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை எளிமையாகப் பயன்படுத்தி, அதைத் தீர்க்காமல் இருக்கின்ற காரணத்தினாலே, ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பல்வேறு அவதிகளுக்கு ஆளாகின்றார்கள் என்பதை இந்தச் சமயத்திலே சுட்டிக்காட்டி, அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு கல்வித் துறை முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று அணுகுமுறையிலே இருக்கின்ற குறைபாடு. அரசுப் பள்ளி ஆசிரியர்கள் என்றும், தனியார் பள்ளி ஆசிரியர்கள் என்றும் நாம் அவர்களை இரண்டு பிரிவாகப் பிரித்து வைத்திருக்கிறோம். அரசுப் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒரு நீதி, தனியார் பள்ளி, தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு இன்னொரு நீதி என்று பாகுபாடுகளை நாம் ஏற்படுத்துவது சரியானதல்ல. அமைச்சர் அவர்களும் சரி, அதிகாரிகளும் சரி, தனியார் பள்ளிகளிலே, கல்லூரிகளிலே நடைபெறுகின்ற விழாக்களில் தனியார் பள்ளி, தனியார் கல்லூரிக் கல்வித் தரத்தைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்து பாராட்டிப் பேசுகின்றார்கள். அந்தக் கல்வித் தரத்தைப் பாராட்டிப் பேசுகின்ற அதே நேரத்தில் அரசுப் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அத்தனை சலுகைகளையும் வசதி வாய்ப்புக்களையும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும், நகரவைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற அத்தனை ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் நாம் விரிவு படுத்தவேண்டும் என்பதை நாம் கவனத்திலே கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாததன் காரணமாக முரண்பாடுகளும், ஏற்றத்தாழ்வு மனப்பான்மையும் ஏற்பட்டு ஒரு விரக்தி ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குச் சான்றாகச் சொல்ல வேண்டுமென்றால், தனியார் பள்ளியாசிரியர் களுக்கு வருங்கால வைப்பு நிதி, பிராவிடன்ட் பண்ட், வட்டித் தொகையாக 4½ சதவிகிதம்தான் தரப்படுகிறது. ஆனால் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு





8½ சதவிகிதம், அதே பிராவிடன்ட் பண்ட்-க்கு கொடுக்கப்படுகிறது. அதைப்போலவே அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் வீடு கட்டுவதற்கான கடன் வசதியும், அவர்கள் பிள்ளைகள் படிப்பதற்கான முன் பணமும், அதாவது எஜுகேஷன் அட்வான்ஸ்-ம், ஸ்கூட்டர் போன்றவை வாங்குவதற்கான கடன் வசதியும், விடுப்புப் பயணச் சலுகையும் தரப்படு கின்றன. ஆனால் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகைகள் தரப்படுவதில்லை, மறுக்கப் படுகின்றன. இந்த ஏற்றத்தாழ்வைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். இந்த Disparity அல்லது Discrimination இருக்கக்கூடாது. ஒரேவிதமான அணுகுமுறை இருக்க வேண்டும். ஒரேவிதமான கொள்கையை நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தனியார் பள்ளி பாதுகாப்புச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்காததன் காரணமாக தனியார் பள்ளி ஆசிரியர்கள் பல அவதிக்குள்ளா கின்றனர். இது கல்வித் துறையினருக்கும் தெரியும். தனியார் பள்ளி நிர்வாகத்தினர், கல்வித் துறைக்கும், அரசுக்கும், கல்வித் துறை அதிகாரி களுக்கும் சவால் விட்டுக்கொண்டிருக்கின்றனர். நாள்தோறும் சவால் விட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சொல்லப் போனால் போட்டி அரசாங்கமாக Parallel Government ஆக நடத்திக்கொண்டு, அரசு ஆணைகளை துச்சமெனக் கருதி, மிதிக்கின்ற நிலைமைகளைப் பார்க்கின்றோம். இதற்கு ஒரு நிவாரணம் காண வேண்டும். தனியார் கல்லூரி, தனியார் பள்ளிச் சட்டத்திலேயுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு மிக விரிவான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்வுமுறையைப் பொறுத்தவரையில், நாம் ஒரு சரியான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய Promotion Policy -யைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். மாணவர்கள் தேர்ச்சி பெறுவதில் சீரான முறையினை உருவாக்க வேண்டும். ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு ஒருவிதமான கொள்கை. ஆறு முதல் எட்டாவது வகுப்புகள் வரையுள்ள மாணவர்களுக்கு ஒருவிதமான கொள்கை. ஒன்பதாவது வகுப்பு மாணவர்களுக்கு ஒருவிதமாகவும், 10-வது 12-வது வகுப்பு மாணவர்களுக்கு இறுதித் தேர்வு நடத்தி, தேர்ந்தெடுக்கும் ஒரு Promotion Policy -யையும் வைத்திருக்கிறோம். இவ்வாறு ஒவ்வொரு கட்டத்திலும் மாறியிருக்கும் காரணத்தால், ஒன்று முதல் 12 வகுப்பு வரை தேர்ச்சி அளிக்கும் முறையில் ஒரு சீரான கொள்கையைக் கடைப்பிடிக்காத காரணத்தால், இன்று கல்வியின்

தரம் மோசமான அளவிற்குப் பாழடைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் காரணமாக ஆசிரியர்களும் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். எனவே கல்வியின் தரத்தை நிலைநிறுத்த, ஒரே சீரான தேர்ச்சி கொள்கையை ஏற்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட அளவில் தேர்வுகளை நடத்த வேண்டும். பரவலாக்கும் முறை என்ற அடிப்படையில் அரசுத் தேர்வுகளை நடத்துவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பயிற்சி மொழியைப் பொறுத்தவரையில், நாம் இன்னும் சரியான ஒரு முடிவை எடுக்கவேண்டியிருக்கிறது. நகரப் பகுதிகளில் உள்ள பள்ளி களுக்கு ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்க அனுமதி கொடுத்திருக்கிறோம். ஆனால் கிராமப்புறத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் அந்த வசதி இல்லை. குறிப்பாக கிராமப்புறங்களில் இருக்கிற பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை ஆங்கிலப் பயிற்சி முறைக்கு அனுப்ப விருப்பப்படுகிறார்கள். அது சரியா தவறா என்பது வேறு விஷயம். அவர்களுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. ஆகவே, கிராமப் புறத்தில் உள்ளவர்களுக்கும் அந்த வாய்ப்பைத் தர வேண்டும். ஆங்கிலப் பயிற்சி மொழியை ஒரேயடியாக எடுத்துவிடவேண்டும். இல்லையென்றால் கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களுக்கும் அந்தப் பயன் கிட்டுமாறு செய்ய வேண்டும். எனவேதான் பயிற்சி மொழி குறித்து ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கருத்து சொல்லப் படுகிறது. நுணுக்கமான பிரச்சினை அடங்கிய ஒரு கருத்து. 'இங்கிலீஷ் மீடியம்' பள்ளிகளில் அனுமதிக்கும்போது, அங்கே குறைந்தபட்சக் கட்டணத்தை வாங்கியாவது மாணவர்களைச் சேர்க்க அனுமதி தரலாம் என்ற கருத்து பெற்றோர்கள் தரப்பிலிருந்து சொல்லப்படுகிறது. இதை யோசித்து நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கின்றோம். அங்கீகாரம் கொடுத்த பிறகு, தேவையான ஆசிரியர்கள் பணியிடங்களைக் கொடுப்பதற்கு இரண்டு, மூன்று ஆண்டுகள்கூட ஆகின்றன. அங்கீகாரம் தருகிறபோதே, தேவையான பணியிடங்களையும் கொடுத்து. உடனுக்குடன் ஆணைகள் வெளியிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே புதிய பள்ளிகளைத் திறப்பதற்கு அனுமதி கொடுக்கும்போதும், அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான பணியிடங்கள், கட்டிடங்கள் அனைத்திற்கும் அனுமதி கொடுத்து ஆணைகள் வெளியிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இன்னும் ஒருசில பிரச்சினைகள் இருக்கின்றன. Stagnation என்று சொல்லக்கூடிய பதவி உயர்வு இல்லாத நிலை இன்றைக்கு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள், பி.டி. பட்டம் பெற்றவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் பதவி உயர்வு இல்லாமல் கடந்த 10, 15 ஆண்டுகளாக தேக்க நிலையில் இருந்துவருகிறார்கள். அதன் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற சிரமத்தை அரசு நிச்சயமாக உணர்ந்திருக்கும் என்று நம்புகிறேன். அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** விவாதம் முடியும்வரை, அவையின் அனுமதியோடு. அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. உறுப்பினரவர்கள் 15 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரம் முடிக்கவேண்டும்.

(பிற்பகல் 1-00)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, விரைவில் முடித்துக் கொள்கிறேன். பி.பி.எட். படித்த ஆசிரியர்களுக்கு பணி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்படுத்திய 400 பணியிடங்களும் இந்த ஆண்டோடு தீர்ந்து விடுகிறது. இனிமேலும் பி.பி.எட். படித்தவர்களுக்கு பணி மேம்பாட்டுத் திட்டத்தை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்வு நிலை, சிறப்பு நிலை ஊதிய நிர்ணயத்தில் உள்ள குறைபாடுகளை நீக்குகின்ற வகையில் திருத்த ஆணைகளை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்செண்டிவ், இன்கிரிமெண்ட் சம்பந்தமாக நான் மீண்டும் சொல்லப் போவதில்லை. மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதை வலியுறுத்தி, நிதி அமைச்சரவர்கள் சொல்லியது போன்று, கல்வித் துறை அதற்கான செயற்குறிப்பை நிதித் துறைக்கு அனுப்பி, ஆசிரியர்கள் விரும்பும் ஆணையை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் 5—9—1983-க்குப் பிறகும் பழைய முறையின்படி ஊக்க ஊதிய முறையை நீட்டிக்க வேண்டியதற்கான காரணங்கள்பற்றி கல்வித் துறை சரியான குறிப்புகளை, பரிந்துரைகளை நிதித் துறைக்கு அனுப்பினால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று சொன்னார்கள். அதுகுறித்து கல்வித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு அளிப்பதுபற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். வேலை நாட்களை உயர்த்தியதுபற்றி அதிகமான விவாதத்திற்குப் போகவில்லை. 11 : 1 என்ற முறையில் ஈட்டிய விடுப்பு தர

வேண்டுமென்பது அரசினுடைய விதி முறை. அந்த விதி முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்குரிய ஆணையை வெளியிட வேண்டும். அதுதான் எங்களுடைய கோரிக்கை. அதைப் பரிசீலித்து நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் பயிற்சிக் கால ஊதிய உயர்வு பிற பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கை குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களில் பணிப் பளு அதிகமாக இருந்தால், அவற்றைப் பிரிக்க வேண்டும். உதாரணத்திற்கு, வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை கல்வி மாவட்டத்தையும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூர் கல்வி மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும். பள்ளித் துணை ஆய்வாளர் பதவி, உதவிக் கல்வி அலுவலர் பதவி ஆகியவற்றைத் தலைமை ஆசிரியர் பதவிக்குச் சமமாக உயர்த்த வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன். இந்தக் கருத்தைச் சொல்லும்போது, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் செய்த, இந்த அரசு செய்த மிகப் பெரிய சலுகையை, ஒரு நடவடிக்கையைச் சொல்லியாக வேண்டும். ஆசிரியர்களுடைய குறைகளை அந்தந்த மாவட்டத்திலேயே பேசித் தீர்த்துக்கொள்ள மூன்று அடுக்கு ஆசிரியர் குழு ஏற்படுத்தினோம். ஆனால் அரசினுடைய உணர்வைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், பல இடங்களில் வருவாய் மாவட்ட அளவில், கல்வி மாவட்ட அளவில் இக்குழுக்கள் சரியாக, ஒழுங்காக சரியாகக் கூட்டப்படவில்லை என்ற புகாரைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆணை வெளியிட்டதை சரியான முறையில் நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத் திருத்தம்பற்றி பல முறை இங்கே பேசப்பட்டது. பல முறை உறுதிமொழிகள் தரப்பட்டன. அதை ஜனநாயகப்படுத்துவதற்கு பல்கலைக் கழகச் சட்டத் திருத்தத்தை மிக விரைவாகக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சமயத்தில் அரசுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களுக்கும் ஒரு நன்றியைச் சொல்லியாக வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தேக்க நிலையில் இருந்த பல பிரச்சினைகள், ஆசிரியர்கள், அலுவலாளர்கள் குறித்த பிரச்சினைகள் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் முயற்சியால் தீர்க்கப்பட்டிருக்கின்றன.



அதற்காக அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள், ஊழியர்கள் சார்பாக கல்வி அமைச்சருக்கும், தமிழக அரசுக்கும் என்னுடைய நன்றியையும். பாராட்டுதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நன்றி தெரிவிக்கும்போது, எஞ்சியுள்ள சட்டத் திருத்தத்தையும் விரைவாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், துணை வேந்தர்பற்றி, அங்கே நடைபெற்ற முறைகேடுகள்பற்றி புகார் மனு பல்கலைக் கழக ஆசிரியர்கள் சார்பாகவும், மேலவை உறுப்பினர் என்ற முறையில் என் சார்பாகவும் தமிழக அரசுக்கும், ஆளுநர் அவர்களுக்கும், முதலமைச்சரவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் சென்ற ஆண்டு அனுப்பப்பட்டது. அந்த மனுவின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். யார் தவறு செய்தாலும், தவறுகளைத் திருத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதான் எங்களுடைய வேண்டுகோள். திட்டவட்டமான குற்றச்சாட்டுகளைச் சொல்லி நாங்கள் மனுக்களை அனுப்பியிருக்கிறோம். ஆளுநருக்கு அனுப்பப்பட்ட அந்த மனு தமிழ் நாடு அரசின் கல்வித் துறைக்கு அனுப்பப்பட்டிருப்பதாக ஆளுநரிடமிருந்து எங்களுக்குப் பதில் வந்தது. அந்த மனுவின்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடுகூட அதில் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து, புகார்கள் குறித்து, முறைகேடுகள் குறித்து சரியான முறையில் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்லூரி ஆசிரியர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் சொன்னார். கல்லூரி ஆசிரியர்களுடைய கோரிக்கைகள் குறித்து, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற குறைபாடுகள்பற்றி கடந்த காலத்தில் நாம் பேசி உறுதிமொழி தந்திருக்கிறோம். ஆனால் அந்த உறுதிமொழிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அது ஒன்று. இன்னொன்று அரசு தந்திருக்கக் கூடிய உறுதிமொழியின் அடிப்படையில் வெளியிடப்பட்ட சில அரசாணைகளை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. அந்த வகையில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அமைச்சரால் தரப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணைகளைக்கூட இன்னும் செயல்படுத்தவில்லை. இதன் காரணமாக விரக்தியுற்றிருக்கக்கூடிய கல்லூரி ஆசிரியர்களை அழைத்துப் பேசி பிரச்சினைகளை நல்லமுறையில் விரைவாகத் தீர்க்க வேண்டும். அவர்களிடையே போராட்ட உணர்வு பரவாமலிருக்கும் வகையில் இதற்கு இப்பொழுதே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பொதுவாக இந்த அரசு கல்வித் துறையில் எடுத்துவரும் நல்ல முற்போக்கான நடவடிக்கைகள் அனைத்தையும் நாங்கள் ஆதரிக்கிறோம், வரவேற்கிறோம்.

எங்களுடைய முழு ஒத்துழைப்பும் ஆதரவும் எப்போதும் அரசுக்கு உண்டு. மூன்று இலட்சம் ஆசிரியர்களும் இந்த அரசின் கல்வித் துறை சம்பந்தமான நல்ல நடவடிக்கைகளுக்கு தங்களுடைய முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருவார்கள். அந்த வகையில் ஆசிரியர்களுடைய குறைபாடுகளையும், கோரிக்கைகளையும், முறையீடுகளையும் , பிரச்சினைகளையும் தீர்க்க கடந்த காலத்தில் காட்டிய ஆர்வத்தைப்போல, வேகத்தைப்போல வரும் காலத்திலும் தொடர்ந்து முனைந்து, விரைந்து நடவடிக்கைகளை எடுத்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

Thiru J. M. MIAKHAN: Respected Vice-Chairman, I thank you very much for giving me this opportunity to speak on the Policy Note on Education. Many of the distinguished Members have spoken thoroughly on many aspects of the matter and so I do not want to go into the same points once again because it is my desire that these things should be brought to the notice of the Government. Many Members have pointed out the defects and have made their suggestions and I shall confine myself to some of the things which were not touched upon by them.

Out of several thousands of schools that exist in our State, there are a few minority schools run for the benefit of Urdu-speaking people, Kannada-speaking people and Telugu-speaking people. I have myself seen some schools of Urdu-speaking people and they are in places like Vaniyambadi, Mel Visharam, Ambur and even in Madras. In those institutions, the sanctioned strength of teachers has not been filled up for a long time and there are many vacancies not filled up. Not only the vacancies in the post of Urdu teachers but the vacancies in the post of teachers teaching other subjects like Mathematics, Science, etc., and the vacancies in the post of Physical Education teachers have not been filled up. I do not know the reason why such vacancies have not been filled up for years. I request the Government to look into the matter and see that at least the sanctioned strength is kept up and the vacancies filled up.

Another difficulty experienced by these Urdu-speaking people is that the text-books prescribed are not made available. The students have to get on without books for months together. How they manage to get books is like this. If any one of them goes to Hyderabad, he gets one or two copies from there after paying exorbitant price. I would request the Government to see to it





that these students get their text-books at the appropriate time. The condition of these schools is deplorable. Many of the buildings are in a dilapidated condition. In one of the institutions, I found that the ceiling was likely to fall down if anybody spoke loudly. I asked them to keep the loud-speaker at a low tone, so that the building might not fall down. The buildings of the schools in Vaniyambadi and Madras are in such a condition.

(பிற்பகல் 1-10)

In this connection, I would like to mention that the Hobart Training School at Royapettah is the only institution where training is given to Urdu teachers. There are about 100 trainess out of whom about 30 or 35 come from out of this State. If all of them belong to this State, the question of provision of hostel facilities may not arise. People from all over the State come and get training in this training school. They have to be given proper facilities. At present, there is no hostel for this training school. Formerly, there was a hostel. The students who join this institution undergo great difficulty in finding a place to stay. Somehow, they manage to get some place after paying exorbitant rents. These students come from very poor families. Now, each of them has to spend Rs. 300 or Rs. 400 a month on food, rent, and other items. Therefore, I request the Government to run a hostel for this institution. The students are prepared to meet the monthly recurring costs, on a dividing system. The Government may have to incur only the initial cost. There is ample space around the institution and it can be utilised for putting up a hostel building. If it is not possible immediately, one of the existing buildings may be converted into a hostel. The name of the institution is Hobart Training School, Royapettah, Madras. I have already given a petition to the Hon. the Education Minister regarding this and he has promised to look into it. I request the Government to see that a hostel is provided for these students at least in the coming year. Till such time a separate hostel is started for these students, they may be provided hostel accommodation in some of the other hostels so that they may not experience any difficulty. These people are 'Gosha' people who observe wearing of 'Purdha'. In the absence of a hostel, they experience great difficulty.

There is a Muslim High School in North Madras. The student-strength is low in that school. The teachers, strength is there. But, all the posts have not been filled up because there

[Thiru J. M. Miakhan] [1984 மார்ச் 27

are not very many students there. The main reason for this state of affairs is that the quality of education that is being imparted in that school is not up to the mark. There are various other reasons also. There is no incentive to the teaching staff. Because of that, they suffer from some inferiority complex also. This has to be removed and the conditions in that school should be made much better so that the children who want to study in Urdu medium study there. Of course, the Government have recognised the rights of the minority-language institutions like Telugu schools, Kannada schools and Malayalam schools. In the same way, the Urdu schools also should be given all the facilities so that they may function effectively.

Regarding these Urdu medium schools, I have another request to make. Those who study in the Urdu medium schools desire to study Tamil also as an additional language. Now, they are studying Urdu and a little English. They want to study Tamil also. For that, some facilities have to be provided. Those students are willing to learn Tamil even if it is taught as an extra subject out of school hours. They feel that because they also belong to Tamil Nadu, they must learn Tamil. They want to secure jobs in Tamil Nadu itself and for that purpose also they are eager to acquire a knowledge of Tamil. Therefore, I request the Hon. the Education Minister to see that, in all the minority-language schools, facilities are provided for imparting a knowledge of Tamil, in addition to Urdu and other languages which are taught in those schools. I now want to bring an important matter to the notice of the Hon. Minister. A non-detailed book has been prescribed for the B.A.—Third Year. The name of the book is "A Bend in the Ganges" and the name of the author is Manohar Malgaonkar. It is a novel, of course—fiction and it is prescribed for non-detailed study. It gives a very one-sided view about the partition of India, putting the entire blame on the Muslim community, as if the Muslims were responsible for the holocaust, murder and for all the things that happened at the time of the partition. At that time several people were killed and women were raped; and the entire responsibility is put on the head of the Muslims. It is not true. The mind of the young people should not be unnecessarily prejudiced and these statements in a book will create prejudice and ill feeling against the Muslims. Therefore, I request that such books should not be



1984 மார்ச் 27] [Thiru J. M. Miakhan]

prescribed for study in future. I would even request the Government to prescribe such a book, if possible. The name of the book is 'A Bend in the Ganges'.

So far as Tamil Text books are concerned, there are very good poems and I have myself read during my school and College days Kamba Ramayana and Silappathikaram and other things in Tamil Text books. Occasionally some poems of Muslim poets are also included. There are very good poems written by Muslim poets like Umaru Pulavar and Peer Mohammed Abba. If their poems are also included in the text-books, the Muslims will feel that they are also part of the community.

I heartily welcome the policy of the Government to allow private parties to start Polytechnics and Engineering Colleges. Definitely it will remove the rush to Government Colleges and it will ease the difficulties of admission to such colleges. I request the Government to encourage people who come forward to start such Colleges. The Government can impose necessary conditions and see that standards are not reduced and that they do not collect any capitation fees. If philanthropic people come forward to start Engineering and Medical Colleges without collecting capitation fee, the Government should allow them. By this, the expenditure of the Government will also be reduced to some extent. More seats will be available to the students and they will be benefited. I hear that they are going to change the system of selection of students for admission to Engineering and Medical Colleges and this matter requires a little deep study. This type of selection through interview may not be completely above board and there may—and there are—some short-falls.

*மாற்றுத் தலைவர் மணி அடித்தார்.*

**திரு. ஜே. எம். மியாகான் :** தலைவர் அவர்களே, முக்கியமாக இரண்டு மூன்று விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

There are a few things and there may be some defects. Unless the Government evolve a fool-proof system of selection, to rely completely on the marks is also not proper. For example, when valuing the answer papers in the S.S.L.C. examination, some examiners, for various reasons, will award 85 or 90 marks without examining what has been written is correct or not.

[Thiru J. M. Miakhan] [1984 மார்ச் 27

(பிற்பகல் 1-20)

This is going on and it cannot be verified. As a result, undeserving students also will get an automatic entry into these professional colleges. If such a student eventually enters the medical profession, he can be a source of danger to the health of the general public. That danger also is there. Therefore, the candidates for admission to the professional colleges must be properly screened. For this, interview is necessary. But, it must be seen that no malpractices are there. It has to be properly regulated. The present system may be a bit faulty and because of that there may be room for several things to happen. But, on that score alone it need not be completely scrapped. It has to be modified. It has also to be seen that all sections of people get proper representation. The grievance of the minority communities has always been that they do not get proper representation in these selections for admission to professional colleges. Only once, during the period of Thiru Anna, 67 Muslim students were selected for the M.B.B.S. course. Thereafter, only 10 or 20 Muslim students are being selected every year and the number has never exceeded 30. We, the Muslims, form 5½ per cent of the population. Even on that basis, we should get many more seats. I do not think that the Muslim students are such dunces or such unintelligent persons as to be unfit to join these professional courses. I think that intelligence and brightness are equally distributed among all the citizens of the State. Therefore, one cannot say that these people are not up to the mark. The Government should see that the minority communities and the backward classes get their quota. They should feel that they are also part of this country. They should not feel frustrated. I request the Government to bestow some attention on this also. I hear that, recently, an I.A.S. officer has been posted to head the Technical Education Department. By this, the prospects of people who have toiled all their life in the Department should not be jeopardised. They are the people who are in the line. They were expecting their promotions. They should not be denied their opportunities. I do not say that an I.A.S. Officer is less capable. But, by being in the line for many years, the persons in the Department have gained much experience and they know their job well. Therefore, we need not interfere



1984 மார்ச் 27] (Thiru J. M. Miakhan)

with these things. We should see that the promotional opportunities of people in the lower cadre are not unnecessarily jeopardised.

Sir, I fully agree with the representations made by the hon. Members from the Teachers Constituencies. Their grievances are all genuine grievances. They are trying to bring to the notice of the Hon. Minister several problems. Their service conditions should be made better. The teachers should feel satisfied. Only a satisfied teacher can give a good education to the student. If the teachers are not satisfied, you cannot expect them to impart education to the students. We attach great importance to education, health and other things. These things are the primary needs of any State. We should not keep the teachers disgruntled and dissatisfied. We spend a lot of money on education. If we do not keep the teachers satisfied, our purpose would not be served because they will not teach properly and the students would not derive full benefit from the teachers. Therefore, I request the Government to see that the various anomalies in service conditions, etc. are removed. The teachers should be given proper job-protection. Similarly, Sir. . . .

*மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே 18 நிமிடங்கள் ஆகிவிட்டது.*

*திரு. ஜே. எம். மியாகான்: ஆறு நிமிடம்தான் பேசியிருக்கிறேன். இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.*

I am coming to the end of my speech. The Pension Scheme of giving Rs. 10,000 at the time of retirement should be extended to the employees and teachers in private educational institutions also and a sum of Rs. 20 can be collected from them also every month. This may be extended to College teachers also so that they will also be happy and thereby the cause of education will be advanced.

One more thing and I will finish my speech. The Nutritious Meal Scheme is there and it is being extended to other children also. As stated by the Hon. the Chief Minister as well as the Hon. the Education Minister, this scheme will improve the quality of education. In this connection, I have a small suggestion to

make. There are very many young boys who, for family reasons and due to poverty, are not able to go to school and who go to earn from their tender age. They work as labourers in different fields like match factories. At least, after they come home, we must give them some little education and for this purpose, it is sufficient if we have a recreation centre located in a small hall. For at least half an hour they can be given education or they can be provided with opportunity to play and during such time they will be able to learn. We are spending a lot on adult education. Children in the age group of 12 to 15 going for jobs, because they cannot afford to study but have to earn, should be given some sort of education. Something must be done for them.

In the existing Schools also, the Parent-Teacher Associations must be strengthened. I find from my own experience that if the Parent-Teacher Association works properly, the quality of education in the institution also improves.

(The Vice-Chairman sounded the gong.)

I will finish in one minute. For example, in Chromepet Government Higher Secondary School, the Parent-Teacher Association is functioning very perfectly. Very often parents meet together and they discuss matters and several improvements are made. In addition to what the Government give, these people also collect money for providing improvements to the school. They have collected Rs. one lakh and have put up a shelter in the School. They have also donated furniture to the school. They have done several things. Such Associations must be strengthened in all the schools and they will definitely do good service. The students also feel satisfied. I request that some thought may be bestowed on the creation of Recreation Centres and on the strengthening of the Parent-Teacher Associations. Thank you for giving me this opportunity.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டுக்குள்ள கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது எனது கருத்துக்களை நான் எடுத்து வைக்க விழைகின்றேன்.

ஒரு நாட்டினுடைய கல்விதான் அந்த நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குகிற அரிய பணியை மேற்கொண்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் உணர்ந்ததுதான். கல்விக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்ற





தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்தாலும்கூட, இந்த ஆண்டு கல்விக்காக நம்முடைய மொத்த வருவாயில் 21 சதவீதம்தான் செலவு செய்கிற நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதிலேகூட சத்துணவுக்கு என்று இரு சதவீதம் போனால் 19 சதவீதம்தான் கல்விக்காகச் செலவழிக்கப் படுகிறது. இன்னும் அதிகம் செலவு செய்கிற நிலையை உருவாக்க முடியுமானால், கல்வி அமைச்சர் அவர்கள் அதற்கு முயன்று பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய இளைஞர்கள்தான் நாட்டின் வருங்காலப் பிரஜைகள். இன்றைக்கு முறையாக உருவாக்கப்படுகிறவர்களை 20 ஆண்டுகளுக்கு அப்பால் இந்த நாடு அனுபவிக்க இருக்கிறது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இன்றைக்கு கல்விக்குச் செய்கிற முதலீடு மூலம், 20 ஆண்டுகளுக்கு அப்பால் இந்த நாடு எப்படி இருக்க வேண்டும் என்று கருதுகிறோமோ அப்படியிருப்பதற்காக உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வோடு இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள எல்லோரும் ஈடுபடுவார்களேயானால் உண்மையிலேயே எதிர்காலத்தை நம்மாலே சிறப்பாக அமைக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

கல்வி என்றவுடனே நம் கண் முன் தோன்றுவது பள்ளியில் பயிலும் சிறார்கள், அவர்களுடைய எதிர்காலம். இதுதான் நம் கண் முன்னாலே நிறுத்தப்பட வேண்டும். கற்பிக்கும் பணியில் உள்ளவர்கள் எல்லாம் பெரும் பேற்றைப் பெற்றவர்கள். ஒரு நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குகிற பேறை அரசியல்வாதிகள் சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்ட தியாகிகள் பெற்றிருக்கிறார்கள். அந்த வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்திடவில்லை. 1946 ஆம் ஆண்டிற்கு முன்பு இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டு தியாகம் செய்த பெருமக்களுடைய தியாகத்தை இன்று நாம் செய்ய முடியாது. இன்று நாம் ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைத்தால், நாட்டை உருவாக்குகிற நல்ல பணியில் ஈடுபடுவதுதான். இந்தப் பேறு ஆசிரியப் பெருமக்களுக்குக் கிடைத்திருக்கிறது. மற்ற எல்லாப் பணியிலும் ஈடுபட்டிருக்கிறவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்கிற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆசிரியர்கள் மாத்திரம்தான், சம்பளம் பெற்றாலும், இந்த நாட்டினுடைய வருங்காலத்தில் வாழ வேண்டிய மக்களை உருவாக்குகிற பணியிலே தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை ஆசிரியப் பெருமக்கள் உணர்கிறார்கள். இதை முழு அளவிலே உணர வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இதனாலேதான் இந்த நாட்டிலே உள்ள அனைத்துத் துறையில் உள்ளவர்களுக்கும் இந்த அவையிலே இடம் இல்லை. ஆசிரியர்களுக்கு மாத்திரம் இடம் உண்டு. அது மாத்திரமல்ல;

[திரு. ம. சங்கரலிங்கம்] [1984 மார்ச் 27

நான் திருவிதாங்கூர் சமஸ்தான பகுதியில் வாழ்ந்தவன். 1956-க்கு முன்னால் கன்னியாகுமரி திருவிதாங்கூர் சமஸ்தான மன்னருடைய ஆட்சியின்கீழ் இருந்தது. அங்கு ஆசிரியர்கள் எவ்வளவு சிறப்பாக மதிக்கப்பட்டிருந்தார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய கவர்னருடைய பதவியில் ஏதாவது ஒரு காரணத்தால் ஒரு இடைவெளி ஏற்பட்டால், உடனே சீப் ஜஸ்டிஸ் அந்தப் பதவியை வகிக்கிறார். நகரசபைத் தலைவருடைய பதவி

(பிற்பகல் 1-30)

ஏதாவது ஒரு காரணத்தினால் காலியானால், அதை வேறு ஒரு பொறுப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கருதுவதுபோல். திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே, நாகர்கோயில் நகர் அல்லது திருவனந்தபுரம் நகர் அல்லது ஆலப்புழை நகர் மன்ற தலைவர் பதவிக்கு இடம் காலியானால். அந்த நகரில் இருக்கக்கூடிய உயர்ந்த அரசினர் பள்ளியினுடைய தலைமையாசிரியரிடம் அந்தப் பதவி ஒப்படைக்கப்பட்டது. நாகர்கோயில் நகரசபைத் தலைவர் பதவி காலியானதால், அட்ஹோக்காக அந்த நகரசபைத் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டியவர் எஸ்.எஸ்.பி. உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர். அவர்கள் நகரசபைத் தலைவராக இருந்தார்கள். பதவியை ஏற்றுக்கொண்டார்கள். மீண்டும் ஒரு தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவரிடத்திலே அந்தப் பதவிப் பொறுப்பை ஒப்படைப்பார்கள். அந்தப் பதவிப் பிரமாணத்தையும் இவர் போய் செய்து வைப்பார்கள் என்று சொல்கின்றபோது. தென் மாநிலங்களிலே ஆசிரியர்களின் தரம் எவ்வாறு மதிக்கப்பட்டு உயர்த்தப்பட்டு நிலைநாட்டப்பட்டது என்பதை ஆசிரியர் சமூகம் உணர்ந்திருக்கின்றது. இன்னும் முழு அளவுக்கு உணர வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி கல்வி சிறப்பாக அமைய வேண்டுமென்றால். அந்தச் சிறார்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு பயின்று. பண்பு பெற்று, எதிர்காலத்தில் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இந்த நாட்டினுடைய ஆட்சியையும், சமுதாயத்தினுடைய உயர்வையும். இந்த நாட்டிற்கு வெளிநாட்டிலேயிருந்து வருகின்ற பகையையும் தாங்குகின்ற அளவுக்கு ஒரு கல்வியை நாம் கொடுக்க வேண்டும். ஏதோ ஏட்டுக் கல்வியை, கிளார்க் போஸ்ட்டுக்கு, அல்லது ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்காரர்கள் அளித்த அந்த கல்வி முறையை மாத்திரம் நாம் வைத்துக் கொண்டிருக்காமல். நம் கல்வி முறையை மாற்றியமைக்கவேண்டிய கால கட்டத்திலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம். அந்த முயற்சியிலே நம்முடைய அரசு அடி எடுத்து வைத்திருக்கிறது. குறிப்பாக நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுடைய துணிவால், மேல்நிலைப் பள்ளியிலே தொழிற் கல்வியைப் புகுத்த முடிந்தது. அதற்கு முன்னாலேகூட நான் சொல்லியிருக்கிறேன், கல்வி என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டது, கல்வி



1984 மார்ச் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

ஆரசியலுக்கு அப்பாற்பட்டது, இது தேசியத்தினுடைய பொது சொத்து என்று சொல்லியிருக்கிறேன். அந்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், கல்லூரியிலிருந்து பி.யூ.சி.-யைப் பிரித்து, மேல்நிலைக் கல்வியிலே, உயர்நிலைப் பள்ளிக்குக் கொண்டுவந்து, அங்கே தொழில் கல்வியைப் புகுத்துவது என்ற காலக் கட்டத்தில் எதிர்ப்புகள், கருத்து வேறுபாடுகள், கருத்து பரிமாற்றங்கள் இவைகள் எல்லாம் நிறைய இருந்தன. ஆனால் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைத் தவிர வேறு ஒருவர் அந்த இடத்தில் இருந்திருந்தால், கலங்கி, திசை மாறி அது எந்த நிலைக்குப் போயிருக்கும் என்று சொல்ல முடியாது. அந்த அளவுக்கு அன்றைய நிலைமைகள் இருந்தன. நாங்கள் அஞ்சிய காலத்தில், அவர்கள் மிக உறுதியாக இருந்து, துணிவாக 1978-லே மேல்நிலைப் பள்ளியில் அந்தக் கல்வியைக் கொண்டுவந்து. அதிலே தொழில் கல்வியைப் புகுத்தி, அந்தப் புரட்சியில் வெற்றிபெறுகின்ற ஒரு சூழ்நிலையை அவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அந்தமைச்சர் பெருமக்களும் கட்சிக்கு அப்பால் நின்று, உறுதிகளைக் கொடுத்து தொழில் கல்வியை இந்த நாட்டின் கல்வியிலே புகுத்த வேண்டும் என்ற நிலையை நான் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தொழிற் கல்வியைப் பொறுத்தவரையில், நம் அரசு ஒன்றாவது வகுப்பிலிருந்தே கொண்டு வருவதற்கு ஆலோசனை செய்வதாக அறிகிறேன். அதிலே என்னுடைய கருத்தையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ரஷ்ய நாட்டில்கூட ஒன்றாவது வகுப்பிலேயிருந்து தொழிற் கல்வியைப்பற்றிக் கொஞ்சம் அறிவு கொடுத்து வருகின்றார்கள். ஆனால் 8-வது வகுப்பிலேயிருந்துதான் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். அதுபோலவே 1 முதல் 8-வது வகுப்பு வரை பொதுக் கல்வியும், அதிலே தொழிற் கல்விக்குள்ளே சில இன்செண்டிவ்ஸ், விருப்பங்கள் தோன்றுகிற ஒரு அமைப்போடு கொடுத்து வருகின்றார்கள். எட்டாவது வகுப்பின் முடிவுக்குப் பிறகு எந்தெந்த வேலைக்கு, தொழிலுக்குப் பிரிய வேண்டும் என்ற நோக்கு வைத்து, பிரிவை அங்கே ஏற்படுத்துகின்றார்கள். ஒரு பரீட்சையிலே ஆசிரியர்களே இந்த மாணவனை எந்தப் பிரிவிலே சேர்க்க வேண்டும் என்று சொல்கின்ற நிலையில் செல்கின்றார்கள். பெற்றோர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டு செய்கின்றார்கள். 9-வது வகுப்பிலேயிருந்து எந்தத் தொழில் பிரிவுக்குச் செல்வது என்ற நிலையை உருவாக்குகின்றார்கள். 12-வது வகுப்பு முடிகின்றபோது, நம் நாட்டில் பொதுக் கல்வியுடன் தொழில் கல்வியையும் பெற்று, அதற்குப் பிறகும் சிறப்புக் கல்வி பெற, அதற்கு அப்பாலும் செல்லவேண்டிய நிலையை நாம் உருவாக்க வேண்டும். 12-வது ஆண்டு படித்துவிட்டு இந்த நாட்டிலே தொழில் செய்கின்ற தகுதியையும், முழு அளவுக்கு கல்வித் தகுதியையும் பெறுகின்ற அளவுக்கு கல்வி கொடுக்க

வேண்டும். 12 ஆண்டுக்குள் அந்தத் தகுதியை அவன் பெற கல்வி கொடுக்க விட்டால், அது ஒரு தோல்வி என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் பல்கலைக் கழகங்களில் படிக்கின்றவர்கள் சிறப்புக் கல்வி மேலும் பயிலட்டும். தொழில் கல்வியிலும் உயர் சிறப்புக் கல்வி, டெக்னிக்கல் கோர்சில் பெற்று மேலே வரட்டும். 12 ஆண்டுப் படிப்பிலே பொதுக் கல்வியிலும் ஓர் உயர்தரம் வர வேண்டும். தொழிற் கல்வியிலும் ஓர் உயர்தரம் வர வேண்டும். அந்த நோக்கத்தோடு பாடத் திட்டங்களையெல்லாம் 'ரீஸ்ட்ரக்சர்' செய்கிறோம். அதை முறையாகக் கற்பிப்பதற்கு இன்னும் சில சீரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், கல்வியைப் பரவலாக்கிவிட்டோம். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. மூலை முடுக்கு கிராமங்களில் எல்லாம் கல்வியைக் கொண்டு சேர்த்துவிட்டோம். உயர்நிலைப் பள்ளிகளை மட்டுமல்ல, 1,400 மேல்நிலைப் பள்ளிகளைக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறோம். ஆனால் அவற்றின் தரம், குவாலிட்டியை உயர்த்தவேண்டிய காலகட்டத்தில் நாம் இருந்து வருகிறோம். அதற்கு மிகுந்த நிதி தேவை. இப்போதிருக்கிற நிதி போதுமானதல்ல. மத்திய அரசு கைகொடுக்க வேண்டும். யூ.ஜி.சி.-யில் பல்கலைக் கழகங்களுக்குப் பணம் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் தொழில் கல்விக்கு உதவுவதற்கும், மேல்நிலைப் பள்ளிக்கு உதவுவதற்கும் கீழே இறங்கிவர வேண்டும். அவர்களுடைய சிந்தனையிலே இது புக வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பல கிராமங்களில் மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் அவைகளுக்குத் தேவையான வசதிகளை இன்னும் ஏற்படுத்தித்தர முடியவில்லை. கட்டிடங்கள் இல்லை. வாய்ப்பு வசதிகள் இல்லை. அதை கிராம மக்கள் உணர்வதாகவும் இல்லை. அங்குள்ள மக்களே அதையெல்லாம் உணர்ந்து, சரி செய்கிற ஒரு நிலையையும் நாம் இன்னும் உருவாக்கவில்லை. அரசும், பொதுமக்களும் ஒன்றுசேர்ந்து முயற்சி செய்து வெற்றி பெற்றால்தான், தமிழ் நாட்டினுடைய எதிர்காலம் சிறக்கும் என்பதை மாத்திரம் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுருக்கமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தொடக்கப் பள்ளியிலே இருக்கக்கூடிய ஆசிரியர் மாணவர் எண்ணிக்கை விகிதத்தை நிச்சயமாகக் குறைப்பதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும். நிதிப் பற்றாக்குறை இருக்கிறதென்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதை அப்படித் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டு, 20, 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியரும், அவர் முறையாகக் கற்பிக்கிற ஒரு திட்டமும், அதில் நாம்



உயருகிற ஒரு நிலையும், இருக்க வேண்டும். ஆரம்பப் பள்ளிகளிலேயே கல்வியின் தரம் உயர்ந்தால்தான் உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் தரத்தை உயர்த்த முடியும். அடிப்படையே சரியாக இல்லா விட்டால், கட்டிடம் விழுந்துவிடும். அதுதான் இயல்பு. ஆகவே அடிப்படையை நாம் சரியாக்க வேண்டும்.

எட்டாவது வகுப்புவரை இருக்கக்கூடிய பொதுக் கல்வியிலேயே மாணவர்களின் தரம் உயர வேண்டுமென்று நான் எண்ணுகிறேன். இன்றைக் கிருக்கக்கூடிய விஞ்ஞான மாற்றத்தின் காரணமாக, உலகத்தில் ஏற்படுகிற விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக, இன்று பிறந்து வளர்கிற குழந்தை, நாம் பிறந்து வளர்ந்த காலத்தைவிட அறிவில் விஞ்சியிருக்கிறது. அதில் ஒன்றும் சந்தேகமில்லை. நாம் 5, 6 வயதுக் குழந்தையாக இருக்கும்போது, ரேடியோவைத் தொடுவதற்கு அச்சமேற்படும். ஆனால் இப்போது மூன்று வயதுக் குழந்தை துணிந்து ரேடியோவைப் போடுகிறது. அந்த அளவிற்கு அறிவு வளர்ந்திருக்கிறது. அந்தக் கூர்மையான நுண்ணறிவை முறைப்படுத்தி செப்பனிட்டு பயிற்சி அளித்து, நாம் எதிர்பார்க்கிற பலனுக்குக் கொண்டு செல்லவேண்டிய பணியில் கல்வித் துறை இருக்கிறது. இது அமைச்சருடைய கடமை, இது சட்டமன்ற உறுப்பினர்களுடைய கடமை, இது ஆசிரியர்களுடைய கடமை என்று எண்ணாமல், இந்த நாட்டிலுள்ள அத்தனை மக்களுடைய கடமை என்று எண்ண வேண்டும். அதற்கு முதலிலே ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை திருப்தியளிக்கக்கூடிய அளவிற்கு இருக்க வேண்டும்.

அதனையடுத்து கல்விச் சூழ்நிலை அந்த வளாகங்களில் உருவாக வேண்டும். ஆசிரியர்கள் அந்தப் பணியிலே தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டும் உருவாவதற்கு கடந்த 20 ஆண்டு காலமாக ஆசிரியர்களுடைய பிரதிநிதியாக இருந்து, ஆசிரியர்களுடைய குறைகளையெல்லாம் உங்களுக்கு எடுத்துச் சொல்லி, நிறைகாண்பதற்கு முயன்று—நான்கு ஆட்சிக் காலத்தில் என்று சொன்னால்கூட மிகையாகாது—அதில் வெற்றி பெற்றிருக்கிறேன் என்றுதான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேனே தவிர, தோல்வி அடையவில்லை. எல்லா அரசுகளும் எனக்குக் கைகொடுத்தே வந்திருக்கின்றன. அப்படி கைகொடுத்து வந்ததையெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் முழு அளவிலே காலம் வளர வளர கடமையுணர்வும், பொறுப் புணர்வும்கூடக்கூட, இன்னும் பொறுப்பேற்க இருக்கிற அரசுகளுக்கெல்லாம் பலமடங்காகத்தான் இருக்குமே தவிர, குறையாது. அந்தப் பணியிலே அவர்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களையும், நகராட்சி ஆசிரியர்களையும் அரசு ஆசிரியர்களாக ஆக்கி, அரசு ஊழியர்களாக ஆக்கியது உண்மையிலேயே ஒரு சிறந்த பணி. ஆனால் . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஆக்குவார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் பொதுவாக அந்த நகரத்திலேயே இருக்க வேண்டுமென்று விரும்பிய காரணத்தால், அரசு ஊழியர்களாகி பல்வேறு இடங்களுக்கு மாற்றப்படக்கூடிய நிலையை அவர்கள் விரும்பவில்லை.

(பிற்பகல் 1-40)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, அரசு ஊழியர்களாக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அந்த ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள்ளேயே பணியாற்ற வாய்ப்பு அளித்திருப்பதுபோல, தங்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்று நகராட்சியில் பணிபுரியும் ஆசிரியர்கள் விரும்புகிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நேரம் குறைவாக இருப்பதால், அவர்களையும் அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுள்ளே போவதற்கு நேரமில்லை. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக மாற்றிய பிறகும், கட்டிடப் பராமரிப்பை மாத்திரம் ஊராட்சி ஒன்றியத்திலேயே விட்டு வைத்திருப்பது அவ்வளவு சிறப்புடையதல்ல. ஊராட்சி ஒன்றியங்களில் வசூலிக்கப்படும் எஜுகேஷன் செஸ் எஜுகேஷன் பண்டோடு சேர்க்கப்பட்டு, அந்த நிர்வாகம் சீரமைக்கப்பட வேண்டும். ஏனென்றால் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு வளர்ச்சிப் பணியிலே முக்கிய நாட்டமிருக்கும். கல்வியைப் பொறுத்தவரையில், கல்வித் துறை அலுவலர்களுக்கு இருக்கும் நாட்டத்திற்கு ஈடாக அவர்களிடம் இருக்காது. எனவே எஜுகேஷன் செஸ்ஸைக்கூட ஊராட்சி ஒன்றியங்கள் வேறு பல பணிகளுக்கு மாற்றிக்கொண்டு, பின்னால் வரும் கிராண்ட்டிலிருந்து தரும் நிலைமை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் ஒரு பள்ளியும் இல்லை. ஆசிரியர்களும் அரசு ஊழியர்கள் தான்; பள்ளிகளும் அரசுப் பள்ளிகளாக இருக்கின்றன. கட்டிடங்கள் எல்லாம் அரசால் நிர்வகிக்கப்படுகின்றன. அங்கேயுள்ள ஒன்பது ஊராட்சி





ஒன்றியங்களிலே வசூலிக்கப்படும் எஜுகேஷன் செஸ் எஜுகேஷன் பண்டுக்கு செலுத்தப்பட்டு ஆகிவிடுகிறது. அதுபோல் மாநிலம் முழுவதும் ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் துறையைப் புகுத்திவிட்டோம் என்ற ஒரு திருப்திதான் இருக்கிறதே தவிர, அதில் வெற்றி கண்டோமா என்றால் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு, அதில் வெற்றி காணும் முயற்சிக்கு நம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2,45,234 மாணவர்கள் இன்றைக்கு மேல்நிலைப் பள்ளிகளிலே பயில்கிறார்கள். இந்த அதில் 56,829 பேர்கள்தான் தொழிற் கல்வியைப் பயில்கிறார்கள். 56,829 பேர்களிலும் 31,276 பேர்கள் காமர்ஸ் படிக்கிறார்கள். அது ஓரளவுக்கு பொதுக் கல்வியை ஒட்டியதுதான். அதில் டைப்ரைட்டிங் இருக்கிறது. ஷார்ட்ஹேண்ட் இருக்கிறது. இருந்தாலும்கூட பெருமளவுக்கு அது தொழிற் கல்வி என்று சொல்ல முடியாது. இரண்டு லட்சம் மாணவர்களிலே மிகவும் குறைந்த சதவிகிதம்தான் தொழிற் கல்விக்குப் போகும் வாய்ப்பை நம்மால் உருவாக்க முடிகிறது. மருத்துவம் என்று சொல்லுகிறோம்; நர்ஸ் ட்ரெயினிங் என்று சொல்லுகிறோம்; வக்கீல் கிளார்க் ட்ரெயினிங் என்று சொல்லுகிறோம். எதுவானாலும் சரியான முறையில் நம்மால் பயிற்சி கொடுக்க முடியவில்லை என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? அதற்காக ஒரு நிபுணர் குழுவைப் போட்டார்கள். திரு. குழந்தைசாமி கமிட்டி போட்டு, அவர்களும் அறிக்கை தந்திருக்கிறார்கள். அரசு அதைப் பரிசீலனை செய்கிறது. இந்த நிலையில் நாங்கள் சொல்லும் கருத்தெல்லாம், மாநில அளவில் அந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதைவிட, அந்தந்த வட்டாரச் சூழ்நிலைகளுக்கேற்ப அதைச் செய்ய வேண்டுமென்பது தான். கோயம்புத்தூரில் ஆலைகள் அதிகமாக இருக்கின்றன. மெக்கானிகல் இன்டஸ்ட்ரீஸ், பவுண்டரிஸ் நிறைய இருக்கின்றன. அங்கே இருக்கும் மேல் நிலைப் பள்ளிகளிலே அந்தத் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்தந்த ஆலைகளோடு அந்தப் பள்ளிகளைச் சேர்த்து, அந்த ஆலைகள்தான் அந்தப் பள்ளிகளின் தொழிற் பட்டறைகளாக இருக்க வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்ந்தவுடன், மூன்று மாதம் இன்ஸ்ட்டிரக்ஷன் வாங்கிக்கொண்டு. அதற்குப் பிறகு பேக்டரியில் வேலை செய்ய வேண்டும். அதற்குப் பிறகு பள்ளிக்கு வந்து டெஸ்ட் எழுத வேண்டும். அதேபோன்று டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரீஸ் பற்றியும் படிக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளில் 1½ ஆண்டு இன்டஸ்ட்ரியோடு போக வேண்டும். அரை ஆண்டுதான் பொதுப் படிப்புக்கு வரவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கி, நல்ல முறையில் பெரியதொரு மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அமெரிக்கா போன்ற

பெரிய நாடுகளில்—ரஷ்யாவில் வேறு ஒரு முறை இருந்தது—மாநிலத்திற்கு இரண்டு, மூன்று யூனிவர்சிட்டி என்றில்லாமல், ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு டிகிரி கொடுக்கிறார்கள். அதைத்தான் அடானமஸ் காலேஜ் என்று சொல்லுகிறோம். அதற்கு இங்கே எதிர்ப்பு வருகிறது. எந்த நோக்கத்தில் எதிர்ப்பு வருகிறது என்பது தெரியவில்லை. அட்டானமஸ் கல்லூரி என்றால், அதன் சுற்றுப்புறத்திற்கேற்ப கோர்ஸ் வகுக்கிறார்கள். மெட்ராஸ் யூனிவர்சிட்டியில் ஒரு அகடமிக் கவுன்சில் இருந்து, ஒரு பெகல்ட்டி இருந்தால், எல்லாக் கல்லூரிகளிலும் அந்தப் பாடத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று சொல்வதைவிட, செங்கற்பட்டில் உள்ள ஒரு கல்லூரியில் அங்கேயுள்ள தொழில் முறைக்கு, தொழில் வளர்ச்சிக்கேற்ப மாணவர்களுக்குக் கல்வி அமைய வேண்டும். அதை எதிர்த்தால், எதைத்தான் இந்த நாட்டில் அமுல்படுத்த முடியும்? ஒவ்வொரு மாவட்டத்திலும் அடானமஸ் கல்லூரிகள் இருக்க வேண்டும். அந்தக் கல்லூரிப் பாடத் திட்டத்தை வகுக்கும்போது, அந்த மாவட்டத்தின் பின்னணியில் நின்று, அங்கே பயிலும் மாணவர்கள் அங்கேயே வேலை பார்க்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அடுத்த மாநிலத்திற்குப் போக வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அங்கேயே வேலை பார்க்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதிலே ஏதாவது சிக்கல் இருந்தால், நிர்வாகம் தடைப்படுத்தினால், முதல்வர் தடைப்படுத்தினால், அதைக் களைய முயற்சிக்க வேண்டும். அப்படி இல்லாமல் எல்லாவற்றையும் எதிர்த்தால், அதை நாம் தடுக்க வேண்டிய நிலையில்தான் இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, டெக்னிக்கல் எஜுகேஷனைப் பொறுத்தவரையில், மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கக்கூடிய தொழில் பிரிவு ஆசிரியர்களுக்கு 150 ரூபாய் ஊதியம் கொடுக்கிறோம். அது போதாது. குறைந்தபட்சம் 300 ரூபாயாவது தர வேண்டும். அவர்களுடைய பணியையும் முழு நேரப் பணியாக ஆக்க வேண்டும். மேலும் தொழில் கூடங்களை இதற்காக அமைத்து அவர்கள் முழு நேரமும் பணியாற்ற வாய்ப்பளிக்க வேண்டும். 1978 ஆம் ஆண்டு இந்தத் தொழில் பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இப்போது 1984 ஆம் ஆண்டில் இருக்கிறோம். இந்த ஆறு வருடத்தில் 4, 5 'பேச்' மாணவர்கள் வந்துவிட்டார்கள். ஆனால் இவர்கள் வெளியே வந்ததற்குப் பிறகு எப்படி இருக்கிறார்கள் என்பதுபற்றி ஒரு கண்காணிப்பு இவர்கள்மீது இருக்க வேண்டும். ஒருவன் கல்லூரியிலிருந்து தொழில் பிரிவுக்கு வருகிறான் என்றால், அது ஒன்றும் பெரிய காரியமல்ல. ஆனால் ஒருவன் தொழில் பிரிவிலிருந்து அக்காடமிக் பிரிவுக்கு வந்தால், அவன் விரக்தியடைந்து அக்காடமிக் பிரிவுக்கு வருகிறான் என்பது பொருள். அப்படிப்பட்ட போக்கை உடனடியாகத் தடுக்க வேண்டும். வொக்கேசனல் கோர்ஸிலிருந்து





வெளியே வந்த பிறகு, அவர்கள் சொந்தத் தொழில் ஆரம்பிக்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டும். சொந்தமாகத் தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் மனு போட்டவுடன் பிரதமர் அவர்களுடைய திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகளின் வொக்கேஷனல் கோர்ஸ் படித்து முடித்து வெளியே வருகிறவர்கள் சொந்தத் தொழில் செய்வதற்குக் கடன் வேண்டுமென்று மனு போட்டவுடன் முதலில் அதற்கான வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அதுபோல் இன்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மென்டும் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். சொந்தமாகத் தொழில்களை உருவாக்கும் வகையில் எத்தனை பேர்களை நாம் உருவாக்கியிருக்கிறோம் என்பதுபற்றிய 'ஸ்டேடிஸ்டிக்ஸ்' நமக்கு வேண்டும். அந்த வகையில் இந்த விஷயத்தில் எல்லாத் துறைகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது நம்முடைய கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதையும் மதிப்பிட கடமைப்பட்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில், ஆரம்பக் கல்வியின் தரம் குறையவில்லை என்பதுதான் என் அபிப்பிராயம். நடுநிலைக் கல்வியைப் பொறுத்தவரையில் கூட, அதிகமாகத் தரம் குறையவில்லை. மேல்நிலைப் பள்ளிகளில் பாடத் திட்டங்களை வகுப்பதைப் பொறுத்து ஒரு இடைக்காலத்தில் இருப்பதை வைத்து மதிப்பது அவ்வளவு சரியாக இராது. நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகத்தை எடுத்துக்கொண்டால், அது சென்டினரி கொண்டாடிய பல்கலைக் கழகம். பழம் பெரும் பல்கலைக் கழகம். மதுரைப் பல்கலைக் கழகம் 1965-க்குப் பிறகுதான் வந்தது. அதுபோல் கோயம்புத்தூர் மற்றும் திருச்சி பல்கலைக் கழகங்கள் எல்லாம் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பின்னால் வந்தவைதான். சென்னைப் பல்கலைக் கழகம் தோன்றிய நூறாவது ஆண்டை சிறப்பாகக் கொண்டாடிய நிலையில் பல்கலைக் கழகக் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா, இல்லை தாழ்ந்திருக்கிறதா என்பதற்கு உதாரணமாக நான் ஒன்றிரண்டு விஷயங்களை இங்கே கோடிட்டுக் காட்ட விழைகிறேன். 18—3—1984 அன்று நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர் தொகுதிகளுக்கான தேர்தலின்போது பட்டதாரிகள் அளித்த வாக்கை வைத்தே நாம் கல்வியின் தரத்தை உணர முடியும். இன்றைக்கு இன்டர்னல் அசெஸ்மென்ட்டுக்கு வேண்டிய அளவு கூடுதல் போட்டுவிட்டார்கள் என்றும், எக்ஸ்டெர்னல் அசெஸ்மென்ட்டுக்கு வேண்டிய அளவுக்குக் கூடுதல் போட்டுவிட்டார்கள் என்றெல்லாம் கூறுகிறார்கள். ஏன் அவ்வளவு தூரம் போக வேண்டும்? தமிழ் நாடு தெற்கு பட்டதாரித் தொகுதியில் பதிவான வாக்குகள் 45,541. இதில் செல்லாத வாக்குகள் 1,083. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், 45 பட்டதாரிகளில் ஒருவருக்கு ஓட்டுப் போடத் தெரியாது. அதற்குப் பிறகு

தமிழ் நாடு வடக்கு பட்டதாரித் தொகுதியை எடுத்துக்கொண்டால்—செங்கல்பட்டு மாவட்டம் சேர்ந்தது—மொத்தம் பதிவாகிய வாக்குகள் 28,499. அதில் செல்லாத வாக்குகள் 1,270. அப்படியானால் ஒவ்வொரு 28 பட்டதாரிகளிலும் ஒருவருக்கு ஓட்டுப் போடத் தெரியவில்லை. அதுபோல் திருநெல்வேலி-கன்னியாகுமரி மாவட்டங்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு 40 பேரில் ஒருவருக்கு வாக்களிக்கத் தெரியவில்லை. தென்னாற்காடு-வடாற்காடு மாவட்டங்களைப் பொறுத்தவரை, ஒவ்வொரு 28 பேரில் ஒருவருக்கு வாக்களிக்கத் தெரியாது. சென்னைப் பெருநகரைப் பொறுத்தவரையில், இங்குதான் அமைச்சர்கள் எல்லாம் இருக்கிறார்கள், சட்டமன்றம் இருக்கிறது, செயலகம், இலாகா தலைமை அலுவலகங்கள், பல்கலைக் கழகம் எல்லாம் இருக்கின்றன. இங்கு பதிவாகிய வாக்குகள் 43,109. செல்லாத ஓட்டுகள் 3,295. ஆக, 13 பட்டதாரிகளில் ஒருவருக்கு வாக்களிக்கத் தெரியாது.

(பிற்பகல் 1-50)

ஆசிரியர்கள்தான் கற்பிக்கிறார்கள். தென்னாற்காடு- வட ஆற்காடு மாவட்டங்களில் பதிவான வாக்குகள் 10,946. அதிலே செல்லாதவை 286. ஆக அங்கே 38 ஆசிரியர்களுக்கு ஒரு செல்லாத வாக்கு இருக்கின்றது. திருநெல்வேலி-கன்னியாகுமரி மாவட்டப் பட்டதாரி தொகுதியில் 10,897 வாக்குகள் பதிவாகியிருக்கின்றன. அதில் 113 வாக்குகள் செல்லாதவை. 91 பேருக்கு ஒருவர் வீதம் வாக்களிக்கத் தெரியவில்லை. நான்கூட கொஞ்சம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். கோவை-தர்மபுரி மாவட்டத்தில் பதிவானவை 16,802. அதில் செல்லாதவை மட்டும் 1,119. கணக்கிட்டுப்பார்த்தால் 15 ஆசிரியருக்கு ஒருவர் வீதம் வாக்களிக்கத் தெரியாமல் இருந்திருக்கிறார். திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள்கூட பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தஞ்சை-திருச்சி மாவட்டத் தேர்தலைப் பொறுத்தவரையில் 12,590 ஓட்டுகள் பதிவாகியிருக்கின்றன. அதில் 707 ஓட்டுகள் செல்லாதவையாக இருக்கின்றன. இது 19-க்கு ஒன்று என்ற வீதத்தில் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது. இருந்தாலும் . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்டதாரித் தொகுதி, ஆசிரியர் தொகுதிகளில் நடைபெற்ற தேர்தல்களில் செல்லாத வாக்குகள் வந்திருக்கின்றன என்றும் அவை எப்படி வந்தன என்று தெரியவில்லை என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தெரிவிக்கிறார்கள். என் பெயரையும் அவர்கள் சொன்னதால், என்ன நடந்தது என்பது குறித்த என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். எனது தொகுதித் தேர்தலில் 707 வாக்குகள் செல்லவில்லை. காரணம் 'டிபார்ட் மெண்ட் சப்ளை' என்ற பென்சில் பால்பாயிண்ட் பேனாவுக்குப் பதிலாக



பென்சிலைக் கொடுத்திருக்கிறார்கள், அந்தப் பென்சிலைக் கொண்டு ஓட்டுப் போட்ட அத்தனை பூத்துகளிலும் பதிவான வாக்குகள் அனைத்தும் செல்லாதவை என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. ஒரு பூத்தில் பதிவான 483 வாக்குகள் அத்தனையும் இந்த டிபார்ட்மெண்ட் சப்ளை செய்த பென்சில் காரணமாக செல்லாதவை என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. இதில் என்ன அரசியல் நடந்தது என்று தெரியவில்லை. இதில் எந்த சூழ்ச்சி நடந்து வாக்குகள் செல்லாதவை என்று அறிவிக்கப்படக்கூடும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுதான் நடந்தது என்ற உண்மையைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**செல்வி ஆ. லீலாவதி :** ஓட்டுப் போட்டவர்களில் சிலர் வேண்டுமென்றே யாருக்கும் வோட்டுகளைப் போடாமல் எல்லோருக்கும் போட்டு, அதனால் அது செல்லுபடியாகாமல் போய்விட்டது என்று சொல்கிறார்கள். அதனாலேயே கல்வியின் தரம் குறைந்து விட்டது என்று சொல்வதற்கில்லை. வேண்டுமென்றே செல்லாதவையாக்கி வெறுப்பில் அவ்வாறு செய்திருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாற்றுக் கருத்துக்கள் எல்லாம் ஒருவகை எனக்கு மகிழ்ச்சியைத் தான் தருகிறது. காரணம் தரம் குறைந்தவர்கள் இல்லையென்று சொல்லி அந்தக் காரணங்கள் பரவாமல் இருப்பதே எனக்கு மகிழ்ச்சியைத் தரும். வருத்தம் இல்லை. இது ஒரு அளவுகோல். இதை மறைக்க முடியாத உண்மை என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். பட்டதாரி தொகுதியானாலும் ஆசிரியர் தொகுதியானாலும், எப்படி வாக்குகள் அளிக்கப்பட வேண்டுமென்று சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஓட்டு அளிக்கும்போது சொல்கிறார்கள். பிறகு [illegible] கொடுக்க. இலாகாவில் சொல்லிக் கொடுக்கிறார்கள். அங்கேயே இருக்கிற அலுவலர் சொல்லிக் கொடுக்கிறார். இதிலே டிபார்ட் மெண்ட் சப்ளை என்ன என்பது எனக்குச் சொல்லத் தெரியவில்லை. அவர்கள் கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அம்மையார் அவர்களும், அவர்கள் வெறுப்பின் மீது எல்லோருக்கும் போட்டிருப்பார்கள் என்றார்கள். ஓட்டு அளிக்கக்கூடாது என்ற கருத்துடன் இருந்தால், இன்னொரு முறையில் வெறுப்பு மனப்பான்மையைக் காட்டுகிறது. அவ்வளவுதான். எப்படி இருந்தாலும், அது ஒரு 'ஹெல்த்தி சைன்' அல்ல. அதற்காக பொதுவாகத் தரம் தாழ்ந்திருக்கிறது என்று சொல்வதன் மூலம் நாம் தரம் தாழ்ந்துவிடப் போவதில்லை. தரத்தை மேலும் உயர்த்தச் சொல்கிறோம். அவ்வளவுதான். ஆகவே நாமே நம்மை மதிப்பீடு போடுகிறமாதிரி இதை எடுத்துக்கொள்ள வேண்டும். நமது குழந்தைக்கு மதிப்புக் குறைவு என்று சொல்லும்போது, எங்கள் பக்கத்தில் ஜோசியம் சொல்வார்கள். எப்படி என்றால் ஒரு குழந்தை பிறந்த பிறகு, ஜோசியர்களிடம் சென்று ஜாதகத்தை பாரு என்று சொல்லி,

யோகத்தைக் கூட்டி எழுது என்று சொல்வார்கள். அதனால் என்ன பிரயோசனம்? எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கை இல்லையென்றாலும், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதைப் போலத்தான் இருக்கிறது என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஜோசியக்காரர்களிடத்தில் நம்பிக்கையில்லையா, ஜோசியத்திலேயே நம்பிக்கையில்லையா? (சிரிப்பு)

**திரு. ம. சங்கரலிங்கம்:** இரண்டிலுமே எனக்கு நம்பிக்கை இல்லை. அது பற்றிய ஆராய்ச்சியில் நான் ஈடுபடவில்லை. இருந்தாலும் பல்கலைக் கழகக் கல்வியின் தரம் இப்படி இருக்கக்கூடாது. அதை உயர்த்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆனால் சமீப காலத்தில் அப்படித்தான் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். கல்லூரியோடு நான் தொடர்பு உடையவன். கல்லூரி முதல்வராக இருக்கிறவன். அதுவும் ஒரு ஆண்டு இரண்டாண்டு அல்ல, 16 ஆண்டுகாலமாக கல்லூரி முதல்வராக இருந்து வருகிறேன். அதற்கு முன்பு கல்லூரிக் கல்வியில் 10 ஆண்டுக் காலம் பேராசிரியராக இருந்திருக்கிறேன். ஆக 26 ஆண்டுக் காலம் கல்லூரிக் கல்வியோடு நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறேன். இங்கே வருவதற்கு முதல்நாள் கூட வகுப்பில் பாடம் கற்பித்துவிட்டுதான் வந்தேன். ஆகவே சொல்கிறேன். கல்லூரிகளில் தரம் குறைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. காரணம் எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் கேஷுவல் லீவுக்கான பணத்தைக் கொடுங்கள் என்றார்கள் நான் உண்மையிலேயே சொல்கிறேன். 10 நாளைக்கு 20 நாள் கொடுங்கள், 30 நாள் கொடுங்கள். மகிழ்ச்சிதான். அதைப் பணமாகக் கொடுத்துவிடுங்கள். கல்லூரி காலையில் ஒன்பதே முக்கால் மணிக்கு ஆரம்பிக்கிறது. அதற்கு முன்பு அந்தக் கல்லூரியின் பிரின்சிபாலுக்கு எந்த அழுத்த சோதனை வைத்தால், 220 டிகிரி காட்டும். அந்த அளவுக்கு டென்ஷனில் இருப்பார்கள். என்ன நடக்கும் இன்றைக்கு என்று தெரியாது. 1,500-1,800 மாணவர்கள் இருக்கிறார்கள். 80 ஆசிரியர்கள் இருப்பார்கள். அதிலே 25 பேர் லீவில்

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

இருப்பார்கள். ஒவ்வொரு நாளும் 25 அப்ளிகேஷன்கள் லீவு கோரித்தான் வருகின்றன. உடனே நாங்கள் புரொபசர்களை, ஹெட்ஸ் ஆப் டிபார்ட்மெண்ட்டுகளைக் கூப்பிட்டு இன்றைக்கு உங்கள் துறையில் இத்தனை பேர் வரமாட்டார்கள், நீங்கள் எப்படியாவது 'அட்ஜஸ்ட்' செய்து கொள்ள வேண்டும் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு நாள் மாலையிலும் நாங்கள் அவர்களைக் கூப்பிட்டுக் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. "நாளைக்கு கெமிஸ்ட்ரி ஆசிரியர் வரமாட்டார்" என்று தெரிந்துகொண்டு



மாணவர்களுக்குச் சொல்லிவிட வேண்டும், நாளைக்கு கெமிஸ்ட்ரி வகுப்பு நடக்காது என்று. முன்பெல்லாம் நான் ஒன்றைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆங்கில நாட்டில் பிரபுக்களும் பணக்காரர்களும் கல்லூரிக்குப் படிக்க வரும்போது, குதிரை வண்டிகளிலும், மோட்டார்களிலும் வருவார்கள் என்றும், கல்லூரி வாயிலிலேயே நோட்டீஸ் போர்டில் "Professor so and so will licture today" என்ற அறிவிப்பைப் பார்த்துவிட்டு, அப்படியே போய்விடுவார்கள் என்றும் படித்திருக்கிறேன். இப்போதெல்லாம் ஆசிரியர்கள் வகுப்புக்கு வரவில்லை என்றால், பிரின்சிபாலுக்கு அது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. போதாததற்கு காலையிலிருந்தே சினிமா நடத்துவதை ஆரம்பித்து விட்டார்கள். இதற்குமுன்பெல்லாம் சினிமா என்பது மாலையில் மட்டும் தான் இருந்தது. அதைப்போலவே மாட்னி ஷோவும்கூட விடுமுறைநாட்களில் மட்டும் இருந்தது. இப்போது எல்லா நாட்களிலும் காலை 9 மணியிலிருந்தே சினிமா தொடங்கிவிட்டதால் கல்லூரிக்கு மாணவர்கள் வந்த பிறகு, ஒரு ஆசிரியர் வரவில்லை என்றால், பெரிய அளவுக்கு "ஊளை"-யிட்டுக் கொண்டு வெளியே போகிறார்கள். பிரின்சிபாலாக இருக்கிற காரணத்தால், "தம்பி, கொஞ்சம் மெதுவாக ஊளையிடு" என்று மட்டும்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்கு மேல் சொல்ல முடியாது. ஊளையிட்டுக் கொண்டே வெளியே போகிறவன் தியேட்டருக்குப் போகிறான். இதுதான் இன்றைக்கு கல்லூரிகளில் இருக்கிற நிலைமை, ஒவ்வொரு கல்லூரியிலும் 20 பேர் தினம் லீவு எடுக்கிறார்கள். முதல் பீரியட் எடுக்கிற புரொபசரைப் பார்த்து, "4-வது பீரியட் 'ஓர்க்' இருக்கிறது, நீங்கள் தயவுசெய்து அதையும் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றால் "நான் இரண்டாவது பீரியட்டில்தான் பிரிபேர் பண்ணப் போகிறேன், எனவே என்னால் எடுக்க முடியாது" என்கிறார். எப்படியாவது எடுத்துத்தான் ஆக வேண்டும் என்றால், உடனே லீவு லெட்டர் எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறார்,

எனவேதான் நான் இங்கே ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களையோ, துறைச் செயலாளரையோ வைத்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒவ்வொரு கல்லூரியிலும் எத்தனை மணி நேரம் ஒவ்வொரு வகுப்பும் நடந்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கணக்கு எடுத்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் உண்மையான நிலைமை அவருக்குப் புரியும். இதுதான் எல்லாக் கல்லூரியிலும் இருக்கிற நிலைமை. 'இன்டர்னல் டிசிப்ளின்' என்பது கிடையவே கிடையாது. அதுமட்டுமல்ல, இனிமேல் பிரின்சிபால் வேலைக்கு யாரும் வரவே மாட்டார்கள். புரொபசர்களை விட பிரின்சிபாலுக்கு 200 ரூபாய்

தான் அதிகமாகக் கிடைக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இனி கல்லூரிகளுக்குப் பிரின்சிபால்களே கிடையாது என்றுகூட அரசு ஒரு உத்தரவைப் போட்டுவிடலாம். அந்தந்த ஹெட்ஸ் ஆப் டிபார்ட்மெண்ட்களை வைத்துக் கொண்டே, நீங்கள் எப்படியாவது உங்கள் இலாக்காவை நடத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிடலாம். பிரின்சிபாலுக்குப் பதிலாக ஒரு மேனேஜரைப் போட்டுவிட்டால்கூட போதும். பிரின்சிபால் எதையாவது சொன்னால், உடனே போராட்டம் என்கிறார்கள். ஆட்சியில் உள்ளவர்களும் ஓட்டு வாங்க வேண்டுமே என்று நினைத்துக்கொண்டு, எதையும் கேட்காமல் பேசாமல் இருந்து விடுகிறார்கள். இந்தச் சூழ்நிலைதான் எல்லாக் கல்லூரிகளிலும் இருக்கிறது.

நமது அண்டை மாநிலமான கேரளத்தில் புத்திசாலித்தனமாக, "பேரலல் கல்லூரிகள்" என்று கம்யூனிஸ்ட் ஆட்சி வந்த பிறகு ஏற்பட்டுவிட்டன. நாம் இங்கே 'நான்-பார்மல் எஜுகேஷன்' என்று அஞ்சல் வழிக் கல்வி அளித்து வருகிறோம். 18 வயது ஆன பிறகு வேலை தேடிக் கொண்டு வேலையிலிருந்தே பி.ஏ., எம்.ஏ., படிக்க இயலும். ஆனால் கேரளத்தில் வேறு ஒரு முறையை வைத்திருக்கிறார்கள். அங்கே இப்போது கல்லூரிகளில் கூட்டம் கிடையாது. பேரலல் கல்லூரிகள் நடக்கின்றன. அங்கெல்லாம் சர்வீஸ் கன்டிஷன் கிடையாது. அகில இந்தியாவில் படிப்பில் முதல் நிலையில் இருக்கிற கேரளத்தில் சமூக சீர்திருத்தத்தில் முற்போக்குவாதியாக இருக்கிற இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் ஆட்சி செய்கிற இடத்தில் 'பேரலல் கல்லூரிகள்' என்று கொண்டு வந்து, நான்-பார்மல் எஜுகேஷன் சொல்லித் தரப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தயவுசெய்து ஒருமுறை கேரளத்திற்குச் சென்று பார்க்க வேண்டும். யூனிவர்சிட்டியின் கல்லூரியிலிருந்து 200 மாணவர்கள் வெளியேறினால், ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அதாவது பேரலல் காலேஜ் நடத்துகிற ஒவ்வொரு இடத்திலிருந்தும் 700 மாணவர்கள் வெளியே வருவதைப் பார்க்கலாம். அவர்கள் எல்லாம் காலை 5 மணி முதல் 9 மணி வரையிலும் அல்லது மாலை 4 மணி முதல் 8 மணி வரையிலும் அங்கே கல்வி பயில்கிறார்கள். இதன் காரணமாக அங்கே கல்வியின் தரம் குறைந்துவிடவில்லை. மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிடவில்லை. கல்வி பரவுவது குறைந்துவிடவில்லை. எனவே இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் சுட்டிக்காட்டி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவைகளையெல்லாம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நான் யார் மீதும் காழ்ப்புணர்ச்சி கொண்டு இங்கே எதையும் குறிப்பிடவில்லை. ஆசிரியர்களாகப் பணி புரிகிறவர்கள் தங்களுடைய கடமையை உணர்ந்து பணியாற்றி, கல்வித் தரத்தை உயர்த்திக் கொண்டே தங்கள் உரிமைக்காகப் போராட வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.



**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறிக் கொண்டு, வரவு செலவுத் திட்ட நிதியில் ஏறக்குறைய 5-ல் ஒரு பங்கை கல்விக்காக ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட

(பிற்பகல் 2-00)

விரும்புகிறேன். அனைத்திந்தியாவிலும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் எய்த வேண்டும் எனக் குறித்துள்ள இலக்கின்படி பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் 6 முதல் 11 வயது வரை உள்ளவர்கள் 95 சதவீதம் என்றும் 11 முதல் 14 வயது வரை உள்ளவர்கள் 50 சதவீதம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், 1982-83-ல் 96.2 சதவீதமும் 66.03 சதவீதமும், 1983-84-ல் 97.96 சதவீதமும் 69.40 சதவீதமும் என்ற அளவில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழ் நாட்டில் அகில இந்தியாவின் விழுக்காட்டை விட அதிகமாக இருப்பதற்காக நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, "1983-84-ல் 3.82 இலட்சம் மாணவ மாணவியர்கள் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது முன் எந்த ஆண்டிலும் இல்லாத சாதனையாகும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது எப்படி வந்தது என்பது தெரியவில்லை. இந்த ஓராண்டில் மட்டும் ஏறக்குறைய 3.82 இலட்சம் மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டதற்குக் காரணம் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தச் சத்துணவைச் சாப்பிட்டுவிட்டு உறங்கிவிட்டுப் போவதாக பல இடங்களிலிருந்து வதந்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையைப் போக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குகிற நிலை இருக்கிறது. பள்ளிகள் துவங்கிய ஒரு மாதம் கழித்து, இரண்டு மாதம் கழித்து இலவசப் பாடப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. இதனால் பயன் இல்லை. ஆகவே பள்ளி துவங்கிய உடனே கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மைய அரசுக் கல்வி அமைச்சகம் சென்னையில் கல்வித் தரைப்படங்களுக்கான பட நிலையம் ஒன்று கட்ட ரூபாய் 40 இலட்சம் மானியம் தர கொள்கை அளவில் இசைந்துள்ளது. வீடியோ நிழற்படக் காமிராக்களும், அதனோடு இணைந்த கருவிகளும் வாங்க அவ்வாசினர் ஏற்கெனவே ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மேல் மானியம் வழங்கியுள்ளனர்." இன்றைக்கு

தொலைக் காட்சி மூலமாக கல்வி வளர்ச்சியை மத்திய அரசு ஊக்குவித்திருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். இந்த 45 இலட்சம் ரூபாயை நல்ல முறையிலே பயன்படுத்தி சின்னஞ் சிறார்களுக்கு இந்த வசதியைப் பெருக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 6-10 வகுப்புகளிலும் 300 மேல்நிலைப் பள்ளிகளில் 11-12 வகுப்புகளிலும் செயல்பட்டு வருகிறது" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த நல்ல திட்டத்தை நான் பாராட்டுகிறேன்.

தமிழ் நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத்தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே செய்து வருகிறது. 1979-80 முதல் 1982-83 முடிய இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட மலிவு விலை நோட்டுப் புத்தகங்களின் மதிப்பு ரூபாய் 10 கோடிக்கும் அதிகமாகும். மைய அரசு மலிவு விலைத்தாள் ஒதுக்கீடு செய்வது 1982-83-ல் நிறுத்தி வைக்கப்பட்டது. மலிவு விலைத்தாள் ஒதுக்கீட்டை 1—4—1983 முதல் மீண்டும் மைய அரசு செய்து வருகிறபோதிலும் ஒதுக்கீடு செய்யும் அளவுக்கு தாளை காகித ஆலைகள் தருவதில்லையாகையால் கிட்டும் மலிவு விலைத்தாள் அளவுக்கு நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கப்படுகின்றன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி மத்திய அரசு ஒதுக்கீடு செய்யவில்லை என்று இந்த அரசு சொல்லுவது அவ்வளவு சரியில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்களை வாங்க வேண்டும் என்று பள்ளிக்குப் போகிற ஏழைக் குழந்தைகள் விரும்புகிறார்கள். ஆகவே மைய அரசு ஒதுக்க வேண்டும் என்று மாநில அரசு கேட்க வேண்டுமேயொழிய, மைய அரசு ஒதுக்கவில்லை என்று சொல்லுவது சரியில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு பல பல்கலைக் கழகங்களை எல்லாம் நாம் நிறுவியிருக்கின்றோம். அதன் வாயிலாக பல ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சிக்கான ஆய்வுகளையெல்லாம் செய்து வருகின்றோம். அதே நேரத்தில் இன்றைக்கு சென்னைப் பல்கலைக் கழகத்திலே ஏதோ ஒரு மாதமாகவோ அல்லது இரண்டு மாதங்களாகவோ ரிசல்டு வரவில்லை என்று சொல்லி. அந்தப் பல்கலைக் கழகத்தின்மீது கண்காணிக்க—அதை 'ஆட்டானமஸ் பாடி' என்று சொல்லுகிறோம்—மூன்று துணைவேந்தர்களை நியமித்து ஒரு கமிட்டியை அமைத்திருக்கின்றோம். அது மிகவும் நல்ல



முறையல்ல. அங்கே ஏதோ ஒரு அரிசனன் இருப்பதனால் அவரை இழிவு படுத்தவேண்டுமென்று செய்வதற்காக இது என்று பல தகவல்கள் சொல்கின்றன. அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் நுட்பக் கல்வி, இன்ஜினியரிங் காலேஜ் என்றால் மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை என்ற பிரச்சினை நாடு முழுவதிலும் பரவி வருகின்றது. இன்றைக்கு ஏன் கிடைக்கவில்லை? அங்கு ஷிப்டு சிஸ்டம் கொண்டுவர வேண்டும். 90 மார்க் வாங்கிய மாணவர்களுக்கெல்லாம் இங்கே சீட்டு கிடைக்கவில்லை. ஆனால் அங்கே இரண்டு புரபஸர்களுடைய உதவி இருந்தால், 80 சதவிதம் வாங்கி இருந்தாலும், அவனுக்கு மார்க்கைப் போட்டு தேர்ந்தெடுக்கக் கூடிய அவல நிலை இன்றைக்கு காணப்படுகின்றது. இம்மாதிரியான அவல நிலையை எல்லாம் போக்கி, நல்ல மார்க் வாங்கிய மாணவர்களுக்கெல்லாம் அங்கே அனுமதி கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே ஷிப்டு சிஸ்டத்தைக் கொண்டுவர வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்த மாதிரியான காரியங்கள் அங்கே நடைபெறாது. எல்லோருக்கும் அங்கே அனுமதி கிடைப்பதற்கு வழிவகை செய்ய முடியும். ஆகவே இந்த ஆண்டாவது ஷிப்டு சிஸ்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாலிடெக்னிக்குகளில் சில இடங்களில் நாம் ஷிப்டு சிஸ்டம் கொண்டுவந்திருக்கிறோம். அதை இன்னும் தீவிரமாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இங்கே பேசிய ஆசிரியர் தொகுதி உறுப்பினர்கள் அனைவரும் ஒரு உண்மையை ஒப்புக்கொண்டார்கள். அதாவது இன்றைக்கு கல்வித் தரம் சரியான முறையிலே இல்லை என்பதை எல்லா உறுப்பினர்களும் மனதார ஒப்புக்கொண்டதை நான் பாராட்டுகின்றேன். கல்வித் தரம் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் மிக விளக்கமாகக் கூறினார்கள். ஆகவே இன்றைக்கு எந்த இடத்திலும் கல்வித் தரம் கீழேயிருந்து மேலே வரைக்கும் இல்லை. அவர் கல்லூரி வரைக்கும்தான் சொன்னார்கள். ஆனால் கீழே இருந்து மேலே வரைக்கும் தரம் இல்லை. ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்நிலைப் பள்ளிக் கல்வி வரைக்கும் அந்த நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. நாம் ஒன்றாவது முதல் புரோமோஷன் செய்து விடுகிறோம். அந்தக் குழந்தைகளின் தரம் கெட்டுப் போகின்றது. இங்கே தனியார் பள்ளியிலே படிக்கக்கூடிய பிள்ளைகளினுடைய தாரமும், அரசாங்கப் பள்ளியிலே படிக்கக்கூடிய பிள்ளைகளினுடைய தாரமும் பார்த்தால். இன்றைக்குச் சரியான முறையிலே இல்லை. அந்தத் தரம் வளர்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

[1984 மார்ச் 27

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முதல் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சொன்ன பல்வேறு குறைபாடுகளும், பல்வேறு யோசனைகளும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆராய்ந்து கல்வியினுடைய முன்னேற்றத்திற்கான தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமென்ற உறுதியை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள் விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள் 20 ஆண்டுக் காலமாக இந்த அவையிலே உறுப்பினராக இருந்ததுபற்றிக் குறிப்பிட்டார்கள். ஆகவே 20 ஆண்டுக் காலமாக இந்த அவையிலே இருந்து செயல்பட்டிருக்கின்றார்கள் என்பதையும், இன்னும் குறிப்பாக 1977-லே இருந்து இங்கே அமைந்திருக்கின்ற இந்த அரசின் சார்பிலே கல்வித் துறை பற்றிய விவாதங்களின் போதும் வேறு பல சந்தர்ப்பங்களிலேயும் நாட்டினுடைய முன்னேற்றத்தின் அடிப்படையிலே அவர் கல்வி பற்றிய கருத்துக்களைத் தெரிவித்து வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு நாட்டில் கல்வி என்பது அந்த நாட்டினுடைய சமுதாய முன்னேற்றத்திற்கு பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான, இன்றியமையாத ஒன்று என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அதுபற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற நேரத்தில், ஒரு பிரிவினருடைய நலனை மனதில் வைத்துக் கொண்டு பேசுவதும் அல்லது கட்சியினுடைய நலனை மனதில் வைத்துக் கொண்டு பேசுவதும் அல்லது தன்னுடைய சொந்த நலனை மனதில் வைத்துக் கொண்டு பேசுவதும் அந்தப் பொதுவான முன்னேற்றத்திற்கான யோசனைகளாக வெளி வரமுடியாது என்பதையும், இத்தகைய திட்டங்களிலே ஈடுபடுகிற நேரத்தில் நம்முடைய மாநில முன்னேற்றம், நாட்டின் முன்னேற்றம் என்ற அடிப்படையிலே கருத்துக்களைத் தெரிவிப்பது என்பது ஒவ்வொருவருடைய தேசக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆகவே அமைச்சராக இருந்தாலும்கூட,

(பிற்பகல் 2-10)

இத்தகைய விவாதங்களில் பங்கெடுத்துக்கொள்ளும் நேரத்தில் யார் சொல்கின்றார்கள் என்பதைவிட அவர்கள் சொல்கின்ற கருத்துக்கள் எந்த அளவுக்குப் பயன்படும் என்று கருதி, கடந்த ஏழு ஆண்டுக் காலமாக இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது. ஓரளவுக்கு கல்வித் துறையிலே முன்னேற்றத்தை பார்த்தால், பாராட்டத்தக்க அளவிற்கு சில அம்சங்களை





சொல்லப்படுகின்ற கருத்துக்களை பார்த்தால், அதற்கு முக்கிய காரணம், பயன்படுத்தி வந்ததுதான் என்பதை நான் ஆராய்ந்து நல்ல கருத்துக்களைப் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குக்கூட பல்வேறு சொல்லியிருக்கின்றார்கள். அவை கருத்துக்களையெல்லாம் எடுத்துச் ஏற்கெனவே சொல்லப்பட்ட கருத்துக்களே என்றாலும்கூட, நான் ஒரு சில கருத்துக்களுக்காவது சில விளக்கங்களைத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக நிதி ஒதுக்கத்தைப்பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். 1984-85 ஆம் ஆண்டில் கல்வி மான்யத்தின்கீழ் ஒதுக்கிய 402 கோடியானது, வருவாய்க் கணக்கில் மொத்த செலவான 1.946 கோடியில் 21 விழுக்காடு ஆகும். இந்த 102 கோடியில் சத்துணவுச் செலவில் ஒரு பகுதி, அதாவது சத்துணவு அமைப்பாளர்கள், சமையலாளர்கள் சம்பளம் மற்றும் மான்யம் முதலான இனங்களுக்கு ரூ. 25 கோடி சேர்ந்துள்ளது. ரூ. 402 கோடியில் 25 கோடி கழித்தாலும், 20 விழுக்காடு தேரும். ஆனால் இது உண்மையில் கழிக்கவேண்டிய செலவல்ல. பள்ளி உணவுச் செலவு, கல்விக்காக ஊக்குவிப்புச் செலவாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதுதான் மைய அரசின் கொள்கையாகும். பள்ளி சத்துணவுச் செலவிற்காக நுகர்பொருள் வழங்கல் மான்யத்தில் சேர்ந்துள்ள ரூ. 60 கோடியையும் சேர்த்தால், 1984-85-ல் கல்விச் செலவு மொத்தம் ரூ. 462 கோடியாகும். அதாவது 24 விழுக்காடாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அத்தனை பள்ளிகளிலும் 10 வயது முதல் 15 வயது வரை குழந்தைகளுக்கும் 1984 செப்டம்பரில் அறிஞர் அண்ணா பிறந்த நாளிலிருந்து சத்துணவு வழங்கப்படும் என்பதால். 1984-85 குறித்த மதிப்பீட்டில், கல்வி மான்யத்தின் தொகை மேலும் 20 கோடி உயர இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாடு போன்ற முன்னேறிய மாநிலங்களில் கல்விச் செலவில் பெரும்பகுதி திட்டமில்லாத செலவினமாகவே ஆகிறது. எடுத்துக்காட்டாக 1984-85-ல் கல்வி மான்யத்திற்காகும் மொத்தச் செலவு ரூ. 402 கோடியில் திட்டம் அல்லாத செலவுக்கு ஒதுக்கீடு ரூ. 352 கோடி. திட்டச் செலவு ரூ. 50 கோடியாகும். ஆகவே திட்டமல்லாத செலவு. திட்டச் செலவு ஆகிய இரண்டையும் சேர்த்துப் பார்த்தால், கல்வி வளர்ச்சி நிலையை மதிப்பிட முடியும். 1980-81-ல் கல்விக்கான திட்டச் செலவு குறைவானதுபற்றி குறிப்பிடப்பட்டது. ஒட்டுமொத்தமாக நான்-பிளான். மற்றும் பிளான் இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது, தமிழ் நாடு அரசு பட்ஜெட்டில் கல்விக்கு ஒதுக்கிய தொகை 1981-82-ல் தலைக்கு 26.1 ரூபாயாக இருந்தது. இது அனைத்து மாநிலத்திலும் சராசரியாகிய தலைக்கு 24.5 ரூபாய் என்பதற்கு அதிகமாகத்தான் இருந்தது. தலைக்கு கல்விச் செலவுக்கு 1981-82-ல் உத்தரப்பிரதேசத்தில் 21.8 ரூபாய், மத்தியப் பிரதேசத்தில் 22 ரூபாய், மகாராஷ்டிரத்தில் 21.8 ரூபாய். மேற்கு வங்காளத்தில்

25.4 ரூபாயாக இருந்தது. தமிழகத்திலே இந்த மாநிலங்களையெல்லாம்விட அதிகமாக தலைக்கு 26.1 ரூபாய் கல்விக்காக 1981-82-ல் செலவிடப்பட்டது என்று இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வயது வந்தோர் கல்வி. வயது வந்தோர் கல்வியில் சாதனைக்காக தமிழ் நாடு வயது வந்தோர் கல்வித் துறை 1982 ஆம் ஆண்டுக்கான கிருப்ஸ்காயாயா விருதை யூனெஸ்கோவிடமிருந்து பெற்று மாநிலத்திற்குப் புகழ் சேர்த்தது. 1982-83 ஆம் ஆண்டில், வயது வந்தோர் கல்வி மையங்களில் மகளிரைச் சேர்ப்பதில் சாதனை புரிந்து சிறந்த மாநிலங்கள் 4-க்கு இவ்வாண்டு 1983-84-ல் மைய அரசு 20 அம்சத் திட்டத்தின்கீழ் விருது வழங்கியுள்ளது. அந்த நான்கு மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 25 லட்சம் விருது தரப்பட்டுள்ளது. இந்த நான்கு மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நமது மாநிலத்திற்கும் 25 லட்சம் ரூபாய் விருது வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அருணாசலம் அவர்கள் கல்வித் துறையில் அடிப்படை மாறுதல்கள் செய்ய வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்குப் பிறகு பேசிய வேறு பல உறுப்பினர்களும் அந்தக் கருத்தையே எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய கல்வி முறையில் மாறுதல் ஏற்பட வேண்டும் என்று பல பேர்கள் சொல்லிக்கொண்டு வருகின்றார்கள். நாம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு தற்போதைய கல்வி மூலமாக சமுதாயத்திற்கு நன்மை கிடைக்கவில்லை என்பதைக் கருத்திலே கொண்டு இந்த மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று கூறிவருகிறார்கள். நாம் இதுவரையிலும் பள்ளிக்குப் போய் படித்தோம், கல்லூரிக்குப் போய் படித்தோம், பட்டம் பெற்றோம், பிறகு வேலைக்குப் போய் சம்பாதிப்பதும், தன்னைக் காத்துக்கொள்வதும். தன் குடும்பத்தைக் காத்துக்கொள்வதும் என்பதையே நோக்கமாக வைத்து அதற்கேற்ப கல்வி நிலையங்களைப் பயன் படுத்திக்கொண்டு வந்திருக்கின்றோம். அந்தமுறையிலே இருந்து வந்த கல்வி நிலையங்களை இப்போது நாம் வேறுவிதமான நோக்கத்தோடு பார்க்கிற போதுதான், அதிலே மாற்றங்கள் தேவை என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போது நாம் எந்த நோக்கத்தோடு படித்து வருகின்ற மாணவர்களை, படித்து வெளியேறுகின்ற இளைஞர்களைப் பார்க்கின்றோம்? இந்தச் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு கஷ்டங்களை அவர்கள் தீர்க்க வேண்டுமென்று நாம் கருதுகிறோம். அவர்கள் சமுதாய முன்னேற்றத் திற்குப் பயன்பட வேண்டுமென்று நாம் கருதுகிறோம். தான் நன்கு வாழ





பிறருக்கு வாழ்வு தர வேண்டும், சமுதாயத்திற்குப் பாடுபட வேண்டுமென்கிற அளவிற்கு ஒரு அடிப்படை மாறுதலை உண்டாக்க வேண்டுமென்று நாம் கருதுகிறோம். எனவேதான் நம்முடைய கல்வித் திட்டத்தில் மாறுதல் செய்யப்பட்டுத்தானாக வேண்டுமென்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கத் தேவையில்லை.

அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் நாம் சில மாறுதல்களை அவ்வப்போது சிறுக சிறுகச் செய்துவருகிறோம். இன்றைய நிலையில் நாம் செய்யவேண்டிய மாறுதல்களை மூன்று பிரிவுகளின் அடிப்படையில் செய்யலாம். அதிலும் குறிப்பாக இங்கே தொழிற் கல்விபற்றிச் சொன்னார்கள். தொழிற் கல்வி என்பது மிக முக்கியமான இடத்தைப் பெற வேண்டுமென்பது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் கருத்தாகும். ஆகவே அவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில், நமது அரசு அதிகாரிகள் தீவிரமாகச் சிந்தித்து திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது 1985-86-ல் அமுலுக்கு வரும் என்றாலும்கூட, 1984-85-லேயே சில பள்ளி களிலாவது பரீட்சார்த்தமாக, சோதனையாகக் கொண்டுவரக்கூடிய எண்ணமும் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழிற் கல்வியை 1-வது முதலே சொல்லித்தர வேண்டுமென்று நாம் கருதுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் கூறியதுபோல, 1-வதிலிருந்தே தொழிற் கல்விக்கான அம்சத்தை நாம் புகுத்த வேண்டுமென்று சொல்லுகிறோம். இதனுடைய முக்கிய காரணம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற சமுதாயப் பிரச்சினைகள்தான்.

இதுவரையிலும் பத்தாவது படித்து. எஸ்.எஸ்.எல்.சி. படித்து பாஸ் ஆனவர்களுக்கு, தொடர்ந்து கல்லூரி தேவை என்று பேசியிருக்கலாம். அல்லது இன்ஜினியரிங் கல்லூரி தேவை என்று பேசியிருக்கலாம். அதிலே படித்துத் தேறியவர்களுக்கு போஸ்ட்-கிராஜுவேட் கோர்ஸ் தேவை என்று பேசியிருக்கலாம். அதற்கும் மேலே தேறியவர்களுக்கு வேறு ஏதாவது ஒன்று தேவை என்று பேசியிருக்கலாம். இவ்வாறு நாம் இதுவரை பேசிவந்ததெல்லாம், படித்து, தேறி வருகிறவர்களுக்காகவும், அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும்தான். அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய என்ன என்ன தேவை என்று கருதினோமோ அதற்கேற்ப கல்வி நிலையங்களிலே மாறுதலைச் செய்து வந்தோம். ஆனால் தேறாமல் நின்றுவிட்டவர்களைப் பற்றி இதுவரை யாரும் சிந்திக்கவில்லை. தேறாமல் நின்றுவிட்டவர்கள் குறைந்த தொகையினரா என்றால், இல்லை. சென்ற ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி தேர்வை மூன்று லட்சம் பேர் எழுதினார்கள் என்றால் அதில் 50 சதவீதம் பேர்

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 மார்ச் 27

தேறவில்லை. தேறிய அந்த 1½ லட்சம் பேர்களுக்கு மேல்நிலைக் கல்வி இருக்கிறதா என்றுதான் நினைக்கத் தோன்றுமே தவிர, அப்படி தேர்ச்சி அடையாதவர்களைப்பற்றி இதுவரை நாம் சிந்திக்கவில்லை. இவர்களுக்கு பத்திரிகைகள் படிக்கத் தெரியும், புத்தகங்கள் படிக்கத் தெரியும், பொதுக் கூட்டங்களில் கருத்துக்களைக் கேட்டு உணர்ந்து கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். உணர்ச்சி வசப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். வாழ்க்கைக் கஷ்டங்களை தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படி வேலை இல்லாமல். வாழ்க்கையிலே வாழமுடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டு, என்ன செய்வது என்று தெரியாமல், சமுதாயத்தில் பெரும் பிரச்சினையாக ஆகிவிடுகிறார்கள். இலட்சக்கணக்கான பேர் இந்தச் சமுதாயத்தினுடைய உற்பத்தி இயக்கத்தில் பங்குகொள்ள முடியாமல் இருந்துவிடுகிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கிறபோது, அவர்களை அடிப்படையாக வைத்துத்தான் இந்தக் கல்வி முறையில் மிக முக்கியமாகச் சேர்க்கவேண்டிய அம்சம் தொழில்கல்வி அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

குலதர்ம கல்வியை இவர்கள் கொண்டுவருகிறார்கள் என்று சில பேர் சொன்னார்கள். குலதர்ம கல்வி என்பது வேறு, அது அப்பன் செய்த தொழிலை மகன் செய்வது என்பதாகும். ஆனால் நாம் கொண்டுவருவது விருப்பப்பட்ட தொழிலைப் படிக்க வேண்டுமென்பது. அதிலும் குறிப்பாக நவீன தொழிலைச் சொல்லித்தர வேண்டுமென்பதுதான் நம்முடைய நோக்கம். நவீன விஞ்ஞானரீதியான ஒரு சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டுமென்று கருதுகிறபோது, அதற்குத் தேவையானவற்றை நாம் இந்தப் பள்ளிகளிலே சொல்லித்தர விரும்புகிறோம். அதற்குக் குறுக்கே நிதி ஆதாரங்கள் இருக்கலாம். ஆனால் நம்மைப் பொறுத்தமட்டில், நம்முடைய ஆசை, நம்முடைய நோக்கம், நம்முடைய விருப்பமெல்லாம் சமுதாயம் நவீனமயமாக்கப்பட வேண்டுமென்பதில் எந்தவிதமான சந்தேகமும் யாருக்கும் இருக்கத் தேவையில்லை. எனவே இது குலதர்ம கல்வியும் அல்ல. ஆகவே இருண்டுவிட்ட வாழ்க்கையிலே இருக்கின்ற இந்த இளைஞர்களைப்பற்றி

(பிற்பகல் 2-20)

நினைக்கும்போது, ஒன்று, அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்; இரண்டு, அவர்களை உற்பத்தியிலே, சமுதாய இயக்கத்திலே ஈடுபடுத்தியாக வேண்டும். அவர்களுடைய சக்தியை, அறிவை, உழைப்பைப் பயன்படுத்தியாக வேண்டுமென்று நினைக்கிறோம். இன்றைக்கு அவர்களைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதற்கு ஒரே காரணம், அவர்களுக்கு எந்தத் தொழிலும் செய்யத் தெரியவில்லை என்பதுதான். இந்தத் தகுதி இல்லாததால்தான்,



1984 மார்ச் 27] [திரு. செ. அரங்கநாயகம்]

அவர்களுடைய பிரச்சினைகளும் தீரவில்லை. நாட்டுப் பிரச்சினையும் தீரவில்லை. அவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், அவர்களுக்கு இன்றைக்கு ஒரு தகுதியைத் தர வேண்டுமென்று யார் கருதினாலும், அவர்களுக்குத் தொழிற் கல்வியைத் தர வேண்டுமென்ற முடிவுக்குத்தான் வருவார்களே தவிர, வேறு எந்த முடிவிற்கும் போக முடியாது. இது அங்கே எடுக்கும் முடிவல்ல. அமெரிக்காவில் இந்தப் பிரச்சினைக்கு இப்படித்தான் தீர்வு கண்டிருக்கிறார்கள். சோவியத் யூனியனிலும் இந்தப் பிரச்சினைக்கு இப்படித்தான் தீர்வு கண்டிருக்கிறார்கள். சைனாவிற்குப் போனாலும், இந்தப் பிரச்சினைக்கு இப்படித்தான் தீர்வு கண்டிருக்கிறார்கள். இப்படித் தீர்வு காண முடியாத நாடுகளிலேதான் இந்தப் பிரச்சினை வளர்ந்துகொண்டே இருக்கிறதே தவிர, அங்கேயெல்லாம் பிரச்சினைகள் தீர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, தொழிற் கல்வி மாணவர்களுக்கு வேண்டுமென்பதில், தரப்பட வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இருப்பதற்கு நியாயமல்ல. அப்படி இருந்தால், அது வேறு காரணங்களுக்காக இருக்கலாம். நாட்டின் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திப்பவர்களுக்குக் கருத்து வேறுபாடு இருக்க நியாயமில்லை. இந்த ஒரு காரணத்திற்காக மட்டும் சொல்லவில்லை. இன்னொரு காரணம் இருக்கிறது. தொழிற் கல்வி இல்லாத நிலையில், கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக இருக்கிறது. ஏட்டுக் கல்வியைப் படித்து, ஒரு இளைஞன் உருவாகும்போது, அவன் சமுதாயத்திலிருந்து, அந்தக் குடும்பத்திலிருந்து விலகி விலகிச் செல்கிறான். அவனுக்கு உழைப்புபற்றித் தெரியாது. உழைப்பைக் கேவலமாக நினைக்கும் புத்தியை அவன் வளர்த்துக்கொள்கிறான். ஏட்டுக் கல்வி மூலம் உருவாகும் இளைஞர்கள் சமுதாயத்திலிருந்து விலகிச் செல்கிறார்கள் என்பதோடு, உழைப்பை, உழைப்பவர்களை, உழைக்கும் சமுதாயத்தைக்கூட மரியாதையோடு நடத்தும் நிலைமையில் இருப்பதில்லை. இந்த இடைவெளியை நீக்கியாக வேண்டும், போக்கியாக வேண்டும். உழைப்பு மதிக்கப்பட வேண்டும். படித்தவர்களாக இருக்கலாம், பட்டதாரிகளாக இருக்கலாம். எவ்வளவுதான் படித்திருந்தாலும், உழைப்பை மதிக்க வேண்டுமென்றால், உழைப்பில் அவன் ஈடுபட்டிருக்க வேண்டும். ஒருவன் கலெக்டராக வந்தாலும்கூட, லேத்திலே அவன் வேலை செய்திருந்தால், அவன் முன்னால் வரும் உழைப்பாளியிடத்தில் அவன் கலெக்டராகப் பேசும்போது வித்தியாச உணர்வின்றி பேசும் நிலைமையைப் பார்க்க முடியும். உழைப்பு அனுபவம் இல்லாது, படித்து வளர்ந்துவிட்டவர்கள் இந்தச் சமுதாயத்தில் அன்னியத் தன்மையோடு செயல்படும் அபாயத் தன்மை இருக்கிறதென்பதைக் கடந்த காலங்களிலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே பார்த்து வருகிறோம். அந்தச் சிமையை ஒழிக்க வேண்டும். எனவே தொழிற் கல்வி அநேகமாக எல்லோருக்கும் கிடைப்பது நாட்டிற்கும் நல்லது. அதைத்தான் முற்போக்கு எண்ணம் கொண்ட அத்தனை பேர்களும்

சொல்லுகிறார்கள். கையிலே அழுக்குப் படாத கல்வி கல்வியேயல்ல என்பது தீவிரமான முற்போக்குக் கொள்கையாகும். இப்போது கையைப் பயன்படுத்தி, அனுபவ ரீதியாகச் செய்கிற நேரத்தில், நம்முடைய மூளை வளருகிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்களும் சொன்னார்கள். இந்த சாதியிலே பிறந்தால் படிப்பு வராது, அந்தக் குடும்பத்திலே பிறந்தால் படிப்பு வராது என்று பேசுகிறார்களே, அதற்குத் தீர்வு காண வேண்டுமென்று உளமார நினைத்தால், இத்தகைய அனுபவ ரீதியான கல்வியை வழங்கும்போது, பிற்பட்ட, சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள்கூட நல்ல அறிவு வளர்ச்சி பெறுவதோடு, பாடங்களில் நல்ல ஆர்வத்தைக் காட்டி, உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதை ஒத்துக் கொள்ள முடியும். தொழிற் கல்வி என்பது, லேத்திலே வேலை செய்யும் வாய்ப்பைப் பெற வேண்டுமென்று நினைக்கும்போது, அதுதான் வாழ்க்கையாக வேண்டுமென்பதல்ல. இந்த வாய்ப்பு அவனுக்குப் பிற்காலத்தில் பயன்படலாம். இந்த வாய்ப்பு அவனைப் பண்பட்ட மனிதனாக உருவாக்கலாம். இந்த வாய்ப்பு அவனுடைய அறிவு வளர்ச்சியைப் பெருக்கலாம் என்ற அடிப்படையிலே பார்க்கும்போது, தொழிற் கல்வி எல்லா மாணவர்களுக்கும் தெரிவது என்பது மிகச் சிறந்த கல்விக் கொள்கை. அந்த அடிப்படையிலே நாம் ஏதாவது மாறுதல் செய்தால், அதனுடைய உள்ளடக்கமெல்லாம், அடிப்படை எல்லாம் மாறக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அது வெகு விரைவில் வந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். இங்கே புத்தகம்பற்றிச் சொன்னார்கள். பேரவையிலே ஒரு புத்தகம்பற்றி நான் எடுத்துச்சொன்னேன். இங்கேயும் அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென் பதற்காக ஒரே ஒரு குறிப்பை மட்டும் சொல்கிறேன். "Two Virgins" என்ற ஒரு புத்தகம். கமலா மார்க்கெண்டேயா என்ற பெண் எழுதிய புத்தகம். யார் வேண்டுமானாலும் அதைப் படிக்கலாம். ஆனால் அது கல்லூரியில் கட்டாயமாகப் படிக்கப்பட வேண்டுமென்று பாடப் புத்தகமாக வைக்கப் பட்டதுதான் பிரச்சினை. ஒருவர் கடிதம் மூலம் புகார் செய்ததன் அடிப்படையில் நான் அந்தப் புத்தகத்தைப் பார்க்க நேர்ந்தது. 'ஆபாசம் என்றால் எது என்ற அர்த்தம் இருக்குமானால், அதற்கு அந்தப் புத்தகத்தை அர்த்தமாகச் சொல்லலாம். 'செக்ஸ்' என்ற அளவிற்கு மேல், ஆபாசம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதில் ஆபாசம் இருந்தது. சம்பந்தப்பட்டவர்களை விசாரித்தபோது அப்படித்தான் என்று சொன்னார்கள். பேராசிரியர்களால் தான் அது பாடப்புத்தகமாக வைக்கப்பட்டது. அது அவர்கள் செய்த தவறு. அதற்காக அதை நான் இங்கே குறிப்பிடவில்லை. ஆனால் ஒரு ஆபாசமான



புத்தகம் ஓராண்டு காலமாக கல்லூரியில் பாடப்புத்தகமாக வைக்கப் பட்டிருந்தும்கூட, அதுபற்றி ஒரு பேராசிரியரோ, ஆசிரியரோ, மாணவரோ ஒருவரும்கூட புகார் செய்யவில்லை. யாரோ ஒருவர் கடிதம் மூலமாக எனக்கு எழுதிப் போட்டதால்தான், அது வெளியே தெரிய வந்தது. ஓராண்டு காலமாக எனக்கு ஒருவரும் இதைப்பற்றிச் சொல்லவில்லையே என்பதுதான் எனக்குள்ள கவலை எல்லாம். யாரோ ஒரு பேராசிரியர் தவறு செய்திருக்கிறார். அந்தத் தவறு சரியானதுதான் என்று சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதே, அந்தக் கருத்துதான் மிகவும் மோசமான ஒன்று. அதற்காக நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை. ஆனால் சமுதாயத்தில் இன்றைய நிலை என்ன என்பதை இந்த ஒரு புத்தகத்தின் மூலம் நாம் நன்றாக உணர முடிகிறது. நம்முடைய கல்வி முறையின் மூலம் இந்தச் சமுதாயத்திற்கு ஏதாவது நன்மை செய்ய முடியுமா என்பது குறித்து நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒன்றைச் சொல்லி வருகிறேன். சமுதாயத்திற்கு அத்தகைய உணர்வு வேண்டும். புத்தகத்தைத் தேர்வு செய்த பேராசிரியருக்கு அத்தகைய சமுதாய உணர்வு இருந்திருக்குமேயானால், இந்தப் புத்தகத்தால் இந்தச் சமுதாயத்திற்கு என்ன பலன் என்று யோசித்துப் பார்த்திருப்பார். அதேபோல படித்த மாணவர்களும் ஆசிரியர் களும் இந்தப் புத்தகத்தால் இந்தச் சமுதாயத்திற்கு என்ன பலன் என்று யோசித்துப் பார்த்திருப்பார்கள். அதை எடுத்து உடனே தூக்கி வெளியே எறிந்திருப்பார்கள். அத்தகைய உணர்வு இல்லாததால், ஒரு நாவல், இந்திய எழுத்தாளர் எழுதிய ஒரு சாதாரண இலக்கியம் பாடப்புத்தகமாக கல்லூரிக்கு வந்திருக்கிறது. நம் இளைஞர்களுக்கு வெறும் அறிவை நாம் தந்துகொண்டிருக்கிறோமா, இந்த நாட்டு கலாச்சாரத்திற்கு, பண்பாட்டுக்குத் தேவையான கல்வியைத் தந்துகொண்டிருக்கிறோமா என்ற கேள்வியை நாம் எழுப்பிப்பார்ப்போமேயானால், பூகோளம், வரலாறு, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைச் சொல்லிக் கொடுத்தால் மட்டும் போதாது. நம்முடைய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் அவர்களிடையே உணர்த்த வேண்டும். அப்படிப்பட்ட ஒரு உணர்வு இருந்திருந்தால், பேராசிரியரால் அந்தப் புத்தகம் மாணவர்களுக்குத் தரப்பட்டிருந்தாலும்கூட, அடுத்த நாளே ஆசிரியர்களால், மாணவர்களால் தூக்கி எறியப்பட்டிருக்கும். இதைத்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, பண்பாட்டுக் கல்வியையும் நாம் இங்கே சொல்லித் தந்தாக வேண்டும். இதை பாரதப் பிரதமர் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் 'மாரல் எஜுகேஷன்' என்று எடுத்துக்கொண்டால், அவர்கள் ஒழுக்கத்தைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அத்துடன் நின்று விடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டமாதிரி, பொய் பேசக் கூடாது, திருடக்

கூடாது என்ற அளவோடு நின்று விடுகிறார்கள். அதுமட்டும் போதாது என்பதை இப்பொழுது நாம் பார்த்துவிட்டோம். 'மாரல் எஜுகேஷன்' என்று சொல்லிக்கொடுக்கும் அதேநேரத்தில் பிறருக்குப் பயன்படும் வகையில், நல்ல உணர்வுகளை வளர்க்கும் வகையில், சமுதாயத்தில் நல்லுணர்வைப் பரப்பும் வகையில் அத்தகைய கல்வி அமைய வேண்டும். அதற்கு முதல்படியாக தேச பக்தியை ஊட்ட வேண்டும். அந்நியனை எதிர்த்துப் போராடித்தான் தேச பக்தியைப் பரப்ப வேண்டுமென்ற நிலை இப்பொழுது இல்லை. ஆனால் தேச பக்தியை நாம் பரப்பாமல் விட்டுவிட்டோமேயானால், இருக்கின்ற சுதந்திரத்தையும் நாம் வருங்காலத்தில் இழக்க நேரிடும். நம்முடைய நாட்டின் மீது தேச பக்தி வர வேண்டுமானால், சிறு குழந்தைப் பிராயத்திலிருந்தே தேச உணர்ச்சியைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இந்த தேசத்திற்கு எந்தப் பலனையும் எதிர்பாராமல் உழைக்கின்ற ஒரு மனப்பக்குவத்தை குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டும். அதுமட்டும் போதாது. தேவைப்பட்டால், தேசத்திற்காக தங்கள் இன்னுயிரையும் தரத் தயாராக இருக்கும்வகையில் நம்முடைய இளைஞர்களை நாம் உருவாக்க வேண்டும். இப்படி நல்ல

(பிற்பகல் 2-30)

பண்பாட்டை நம் பொதுமக்கள் கட்டிக் காக்கிறபோதுதான் இந்த ஆபாசங்கள் எல்லாம் கல்வியிலும், சமுதாயத்திலும் இடம் பெறாமல் ஒரு வலிமையான சமுதாயத்தை நம்மால் உருவாக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் இதைச் சொல்வதற்குக் காரணம், இதை இப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அல்ல. இதை விவாதப் பொருளாக கல்வியில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் எடுத்துக் கொண்டு பேச வேண்டும், பரவலாகப் பேச வேண்டும், குறிப்பாக ஆசிரியர்கள் பேச வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அருணாசலம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இதிலே ஆசிரியர்கள் பெரும் பங்கு கொள்ள வேண்டும். தொழில் கல்வி வெற்றி பெறவில்லை என்று என் கருத்து வருகிறதென்றால், உண்மையிலேயே தலைமையாசிரியர்களும் ஆசிரியர்களும் அதில் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்பதை நான் இங்கே பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாணவர்கள், நம்முடைய குழந்தைகள் தொழில் கல்வி பெற்று வாழ்க்கையில் சீராக வேண்டுமென்ற அடிப்படையில் எத்தனை தலைமையாசிரியர்கள் இருக்கிறார்கள், எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள்? ஆகவே அவர்கள் ஒத்துழைப்பைத் தராத நிலையில் வருகிற ஒவ்வொரு நல்ல திட்டமும் வெற்றி பெற முடியாமல் அதனால் பலன் பெற முடியாமல் போகிறது என்பதை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கிறபோது, அந்த ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும்



இந்தக் கருத்துக்களைப் பேச ஆரம்பிக்க வேண்டும். அதற்கான இதர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதிலே அவர்கள் ஆர்வம் காட்ட ஆரம்பிக்க வேண்டும். அப்போதுதான் முழுப் பலனையும் நாம் பெற முடியும்.

இந்த இரண்டு கருத்துக்களோடு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இப்போது கணிதம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் பற்றிப் பேசுகிறபோது, அண்மையில் அமெரிக்காவிலிருந்து ஒரு தேசியக் குழு ஒரு ரிப்போர்ட் தந்தது நமது கவனத்திற்கு வந்திருக்கிறது. அதிலே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 21 ஆம் நூற்றாண்டில் அமெரிக்கர்களுக்கான கல்வி எப்படி இருக்க வேண்டுமென்று அந்த கல்விக் குழு ஆராய்ந்து ஒரு அறிக்கை தந்திருக்கிறது. அதிலே ஒரே ஒரு வரியை படித்துக் காண்பித்தால், அதுவே ஒரு விளக்கத்தைத் தருவதாக அமையும் என்று நினைக்கிறேன். நம்முடைய பள்ளிகளில் எப்போது அமெரிக்கக் கல்வியைப்போல தரம் வரும், அப்படிப் பட்ட உயர்ந்த நிலைக்கு எப்போது நாம் வருவோம் என்று நாம் அதை ஒரு எல்லையாக வைத்து அதைப்போல வரவேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால் அங்கேயிருக்கிற நிலைமையைப்பற்றி அந்த அறிஞர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்,

"Alarming number of American youths are ill-equipped to work in, profit from, or contribute to, or enjoy the increasingly sophisticated technological society".

"வளர்ந்து வருகிற தொழில் நுட்பம் மிகுந்த விஞ்ஞான சமுதாயத்தில் வேலை செய்யவும், அதிலேயிருந்து பலன் பெறவும், அதற்குத் தங்களுடைய ஒத்துழைப்பை நல்கவும் அல்லது அந்த சமுதாயத்தில் இன்பமாக வாழ தகுதி அற்றவர்களாக இன்றைய அமெரிக்கர்கள், அமெரிக்க இளைஞர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறி, அதற்குக் காரணம் இந்த அடிப்படை மாறுதல் என்று சொல்வது, கணிதம் அதிகமாகக் கற்க வேண்டும், விஞ்ஞானம் அதிகமாகப் படிக்க வேண்டும், தொழில்நுட்ப அறிவை அதிகமாக வளர்க்க வேண்டுமென்ற இந்த மூன்றையும் முக்கியமாகக் கருதி வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையில், கணிதத் தரம், விஞ்ஞானத் தரம், தொழில்நுட்பத் தரம் ஆகியவற்றை உயர்த்த முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இப்போது சொல்லியிருக்கிற கருத்துக்களை வைத்துப் பார்த்தால், முன்னேற்றத்திற்கான வாய்ப்பு நிறைய இருக்கிறது. குறைபாடுகள் நமக்குத் தெரிகின்றன. செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் நமக்குத் தெரிகின்றன. அவற்றைச் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கவேண்டுமென்றும் தெரிகிறது. ஆனால் அதற்கான ஒத்துழைப்பு கல்வித் துறை தொடர்பானவர்களிடமிருந்து நமக்குக் கிடைத்தாக வேண்டும். குறிப்பாக ஆசிரியர்களிடமிருந்து கிடைக்க வேண்டும். அதை அவர்கள் தர

வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அந்த அடிப்படையில் நாம் சிறுகச் சிறுக எடுக்கிற முயற்சிகளுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் மட்டும் அல்லாது வெளியிலிருக்கிற பொதுமக்களும், மற்றவர்களும் தங்களுடைய ஒத்துழைப்பைத் தந்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிக் கல்வியின் தரம் குறைந்துவிட்டதா என்று சில உறுப்பினர்கள் இங்கே பேசும்போது கேட்டார்கள். குறைந்திருக்கிறது என்று சொல்வதற்கு மேலாக நாம் சந்தோஷப்படவேண்டிய நிலைமை இருக்கிறது. கடந்த இரண்டாண்டு காலமாகத்தான் ஓரளவுக்குக் கல்லூரிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இது பெரிய மகிழ்ச்சியடைய வேண்டிய ஒன்றாகும். அதற்காக ஒத்துழைப்பைத் தருகிற அத்தனை பேர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தாக வேண்டும். கல்லூரிகள் திறந்திருக்கின்றன. வகுப்புகள் நடக்கின்றன. ஆசிரியர்கள் வருகிறார்கள், மாணவர்கள் கற்கிறார்கள். கல்வி நடக்கிறது. பாடங்கள் நடத்தப்படுகின்றன என்பதில் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். அதற்குப் பிறகுதான் தரத்தைப்பற்றிப் பேச வேண்டியவர்களாக இருக்கிறோம். இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு அதைப்பற்றிச் சிந்திக்கவே நமக்கு நேரமிருக்காது. அப்போதெல்லாம் ஏதாவது கல்லூரி திறந்திருக்கிறதா என்றுதான் கேட்கவேண்டியிருக்கும். இப்போது ஏதாவது கல்லூரி மூடியிருக்கிறதா என்று கேட்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே தரத்தைப்பற்றிப் பிரச்சினை இப்போது எழவில்லை. கல்லூரிகளில் தொடர்ந்து பாடங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எங்கே பார்த்தாலும் ஒரு அதிருப்தியும், அமைதியின்மையும் இருந்த சூழ்நிலை கடந்த இரண்டாண்டுகளாக மாறி, இன்றைக்கு ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். எனவே நிச்சயமாக கல்வித் தரத்திலும் முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நாம் எடுத்துக் கொள்ள முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிக் கல்வியைப் பொறுத்தமட்டில், இன்னும் அதிகமான அளவுக்கு அது முன்னேற வேண்டும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்கத் தேவையில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகளைப்பற்றி ஆசிரியர்கள் எதிர்ப்பு தெரிவிப்பது என்பது அவர்கள்மீது சந்தேகத்தை உருவாக்குகிறது. சில கல்லூரிகளைப் பொறுத்தவரையில், உண்மையிலேயே சில பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் பொதுவாக மற்ற அனைத்துக் கல்லூரிகளிலும் பெருமளவுக்கு முன்னேற்றமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அண்மையில் நான் லயோலா கல்லூரியின் கருத்தரங்கு ஒன்றிற்குப்





போயிருந்தேன். அங்கே வரலாறு சம்பந்தமான ஒரு கண்காட்சியை ஏற்பாடு
செய்திருந்தார்கள். ஒவ்வொரு பகுதியாகப் பார்த்து வரும்போது, வரலாறு
என்பதை எவ்வளவு கவர்ச்சிகரமான ஒரு பாடமாக உணர்ந்துகொள்ள
முடியும் என்பதைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இறுதியில் ஒரு
போஸ்டரைக்கூட அங்கே போட்டிருந்தார்கள். அதில் என்ன எழுதி
யிருந்தார்கள் என்றால்,

"உன்னுடைய மொழிதான் எல்லா மொழிகளிலும் சிறந்தது என்று
கருதுகிறாயா?
உன்னுடைய இனம்தான் எல்லாவற்றிலும் சிறந்தது என்று
கருதுகிறாயா?
உன்னுடைய இசைதான் எல்லாவற்றிலும் சிறந்தது என்று
கருதுகிறாயா?
இப்படி உன்னுடையதுதான் எல்லாவற்றைக்காட்டிலும் சிறந்தது என்று
கருதுகிறாயா?"

என்று கேட்டுவிட்டு, "ஆமாம்" என்றால் இதுதான் கிடைக்கும் என்று
சொல்லி, அதன்கீழ்
"ஜாதிச் சண்டை, மொழிச் சண்டை, ஏழ்மை, வேலையில்லாத்
திண்டாட்டம்"

என்றெல்லாம் எழுதி வைத்திருந்தார்கள். அதற்குப் பிறகு உன்னுடைய விடை

"இல்லை" என்றால் அதன் காரணமாக
"அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம், நட்பு"

ஆகியவை கிடைக்கும் என்று எழுதி வைத்திருந்தார்கள். இதைப் பார்த்த
போது, நம்மிடையே இருக்கிற வரலாற்றுப் பாடத்தின் மூலம், வரலாற்று
ஆசிரியர்கள்தான் இந்தக் கருத்தையெல்லாம் நம் மாணவர்களுக்குச் சொல்லிக்
கொடுக்கிறார்கள் என்கிறபோது—இதில் கருத்து வேறுபாடு இருக்கலாமே
தவிர—எவ்வளவு முக்கியமான உண்மையை இவர்கள் எவ்வளவு அழகாகக்
கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடிந்தது.

இப்படியெல்லாம்கூட வரலாற்றுப் பாடத்தின் மூலமாக ஒரு சமுதாய
எண்ணப் புரட்சியை, சிந்தனைப் புரட்சியை உண்டாக்க முடியும் என்பதை
அங்கே என்னாலே பார்க்க முடிந்தது. அது ஒரு தன்னாட்சி உரிமை பெற்ற
கல்லூரி. ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் அனைத்து இந்திய அளவில்
மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படிப்பட்ட தேர்வில் சென்ற
ஆண்டு இந்த லயோலா கல்லூரியிலிருந்து மட்டும்தான் மூவர் தேர்ந்தெடுக்கப்

பட்டு அவர்களுக்கு மட்டுமே அங்கே இடம் கிடைத்திருக்கிறது. வேறு எந்தக் கல்லூரியைச் சார்ந்தவர்களுக்கும் இடம் கிடைக்கவில்லை என்பதைக் கேள்விப்பட்டேன். அப்படி கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறது என்பதற்கு அது ஒரு உதாரணம். அப்படித்தான் அனைத்துக் கல்லூரிகளிலும் அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் உரிய வாய்ப்பைத் தந்தால், கல்லூரிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதில் நாம் வெற்றி பெற முடியும். அதற்குக் குறிப்பாக அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பும் தேவை என்பதோடு ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் தேவை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்—அல்ல, நேற்றைக்கு என்று நான் நம்புகிறேன், கல்லூரி ஆசிரியர்கள் பரிட்சையைப் புறக்கணிக்கப் போவதாக ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். பத்திரிகையில் அப்படிப்பட்ட ஒரு செய்தியைப் பார்த்தேன். நேற்று கல்லூரி ஆசிரியர் ஒருவர் என்னைப் பார்க்க வந்திருந்தார். அவரிடம் இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, "கல்லூரி ஆசிரியர்களின் ஊதியத்தைப்பற்றி ஆராய யு.ஜி.சி. ஒரு கமிஷனைப் போட்டிருக்கிறது. அவர்கள் ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு முன்னதாக ஆசிரியர்களுக்கு ஒரு இடைக்கால நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். அதனால்தான் இந்தத் தீர்மானம்" என்று சொன்னார். அவரிடத்தில் நான் அப்போதே தெரிவித்தேன்: "மாநில அரசு ஊழியர்கள் இடைக்கால நிவாரணம் கேட்டதற்கு இல்லை என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, இந்தப் பிரச்சினையில் அம்மாதிரி இடைக்கால நிவாரணம் எதும் தர இயலாது என்று சொல்லி ஆசிரியர்கள் இதற்காக தேர்வுகளைப் புறக்கணிக்காமல், அரசுக்கும் மாணவர்களுக்கும் ஒத்துழைப்பு தர வேண்டும்" என்று சொன்னேன். அவரும் நாளைக்கு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். நாளைக்கு வந்தால், அதைப்பற்றி அவருக்கு மீண்டும் அறிவுரை கூறத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

எனவே ஆசிரியர்கள், மாணவர்களுடைய நலனைப் புறக்கணித்துவிட்டு போராட்டம் செய்வது என்பது எந்த நேரத்திலும் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல ஆசைப் படுகிறேன். எனவே கல்லூரி ஆசிரியர்களானாலும் சரி, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களானாலும் சரி, மாணவர்களைப்பற்றிக் கவலையில்லை, சமுதாயத்தைப்பற்றிக் கவலையில்லை என்ற அடிப்படையில் போராட்டத்தை நடத்துவது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். காரணம் ஆசிரியர்களே இந்த நிலைக்கு வந்தால், விதைகளே கெட்டுப் போவதைப்போல, இந்தச் சமுதாயத்தில் மேற்கொண்டு முன்னேற்றகரமான எல்லா வழிகளுமே தடைப் பட்டுப் போய்விடும். ஆகவே நான் இங்கே ஆசிரியர்களுக்கு ஒரு



வேண்டுகோளையே வைக்க விரும்புகிறேன். கோரிக்கைகள் வைத்தும், ஊர்வலம் நடத்தியும் போராட்டம் நடத்தியும், மாநாடு நடத்தியும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்துவதைத் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் மாணவர்களின் நலன் கெடுகிற அளவுக்கு ஒரு காரியத்தை யாரும் செய்ய வேண்டாம் என்றுதான் இங்கே ஒரு வேண்டுகோளாக அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-40)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய ஒரு கருத்தையொட்டி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இடைக்கால நிவாரணம் என்பது மத்திய அரசும், பல்கலைக் கழக மானியக் குழுவும் இணைந்து கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுப்பதற்கு நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்கும், பல்கலைக் கழக மானியக் குழுவிற்கும் ஒரு கடிதம் எழுத வேண்டும். ஆந்திரா, பீகார், மேற்கு வங்கம், மகாராஷ்டிரம் ஆகிய மாநில அரசுகள் அவ்வாறு இடைக்கால நிவாரணம் தர வேண்டும் என்று கடிதம் எழுதியிருப்பதாகவும், நம்முடைய மாநில அரசு கடிதம் எழுதவில்லை என்றும் கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தினர் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி கடிதம் எழுதினால் நல்லது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நாம் ஒரு ஊதியக் குழுவைப் போட்டிருக்கிறோம். இங்கேயுள்ள அலுவலர்கள் இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டபோது, தர முடியாது என்று சொல்லி யிருக்கிறோம். இந்த நிலையில் அந்தக் கடிதத்தை எழுதுவது சரியாக இருக்காது என்பதுதான் நமக்குள்ள சங்கடம். நாம் கடிதம் எழுதி அதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டால், பிறகு இங்கேயுள்ள மாநில அலுவலர்கள் இடைக்கால நிவாரணம் கேட்கும்போது, தர முடியாது என்று சொல்லுவது சரியான வாதமாக இருக்காது. மற்ற மாநிலங்களில் ஊதியக் குழுவைப் போட்டிருக்கிற நிலைமை கிடையாது. நம்முடைய மாநிலத்திலேதான் இந்த ஆறாண்டுக் காலத்திலே இரண்டு ஊதியக் குழுக்களைப் போட்டிருக்கிறோம். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் நம்மாலே அப்படி கடிதம் எழுத முடியாது என்பதை நான் கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தினருக்கு விவரமாக நமக்குள்ள சங்கடத்தை எடுத்துச் சொல்லி அவர்களுடைய முடிவை மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடுகிறேன்.

அதற்கடுத்து முக்கியமானதொன்று. பொறியியல் கல்லூரியில் நுழைய இண்டர்வியூ முறை கூடாது என்று சொன்னோம். இண்டர்வியூ முறை கூடாது என்று சொன்னவுடனே, சில பேர் இதை எதிர்ப்பார்கள் என்று நான்

அப்போதே சொன்னேன். அதைப்போலவே திராவிடக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அதை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கிறது என்று கருதுகிறேன். அவர்களுடைய முழுமையான திட்டம் நமக்குத் தெரியவில்லை. இதை எதிர்க்கிறார்கள் என்பதை மாத்திரம் நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் ஒரு சில விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். நாம் ஒரு மாற்றத்தைச் செய்கிறபோது, அவர்கள் நினைப்பதுபோல் சமுதாயத்தில் பாதிப்பு ஏற்படுத்தினால், அத்தகைய காரியத்தை ஓர் அரசு செய்யக்கூடாது என்பதிலே எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. பாதிப்பு இருக்கும் என்றால், நிச்சயமாக இந்த நடவடிக்கையை எடுக்கத் தேவையில்லை. இன்றைக்கு 86 பேரைச் சேர்க்க வேண்டும் என்று உயர்நீதி மன்றம் ஒரு கருத்தைச் சொல்கிறது என்றால்—வேண்டுமானால் இன்றைக்கே எழுதிக்கொள்ளுங்கள்—இண்டர்வியூ முறை இருக்குமானால், 186 மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்ற நிலைதான் வருமே தவிர, இதற்குக் குறையாது. கடைசியில் இதிலே நாம் தேர்வுக் குழுக்கள் மூலம் தேர்வு செய்வது என்பது மாறி, உயர்நீதி மன்றத்திலே தேர்வு செய்வது போன்ற நிலைமை ஏற்பட்டுவிடும். கல்வித் துறையிலே இருக்கின்றவர்கள், பேராசிரியர்கள் ஆகியவர்கள் சேர்ந்து மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது என்பது போய், உயர்நீதி மன்றத்தின் சார்பில் அதன் உத்தரவின்கீழ் நடைபெறுகிற காரியமாக வேண்டுமானால் இது மாறும். இது நமக்கு நல்லதல்ல, பெருமை சேர்ப்பதல்ல. இந்த முறை வேண்டும் என்று சொல்லுகிறவர்கள், "இதனால் பிற்பட்ட மாணவர்களுக்கு ஒரு சில நன்மைகளைச் செய்ய முடியும், சில இடங்கள் அதிகமாகக் கிடைக்கும்" என்று சொல்லுகிறார்கள். மார்க் மட்டும் வைத்திருந்தால், இண்டர்வியூ முறையால் பிற்பட்ட மாணவர்களுக்குக் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். எப்படி கிடைக்க முடியும்? வேண்டுமென்றே யாராவது செய்தால்தான் கிடைக்கும் என்று பொருளே தவிர, தனியாகக் கிடைக்கும் என்பதல்ல. நாம் எந்த நிலையிலும் மாணவர்களுக்கு, இண்டர்வியூவை எதிர்நோக்கும் அளவிற்கு, இதுவரையிலும் பயிற்சி தரவில்லை. ஓரல் எக்சாமினேஷன் என்பது நம்முடைய கல்வி முறையிலே இல்லை. அப்படி இருக்க வேண்டும் என்று ஒருபுறம் இருக்கிறது. அந்த நிலையிலே வாய்மூலமாகப் பயிற்சி பெறாத சமூகத்தில் பிற்பட்ட மாணவர்களுக்கு அதிகமான இடங்கள் கிடைக்கும் என்று நினைப்பது சரியல்ல. அது நிச்சயமாகச் சரியாக இருக்காது. அப்படி அவர்களுக்குத் தர வேண்டுமென்றால், வேண்டுமென்றே யாராவது செய்ய வேண்டும். வேண்டுமென்றே செய்ய வேண்டும் என்றால், யாரால் செய்ய முடியும்? செலக்‌ஷன் கமிட்டிகளில் இருக்கிறவர்கள்தான் செய்ய முடியும். நாங்கள் அல்ல, அல்லது மாண்புமிகு உறுப்பினர்கள் அல்ல, திராவிட கழகத் தலைவர் அல்ல, யாரும் அல்ல. இந்த





அரசில் பணியாற்றுகிற, சம்பளம் வாங்குகிற சில பேர் என்ன கொள்கையோடு இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பிற்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதில் தீவிரமானவர்கள் என்று முழுமையாகச் சொல்ல முடியாது. ஐந்தாறு கமிட்டிகளைப் போடுகிறபோது, அதிலே 25 பேர் வருகிற நிலையில் யார் யார் எப்படி இருப்பார்கள் என்பதை நம்மாலே சொல்ல முடியாது. அவர்கள் கையில் இந்தப் பொறுப்பைத் தருகிறோம். அந்தப் பொறுப்பை வைத்துக் கொண்டு, பிற்பட்ட மாணவர்களுக்கு எதிராக ஏன் அந்தச் சக்திகள் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இதைவிட இன்னுமொன்று. பிற்பட்ட மாணவர்களிலே அதிகமான மதிப்பெண்கள் வாங்கிய மாணவர்களுக்கு அந்தச் சக்தி பயன்படாமல் குறைந்த மதிப்பெண்கள் வாங்கியவர்களுக்குப் பயன்பட்டு பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களிலேயே அதிகமாக மதிப்பெண்கள் வாங்கியவர்கள் பாதிக்கப்படுகின்ற கேவலமான நிலைமை ஏன் ஏற்பட முடியாது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் யாரையோ நம்பி இந்த அதிகாரத்தைத் தந்து, கடைசியில் இன்றைக்கு யார் இன்டர்வியூ நடத்த வேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களே ஊழல் ஊழல் என்று பேசி, அரசிலே இருக்கின்றவர்களை, ஆட்சியிலே இருக்கின்றவர்களை ஒரு குறை சொல்வதற்காகத்தான் இன்றைக்கு இது பயன்பட்டிருக்கிறதே தவிர, உண்மையாக மாணவர்களுக்குப் பயன்பட்டிருக்கிறது என்று நாம் சொல்ல முடியாது. சில புள்ளி விவரங்களை நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். 1970-75 ஆம் ஆண்டுகளில் ஆறு வருஷங்களுக்கு இந்த முறை இருந்திருக்கிறது. அதிலே அந்தச் சந்தர்ப்பத்திலே என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 18 சதவீதத்திற்கு வருவது கிடையாது. ஒரு 8 சதவீதம், 9 சதவீதம் வருவார்கள். மீதி இருக்கிற இடங்கள் பிற்பட்ட மாணவர்களுக்குப் போகின்றன. 1970-லிருந்து 1975 வரைக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுடைய இடங்கள் பிற்பட்ட மாணவர்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது ஒரு முக்கியமான புள்ளி விவரம். ஆகவே 1977-78-லேதான் முதல் முறையாக 18 சதவீதம் இடங்களைத் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பெற்றிருக்கிறார்கள். அந்த அளவிற்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். 1977-78-லேதான் முதன்முதலாக அவ்வாறு நடைபெற்றிருக்கிறது. 1970-75-ல் 'ஓபன் கோடா' அல்லது பார்வர்டு கம்யூனிட்டி என்று எடுத்துக் கொண்டால் அவர்கள் பெற்ற சதவீத இடங்கள் 38.9. பிற்பட்ட வகுப்பினர் பெற்ற இடங்கள் 52.2 சதவீதம். தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் பெற்ற இடங்கள் 8.80 சதவீதம். ஆகவே பிற்பட்ட வகுப்பிலே இருக்கிற 52.2 சதவீதம், தாழ்த்தப்பட்டவர்களுடைய

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 மார்ச் 27

இடமான 9.01 சதவீதத்தைக் கழித்து விட்டுப் பார்த்தால் அவர்கள் உண்மையிலேயே 43.1 சதவீதம்தான் பெற்றிருக்கிறார்கள். இது 1970-75-லே நடைபெற்ற நிலைமைகள். 1977-83-ல் அது எப்படி ஆகியிருக்கிறது என்றால் பார்வேடு கம்யூனிட்டி 23 சதவீதம், பேக்வேர்டு கிளாஸ் 58.5 சதவீதம். தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் 18 சதவீதத்தை நிரப்பினார்கள் என்பது மட்டுமல்ல, அதற்குமேலே 0.5 சதவீதத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதின் மூலம் பார்வர்டு கம்யூனிட்டியோடு போட்டி போட்டு 4, 5 இடங்களைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆக இந்த இரண்டு புள்ளிவிவரங்களையும் வைத்துப் பார்த்தால், நாங்கள் வந்ததற்குப் பிறகு, பிற்பட்ட வகுப்பினர் மீட்டும் 58.5 சதவீதம் பெற்றிருக்கிறார்கள். அவர்களை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் அதே சந்தர்ப்பத்தில் 1970-75-ல் தாழ்த்தப்பட்டவர்களின் காரணமாகப் பெற்ற அந்தப் பாகத்தைக் கழித்துவிட்டுப் பார்த்தால், 43.1 சதவீதம்தான் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு என்ன 1970-75-ல் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் இதைக் குறை கூறுகிற அளவுக்கு இருக்கிறது? அதற்குக் காரணம் இந்த இன்டர்வியூ முறை. அந்த இன்டர்வியூ முறையால் எங்கள் காலத்திலே வேண்டுமானால் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பயன் பெற்றிருக்கலாமே தவிர, எங்களை எதிர்த்துப் பேசுகிற அல்லது ஆதரித்துப் பேசுகிறவர்களுடைய காலத்தில் அது பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படவில்லை என்பதை முதலிலே உணர வேண்டும். 1970-75-ல் பேக்வேர்டு கம்யூனிட்டி, ஷெட்யூல்ட் டிரைபுகள் எல்லாம் சேர்த்துப் பார்க்கிறபோது 61 சதவீதமாக இருந்தது இன்றைக்கு 1977-83-ல் 77 சதவீதமாக மாறி இருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே நாங்கள் ஆட்சிக்கு, பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு, இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பலனடைந்திருக்கிறார்கள்; அதிகப் பலனடைந்திருக்கிறார்கள். அதற்கு முன்னாலே பாதிக்கப்பட்டிருந்த நிலைமை தவிர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்து இன்னொரு குறிப்பை நான் சொல்ல வேண்டும். 1976-78, 1981-83—இந்த இரண்டு ஆண்டுகளில் நமக்குக் கிடைத்த புள்ளிவிவரங்களை வைத்துப் பார்க்கிறபோது, இன்டர்வியூ சிஸ்டத்தினாலே வருகிற மாணவர்கள், இன்டர்வியூ இல்லையென்றால் வெறும் மார்க் சிஸ்டத்தினாலே வருகிற மாணவர்கள்—குறைந்தது ஒரு 1,400 இடங்கள்—இந்த இரண்டையும் வைத்துப் பார்க்கிறபோது ஏறக்குறைய 88 சதவீதம் பொதுவாகவே இருக்கிறார்கள். ஒரு 12 சதவீதம்தான் வித்தியாசப்படுகிறது.



1984 மார்ச் 27] [திரு. செ. அரங்கநாயகம்]

(பிற்பகல் 2-50)

ஆகவே 'காமன் கேண்டிடேட்ஸ்' என்று பார்த்தால், 88 சதவிகிதம் இருக்
றது. இது ஒரு முக்கியமான புள்ளி விவரம், அதை நான் மாண்புமிகு
ப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதோடு
, நாம் ஆட்சிப்பொறுப்புக்கு வந்த பிறகு இரண்டு மூன்று மாறுதல்கள்
ய்யப்பட்டிருக்கின்றது. அதிலேயும் குறிப்பாக 1979-ல் வருமானத்தை
ப்படையாக வைத்து, 9 ஆயிரம் ரூபாய்க்குக் கீழே இருக்கின்றவர்களுக்கு
தச் சலுகைகள் கிடைக்கும் என்ற மாறுதலைக் கொண்டு வந்தோம். அது
க்கப்பட்டுவிட்டது. 31 சதவிகிதமாக இருந்ததை மாற்றி, பிற்பட்ட
ப்பினருக்கு 50 சதவிகிதம் என்று 1980-லே செய்திருக்கிறோம். 1981-லே
மன்றத்தினுடைய தீர்ப்புக்கு ஏற்ப இண்டர்வியூவிற்கு மார்க் 75 ஆக
ந்தது. அதை 30 ஆகக் குறைத்திருக்கிறோம். இந்த மாறுதல் இடைப்
_ காலத்திலேதான் வந்திருக்கின்றது. ஆகவே பொதுவாக நான் ஒரு
த்தை, ஒரு புள்ளி விவரத்தைச் சொல்லவேண்டுமானால், 1981-ல் இண்டர்
சிஸ்டம் மூலம் பேக்வர்ட் கிளாஸ் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது
சதவீதம் வெறும் மார்க் பிரகாரம் நாம் வந்தால், இப்போது கொண்டு
வதாகச் சொல்லியிருக்கின்ற முறையை வைத்திருந்தால் 61 சதவிகிதம்
திருக்கின்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் 18.65 என்றால், வெறும் மார்க்
றால் 18.5 சதவிகிதம் வந்திருக்கும். 1982-ல் இண்டர்வியூ சிஸ்டம் மூலம்
பட்ட வகுப்பினர் 63 சதவிகிதம் வந்திருக்கின்றார்கள். வெறும் மார்க்கு
த்திரம் வைத்திருந்தால், 62.5 சதவிகிதம். ஒரு 5 சதவிகிதம் தான்
றம். பழங்குடி மக்கள் அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள் 18.2, வெறும்
க் என்று வைத்திருந்தால் 18.5 சதவிகிதம். கொஞ்சம் அதிகமாகவே
திருப்பார்கள். 1983-ல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இண்டர்வியூ
டத்தின் மூலம் 60.83 பெர்செண்ட் வந்திருக்கின்றார்கள். ஆனால்
றும் மார்க்கை வைத்திருந்தால், 60.52 சதவிகிதம் வந்திருப்பார்கள். 31
ர் அதிகம். தாழ்த்தப்பட்ட பழங்குடிமக்கள் 18.56 சதவிகிதம் வந்திருக்
றார்கள். ஆனால் வெறும் மார்க் என்று வைத்திருந்தால், 18.72 வந்திருப்
கள். அவர்கள் குறைந்திருக்கின்றார்கள். இந்தப் பின்னணியிலே
க்கின்றபோது, வித்தியாசம் இல்லை என்று எண்ணுகின்ற காரணத்தி
ல், அந்த அடிப்படையை வைத்து நாம் பார்க்கின்றபோது, இந்த இன்டர்
சிஸ்டத்தின் மூலம் நமக்கு அதிகமான நன்மை இல்லை. அதைவிட,
க்கு எவ்வளவு சிரமங்கள் 5, 6 குழுக்களைப் போட்டு ஒரு மாத காலம்
ழ் நாடு முழுவதும் சென்று அவர்கள் பேட்டி கண்டு, அவர்கள் மார்க்
ட்டு, முடிவுகளைத் தெரிவிக்கின்றபோது அதற்கு ஆகஸ்ட், செப்டம்பர்
ற அளவுக்கு வந்துவிடுகிறது. ஏறத்தாழ ஒரு செமஸ்டர் தள்ளி விடு

கின்றது. பெருமளவுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. கல்வி முறையில் அந்த மாணவர்களுடைய படிப்பே குறைந்து, அவர்கள் சேர்ந்துப் படிக்கின்ற நிலைமைகள் ஏற்படுகின்றது. பெருமளவுக்கு அவர்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை இருந்து வந்திருக்கின்றது.

நான் இறுதியாகக் கேட்கின்ற ஒரே ஒரு கேள்வி. அண்ணா அவர்கள் சொன்னதாக இருந்தாலும் சரி, பெரியார் சொன்னதாக இருந்தாலும் சரி, அண்ணா அவர்கள் கலைக் கல்லூரியிலேயிருந்து இன்டர்வியூ சிஸ்டத்தை எடுத்தார்கள். டிரெயினிங் ஸ்கூலிலே இன்டர்வியூ சிஸ்டத்தை எடுத்தார்கள். ஆகவே இண்டர்வியூ சிஸ்டத்தை முழுமையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலையிலே அவர்கள் இருந்தார்கள் என்று சொல்லமுடியாது ஆனால் பிரச்சினைகள் வருகின்றபோது, புகார்கள் வருகின்றபோது, குறைபாடுகள் வருகின்றபோது, அதைத் தீர்ப்பதற்கு நாம் இன்றைக்கு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு அண்ணா அவர்கள் இருந்தாலும், இதைத்தான் செய்திருப்பார்கள் என்பதை நான் இங்கே மிகத் தைரியமாக, உறுதியாக என்னாலே சொல்ல முடியும். இன்றைக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் போகிறது என்கிறார்கள். தயவுசெய்து சொல்கிறேன். 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகிதமும் இருக்கிறது என்பதை நான் இங்கே மிகத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக இவர்களுக்கு 18 சதவிகிதம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவிகிதம் என்று இருக்கின்ற நிலையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் போய்விட்டது என்பது மக்களை ஏமாற்றுகின்ற மோசடியான சொல் ஆகும். அது எப்படி சரி என்றே எனக்குப் புரியவில்லை. நான் மிகத் தெளிவாகவே சொல்கிறேன். 50 சதவிகிதம் இருக்கின்றது. 18 சதவிகிதம் இருக்கிறது. அது மட்டுமல்ல. அந்த 50 சதவிகிதத்தில் அதிகமான மார்க் வாங்கிய பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இடம் கிடைக்காமல் குறைவான மார்க் வாங்கிய பிற்படுத்தப்பட்ட மாணவனுக்கு இடம் தந்து, அதன் மூலமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர், நன்றாகப் படிக்கக்கூடிய மாணவர்கள் உள்ளத்திலே இந்தச் சமுதாயத்தின் மீது விரக்தியை, அதிருப்தியை ஏற்படுத்தக்கூடிய நிலையை நாம் இப்போது தவிர்க்க முயற்சி எடுத்துக்கொள்கிறோம். முற்பட்ட வகுப்பினரைப்பற்றி இப்போது நான் பேச விரும்பவில்லை. ஆனால் ஒன்றை நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தை மனதிலே வைத்துக்கொண்டு. அவர்களை ஆகாதென்று சொல்வது அண்ணாவின் கொள்கை என்று புரிந்துகொண்டதாகாது. அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்த நேரத்திலேயே மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிடக்





கழகத்திற்குமிடையேயுள்ள ஒரு வித்தியாசமாகவே இந்தக் கொள்கை இருக்கிறதென்று பிரகடனப்படுத்தியவர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் முற்போக்குச் சாதியினர் சேர்ந்திருக்கிறார்கள் என்ற நிலைமையை உருவாக்கினார். இவர் வழக்கறிஞராக இருந்திருக்கிறார், இவர் மேயராக இருந்திருக்கிறார் என்கிற நிலைமைகளை எல்லாம் பார்க்கிறபோது, திராவிட முன்னேற்றக் கழகம் என்பது, திராவிடக் கழகத்திலிருந்து அடிப்படையிலே வேறுபட்டதென்பதை நான் அந்தக் கட்சியிலே இருந்த நேரத்திலும், அண்ணா அவர்கள் இருந்த நேரத்திலும் மிகத் தெளிவாகச் சொல்லி வந்திருக்கின்றோம். அந்த உணர்வோடு பார்க்கின்றவர்களுக்கு நிச்சயமாக இப்போது சொல்கின்ற அபிப்பிராயம் என்பது தவறாகப்படாது. இன்னும் சொல்லப்போனால், ஆளும் கட்சியிலே இருக்கின்ற நாங்கள் தவறு செய்து, பணம் சம்பாதிக்கவோ அல்லது ஊழல் செய்யவோ இருக்கக்கூடிய நிலைமைகள் தவிர்க்கப்பட்டிருக்கிறதென்பதைப் பார்க்கிறபோது, எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள், அவர்கள் யாராக இருந்தாலும், மகிழ்ச்சி அடைய வேண்டும். ஆனால் நிலைமை நாட்டிலே நேர்மாறாக இருக்கிறது. எதிர்க் கட்சியிலே இருப்பதாகச் சொல்லப்படுகின்ற அல்லது வெளியிலே இருப்பதாகச் சொல்லப்படுகின்ற சில பேர் அதை எதிர்ப்பதென்பது ஒரு தவறான அல்லது நாம் எதிர்பாராத நிலைமையை நாட்டிலே உருவாக்கியிருக்கிறது. வேண்டுமானால் நாங்கள்தான் 'இன்டர்வியூ' முறையை வேண்டுமென்று சொல்ல வேண்டும். எதற்காகவென்றால், எங்களுக்கு வேண்டியவர்களுக்கு இடம் தருவதற்காக என்றுதான் பல பேர் நினைத்துக்கொண்டிருப்பார்கள். ஆளும் கட்சித் தரப்பிலேயிருந்து இப்படி ஊழலுக்கு இடம் தரும் 'இன்டர்வியூ' முறை தவிர்க்கப்படும் என்று சொல்கிறோம். ஆனால் அதற்கு நேர் மாறாக, எங்களை எதிர்ப்பதாகச் சொல்கின்ற அல்லது ஊழலை எதிர்ப்பதாகச் சொல்கின்றவர்கள் 'இன்டர்வியூ' முறை வேண்டுமென்று சொல்வது நாட்டு மக்களுக்குப் புரியாத ஒரு புதிராக, பிற்பட்ட மக்களுக்குப் புரியாத ஒரு புதிராக, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் புரியாத ஒரு புதிராக இன்றைக்கு மிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அறிவுபூர்வமாக வளர்ந்து வருகிறார்கள். நல்ல மதிப்பெண்கள் வாங்கி வருகிறார்கள். மார்க்கின் அடிப்படையிலே நம்முடைய பிற்படுத்தப்பட்ட ஜாதியைச் சார்ந்த மாணவர்கள், தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சார்ந்த மாணவர்கள் எந்த அளவிற்கு நிமிர்ந்து நிற்க முடியும் என்பதை வருகின்ற இந்த ஓராண்டிலே பார்க்கவிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

14389Y
V211,32'N84
N84.27 3

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 மார்ச் 27

ஒரு பெரிய ஆபத்து இந்தத் திட்டத்தின் மூலம் ஏற்பட்டுவிடும் என்றால், நாம் எப்போது வேண்டுமானாலும் அதைப் பரிசிலனை செய்துகொள்ளலாம், மறுபரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளலாம். தவறைத் திருத்திக்கொள்வதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். எனவே இந்த ஆண்டு இந்த முறை வருவதை நல்லெண்ணம்கொண்டவர்கள், சமுதாயத்தினுடைய முன்னேற்றத்தில் அக்கறைகொண்டவர்கள் வரவேற்பார்கள்.

இந்தத் திட்டத்தை எதிர்த்தால், மாணவர்கள் மத்தியில் ஒரு தவறான அபிப்பிராயம் உருவாகும். அது நாட்டுக்கு நல்லதல்ல. இளைஞர்கள் மத்தியில் ஒரு தவறான எண்ணம் உருவாகிறதென்பது நமக்கு நல்லதல்ல. ஆகவே யார் எதிர்க்கிறார்கள் என்பதைவிட மாணவர்கள் மத்தியில் ஒரு திருப்தியை ஏற்படுத்துவது முக்கியமானது. இந்தமுறையிலே நமக்கு நியாயம் கிடைக்கிறது என்கின்ற அந்த உணர்வை அந்த நிலைமையை நாம் ஏற்படுத்துவதென்பது மிக முக்கியமானது. இல்லையென்றால், மாணவர்கள் தவறான வழியிலே செல்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

ஆகவே தொழில் கல்லூரிகளில் நாம் கொண்டுவரவிருக்கின்ற இந்த முறை இப்போதிருக்கின்ற முறையிலே இருக்கக்கூடிய தவறுகளைப் போக்கவும், அதே நோக்கில் ஒரு நல்ல வாய்ப்பையும் ஏற்படுத்தித்தரவும் பயன்படும். அதே நோக்கில் இப்போதிருக்கின்ற விகிதாசாரம் விட்டுக் கொடுக்கப் படமாட்டாது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீதம் என்பதும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் என்பதும் உறுதியாக இருக்கும். அவர்கள் இதுவரையிலும் 'இன்டர்வியூ' முறையிலே பெற்றுவந்த இடங்கள் இல்லை என்றாலும், பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதென்பதை கடந்த மூன்றாண்டுகளின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கிற காரணத்தால், மிகப் பெரிய வித்தியாசம் ஏதும் ஏற்பட்டுவிடாது. ஆகவே இந்த முறைக்கு சகல பகுதியினரும் நல்ல ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது நடைபெற்ற இந்த விவாதத்தில் கருத்துச் சொன்ன அனைவருக்கும் நன்றிகூறி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை (28—3—1984) புதன்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.



(பிற்பகல் 2-59)

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும். ஆணைகளும்

இல்லை

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.**

75. வேலைவாய்ப்பு—பயிற்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ் & ஆங்கிலம்).

76. மானியக் கோரிக்கை—வருவாய்த்துறை, 1984-85. (தமிழ் & ஆங்கிலம்).

77. 1984-85 ஆம் ஆண்டிற்கான வருவாய்த்துறை பற்றிய சாதனை அறிக்கை. (தமிழ் & ஆங்கிலம்).

78. கால்நடைப் பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ் & ஆங்கிலம்).

79. 1984-85 ஆம் ஆண்டிற்கான கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல்வினை முறைத்திட்டம். (தமிழ் & ஆங்கிலம்).

80. தமிழ் நாடு இறைச்சி நிறுவனச் செயல்பாட்டுத் திட்டம் பற்றிய ஒரு குறிப்பு, 1983-84. (தமிழ் & ஆங்கிலம்).

81. தமிழ் நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டு நடவடிக்கை. (தமிழ் & ஆங்கிலம்).

* 82. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீட்டிற்கு பிழை திருத்தம். (தமிழ்).

## இணைப்பு- I

[282 ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அரசாணை (நிலை) எண் 1529, கல்வி, நாள் 22—7—1981-ல் ஆசிரியர் பயிற்சி பட்டம் பெற்றபின் 5 ஆண்டுகள் பயிற்றுவித்து அனுபவம் பெற்ற தமிழாசிரியர்களுக்கும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகப் பதவி

* 26-3-1984 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

உயர்வு கொடுக்கலாம் என ஆணையிடப்பட்டது. ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்ற பின் 5 ஆண்டுகள் பயிற்றுவித்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்று அறிவித்துள்ள நிபந்தனையை மாற்றி ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெறுமுன் உள்ள பணிக்காலத்தையும் கணக்கிடவேண்டுமென சேலம் மாவட்ட அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரு தமிழாசிரியர்கள் உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தனர். அந்த நீதிப் பேராணை மனுவை ஏற்றுத் தமிழாசிரியர்கள் ஆசிரியப் பயிற்சிப் பட்டம் பெற்றபின் உள்ள காலத்தை மட்டும் கற்பித்தல் அனுபவத்தில் கொள்ளாமல் அவர்கள் அதற்கு முன்பு பெற்ற போதனா அனுபவத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு தலைமையாசிரியப் பதவி கொடுப்பது குறித்து பரிசீலனை செய்யவேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அவ்வாறே, முதுகலைப் பட்டப் படிப்போடு ஆசிரியப் பயிற்சிப் பட்டம் பெற்றபின் 10 ஆண்டு கற்பித்தலில் அனுபவம் உடையவர்களுக்கு மேல் நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியப் பதவி வழங்கலாம் என்ற ஆணையினை எதிர்த்து மதுரை மாநகராட்சிப் பள்ளியில் பணியாற்றும் தமிழாசிரியை தொடுத்த நீதிப்பேராணை வழக்கிலும் நீதிப் பேராணையை (Writ Petition) அனுமதித்து மேற்கண்டவாறே ஆசிரியர் பயிற்சி பட்டம் பெறும் முன் உள்ள போதனா பயிற்சி அனுபவத்தையும் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவ்வழக்கில் உயர்நீதி மன்றத் தீர்ப்பினை எதிர்த்து அரசு நீதிப் பேராணை மேல் முறையீடு விண்ணப்பம் (Writ Appeal) தாக்கல் செய்துள்ளது.

மேற்கண்ட இரு வழக்குகளிலும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆசிரியப் பயிற்சி பட்டம் பெறுமுன் தமிழாசிரியர்கள் பெற்றுள்ள போதனா அனுபவத்தையும் தலைமை ஆசிரியப் பதவி உயர்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும் என்பதே. இந்த இரு தீர்ப்புகளின் அடிப்படையில் மேல் நிலைப் பள்ளி தமிழாசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுப்பது சம்பந்தப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து அரசு மேல் முறையீடு செய்துள்ள நீதிப் பேராணை விண்ணப்பத்தில் உயர்நீதி மன்றம் வழங்க உள்ள தீர்ப்புக்கு கட்டுப்படுத்தி மொழியாசிரியர்களுக்கு அட்ஹாக் முறையில் தற்காலிகத் தலைமை ஆசிரியர்களாக மேனிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பதவி உயர்வு அளிக்க பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிட்டுள்ளது.



## இணைப்பு II.

[285 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### I. தோற்றுவாய்.

கல்விச் செலவும், மாநில வரவு-செலவுத் திட்டமும்.

கல்விக்காக 1984-85 ஆம் ஆண்டில், " மானியக் கோரிக்கை 17—கல்வி "-ன் கீழ் ஒதுக்கியுள்ள ரூபாய் 402 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 1,946 கோடியில் 21 விழுக்காடாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1984-85 வரவு—செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | 1984-85 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 259. அரசுப் பள்ளிகள் கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்பு செலவு. | 64 | .. | 64 |
| 265. பிற நிருவாகப் பணிகளை மாவட்ட விவரச் சுவடிகள். | .. | 3 | 3 |
| 277. கல்வி .. | | | |
| 1 தொடக்கக் கல்வி .. | 1,82,03 | 14,90 | 1,96,93 |
| 2 உயர்நிலைப் பள்ளிக் கல்வி. | 98,09 | 5,85 | 1,03,94 |
| 3 மேல்நிலைப் பள்ளிக் கல்வி. | 17,83 | 11,35 | 29,18 |
| 4 கல்லூரிக் கல்வி .. | 33,76 | 7,20 | 40,96 |
| 5 சிறப்புக் கல்வி—முதியோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியவை. | 1,19 | 3,51 | 4,70 |
| 6 விளையாட்டும் இளைஞர் நலனும், மற்றும் தேசிய மாணவர் படை. | 2,75 | 1,74 | 4,49 |
| 7 தொழில் நுட்பக் கல்வி | 11,13 | 4,07 | 15,20 |
| | 3,46,78 | 48,62 | 3,95,40 |

[1984 மார்ச் 27

| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்). | (4) |
|---|---|---|---|
| 278. கலை, பண்பாடு— | | | |
| நுண் கலைக் கல்வி | 37 | 14 | 51 |
| கலை, பண்பாடு ஆகிய வற்றின் மேம்பாடு. | 7 | 61 | 68 |
| தொல்பொருள் ஆராய்ச்சி. | 19 | 19 | 38 |
| ஆவணக் காப்பகமும், அருங்காட்சியகங் களும். | 52 | 12 | 64 |
| பொது நூலகங்கள் ... | 3,39 | 37 | 3,76 |
| | 4,54 | 1,43 | 5,97 |
| 279. ஏனைய அறிவியல் பணிகள்—எரி சக்தி ஆய்வு. | .. | 15 | 15 |
| 288. சமூகப் பாதுகாப் பும் நலனும். | 15 | .. | 15 |
| மொத்தம் — மானியக் கோரிக்கை "17—கல்வி." | 3,52,11 | 50,23 | 4,02,34 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1984-85-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—



1984 மார்ச் 27]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு. | | | |
| மானியக் கோரிக்கை 28. சமுதாய வளர்ச்சிப் பணிகள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள். | .. | 1,50 | 1,50 |
| சமூகக் கல்வி .. | .. | 9 | 9 |
| நகராட்சி உயர் நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக் கான மானியம். | .. | 10 | 10 |
| கோரிக்கை—37. | | | |
| பொதுப்பணி—அரசுப் பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள். | 1,09 | 3 | 1,12 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய் வூதியம். | 14,05 | .. | 14,05 |
| 309. உணவு — சத்துண வுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருள் மதிப்பு. | 40,00 | 20,00 | 60,00 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு. | | | |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற் கான மூலதனச் செலவு அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலிய வற்றுக்கான கட்டிடங் கள். | 4 | 6,12 | 6,16 |
| 677. கடன்கள்— | | | |
| தேசிய கடன் படிப்புத வித் தொகைகள். | .. | 32 | 32 |
| தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன். | .. | 4 | 4 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன். | 6 | .. | 6 |
| 767. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடன்கள். | 4,45 | .. | 4,45 |
| மொத்தம் .. | 59,69 | 28,20 | 87,89 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1984-85-ல் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூபாய் 490 கோடியாகும்.

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின் வருவதாகும். அதாவது ஆதி திராவிடர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதி திராவிடர் பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு : சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு : மருத்துவக் கல்வி வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவகைக் கல்விகளுக்கு ஆகும் செலவு ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங்கள் எவற்றிலும் சேரவில்லை.

1984-85-ல் கல்விக்கான திட்டப் பணிச் செலவு—

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி ; 477. கல்விப் பணி குறித்த கட்டடச் செலவு ; 677. கடன் முதலியன) கல்விக்கான 1984-85 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளில் செலவு விவரம் வருமாறு : (" + " குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்).

| | பொறுப்பேற்ற செலவினம். | 1984-85-ல் புதிய திட்டப் பணிப் பகுதிக்காக வழங்குதல் செலவினங்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| பொதுக் கல்வி— | | | |
| 1 பள்ளிக் கல்வி (மேல் நிலைப் பள்ளிக்கல்வி உட்பட). | 32,33<br>+4 | 1,34 | 33,67<br>+4 |
| 2 முதியோர் கல்வி .. | 2,40<br>+88 | 13 | 2,54<br>+88 |
| 3 கல்லூரிக் கல்வி .. | 7,25<br>+32 | 59 | 7,83<br>+32 |





| | | | |
|---|---|---|---|
| 4 விளையாட்டு இளைஞர் நலன். | 1,46<br>+92 | 3 | 1,49<br>+92 |
| 5 தமிழ் வளர்ச்சி—தமிழ் கலைந் துறை. | 5 | 1 | 6 |
| 6 கட்டட வகையில் பொதுப்பணித் துறைச் செலவு. | 48 | .. | 48 |
| | 43,97<br>+ 2,16 | 2,10 | 46,07<br>+ 2,16 |
| தொழில் நுட்பக் கல்வி .. | 6.62<br>+14 | 38 | 7,00<br>+14 |
| கலைப் பணிகள்— | | | |
| கல்வித் துறை .. | 59 | 17 | 76 |
| தமிழ்க் கலைத் துறை | 75 | 6 | 81 |
| | 51,93<br>+ 2,30 | 2,71 | 54,64<br>+ 2.30 |

## II. பள்ளிக் கல்வி.

### (i) பொது.

1984-85-ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூபாய் 402 கோடியில் பெரும் பகுதியான ரூபாய் 334 கோடி பள்ளிக் கல்விக்கே (மேல் நிலைப்பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. 30-9-1983 அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் இருந்த பள்ளிகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | பள்ளிகளின் எண்ணிக்கை. | ஆசிரியர் களின் எண்ணிக்கை. | மாணவ மாண வியர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). | |
| தொடக்க நிலைப்பள்ளிகள் (1—5 வகுப்புக்கள்). | 28,548 | 1,16 | 48.06 |
| நடுநிலைப்பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புக்கள்). | 5,635 | 0.66 | 27.16 |
| உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளிகள். (பொதுவாக 6—10/ 6—12 வகுப்புக்கள்). | 3,778 | 0.99 | 26.42 |
| மொத்தம் .. | 37,961 | 2.81 | 101.64 |

வகுப்புத் தொகுதி வாரியாக மாணவ/மாணவியர் எண்ணிக்கை வருமாறு :—

| வகுப்புக்கள். | மாணவ/மாண வியர். (இலட்சத்தில்). |
|---|---|
| (1) | (2) |
| 1—5 .. .. .. .. .. | 68.74 |
| 6—8 .. .. .. .. .. | 21.91 |
| 9—10 .. .. .. .. .. | 7.91 |
| 11—12 .. .. .. .. .. | 3.08 |
| | 101.64 |

பள்ளி நிருவாக வாரியான விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.



2. 1984–85 ஆம் ஆண்டில் 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகள் ; நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து 100 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள் ; நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளின் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்த்து 150 தமிழாசிரியர் பதவிகள்; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 பி.எட்., தர ஆசிரியர் பதவிகள் ஆகியவை ஏற்படுத்தப்படும். நடுநிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 100 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் :

3. பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்த உள்ளூர் மக்களின் நன்கொடையையும், ஒத்துழைப்பையும் பெறும் நோக்குடன் தொடங்கி நடத்தப் பெறும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் தொடக்ககாலம் முதல் 1983 முடிய மொத்தம் 736-ஐ பள்ளிக் கல்வித்துறை நடத்தியுள்ளது. அவற்றில் கடந்த ஐந்து ஆண்டுகளில் நடந்த 201 மாநாடுகளில் பெற்ற நன்கொடையின் மதிப்பு ரூபாய் 179 இலட்சமாகும்.

### (II) தொடக்கக் கல்வி.

வரவு செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கத்தில் முதன்மையான இடத்தைத் தொடக்கக் கல்வி பெறுகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் புதிதாகத் தொடங்கிய தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,187 (தொடக்க நிலைப் பள்ளிகள் 697-ம் நடு நிலைப் பள்ளிகள் 490-ம்) ஆகும். பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குவதில் புதிய 20 அம்சத் திட்டத்தில் 16 ஆவது அம்சம் ஆகும். இந்த அம்சத்தின் கீழ் தமிழ்நாட்டின் சாதனை பெருமை தரக்கூடியதாக இருக்கிறது என்பதைப் பின் வரும் விபரங்கள் காட்டும்.—

| | வயதுத் தொகுதி 6—11 (வகுப்புகள் 1—5) | வயதுத் தொகுதி 11—14 (வகுப்புகள் 6—8) |
|---|---|---|
| அனைத்திந்தியாவிலும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1984-85 இறுதியில்) எய்தவேண்டும் எனக் குறித்துள்ள இலக்கின் படி பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் விழுக்காடு. | 95 சதவீதம். | 50 சதவீதம். |
| தமிழ் நாட்டில் 1982-83-ல் சாதனை. | 96·2 சதவீதம். | 66.03 சதவீதம். |
| தமிழ்நாட்டில் 1983-84-ல் சாதனை. | 97,96 சதவீதம். | 69.40 சதவீதம். |

[1984 மார்ச் 27

2. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 1983-84-ல் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை வருமாறு:—

| வயதுத் தொகுதி. | மாணவர். | மாணவியர். (இலட்சத்தில்.) | மொத்தம். |
|---|---|---|---|
| 6—11 .. .. | 1.13 | 1.27 | 2.40 |
| 11—14 .. .. | 0.72 | 0.70 | 1.42 |
| | 1.85 | 1.97 | 3.82 |

1983-84-ல் இவ்விரண்டு வயதுத் தொகுதியிலும் சேர்த்து மொத்தம் 3.82 இலட்சம் மாணவ மாணவியர் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது முன் எந்த ஆண்டிலும் இல்லாத சாதனையாகும்.

3. பள்ளிகளில் சேரும் (6—11) மாணவ மாணவியருள் தொடர்ந்து 5-வது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியில் இருந்து நின்று விடுவோர் விழுக்காடு ("வியர்த்த விழுக்காடு") 1977-78 ஆம் ஆண்டில் 40 சதவீதமாக இருந்தது 1982-83-ல் 29 சதவீதமாக குறைந்து உள்ளது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் இப்பொழுது செயல்படுவதன் காரணமாக வருங்காலத்தில் இந்நிலை மேலும் சீர்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

4. குழந்தைகள் காப்பகங்கள் 4,343-ல் ஒவ்வொன்றிலும் இப்பொழுது ஒரு இளஞ் சிறார் பள்ளி வகுப்பும் நடத்தப்படுகிறது. இளவயதிலேயே பள்ளி செல்லும் மனப்பாங்கை வளர்ப்பதாலும், சிறுமியர் தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக் கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்ப்பதாலும் இவ்விளஞ்சிறார் பள்ளிகளும் '' வியர்த்த விழுக்காட்டைக் '' குறைக்க வருங்காலத்தில் உதவும்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்—5 முதல் 9 முடிய பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு.

5. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 1—7—1982/15—9—1982 முதல் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 5 முதல் 9 முடிய உள்ள வயதுத் தொகுதியைச் சார்ந்தவர்களும் பெரும்பாலும் 1—5 வகுப்புகளில் படிப்பவர்களுமான 44 இலட்சம் குழந்தைகள் 34,100 பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்களில் நாள்தோறும் உணவு பெற்று வருகின்றனர்.



1984 மார்ச் 27]

இம்மையங்களில் 31,280 மையங்கள் பள்ளிக் கல்வி இயக்குனரின்
நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. மற்றவை ஆதி திராவி
டர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை, பிற்பட்டோர் நலத்
துறை ; நகராட்சி நிருவாகத்துறை ஆகியவற்றின் இயக்குனர்கள்
மற்றும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளின்
ஆணையாளர்கள் ஆகியோரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் கீழ்
செயல்படுகின்றன.

6. குழந்தைகளுக்கு ஆண்டின் 365 நாட்களும் சத்துணவு
வழங்கப்படுகின்றது. குறிப்பிட்ட சில விடுமுறை நாட்கள் (ஆண்
டுக்கு சுமார் 20 நாட்கள்) சத்துணவு மையங்களுக்கும் விடுமுறை
யானாலும் அந்நாட்களுக்குரிய உணவுப் பொட்டலமும் முதல்
நாளன்றே தரப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்குத்
தரப்படும் உணவின் அளவு வருமாறு :

| | |
|---|---|
| அரிசி .. .. .. .. | 100 கிராம். |
| பருப்பு .. .. | 15 கிராம். |
| எண்ணெய் .. .. .. | 5 கிராம். |
| காய்கறிகளும் மசாலாப்பொருட்களும். | 50 கிராம். |

7. அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவற்றை தமிழ்நாடு நுகர்
பொருள் வாணிபக் கழகம் அந்தந்த சத்துணவு மையத்தில் வழங்கு
கிறது. 1983-84, ஆம் ஆண்டுக்கு கேர் நிறுவனம் அரிசி 9,800
டன்னும் எண்ணெய் 1,200 டன்னும் இலவசமாகக் தருகிறது.
விறகு, காய்கறி, மசாலா பொருள்கள் முதலியன செலவினங்களுக்
காக ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 11 காசு வீதம் கணக்கிட்டு
தொடரும் மானியம் தரப்படுகின்றது. 500-க்குக் குறைந்த
மாணவர்களுக்கு உணவளிக்கும் மையத்திற்கு மாதம் ரூபாய் 20-ம்
500-ம் அதற்கு மேலும் மாணவர்களுக்கு உணவளிக்கும் மையத்
திற்கு ரூபாய் 30-ம் சில்லரைச் செலவினமாக அனுமதிக்கப்படு
கிறது. பள்ளி சத்துணவு மையம் ஒவ்வொன்றிலும் மாதம் ரூபாய்
150 மதிப்பூதியத்தில் சத்துணவு அமைப்பாளர் ஒருவரும்;
நாளைக்கு ரூபாய் 2 சம்பளத்தில் ஒரு பகுதிநேர சமையலரும்,
நாளைக்கு ரூபாய் 1 சம்பளத்தில் ஒரு பகுதிநேர உதவியாளரும்
பணி செய்கின்றனர். உணவு பெறும் மாணவர் எண்ணிக்கை
500-க்கு மேல் இருந்தால் கூடுதலாக ஒரு சமையலாளரும்,
ஒரு உதவியாளரும் நியமித்துக் கொள்ளலாம்.

8. கோயம்புத்தூரில் அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரியில்
1983 டிசம்பரில் ''பள்ளிக் குழந்தைகளுக்கு உணவும் கல்வியும்''
என்பது பற்றி யூனேஸ்கோ நிறுவனக் கருத்தரங்கு ஒன்று நடை
பெற்றது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

அக்கருத்தரங்கில் வெகுவாகப் பாராட்டப் பெற்றது.' அத்திட்டம் காரணமாக வியர்த்த விழுக்காடு குறைவது பற்றியும் குழந்தைகள் உடலும், உள்ளமும் நலம் பெற்று கல்வியில் மேலும் ஆர்வம் காட்டுவது பற்றியும் விவாதிக்கப்பட்டு பாராட்டப்பட்டது.

9. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைச் சார்ந்த நிதி ஒதுக்கமாக கல்வி மானியத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது, ரூபாய் 25 கோடியாகும்; சமையலாளர் மற்றும் உதவியாளர் சம்பளம்; சத்துணவு அமைப்பாளர்கள் மதிப்பூதியம், தொடரும் மானியச் செலவு முதலிய செலவினங்களுக்கு மட்டுமே இந்த ரூ. 25 கோடியாகும். பள்ளி சத்துணவு மையங்களுக்கு வழங்கும் உணவுப் பொருட்களின் விலையாக நுகர் பொருள் வாணிபக் கழகத்துக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்கான நிதி ஒதுக்கம் (சுமார் ரூ. 60 கோடி) மானியக் கோரிக்கை 35 '' நுகர்பொருள் வழங்கலில் '' சேர்க்கப்பட்டுள்ளது.

10. அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளாகிய செப் டம்பர் 15-லிருந்து இத்திட்டம் இம்மாநிலத்திலுள்ள எல்லாப் பள்ளிகளிலும் 10—15 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் விரிவாக்கப்படும். அவர்களுக்கு சத்துணவு, ஆண்டில் பள்ளி நாட்கள் அனைத்திலும் வழங்கப்படும்.

இலவச புத்தகங்கள் கற்பலகைகள் வழங்குதல் :

11. 1—3 வகுப்புகளில் பயிலும் ஏழை மாணவர்கள் 13 இலட்சம் பேர்களில் முதல் வகுப்பில் பயில்வோருக்குப் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், 2—3 வகுப்புகளில் பாடப் புத்தகங் களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1972-73 ஆம் ஆண்டி யிருந்து பாட நூல்கள் வழங்குவதற்கு ஆகும் செலவை தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக இந்நிறுவனம் இப்பொழுது ஆண்டுதோறும் ரூ. 1 கோடி செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்களுக்கு சிலேட்டு இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டுதோறும் அரசு சுமார் ரூ. 7 இலட்சம் செலவிடுகிறது. 4—10 வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் சுமார் 8 இலட்சம் பேர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக இலவசப்பாட புத்தகங்களைப் பெற்று வருகின்றனர்.

புத்தக வங்கிகள் :

12. ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வாங்கும் செலவினைத் தவிர்ப்பது புத்தக வங்கிகளின் நோக்கமாகும். 1-10-1983 நிலவரப்படி 36,553 பள்ளிகளில் இவ்வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 12 இலட்சத்திற்கும் அதிகமாகும். உயர் வகுப்புக்குச்



செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங் களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும், இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அறிவியல் கல்வியும், தொடக்கப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்களும்.

13. 1981—82 மற்றும் 1982—83 ஆண்டுகளில் அறிவியல் கருவிகளை வாங்குவதற்கான பள்ளிக்கு ரூ. 3,750 வீதம் மொத்தம் 400 நடுநிலைப் பள்ளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. அப்பள்ளிகள் ஒவ்வொன்றும் பள்ளி நிர்வாக நிதி அல்லது பெற் றோர் ஆசிரியர் நிதியிலிருந்து மற்றொரு ரூ. 3,750 இவ்வகை யில் செலவிட வேண்டும். தொடக்கப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வாங்க 1983-84-ல் ரூ. 2 இலட்சம் ஏற்பளிக்கப் பட்டது.

தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள் :

14. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980-81 முதல் 1982-83 முடிய மூன்று ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டித்தருவதற்கான ஒரு பெருந் திட்டம் சுமார் ரூ. 33 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் 5,154-க்கு கட்டிடங்கள் கட்டித் தரப்பட் டன. 1984-85-ல் தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 1.72 கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்காக '' சமுதாய வளர்ச்சி '' மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 1.50 கோடி ஒதுக் கப்பட்டுள்ளது. தனியார் மற்றும் நகராட்சித் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியம் தர ரூ. 17 இலட்சமும், அரசு தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 5 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் :

15. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1-6-81 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டி டப் பராமரிப்பு தவிர பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதை யும் பள்ளிக் கல்வித் துறை கவனித்து வருகிறது.

[1984 மார்ச் 27

நகராட்சி/மாநகராட்சித் தொடக்கப்பள்ளிகள் :

16. 1983-84-ல் நகராட்சிகளும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளும் நடத்தி வந்த தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,526 ஆகும், (1123 முதல் நிலை மற்றும் 403 நடுநிலைப் பள்ளிகள்). நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன், அவ்வாறு வசூலாகும் தொகையில், 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையினை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கு நிதியில் துண்டு விழும் முழுத் தொகையினை அரசே ஈடு செய்து வருகின்றது.

(iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1983-84-ல் தமிழ்நாட்டில் 14—16 வயதுத் தொகுதியினர் 17.64 இலட்சம் பேர்களுள், 44.87 விழுக்காடாகிய 7.91 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1982-83-ல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு :

| | சாதாரணப் பள்ளிகள் (ஆங்கிலோ-இந்தியன் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உட்பட). | மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்தவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உயர்நிலைப்பள்ளிகள் | 2,252 | 99 | 2,351 |
| மேல்நிலைப்பள்ளிகள் .. | 1,370 | 57 | 1,427 |
| மொத்தம் .. | 3,622 | 156 | 3,778 |



1984 மார்ச் 27]

1982-83-ல் மேற்கண்ட 3,778 பள்ளிகளில், வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின் வருமாறு :

| | மாணவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). |
|---|---|
| 8-ம் வகுப்பும் கீழும் .. .. .. | 15.43 |
| 9—10 வகுப்புகள் .. .. .. | 7.91 |
| 11—12 வகுப்புகள் .. .. .. | 3.08 |
| மொத்தம் .. | 26.42 |

கடந்த ஏழு ஆண்டுகளில் (1977-78 முதல் 1983-84 முடிய) மொத்தம் 525 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. (1983-84-ல் திறந்த 52 உயர்நிலைப் பள்ளிகள் உட்பட).

2. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் 1983-84 முடிய 1,106 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. 1984-85-ல் மேலும் 13 பள்ளிகள் பயன் பெறும். இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளுக்குத் தேவையான அறிவியல் தளவாடங்களை மொத்தமாகப் பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி, அனுப்பி வைக்கிறார். அறிவியல் தளவாடங்கள் வழங்குவதற்கு பள்ளிக்கு ரூ. 20,000 அனுமதிக்கப்படுகிறது. அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை இத்திட்டத்தின் கீழ் ஆய்வுக் கூட கட்டட வகையில் ஒரு பள்ளிக்கு இப்பொழுது ரூ. 1,20,000 செலவிடப்படுகிறது. உள்ளாட்சி மன்றம் மற்றும் தனியார் உயர்நிலைப்பள்ளிகள் கட்டடச் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 72,000 இதில் எது குறைவோ அது என்ற அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் ஆய்வுக் கூட கட்டிட மானியம் வழங்கப்படுகிறது.

3. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் சோதனைகளை நடத்திக் காட்ட உதவும் வண்ணம் கல்வி மாவட்டங்கள் 51-ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வண்டி செயல்பட்டு வருகிறது.

[1984 மார்ச் 27

4. மாநில அளவில் ஆண்டுதோறும் நடத்தும் அறிவியல் கண்காட்சிகள் ஆண்டுதோறும் வெவ்வேறு மாவட்ட தலைமையிடங்களில் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் அறிவியல் திறனை ஊக்குவிப்பதும் அறிவியல் பயிற்றுந்தரத்தினை மேம்படுத்துவதும் இக்கண்காட்சிகளின் குறிக்கோளாகும்.

5. தென் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், மற்றும் தமிழ்நாட்டுக்கும், பாண்டிச்சேரிக்கும் ''தென் இந்திய அறிவியல் கண்காட்சி'' ஒன்றை பெங்களூரிலுள்ள விசுவேசுவரய்யா தொழில் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகம் ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. 1980-லிருந்து இக்கண்காட்சியில் தமிழகப் பள்ளிகளும் கலந்து கொள்கின்றன. சென்னையில் 1983 சனவரியில் நடந்த இக்கண்காட்சியில் தமிழ் நாட்டுப் பள்ளிகள் மிகுந்த எண்ணிக்கையில் பரிசுகள் பெற்றதால், ''சுழல்கோப்பை'' தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது. 1984 ஆம் ஆண்டுக்கான கண்காட்சி கேரளத்தில் எர்ணாகுளத்தில் 1984 சனவரியில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முக்கியமான கேடயங்களையும் பரிசுகளையும் தட்டிச் சென்று பெருமை பெற்றது. கேடயங்கள் ஐந்தில் நான்கை தமிழகப் பள்ளிகள் காட்சிக்கு வைத்திருந்த அறிவியல் காட்சிப் பொருள்கள் பெற்றன. தமிழ்நாடு பெற்ற நான்கு கேடயங்களில் மூன்றை தருமபுரியில் உள்ள அரசு ஔவையார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றது. 1983-ல் தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வழங்கிய ''தமிழக முதல்வர் வெள்ளிக் கேடயம்'' கேரளா அரசு நிறுவிய கேடயம்; ''சர் எம். விசுவேசுரய்யா கேடயம்'' ஆகிய மூன்றுமே தருமபுரி பள்ளி பெற்றவையாகும். மதுரையில் உள்ள புனித மேரி மேல்நிலைப்பள்ளி, ''சர். சி.வி. இராமன் கேடயத்தை'' பெற்றது. தமிழக மாணவர்கள் நால்வர் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பெற்றனர். 19 மாணவர்கள் சிறப்புப் பரிசு பெற்றனர். நமது மாநில ஆசிரியர்கள் மூவரும் பரிசுகள் பெற்றனர். நமது பள்ளிகள் கண்காட்சிக்கு வைத்த அறிவியல் பொருட்களையும், நமது மாணவர்களையும் அனைவரும் வெகுவாகப் பாராட்டினர்.

6. மைய அரசுக் கல்வி அமைச்சகம் சென்னையில் கல்வித் திரைபடங்களுக்கான படநிலையம் ஒன்று கட்ட ரூ. 40 இலட்சம் மானியம் தர கொள்கை அளவில் இசைந்துள்ளது. வீடியோ நிழற்படக் காமிராக்களும் அதனோடு இணைந்த கருவிகளும் வாங்க அவ்வரசினர் ஏற்கனவே ரூ. 5 இலட்சத்துக்கு மேல் மானியம் வழங்கியுள்ளனர்.



1984 மார்ச் 27]

உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள்.

1984-85 வரவு-செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்கான நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு:

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிட மானியம். | 13 |
| அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள்: | |
| சிறு பணிகள் .. .. .. | 102 |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1984-85-ல் நிதி ஒதுக்கம் (அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் உட்பட). | 149 |
| வெள்ளம் முதலியவற்றால் சேதமாகும் கட்டிடங்களின் மராமத்துப் பணிக்காக. | 5 |
| மொத்தம் .. | 269 |

8. பெண்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கழிவறை வசதிகள் செய்வதற்கான ஒரு திட்டம் மொத்தம் ரூ. 5 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. இதில் ரூ. 3.25 கோடிக்கு 1982-83, 1983-84 ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டது. 1984-85-ல் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேற்குறித்த சிறு பணிகளுக்கான நிதி ஒதுக்கமாகிய ரூ. 1.02 கோடியில் இந்த ரூ. 1 கோடியும் அடங்கியுள்ளது).

கல்விச் சலுகைகள், படிப்பு உதவித்தொகைகள் மற்றும் இதர ஊக்குவிப்புப் பணிகள் :

9. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1—12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் இலவசமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்புப் படிப்பு உதவித் தொகைகளையும் இதர வசதிகளையும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். அதே போன்ற வசதியை பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர்.

கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தைப் பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. இம் மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்குப் புதிதாகப் படிப்பு உதவித் தொகைகள் இத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. ஒரு முறை உதவித் தொகையினைப் பெற்ற மாணவர் மேல்நிலைக் கல்வி உட்பட பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையினைப் பெறுவர்.

10. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 500 உயர் நிலைப் பள்ளிகளில் 6—10 வகுப்புகளிலும், 300 மேல்நிலை பள்ளிகளில் 11—12 வகுப்புகளிலும் செயல்பட்டு வருகிறது.

(iv) பள்ளிப் பாடங்கள், பாடத்திட்டம், பாடநூல்கள்.

வேலை வாய்ப்பைப் பெறத் தக்க பயிற்சி வாய்ந்த இளைஞர்களை உருவாக்குவதற்காக கல்விமுறை சீரமைக்கப்பட வேண்டும் என்பது குறித்து அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது. கல்வி முடிந்தபின் பொருத்தமான வாழ்க்கைத் தொழிலை அல்லது சுயவேலை வாய்ப்பை தேடிக்கொள்ளத் தேவைப்படும் திறமைகளை மாணவ-மாணவியருக்குத் தருவதாக கல்வி அமையவேண்டும். இதற்கிணங்க பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளையும் வாழ்க்கைத் தொழிலுக்குகந்ததாக ஆக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தந்த வட்டாரங்களுக்கும் பகுதிகளுக்கும் உகந்த வேலைவாய்ப்புகளுக்குத் தக்க பயிற்சிகளைப் படிக்கும் பொழுதே பெறத்தக்க வகையில் கல்வியின் வெவ்வேறு நிலைகளிலும் பொருத்தமான திறன்களைத் தரக்கூடியதாக கல்விமுறையை மாற்றியமைக்க நிதித் தேவை பெருமளவில் இருப்பதால் இப் பணிக்கு அரசு எட்டாவது நிதிக்குழுவிடம் நிதி உதவி கேட்டுள்ளது. பாடத் திட்டத்தைத் தக்கவாறு சீரமைத்து வலுப்படுத்துவது உட்பட இதற்கான விரிவான செயல் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. 1985-லிருந்து படிப்படியாக செயலுக்குக் கொண்டுவருவதற்காக அவ்வறிக்கை மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

2. தற்பொழுது 1—12 வகுப்புகளில் கற்றுத் தரும் பாடங்கள் பாடத் திட்டம், பாட நூல்கள் ஆகியவற்றை [illegible] சொன்ன புதிய கல்வித் திட்டத்தின் கோட்பாடுகளுக்கு திருத்தியமைக்க அரசு குழுக்களை அமைத்துள்ளது.



எழுதப்பட்ட
3. தற்பொழுதுள்ள பாடத்திட்டத்தின்படி
புதிய வடிவங்களைத் தமிழ்
பள்ளிப் பாடப்புத்தகங்களின்
நாட்டுப் பாட நூல் நிறுவனம் பின்வரும் திட்டப்படி வெளி
யிட்டு வருகிறது :—

பாடபுத்தகங்களின் புதிய வடிவங்கள் அமுலுக்குவரும் வகுப்புகள்:

| ஆண்டு. (1) | கணிதம். (2) | புவியியல். (3) | அறிவியல். (4) | வரலாறு. (5) |
|---|---|---|---|---|
| 1980—81 .. | 1—3 | .. | .. | .. |
| 1981—82 .. | 4, 7, 9 | 4, 6 | 3, 4, 6 | 3, 4, 6 |
| 1982—83 .. | 5, 8, 10 | 5, 7, 9 | 5, 7, 9 | 5, 7, 9 |
| 1983—84 .. | .. | 8, 10 | 8, 10 | 8, 10 |

| ஆண்டு. (1) | ஆங்கிலம். (6) | தமிழ். (7) | ஆங்கிலத் துணைப் பாடம். (8) | தமிழ்த் துணைப் பாடம். (9) | தமிழ் இலக்கணம். (10) |
|---|---|---|---|---|---|
| 1980—81 .. | .. | .. | .. | .. | .. |
| 1981—82 .. | 3 | 1—3 | .. | 9 | .. |
| 1982—83 .. | 4, 6 | 4, 6 | 6 | 6 | .. |
| 1983—84 .. | 5, 7, 9 | 5, 7, 9 | 7, 9 | 7 | 9 |
| 1984—85 .. | 8, 10 | 8,10 | 8 | 8 | 8, 10 |

2. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிடும் பாட
நூல்கள் மாவட்ட மற்றும் வட்ட கூட்டுறவுச் சங்கங்கள் 54-ன்
மூலமாக மாநிலம் முழுவதும் 120 விநியோக மையங்களின் வாயி
லாக விநியோகிக்கப்படுகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்களால்
நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக இப்
பாட நூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில்
இந்நிறுவனம் தனது வெளியீடுகளைத் தானே நேரடியாக 101
சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக விற்பனை செய்கிறது.
இந்நிறுவனம் 1984—85-ல் ரூ. 6 கோடி மதிப்புள்ள பாட நூல்
களை வெளியிடும்.

நோட்டுப் புத்தகங்கள் :

3. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத்
தாளைக்கொண்டு, நோட்டுப்புத்தகங்களைத் தயாரித்து விநி
யோகிக்கும் பணியையும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே
செய்து வருகிறது. 1979–80 முதல் 1982–83 முடிய இவ்வாறு
விற்பனை செய்யப்பட்ட மலிவு விலை நோட்டுப் புத்தகங்களின்
மதிப்பு ரூ. 10 கோடிக்கும் அதிகமாகும். மைய அரசு மலிவு
விலைத்தாள் ஒதுக்கீடு செய்வது 1982–83-ல் நிறுத்தி வைக்கப்
பட்டது. மலிவு விலைத்தாள் ஒதுக்கீட்டை 1—4—1983 முதல்
மீண்டும் மைய அரசு செய்து வருகிற போதிலும் ஒதுக்கீடு செய்
யும் அளவுக்கு தாளை காகித ஆலைகள் தருவதில்லையாகையால்
கிட்டும் மலிவு விலைத்தாள் அளவுக்கு நோட்டுப் புத்தகங்கள்
தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் :

4. பள்ளிகளுக்குத் தரமிக்க பாடநூல்களை வெளியிடுதல்,
நோட்டுப் புத்தகங்க்ளைத் தயாரித்து விநியோகித்தல் ஆகிய
பொறுப்பு மிக்க பணிகளை ஆற்றி வருவதுடன் தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம் மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்காக வேறு பல
வகைகளிலும் பணியாற்றி வருகிறது. அப்பணிகளில் சில
1—3 வகுப்புகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவச
மாகப் பாட நூல்களை வழங்குதல் ; அரசு உயர்நிலைப்
பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதி வழங்குதல்; பள்ளி
சாராக் கல்விக்கான புத்தகங்களை வெளியிடுதல்; கல்லூரிப் பாட
நூல்களைத் தமிழில் வெளியிடுதல்; தமிழ் வளர்ச்சிக்கான பல்
வேறு நூல்களை வெளியிடுதல்; யாழ்ப்பாணம், கொழும்பு முத
லிய இடங்களில் நூலகங்களுக்கு தமிழ் நூல்கள் வழங்குதல்
முதலியனவாகும். இவை பற்றிய விரிவான விவரங்கள் அந்
தந்த அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன. இந்நிறுவனம்,
தனது நிதி வளத்திலிருந்து ரூ. 1.84 கோடி மதிப்பீட்டில்
நுங்கம்பாக்கம், கல்லூரி சாலையிலுள்ள கல்வித் துறை இயக்
கங்கள் வளாகத்தில் அலுவலகக் கட்டடம் ஒன்றைக் கட்டிவரு
கிறது. இக் கட்டிடத்தின் ஒரு பகுதி ஏற்கனவே கட்டி முடிக்
கப்பட்டு விட்டது. அடுத்த பகுதி 1984 ஜூன் மாதத்திற்குள்
கட்டி முடிக்கப்படும். இரண்டாவது பகுதி கட்டி முடித்த
வுடன் அது பல்வேறு அரசுத் துறைகளுக்கும், அரசு நிறுவன
களுக்கும் வாடகைக்கு விடப்படும்.

(V) ஆசிரியர் பயிற்சி.

1983–84-ல் ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும்
35 மாணவர்கள் இடைநிலை (செகண்டரி கிரேடு). ஆசிரியர்
பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.



2. இளநிலை ஆசிரியர்கள் (ஹையர் கிரேடு) இடைநிலை
(செகண்டரி கிரேடு) தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான
ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வி
யாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் நடத்திவரும் 5 மாத அஞ்சல்—
வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சியில் இது வரை 25,000
ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் இப்
பொழுது ஆண்டு தோறும் 10,000 பேர் பயன் பெறுகின்றனர்.

3. ஆங்கில மொழிப் பயிற்றுவிப்பு மேம்பாட்டிற்கான 10
மையங்கள் 1983-84-ல் 6—8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத்
தரும் ஆசிரியர்கள் 3,150 பேருக்கு ஆங்கிலம் கற்பித்தலில் 3 வார
பயிற்சியும், 9—10 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத்தரும் ஆசிரி
யர்கள் 1,350 பேருக்கு 4 வார பயிற்சியும் நடத்தின.

4. பெங்களூரிலுள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்தை
நடத்த இவ்வரசு ஆண்டுதோறும் ரூ. 4 இலட்சம் அளவுக்கு
நிதி உதவி செய்கிறது. 1983-84-ல் உயர் நிலை மற்றும் மேல்
நிலைப் பள்ளி ஆங்கில ஆசிரியர்கள் 47 பேர் அந்நிறுவனத்தில்
4 மாத பயிற்சி பெற்றனர்.

(vi) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்

பள்ளிக் கல்வித் துறையின் கல்வித்தர வளர்ச்சிப் பிரிவாகச்
செயல்பட்டு வரும் தமிழ் நாடு கல்வியாராய்ச்சி-பயிற்சி நிறுவனம்
தொடக்கப்பள்ளி முதல் மேல் நிலைப் பள்ளி முடிய அனைத்து
நிலை ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு கருத்
தரங்குகள், பணிக்களரிகள், புத்தறிவுப் பயிற்சிகள் ஆகியவற்றை
நடத்தி வருகிறது. இளநிலை ஆசிரியர்களுக்கான அஞ்சல்-வழி
மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சி ; மேல் நிலைப் பள்ளி வகுப்பு
களில் உள்ள '' உட்படுத்தப்பட்ட '' ஆசிரியர்களுக்கான 10 மாத
சான்றிதழ் வகுப்பு ஆகியவையும் இந் நிறுவனம் நடத்தும் பயிற்சி
களில் அடங்கும். இந்நிறுவனம் ஆசிரியர்களுக்காக மேலும் பல
பயிற்சித் திட்டங்களை நடத்த 1984-85-ல் ரூ. 4 இலட்சம் நிதி
ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்
னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் இந்நிறுவனம்
செயற்படுத்தி வருகிறது :—

| திட்டம். | செயற்படுத்தப்படும் இடங்கள். |
| --- | --- |
| (1) தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல். | 130 தொடக்கப் பள்ளிகள். |

| | | |
|---|---|---|
| (ii) | சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி —35 வயது முடிய அனைவருக்கும் அவரவருக்கு இணையான கல்வி அளித்தல். | பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் ஐந்து சமுதாய மையங்கள். |
| (iii) | தொடக்கக் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்குதல் (பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட 9—14 வயது தொகுதியினருக்கு பள்ளி சாராக் கல்வி முறையை உருவாக்குதல்). | 74 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்.. |
| (iv) | இளஞ்சிறார் கல்வி .. | இராமநாதபுரம் மாவட்டம் காரியாபட்டி வட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள 61 இளஞ்சிறார் பள்ளிகள். |

மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி :

3. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ''ஐக்கிய நாடுகள் நிதி'' (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு 1980 நவம்பர் முதல் தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதற்கான மூன்றாண்டுத் திட்டம் ஒன்றை தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. மாநில அரசும் தன் பணத்திலிருந்து இத்திட்டத்திற்காக அம்மூன்றாண்டு காலத்தில் ரூ. 3 இலட்சம் அளவில் செலவிடுகிறது.

4. சென்னையிலும், வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன் பெறுவதற்கான தொடர் கல்வி மையங்களை கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் நடத்தி வருகிறது. தொடக்க கல்வி ஆசிரியர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி 6—10 வகுப்புகளில் தமிழ் கற்றுத்தரும் ஆசிரியர்கள் திறனை வளர்க்க அஞ்சல் மற்றும் வானொலி வழிப்பயிற்சி, ஆகியவற்றையும் நடத்தி வருகிறது.

அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி :

5. உயர் நிலைப் பள்ளி நிலையில், பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு, அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி (Open School) 1984-85 முதல் மாநில கல்வியாராச்சி பயிற்சி நிறுவனம் மூலம் நடத்தப்படும். ஏற்கெனவே 8-வது வகுப்பு தேறி 15 வயது நிறைந்தவர்கள் இதன் மூலம் பயன் பெறலாம். முதலில் 2,500 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர். அஞ்சல் வழிப்பயிற்சியுடன் நேரடித் தொடர்புக்கும் இப்பள்ளியில் வகை செய்யப்படும்.



(vii) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்களின் நலன்.

கடந்த சில ஆண்டுகளில் ஆசிரியர்கள் பெற்ற நன்மைகளில் முக்கியமானவை வருமாறு—

(i) ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டது ;

(ii) இளநிலை ஆசிரியர்களை, இடைநிலை ஆசிரியர்களாக உயர்த்த, அஞ்சல்-வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சி தொடங்கப்பட்டது.

(iii) இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு அவரவர் ஊதிய விகிதத்தில் 1—6—1981 முதல் ஓர் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது.

(iv) இளநிலைத் தகுதி பெறும் இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதம் தரப்படுவது மற்றும் பி.டி. தகுதி பெறும் நடுநிலைப் பள்ளி (இடைநிலைத்தர) தலைமை ஆசிரியர்களுக்கு பி.டி. சம்பள விகிதம் தரப்படுவது.

(v) நடுநிலைப் பள்ளிகளிலுள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளைப் படிப்படியாக முழு நேரப் பதவிகளாக உயர்த்துதல் ;

(vi) இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் அனைவருக்கும் 1—1—1981 முதல் முதனிலைத் தமிழாசிரியர்களாகத் தர உயர்வு.

(vii) தத்தம் நிலையில் 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1—6—1981 முதல், இளநிலை, இடைநிலை ஆசிரியர்களுக்கும், 1982-83 முதல் பி. எட்., தர ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டது ;

(viii) அனைத்து ஆசிரியர்களுக்கும் 1982-83-ஆம் ஆண்டிலிருந்து ஈட்டிய விடுப்பு 3 நாட்களிலிருந்து 10 நாட்களாக அதிகரிக்கப்பட்டது.

(ix) உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியரும், ஓர் இளநிலை உதவியாளரும் விடுமுறையல்லாத பணியைச் சார்ந்தவராக அறிவிக்கப்பட்டது.

(x) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு பல்வேறு வகை கடன்கள், முன் பணங்கள் ஆகியவை விரிவாக்கப்பட்டன.

[1984 மார்ச் 27

ஆசிரியர்கள் நலக்குழு :

2. ஆசிரியர்களது குறைகளை அவ்வப்போது உடனுக்குடன் உரிய மட்டத்தில் தீர்த்து வைக்கும் பொருட்டு, கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில நிலைகளில் '' ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் குழுக்களை'' அரசு அமைத்துள்ளது. இக்குழுக்களில் அதிகாரிகளும் அங்கீகாரம் பெற்ற ஆசிரியர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளும் உள்ளனர்.

தனியார் பள்ளிகள் :

3. தனியார் நிருவாகத்தின்கீழ் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பிற்காக அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மேல் முறையீட்டின்பேரில் மீண்டும் பணியில் சேர்க்கப்பட ஆணையிடப்படுகின்ற தனியார் பள்ளி ஆசிரியர்களை நிருவாகங்கள் மீண்டும் பணியில் எடுத்துக் கொள்ள வகை செய்தல் ; தனியார் பள்ளிகளில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பெற்ற ஆசிரியர் இன்னலுக்குட்படுத்தப் படாமல் தடுத்தல் முதலிய நடவடிக்கைகளும் இதில் அடங்கும். அரசு ஏற்கெனவே அமைத்துள்ள வல்லுனர் குழுவின் அறிக்கையை பெற்றபின், தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம் 1973 மற்றும் அச் சட்டத்தின் கீழ் வகுத்த விதிகள் 1974 இரண்டிலும் விரிவான திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

4. சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளைத் தவிர பிற தனியார் பள்ளிகளில் நியமனங்கள் அனைத்தும் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மூலமே செய்யப்பட வேண்டும். மேலும் அந் நியமனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 விழுக்காடும் பிற்பட்டவர்களுக்கு 50 விழுக்காடும் இட ஒதுக்கீடும் செய்யப்பட வேண்டும்.

5. தனியார் பள்ளி ஆசிரியர்களும் பிற பணியாளர்களும் பணியிலிருக்கும் பொழுதே இறந்து அவர்கள் குடும்பங்கள் வறுமை நிலையிலிருந்தால் அவர்கள் மகன்/மகள்/மனைவி கணவன் ஆகியோருக்கு கருணை அடிப்படையில் (வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி) தனியார் பள்ளிகளில் நியமனம் செய்து கொள்ளும் சலுகை அண்மையில் தரப்பட்டுள்ளது.

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி :

6. ஆசிரியர்களும், அவர்களது குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால், வாடும்பொழுது நிதி உதவி செய்யவும், அவர்களது குழந்தைகளுக்கு மேற்படிப்புக்கான உதவித் தொகைகளை அதற்கான விதிமுறைகளுக்குட்பட்டு அளிப்பதற்கும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.



1984 மார்ச் 27]

ஆசிரியர்களுக்கான விருதுகள் :

7. பள்ளியாசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 1982—83-ஆம் ஆண்டுக்கு 207 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் எட்டு பேரும் உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஐந்து பேரும் மைய அரசிடமிருந்து 1983-ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர்.

iii. மேல் நிலைப் பள்ளிக் கல்வி.

1983-84-ல் இம்மாநிலத்தில் செயல்பட்டு வந்த 1,370 மேல் நிலைப் பள்ளிகளில் மேல் நிலை வகுப்புகளில் பயின்று வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு (மைய அரசின் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றுடன் இணைந்த 57 மேல் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை மேற்கண்ட 1,370 பள்ளிகள் என்ற எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை) :

| | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பொதுப் பாடங்கள் .. | 146,165 | 99,069 | 245,234 |
| தொழிற் பாடங்கள் .. | 37,706 | 19,123 | 56,829 |
| மொத்தம் .. | 183,871 | 118,192 | 302,063 |

'' மதிப்பீடு மற்றும் திட்டச் செயற்பாடு ஆய்வு '' இயக்குநர் அண்மையில் மேல் நிலைப் பள்ளிக் கல்வியை விரிவாக ஆய்வு செய்து அனுப்பியுள்ள அறிக்கையில் உள்ள அறிவுரைகளின் அடிப்படையில் அக்கல்வியை மேலும் விரிவாக்குவது குறித்து நிர்ணயிக்கத்தக்க வரன்முறையினை அரசு முடிவு செய்ய இருக்கிறது.

2. 1978-79-ல் மேல் நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல், ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவையில் பெரும்பகுதி, மேல் நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பதவிக்கு முழுத்தகுதி பெற்ற உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல் நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம் செய்தும், முதுகலைப் பட்டத் தகுதி பெற்றிராத உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல் நிலை வகுப்புகள் நடத்த '' உட்படுத்தியும் '' பூர்த்தி செய்யப்பட்டது.

அவ்வாண்டும் அதற்குப் பின்னர் உள்ள ஆண்டுகளுக்கும் கூடுதலாகத் தேவைப்பட்ட மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இதுவரை மொத்தம் 7,040 மேல் நிலைப் பள்ளி ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1984–85-ல் மேலும் 75 பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இவற்றோடு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் 250-ம் ஆய்வுக் கூட உதவியாளர் பணியிடங்கள் 900-ம் முன் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்கான பணி விதிகள் ஏப்ரல் 1981-ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு மேற் படிப்புத் தகுதி அடைய போதிய காலம் அனுமதிக்கப் பட்டுள்ளது. அதுவரை இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் ரூ.40 சிறப்பூதியம் பெற்று வருகின்றனர். ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்களுக்கு மாநிலக் கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் மூலமாக பத்து மாத ''பட்ட மேற்படிப்புச் சான்றிதழ்'' வகுப்பை நடத்த அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது. இவ்வகுப்பில் தேறிவருபவர் அந்நிறுவனத்திடம் சான்றிதழ் பெற்று அவரவருக்குரிய பாடத்தை மேல்நிலை வகுப்புகளில் நடத்த முழுத்தகுதி உடையவர்களாகக் கருதப்பட்டு மேல்நிலை வகுப்பு ஆசிரியர்களுடைய சம்பள விகிதத்தை அடையத் தகுதி பெறுவர்.

4. மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலை வகுப்புகளில் அறிவியல் பாடங்களின் செயல்முறை வகுப்புகளை நடத்த அறிவியல் ஆசிரியர்களுக்கு உதவியாக 'மானிட்டர்'களை நியமிக்க 1983–84-ல் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மானிட்டருக்கும் மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் மதிப்பூதியம் தரப்படும். ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் 11-ம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு மானிட்டரும் 12-ம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு மானிட்டரும் என்றவாறு மொத்தம் அனைத்துப் பள்ளிகளிலும் ஒவ்வோராண்டும் ஏறத்தாழ 7,742 அறிவியல் மானிட்டர்கள் இருப்பர்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் :

5. மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற்பாடங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டின் சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டினைப் பெற்றுள்ளது. 1983–84-ல் மொத்தம் 940 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வாறு கற்பிக்கப்



பட்ட தொழிற்பாடங்களின் மொத்த எண்ணிக்கை 1,432 ஆகும். 1983–84-ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 3.02 இலட்சம் மாணவர்களில் 56,829 பேர் (அதாவது சுமார் 19 சத விகிதத்தினர்) பின்வரும் விவரப்படி தொழிற்பாடங்களைப் பயின்று வந்தனர் :—

| (1) | மாணவர். (2) | மாணவியர். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| தொழிற் பாடவகை— | | | |
| 1. வேளாண்மை .. | 3,890 | 331 | 4,221 |
| 2. மனையியல் .. | 89 | 2,055 | 2,144 |
| 3. வாணிகத்துறை .. | 17,784 | 13,492 | 31,276 |
| 4. பொறியியலும், தொழில் நுட்பவியலும். | 13,579 | 170 | 13,749 |
| 5. உடல் நலம் .. | 2,235 | 2,484 | 4,719 |
| 6. பலவகை .. | 129 | 591 | 720 |
| மொத்தம் .. | 37,706 | 19,123 | 56,829 |

6. முன்னர் உயர்நிலைப் பள்ளிகளின் இருமுறை பாடங்களை கற்பித்து வந்தவர்களான 491 முழு நேர தொழிற்பாட ஆசிரியர்களும் ; அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுவோரில் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும், பிற இடங்களில் 'வெளி நபர்களும் ஆக சுமார் 4,300 பகுதிநேர ஆசிரியர்களும் (மாதம் ரூ. 150 ஊதியத்தில்) தொழிற்பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். தொழிற்பாட மானிட்டர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

7. மேல்நிலைப் பள்ளித் தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், அவர்கள் உயர்கல்வியும் தொடர்கல்வியும் பெற வழி செய்தல் போன்ற நோக்கங்களுடன் மேல்நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள் பாடத் திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்கான அரசு அமைத்த குழந்தைசாமி குழுவின் அறிக்கைப் படிகள் ஏற்கனவே சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. அவ்வறிக்கை ஆய்வில் உள்ளது. அதில் உள்ள பரிந்துரைகள் படிப்படியாக அமுலாக்க எடுத்துக்கொள்ளப்படும்.

8. மேல்நிலைப்பள்ளி தொழிற் பாடங்களைப் பயின்று தேறி வெளிவரும் மாணவர்களுக்கு 6 மாத சிறப்புப் பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட 19 தொழில்களில் ஏதாவது ஒன்றில் அவ்வாறு மொத்தம் 1,900 பேருக்கு '' தொழில் பழகு பயிற்சிக் குழு ''வின் மூலமாக பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 200 ஊதியம் தரப்படும்.

கட்டடங்களும், தளவாடங்களும் :

9. 1978–79 முதல் 1981–82 முடிய நான்கு ஆண்டுகளில் தொடங்கப்பட்ட 631 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக் கூடமும் கட்ட பெருந்தொகையான ரூ. 12 கோடிக்கு அரசு ஏற்பளித்தது. 544 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

10. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் தேவையான ஆய்வுக் கூடத் தளவாடங்கள் வகையில் மொத்தம் ரூ. 6 கோடிக்கு மேல் செலவிடப்படுகிறது. சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ் நாடு அரசு நிறுவனமான தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலமாக இத்தளவாடங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் மரச் சாமான்கள் வாங்க ரூ. 24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேல்நிலைப்பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்த அரசு இதுவரை ரூ. 43 இலட்சம் அளவில் செலவிட்டுள்ளது.

11. சென்னையில் இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தைச் சுற்றி 50 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்த சுமார் 50 மேல்நிலைப்பள்ளிகளில் 1984–85-ல் மின்கணிப்புப் பொறி பற்றிய பாடம் புகுத்தப்படும். அனைத்திந்தியாவிலும் மைய அரசு மின்னணுவியல் துறை மைய அரசுக்கல்வி அமைச்சகத்தோடு இணைந்து அமுல்படுத்தும் திட்டத்தின் கீழ் இப்பாடம் பள்ளிகளில் தொடங்கப்படும்.

12. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல்நிலைப்பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை அத்தகைய பள்ளிகள் 525 இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளன.

13. கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக் கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் நோக்குடன் '' கல்லூரி இணையங்களும் '' '' பாலி டெக்னிக் இணையங்களும் '' இயன்ற இடங்களில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.



## IV. அரசுத் தேர்வுகள்.

அரசுத் தேர்வுத்துறையானது பொதுக் கல்வி சார்ந்த தேர்வுகளும், தொழிலியல் கல்வி சார்ந்த தேர்வுகளுமாக மொத்தம் 41 தேர்வுகளை நடத்தும் பொறுப்பை வகித்து வருகிறது. பொதுக்கல்வி சார்ந்த தேர்வுகளில் முக்கியமானவை எஸ். எஸ். எல். சி., யும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுமாகும். தொழிலியல் சார்ந்த தேர்வுகள் :— ஆசிரியர் பயிற்சி பட்டயத் தேர்வு ; தையல் வேலை மற்றும் ஆடை தைத்தல் ; ஓவியம், இசை, அச்சு வேலை முதலிய பாடங்களில் அரசு தொழிற் கல்வித் தேர்வுகள் ; ஹோமியோபதி மருத்துவம் அறுவை சிகிச்சை பட்டயத் தேர்வு ; சங்கீத வித்வான் தேர்வு ; மொழி ஆசிரியர் பயிற்சித் தேர்வு முதலியவையாகும். இத்துறைக்கு மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மூன்று வட்டார அலுவலகங்கள் இப்பொழுது செயல்பட்டு வருகின்றன. 1984–85-ல் இத்துறைக்கு நான்காவதாக ஒரு வட்டார அலுவலகம் சென்னையில் அமைக்கப்படும்.

2. இத்துறை நடத்தும் முக்கியமான தேர்வுகளை எழுதும் மாணவர் எண்ணிக்கை வருமாறு :—

| தேர்வுகள். | 1983 மார்ச்/ஏப்ரல். தேர்வு எழுதியோர். | 1983 மார்ச்/ஏப்ரல். தேறியோர் விழுக்காடு. | 1983 செப்டம்பர்/அக்டோபர். தேர்வு எழுதியோர். | 1984 மார்ச்/ஏப்ரல் தேர்வு எழுதுவோர் (தோராயமாக). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| எஸ்.எஸ்.எல்.சி.— மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட). | 3,52,100 | * | 1,28,000 | 3,80,000 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுபவர்கள். | 2,76,598 | 51.4 | .. | .. |
| ஆங்கிலோ-இந்தியன் | 2,667 | 90 | 383 | 3,040 |
| மெட்ரிக்குலேஷன் | 3,436 | 91 | 380 | 4,566 |

மேல்நிலைப் பள்ளித் தேர்வு—

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட). | 1,75,092 | * | 51,500 | 1,85,000 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர் | 1,41,692 | 66 | .. | .. |

* பகுதி முறைத்தேர்வு காரணமாக மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) தேர்வு எழுதுபவர்களின் தேறியோர் விழுக்காடு கணக்கிட்டுத்தர இயலவில்லை.

தேர்வு மையங்கள்

| | செப்டம்பர்/ அக்டோபர் 1983. | மார்ச்/ஏப்ரல் 1984. |
|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. .. .. | 290 | 1,300 |
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு .. | 162 | 740 |

3. மேல் நிலைப் பள்ளித் தேர்வை பொதுக் கல்விப் பாடங்கள் 27-க்கும் தொழிற்கல்வி பாடங்கள் 66-க்கும் நடத்த வேண்டியிருக்கிறது. பல்வேறு பாடங்களின் தொகுப்புகள் 262 ஆகும். தொழிற்பாடத் தேர்வுகள் செயல்முறைக்கு முக்கியத்துவம் தரும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

4. பதினான்கு வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளும் வகையில் நடத்தப் பெறும் தொடக்கப் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வு (ஈ. எஸ். எல். சி.) ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப் பெறுகிறது. 1983 டிசம்பரில் இத்தேர்வில் சுமார் 4,329 பேர் கலந்து கொண்டனர்.

5. தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதுபவர்கள் நுழைவுச் சீட்டுகளை குறிப்பிட்ட தேர்வு மையங்கள் மூலமாக வழங்கும் புதிய முறை நன்முறையில் செயல்பட்டது. எனவே அதுபோல அவர்களின் தேர்வுச் சான்றிதழ்களும் (1983 அக்டோபர் தேர்வு முதல்) அவ்வாறே அம்மையங்கள் மூலமாகவே வழங்கப்படுகின்றன. முன்னர் இச்சான்றிதழ்கள் அவர்களுக்குத் தனித் தனியே பதிவஞ்சலில் அனுப்பப்பட்டு வந்தது. புதிய முறையில் அவர்கள் காலத்தாழ்வின்றி சான்றிதழ்களைப் பெற முடிகிறது.



6. எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து தேர்வு எழுதி இதுவரை வெற்றி பெறாமல் இருந்த முன்னாள் கிராம அதிகாரிகள் சிறப்பு சலுகையாக 1984 மார்ச் மாத எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை தனிப்பட்ட முறையில் எழுதுவதற்கான மனுக்களை 10-2-1984 வரை அனுப்பி வைக்க அனுமதிக்கப்பட்டதுடன், தேர்வுக் கட்டணத்தை பணவிடைத்தாள் மூலம் அனுப்பவும் அனுமதிக்கப்பட்டனர். இச்சலுகைகள் காரணமாக அத்தகைய முன்னாள் கிராம அதிகாரிகள் 1,200-க்கு மேற்பட்டவர்கள் 1984 மார்ச் மாதம் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதவிருக்கின்றனர்.

V. வயது வந்தோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்.

வயது வந்தோர் கல்விக்கும் பள்ளி சாராக்கல்விக்கும் 1984-85 நிதி நிலை அறிக்கையில் ரூ. 3.44 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வயது வந்தோர் கல்வி.

எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் தமிழ் நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின்வருமாறு இருந்து வருகின்றது :—

| சென்ஸஸ் ஆண்டு. | தமிழ்நாடு. | | | இந்தியா. | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1971 .. .. | 51.78 | 26.36 | 39.46 | 39.51 | 18.44 | 29.34 |
| 1981 .. .. | 57.19 | 34.12 | 45.78 | 46.74 | 24.88 | 36.17 |

தமிழ்நாட்டில் வயது வந்தோர் கல்வி கீழே விவரிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களின்கீழ் அளிக்கப்படுகிறது:—

ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவுப் பணி.

2. மைய அரசின் முழுப்பண உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் 3,900 மையங்கள் செயல்படுகின்றன. மேற்குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் 1984 மார்ச முதல் இத்திட்டம் தொடங்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே உள்ள இரண்டு அல்லது மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார். அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகளிடையேயிருந்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் வயது வந்தோர்க்கு

கல்வி புகட்டுபவர்கள், பயிற்சி பெற்று வேலை வாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறி வேலை வாய்ப்பின்றியுள்ள இளைஞர்கள், பால்வாடி ஆசிரியர்கள், சிவில்/இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் முறையான பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். இதற்காக அவர்களுக்கு வயது வந்தோர் கல்வி பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தந்த இடத்திற்கு வசதியான நேரங்களில் இவ் வயது வந்தோர் கல்வி வகுப்புகள் 10 மாத காலம் நடக்கின்றன. 12 மாவட்டங்களிலுள்ள மையங்கள் இத்தகைய 10 மாத வகுப்புகளை ஆண்டுக்கு ஒரு தொகுதியினர் வீதம் நான்கு தொகுதியினருக்கு நடத்தி முடித்துள்ளன. ஐந்தாவது தொகுதியினருக்கு வகுப்புகள் நடக்கின்றன. பெரியார் மாவட்டத்தில் இரண்டாவது தொகுதியினருக்கு எழுத்தறிவிக்கும் பணி நடந்து வருகிறது.

### மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம்.

3. இம்மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் 61-ல் 1980 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் மொத்தம் 6,100 வயது வந்தோர் கல்வி மையங்களை இவ்வரசு தன் நிதியிலிருந்து தொடங்கியது. இம்மையங்கள் நான்கு தொகுதியினருக்கு எழுத்தறிவிக்கும் பணியை முடித்து, இவற்றின் மூலம் 5.12 இலட்சம் பேர் பயன் பெற்றனர். ஐந்தாவது தொகுதியினருக்கான வகுப்புகள் 1984 மார்ச்சில் தொடங்கவிருக்கின்றன. 1-10-1983 முதல் மேலும் 54 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக, 5,400 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் பின்வரும் முன்னுரிமைப்படி 15-35 வயதுத் தொகுதியைச் சார்ந்த எழுத்தறிவு இல்லாதவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

(1) ஆதி திராவிட மகளிர்.

(2) பெண்கள் (பொதுவாக).

(3) ஆதி திராவிட ஆடவர்.

(4) பிற வகுப்பினர்.

இந்த 11,500 மையங்களுக்கும் சேர்த்து 1984-85-ல் மொத்தம் ரூ. 2.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பிற அமைப்புக்களின் எழுத்தறிவுப் பணிகள்.

4. தனியார் அமைப்புகளும் வயது வந்தோர் கல்வி மையங்களை (2,540 மையங்கள்) நடத்தி வருகின்றன. நேரு யுவ கேந்திரங்கள் 66 மையங்களையும், கல்லூரிகள் 250 மையங்களையும் நடத்தி வருகின்றன.



5. வயது வந்தோர் கல்விக்கான பல்வேறு திட்டங்களிலும் சேர்ந்து மொத்தம் அண்மை ஆண்டுகளில் எழுத்தறிவு பெற்றவர்கள் விவரம் வருமாறு :

| | ஆடவர். | மகளிர். | மொத்தம். | மொத்த எண்ணிக்கையில் சேர்ந்துள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டம் (1979 ஜூலை—1984 டிசம்பர்). | 2,46,000 | 2,56,000 | 5,02,000 | 2,35,000 |
| 2. மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம் (1980-84). | 3,94,000 | 5,89,000 | 9,83,000 | 6,06,000 |
| 3. தொண்டு நிறுவனங்கள் (1979-83) | 33,000 | 51,000 | 84,000 | 47,000 |
| 4. நேரு இளைஞர் மையங்கள் (1979-83). | 14,000 | 10,000 | 24,000 | 11,000 |
| 5. கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் (1979-83). | 28,000 | 23,000 | 51,000 | 24,000 |
| மொத்தம் .. | 7,15,000 | 9,29,000 | 16,44,000 | 9,23,000 |

மகளிரும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோரும் பெருமளவில் பயனடைந்துள்ள[illegible]
[illegible] அளிப்பதாகும்.

6. 1983 ஆம் ஆண்டின் இறுதியில் செயல்பட்டு வந்த வயது வந்தோர் கல்வி மையங்களின் மொத்த எண்ணிக்கை 17,047 ஆகும். அம்மையங்களில் பயின்று வந்தோரின் எண்ணிக்கை 5.50 இலட்சம் பேர் ஆகும். இவர்களுள் பெரும்பாலோர் அதாவது 3.55 இலட்சம் பேர் மகளிர் ஆவர். மொத்த எண்ணிக்கையாகிய அந்த 5.50 இலட்சம் பேரில், 2.94 இலட்சம் பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவராவர்.

ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள்.

7. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள், மீண்டும் பழையபடி எழுத்தறிவு அற்ற நிலைக்குப் போய் விடாமல் தடுப்பதே ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களின் நோக்கமாகும். 1983-84-ல் இத்தகைய மையங்கள் அரசுத் திட்டத்தின்கீழ் 426-ம் ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டத்தின்கீழ் 1200-ம் செயல் பட்டு வந்தன. புதிதாக எழுத்தறிவு பெறுவோர் பயனடையும் வகையில் இம் மையங்களில் தகுந்த புத்தகங்களும், செய்தித் தாள்களும் வழங்கப்படுகின்றன. மாநில அரசுத் திட்டத்தின் கீழ் 1984-85-ல் ரூ. 10 இலட்சம் செலவில் கூடுதலாக 1,000 ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள் திறக்கப்படும்.

நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்கான தொழில் சார்ந்த கல்வி.

8. நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்காக தொழில் சார்ந்த முறை சாராக் கல்வி மையங்கள் 80 ஏற்படுத்த 1983 செப்டம்பரில் ஏற்பளிக்கப்பட்டது. ஒவ்வொரு மையத்திலும் யாதானும் ஒரு தொழில் பற்றிக் கற்பிக்க, பயிற்சியாளர் ஒருவர் மாதம் ரூ. 100 ஊதியத்தில் பணி புரிவார். ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 1,000 செலவில் கருவிகள் மற்றும் உப கரணங்கள் வாங்கித் தரப்படும். 1984-85-ல் இத்தகைய மையங்கள் மேலும் 66 புதிதாகத் தொடங்கப்படும்.

தொழிலாளர் கல்வி நிலையம்.

9. இந்நிலையம் 1982 ஜூலை மாதத்தில் அமைக்கப் பட்டது. கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்த ஆளுகைக் குழு ஒன்று இந்நிலையத்தை நிருவகித்து வருகிறது. இந்நிலையம் நகர்ப்புறங்களிலும், பிற தொழில் பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய் கிறது. 1982 செப்டம்பர் முதல் 1983 செப்டம்பர் வரை பல்வேறு உபயோகமான தொழில்களில் 54 பயிற்சி வகுப்புக்களை 388 ஆடவரும், 1,168 மகளிரும் பயன்பெறும் வகையில் இந் நிலையம் நடத்தியது. மேலும் இத்தகைய பயிற்சி வகுப்புகள் 1984-85-ல் நடத்தப்பட இருக்கின்றன.



பள்ளி சாராக் கல்வி.

10. பள்ளிக்கே செல்லாதவர்களும், சென்று பின் இடையில் நின்றுவிட்டவர்களுமான 6—14 வயதுச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்ட பள்ளி சாராக் கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன. 1983-84-ல் 390 மையங்கள் செயல்பட்டு வந்தன. இம்மையங்கள் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டுகள் வேலை செய்யும், வெவ்வேறு தொகுதியைச் சார்ந்த (பள்ளியிலிருந்து இடையில் நின்று விட்ட) மாணவர்களுக்கான பத்து மாத வகுப்புக்களை இம்மையங்கள் நடத்துகின்றன. பள்ளிக் கட்டிடங்களில் இம்மையங்கள் நடைபெறுகின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புக்களை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு மாத மதிப்பூதியமாக ரூ. 50 பெறுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் ஏறத்தாழ 30 மாணவர்கள் பயிலுகின்றனர்.

11. மேலும் இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசிப் பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளிசாராக் கல்வி மையங்கள் 1981-82-ல் தொடங்கப் பட்டு நடந்து வருகின்றன. இம்மையங்களில் இடைநிலை ஆசிரியர்கள் 30 பேர் கல்வி பயிற்றுவித்து வருகின்றனர். இம் மையங்களில் பயின்று வந்த மாணவர்களில் 700 பேர் 1983-ல் டிசம்பரில் 8ஆம் வகுப்பு பொதுத் தேர்வை எழுதினர். குடியாத்தம் பகுதியில் வேலை செய்யும் சிறுவர்களுக்காக, 1984-85-ல் இத்தகைய பள்ளி சாராக் கல்வி மையங்கள் பத்து திறக்கப்படவிருக்கின்றன.

## VI. கல்லூரிக் கல்வி.

1984-85 வரவு செலவுத் திட்டத்தில் கல்லூரிக் கல்விக்கென ரூ. 43 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (பொதுக் கல்விக்கான பல்கலைக் கழகங்களுக்கு வழங்கும் மானியம், அரசுக் கல்லூரிகளுக்கான கட்டிடச் செலவு மற்றும் மாணவர்களுக்கான கடனுதவித் தொகை ஆகியவையும் இத்தொகையில் அடங்கும்) 1983-84-ல் பொதுக் கல்விக்கான கல்லூரிகளில் பின்வருமாறு இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வந்தனர்.

| (1) | | கல்லூரிகளின் எண்ணிக்கை. (2) | | மாணவர்களின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|---|---|
| கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகள் : | | | | |
| அரசினர் கல்லூரிகள் .. .. | 53 | 187 | முறையான வகுப்புகள் : | |
| தனியார் கல்லூரிகள் .. .. | 134 | | பட்டப்படிப்பு | 1,73,321 |
| | | | மேற்படிப்ப | 14,708 |
| | | | | 1,88,029 |
| | | | மாலை நேர வகுப்புகள் | 12,300 |
| பிற கல்லூரிகள் (விபரங்கள் இணைப்பு II-ல் காண்க)— | | | | |
| கல்வியியல் கல்லூரிகள் .. .. | | 23 | | 2,880 |
| இதர கல்லூரிகள் .. .. | | 27 | | 3,270 |
| | | | | 6, 150 |



1984 மார்ச் 27]

பல்கலைக் கழகங்கள் :

2. கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்கான கட்டிட வேலைகள் விரைவாக நடந்து வருகின்றன.

3. ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சிக்கான உயர்நிலை ஆய்வு மையம் ஒன்றை நிறுவுவதற்கும், புத்தறிவுப் பயிற்சிகள் மற்றும் பணிக் களரிகள் நடத்தி பாடத்திட்ட மேம்பாட்டுக்கு வகை செய்வதற்கும் 1983—84-ல் பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு திட்ட மானியம் தரப்பட்டது.

4. பாரதியார் பல்கலைக் கழகத்துக்கு 1983—84-ல் ஆற்றல் (Energy) பற்றிய ஆய்வு மையம் ஒன்றை நிறுவவும், பாடத் திட்ட மேம்பாட்டிற்கும் திட்டமானியம் தரப்பட்டது பாரதிதாசன் பல்கலைக் கழகம், பட்ட வகுப்புகள் அனைத்தையும் சீரமைத்து, மேம்படுத்தி, நவீனப்படுத்துதல், செயல்முறைப் பாடங்கள் இரண்டை புகுத்துதல், மூன்றாமாண்டு பட்டவகுப்பில் செயல் முறைப்பணியைச் சேர்த்தல் ஆகிய வளர்ச்சிப் பணிகளின் முதல் கட்டத்தை நிறைவேற்றியது. பாடத்திட்ட மேம்பாட்டுக்குழு இப் பல்கலைக் கழகத்தோடு இணைந்த கல்லூரிகளில் 1984—85-லிருந்து தொடங்கக் கூடிய வேலை/செயல் முறைப் பயிற்சியோடு இணைந்த பாடங்கள் பல குறித்துப் பரிந்துரைத்துள்ளதுடன் அவற்றுக்குள்ள பாடத்திட்டத்தையும் வகுத்துள்ளன. 1983—84-ல் பத்துக் கல்லூரிகளில் வேலை வாய்ப்புக்கு வகை செய்யும் இத்தகைய புதிய பாடங்கள் பத்து தொடங்கப்பட்டுள்ளன.

5. 1981 டிசம்பரில் மகாகவி பாரதியார் நூற்றாண்டு தொடக்க விழாவின் போது, பெண்களுக்கு உயர்கல்வி அளிக்கப்பட வேண்டுமென்ற பாரதியாரின் கொள்கைகளுக்கிணங்க, இம்மாநிலத்தில் மகளிர் பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கருதப்பட்டது. இது தொடர்பாக டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷையாவின் தலைமையில் அரசு அமைத்த வல்லுநர் குழு, மகளிருக்கு மேற்படிப்பு அளிக்கவும், ஆராய்ச்சி படிப்பைத் தொடரவும், மகளிர் தொடர்பான நலப் பணிகளுக்கு ஆலோசனை கூறவும், நெறிப்படுத்தவும், மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியது. அதன்படி இந்நோக்கங்களை நிறைவேற்ற தமிழ் நாட்டில் பெண்களுக்கு உயர் கல்வி அளிக்க கொடைக்கானல் ஊராட்சி ஒன்றிய எல்லைகளுக்குள் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இப்பல்கலைக்கழகத்திற்கு அன்னை தெரசா அவர்கள் பெயர் சூட்டப்பெற்றுள்ளது.

6. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டப்படி காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் அமைப்பது ஆய்விலுள்ளது.

7. சென்னை பல்கலைக் கழகம் தனது 125-வது ஆண்டு விழாவை 1983-ல் கொண்டாடியது. இப்பல்கலைக் கழகத்தின் விரிவுப்பணி மையங்கள் சேலத்தில் ஒன்றும், வேலூரில் ஒன்றும் தொடங்கப்பட்டன. 1984—85-ல் சேலத்தில் பட்ட மேற்படிப்பு மையம் அமைக்கப்படும். இதற்கு அரசு மானியமாக முதற்கண் ரூபாய் 5 இலட்சம் தரப்படும். சேலத்தில் பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதற்கு இந்த பட்ட மேற்படிப்பு மையம் முன்னோடியாக திகழும். இம்மையத்திற்கு பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து மானியம் கிட்டும்.

8. அண்ணாமலை பல்கலைக் கழகம் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியுடன் கட்டிவரும் மாணவர் விடுதிகள் மற்றும் நூலகம் போன்ற கட்டடப் பணிகளுக்கு மாநில அரசு இணை மானியமாக 1984—85-ல் ரூபாய் 14 இலட்சம் தரப்படும். மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அது போல் கட்டி வரும் நூலகம் மற்றும் மாணவர் விடுதிக் கட்டடங்களுக்கு இணை மானியமாக ரூ. 16 இலட்சம் தரப்படும். அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் (காந்தி கிராமத்திலுள்ள கிராமப்புற உயர்கல்வி நிலையம் உட்பட) பாரதியார் பெயரில் ஆராய்ச்சி பணியிடங்கள் நிறுவ ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் அரசு மானியமாக ரூ. 1 இலட்சம் தரப்பட்டுள்ளது.

9. தற்பொழுது இம்மாநிலத்தில் மொத்தம் 13 கல்லூரிகள் சுய ஆட்சி உரிமை பெற்றுள்ளன. அக்கல்லூரிகள் தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும், தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்குகின்றன. பொதுவாக இத்திட்டம் நன்கு செயல்பட்டு வந்துள்ளது. 1983 ஜூன்-ல் பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் மாநாடு ஒன்றில் இத்திட்டம் நல்லமுறையில் தொடர்ந்து செயல்படுவதற்கான வழிமுறைகளை ஆய்வு செய்து, மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

10. மதுரை காமராசர், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் நடத்தி வரும் அஞ்சல் முறை வகுப்புகளில் 1983—84-ல் 1,16,500 பேர் பயின்று வந்தனர். மேலும் முறையான கல்வி பெறாதவர்களுள் 21 வயது நிரம்பியவர்களுக்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகம் நடத்தி வந்த "அனைவரும் படிக்கத்தக்க பல்கலைக் கழக" வகுப்புகளில் 15,590 பேர் பயின்று வந்தனர்.

11. கல்லூரிகளின் மேம்பாட்டைத் திட்டமிட்டு நிறைவேற்றி வருவதற்காக 1984-85-ல் துணை இயக்குநர் ஒருவர், பேராசிரியர் இருவர் பிறபணியாளர்கள் ஆகியோருடன், "கல்லூரி வளர்ச்சிப் பிரிவு" ஒன்று கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில்





கல்லூரிகளில் நடக்கும் பல்வேறு
அமைக்கப்படும். பல்வேறு கல்லூரிகளில் நடக்கும் பல்வேறு
பாடங்களையும் ஒட்டு மொத்தமாக கவனித்து தேவையான
வளர்ச்சிப் பணிகளை இப்பிரிவு திட்டமிடும்.

கல்வித்தர மேம்பாடு :

12. கடந்த நால்கு ஆண்டுகளில், அரசுக் கல்லூரிகளில் புதி
தாக 61 பட்ட வகுப்புகளும், 28 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும்
தொடங்கப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டில் புதிதாகப் பட்ட
வகுப்புகள் தொடங்க ரூ. 3 இலட்சமும், மாலைநேர பட்டப்
படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 2 இலட்சமும் பட்ட மேற்
படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 2 இலட்சமும் ஒதுக்கப்
பட்டுள்ளன.

13. செயல்முறைப் பாடங்களுக்கு முக்கியத்துவம் தரும் வகை
யில் பட்ட வகுப்புகளுக்கும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கு
மான பாடத் திட்டங்களை அனைத்துப் பல்கலைக் கழகங்களும்
மாற்றியமைத்து வருகின்றன. அம்மாற்றங்களுக்கேற்ற வகை
யில் ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள் ஆகியவற்றுக்கு வசதிசெய்ய
அரசுக் கல்லூரிகளுக்கு நிதிவசதி செய்யப்படுகிறது. 1983-84-ல்
அரசுக் கல்லூரிகளுக்குக் கூடுதலாக பெஞ்சு முதலிய மரச்
சாமான்கள் வாங்க ரூ. 8 இலட்சம் ஏற்பளிக்கப்பட்டது.

14. 1980—81 முதல் 1983—84 முடிய அரசுக் கல்லூரி
களுக்கான வகுப்பறைகள், ஆய்வகங்கள் முதலிய கட்டடப் பணி
களுக்காக "பெரும்பணி"களின் கீழ் ரூ. 110 இலட்சமும்
"சிறிய பணி"களின் கீழ் ரூ. 10 இலட்சமும் செலவிடப்
பட்டுள்ளது. சிதம்பரத்தில் அண்மையில் தொடங்கப்பட்ட
அரசு கலைக்கல்லூரிக்கு ரூ. 87 இலட்சம் செலவில் நிரந்தரக்
கட்டட வேலை ஏற்பளிக்கப்படவிருக்கிறது.

15. கல்லூரி ஆசிரியர்களுடைய பயிற்றுவிக்குந் தர உயர்வுக்
காக, அவர்களை ஆராய்ச்சிப் படிப்புக்கு அனுப்புவதற்கான
மாநில அரசுத் திட்டத்தின் கீழ் 1979—80, 1980—81 ஆகிய இரு
ஆண்டுகளிலும் மொத்தம் 626 ஆசிரியர்கள் எம்.பில். படிப்புக்கு
அனுப்பப்பட்டனர். அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள
பட்டதாரி பயிற்றுநர்களும் விளக்குநர்களும் ஆண்டுதோறும் சிலர்
வீதம் எம்.ஏ., எம்.எஸ்.சி., படிப்பிற்கு அரசின் செலவில்
முகாமையில் அனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இதுவரை 120
பேர் அனுப்பப்பட்டுள்ளனர். 1984—85-ல் மேலும் 60 பேர்
அனுப்பப்படுவர். மேலும் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி
செய்து டாக்டர் (பி.எச்.டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக்
கல்லூரிப் பேராசிரியர்கள் 6 பேர் 1983—84-ல் முகாமையில்
அனுப்பப்பட்டனர். 1984—85-ல் மேலும் 6 பேர் அனுப்பப்
படுவர்.

படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப்பணமும்.

16. கல்லூரிக் கல்வித்துறை நிருவகித்து வரும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் முக்கியமானவற்றின் கீழ் பயன்பெறு வோர் விவரம் பின்வருமாறு :—

| திட்டம். | 1983-84-ல் புதிதாக தந்த படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை (மேல்நிலைப் பள்ளிகளில் தரப்பட்டவை உட்பட). | 1983-84-ல் புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை எண்ணிக்கை. | 1984-85ல் வரவு-செலவு மதிப்பீட்டில்ஒதுக்கியுள்ள தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் (ஓரளவு மைய அரசு நிதி உதவி பெறுவது). | 1,864 | 3,458 | 60 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம் (முழுவதும் மைய அரசு நிதியுதவி பெறுவது). | 1,398 | 7,177 | 32 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய மாநில அரசு படிப்புதவித் தொகை. | 70 | 136 | 3 |

17. மாநில அரசு தொடங்கியுள்ள ஒரு திட்டத்தின் கீழ் 1980-81-லிருந்து எஸ்.எஸ்.எல்.சி., ஆங்கிலோ இந்தியப்பள்ளி இறுதி வகுப்பு, மெட்ரிகுலேஷன் தேர்வுகளில் முதல்மதிப்பு எண் பெறுபவர்களுக்கும், உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கான இந்தியக் குழு மைய அரசு உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் ஆகியவற்றின் தேர்வுகளில் தமிழகத்திற்குள் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கும், அவர்கள் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு அதிகமாக இருந்தாலும் கூட படிப்புதவித் தொகைகள் வழங்கப்பெறுகின்றன. ஆண்டுக்கு 10 மாதம் வீதம் பட்ட மேற்படிப்பு வகுப்பு முடியும் வரை இவர்களுக்கு படிப்புதவித் தொகைகள் வழங்கப்படும்.



18. இராணுவப் பணியில் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு ஏற்கெனவே வழங்கப்படுவது போல முன்னாள் இராணுவ வீரர் களின் குழந்தைகளுக்கும் 1984-85-யிலிருந்து கல்விச் சலுகைகள் வழங்கப்படும். மேலும், இராணுவத்தினர் குழந்தைகளுக்கு அளிக் கப்பட்டு வந்த கல்விச் சலுகைகள் மற்றும் உதவித் தொகைகள் அண்மையில் மாலை நேரக் கல்லூரிகளில் பயிலும் மாணவர் களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

19. சுதந்திரப் போரட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு வழங் கப்பட்டு வருவது போல உதவித் தொகைகள் மற்றும் புத்தகப் படி வழங்கும் திட்டமானது, திருத்தணி மற்றும் கன்னியாகுமரி யில் நடந்த எல்லைப் போராட்டங்களில் பங்கு பெற்ற அனைத் துத் தியாகிகளின் குழந்தைகளுக்கும் அண்மையில் விரிவாக்கப்பட் டுள்ளது.

20. பட்ட வகுப்புகளிலும் அதற்கு மேலான வகுப்புகளிலும் பயிலும் ஆதி திராவிட பழங்குடி மாணவர்களுக்கு அவர்கள் பெற்றோர் ஆண்டு வருமானம் எவ்வளவாயிருப்பினும் முழுச் சம்பளச் சலுகை தரப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் துறை படிப்புதவித் தொகை கள் வழங்கி வருகிறது. இதை தவிர மேல்நிலைப் பள்ளித் தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ, 300 உதவிப்பணம் (ஒரு தடவை மட்டும்) தரப்பட்டு வருகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைகளை பிற்பட்டோர் நலத்துறை வழங்கி வருகிறது.

## கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்று மொழி.

21. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப்பணமாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது. இம்மாணவர் எண்ணிக்கை 1983-84-ல் 19,812 ஆகும். இத்திட் டத்திற்காக 1984-85-ல் ரூ. 36 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழி யாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 900-க்கு அதிகமான பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. இவற்றில் மாணவர்கள் கோரும் 43 புத்தகங்களுக்கு மறு பதிப்பு கள் அச்சிடப்பட்டு வருகின்றன.

## கல்லூரி ஆசிரியர், பிற பணியாளர்கள் நலன்.

22. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய் துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை:—பல்கலைக்கழக மானி யக் குழு சம்பள விகிதங்களை அளித்தது; உரிய தகுதி பெற்ற

பயிற்றுநர்களையும் விளக்குநர்களையும் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தியது; 10 ஆண்டு பணி முடித்த உதவிப் பேராசிரியர்களை பேராசிரியர்களாக உயர்த்தியது ; உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் பணியாளருக்கு நேரடியாக சம்பளம் வழங்கியது ; மற்றும் குடும்ப ஓய்வூதியம், விடுப்பு (ஈட்டு விடுப்பு வசதி உட்பட); குழு ஈட்டுறுதித் திட்டம், பணியில் இருக்கும் போது ஆசிரியர் மற்றும் பிற பணியாளர் இறந்து விட்டால், அவர்களுடைய மகன், மணமாகாத மகள்/மனைவி/மிக நெருங்கிய உறவினருக்கு பணி நியமனம் செய்வதில் முன்னுரிமை ஆகிய விஷயங்களில் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிட்டும் அதே அளவு சலுகைகளை தனியார் கல்லூரி ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களுக்கும் விரிவாக்கியது ஆகியவையாகும்.

•

## சட்டக் கல்வி.

23. சட்டக் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர்களின் எண்ணிக்கை 1983-84-ல் பின்வருமாறு இருந்தது:—

| | மேல்நிலை சட்டப் படிப்பு. (எம்.எல்.) | சட்டப்படிப்பு (பி.எல்.) | | |
|---|---|---|---|---|
| | | மூன்றாண்டுப் படிப்பு. | | ஐந்தாண்டு படிப்பு. |
| | | முழு நேரம். | மாலை நேரம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சென்னை .. | 60 | 825 | 240 | 180 |
| மதுரை .. | 15 | 613 | 120 | 150 |
| திருச்சிராப் பள்ளி. | .. | 304 | 60 | 74 |
| கோயம் புத்தூர். | .. | 300 | 60 | 80 |
| மொத்தம் .. | 75 | 2,042 | 480 | 484 |

24. தமிழ்நாட்டில் அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் 1983-84-லிருந்து ஐந்தாண்டு சட்டப் படிப்பு (மேல்நிலைப் பள்ளிப் படிப்புக்கு பின் 5 ஆண்டுகள்) தொடங்கி உள்ளது. 1983-84 ஆம் ஆண்டிலிருந்து வேலையில் இருப்பவர்களுக்கென்று மூன்றாண்டு மாலை நேரக் கல்லூரியும் நடைபெறுகிறது. இந்திய வழக்கறிஞர் மன்றம் மூன்றாண்டு சட்டப் படிப்பு, 1984-85 ஆம் ஆண்டோடு முடிவடைய வேண்டும் என்று தீர்மானித்துள்ளதால்



1985-86 ஆம் ஆண்டிலிருந்து சட்டக் கல்லூரிகளில் ஐந்தாண்டு சட்டப் படிப்பு மட்டுமே இருக்கும். இந்த புதிய திட்டத்தின் கீழ் முதல் இரண்டு வருடங்களில் சட்டமல்லாத பாடங்களும் பாடத் திட்டத்தில் இருக்கின்றன. அவற்றை பயிற்றுவிக்க உதவிப் பேராசிரியர்கள் கல்லூரிக் கல்வித் துறையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

25. 1983–84 ஆம் ஆண்டில் சட்டம் பயில்பவர்கள் 3,081 பேர்களில் 261 மாணவியரும் அடங்குவர். சென்னை மற்றும் மதுரை சட்டக் கல்லூரிகளில் மொத்தம் 163 மாணவர்கள் தமிழில் சட்டம் பயிலுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 180 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. திருச்சி சட்டக் கல்லூரியிலும் தமிழ் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

•

## VII. தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1984-85-ல் சுமார் ரூ. 19 கோடி (கட்டடங்கள், கடன்கள், அண்ணா பல்கலைக் கழகத்திற்கு மானியம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தொழிற் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் ஆண்டுதோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை (1983-84-ல் இருந்தபடி) ஆகியவை வருமாறு :—

| கல்வி நிறுவனங்கள். | எண்ணிக்கை. | ஆண்டு தோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பொறியியல் கல்லூரிகள். | 7 மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டார பொறியியல் கல்லூரியில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு. | பட்ட வகுப்புக்கள் :<br>முழு நேரம் 1,625<br>பகுதி நேரம் 640<br>பட்ட மேற்படிப்பு :<br>முழு நேரம் 276<br>பகுதி நேரம் 56<br>பட்ட மேற்படிப்பு பட்டயம் :<br>முழு நேரம் 21<br>பகுதி நேரம் 5 |

| கல்வி நிறுவனங்கள். (1) | எண்ணிக்கை. (2) | ஆண்டு தோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை. (3) | |
|---|---|---|---|
| பல்தொழில் பயிலகங்கள் (பாலிடெக்னிக்) மற்றும் சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்கள். | 75 | பட்டய வகுப்புகள் : | |
| | | முழு நேரம் | 11,775 |
| | | பகுதி நேரம் | 465 |
| | | பட்டய மேற்படிப்பு : | |
| | | முழு நேரம் | 299 |
| | | பகுதி நேரம் | 90 |
| | | சான்றிதழ் வகுப்பு : | |
| | | முழு நேரம் | 110 |
| தொழில் நுட்ப மேல் நிலைப் பள்ளிகள். | 14 | பகுதி நேரம் | 230 |
| | | | 840 |

2. பல்தொழில் பயிலகங்களில் ஆண்டு தோறும் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை அண்மை ஆண்டுகளில் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்து வந்த பயிலகங்களில் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் புதிதாக 37 புதிய பல்தொழில் பயிலகங்களும் (மகளிருக்கென்று 7 உட்பட) திறக்கப்பட்டுள்ளன. 1981-82-ல் இரண்டு பல்தொழில் பயிலகங்களில் புகுத்தப்பட்ட ஷிப்டு முறை 1983-84-ல் மேலும் 5 பல்தொழில் பயிலகங்களுக்கு விரிவாக்கப்பட்டது. 1984-85-ல் பல்தொழில் பயிலகம் ஒன்றில் குறிப்பிட்ட தொழில்களைக் கற்றுத் தருவதற்காக மகளிர் பிரிவு ஒன்று ஷிப்டு முறைப்படி தொடங்கப்படும்.

3. அரசுக்கு தொடராச் செலவோ தொடரும் செலவோ எப்பொழுதும் ஏற்படாத வகையில், தனியார் பாலிடெக்னிக்குகளை தனியார் நிருவாகங்கள் தொடங்குவதை அனுமதிப்பதற்கான திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. அந்த தனியார் பாலிடெக்னிக்குகள் நல்லமுறையில் நடப்பதற்கு ஏற்ற கண்டிப்பான நிபந்தனைகளின் பேரில்தான் அத்தகைய அனுமதி வழங்க அத்திட்டம் வழி செய்கிறது. அந்நிபந்தனைகளின் சில முக்கியமான அம்சங்கள் வருமாறு : போதுமான நிலத்தை தனியார் நிர்வாகம் தரவேண்டும், ரொக்க வைப்புத் தொகையாக ரூ. 10 லட்சம் வைப்புத் தொகை ஏற்படுத்த வேண்டும் ; மாணவர்களைச் சேர்ப்பது அரசாங்கம் வகுக்கும் விதிமுறைகளுக்குட்பட்டுச் செய்யப்படவேண்டும்; சேரும் மாணவர்களிடம் எத்தகைய கட்ட



ணமும் (Capitation fee) வசூலிக்கக்கூடாது ; நிபந்தனைகள் மீறப்பட்டால் அந்த பாலிடெக்னிக்குகளை அரசே எடுத்துக் கொள்ளலாம் என்று முதலிலேயே தனியார் நிருவாகத்தினர் இசைவு தெரிவிக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் தனியார் பாலிடெக்னிக்குகளைத் தொடங்க பல நிருவாகங்கள் முன் வந்துள்ளன.

4. பல் தொழில் பயிலக பாடத் திட்டங்களை வகுக்கும் மையம் 1982-83-ல் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் தனியாக அமைக்கப்பட்டது. 1983-84-ல் மதுரையில் உள்ள தமிழ் நாடு பாலிடெக்னிக்கில் உள்ள ஆய்வுக் கூடங்களுக்கு நவீன தளவாடங்கள் வாங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது. அவ்வாண்டு அந்த பாலிடெக்னிக்கில் கேள்வி-காட்சிக் கல்விப் பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டது.

கலை, கைத்தொழில் மற்றும் சிற்பக் கல்லூரிகள் :

5. சென்னையிலும், கும்பகோணத்திலும் உள்ள அரசு கலை கைத்தொழில் கல்லூரிகளையும் மாமல்லபுரத்திலுள்ள அரசு கட்டடக் கலை-சிற்பக் கல்லூரியையும், தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே நிருவகித்து வருகிறார். கும்பகோணம், கலை-கைத்தொழில் கல்லூரியில் 1983-84-ல் ஓவியம் மற்றும் விளம்பர ஓவியம் குறித்து பட்டய மேற்படிப்பு வகுப்பு ஒன்று துவங்கப்பட்டது. 1983-84-ல் அக்கல்லூரிக்கு கும்பகோணத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் 60 மாணவர்கள் தங்கக் கூடிய மாணவர் விடுதி ஒன்றும் கட்டப்பட்டது. 1984-85-ல் மாமல்லபுரக் கட்டடக் கலை-சிற்பக் கல்லூரியில் சிற்பக் கலையில் பி.எஸ்.சி. பட்டப் படிப்பு வகுப்பு ஒன்றும் தொடங்கப்படும்.

வணிகவியல் பாடங்களில் தேர்வுகள் :

6. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வணிகக் கணக்கு, வணிகப் புவியியல், வங்கியியல் முதலிய பாடங்களில் தேர்வுகளையும் நடத்தி வருகிறார். ஆண்டுதோறும் இரு தடவை அதாவது மே, நவம்பர் மாதங்களில் இத் தேர்வுகள் நடக்கின்றன. ஆண்டுக்கு 1,90,000 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். இத்தேர்வுகள் அனைத்தும் 1983 மே மாதம் எழுதிய 98,527 பேர்களுள் தேறியவர்கள் எண்ணிக்கை 49,066 அதாவது 50 விழுக்காடு ஆக இருந்தது. 1983 நவம்பரில் தேர்வு எழுதியோர் எண்ணிக்கை 92,567 ஆகும்.

பொறியியல் கல்லூரிகள் :

7. சேலத்திலுள்ள அரசு பொறியியல் கல்லூரியில் 1983-84-ல் ''பயோ மெடிக்கல்'' பொறியியல் ஒரு விருப்பப் பாடமாக தொடங்கப்பட்டது. 1983-84-ல் காரைக்குடியில் உள்ள அழகப்பா பொறியியற் கல்லூரியில் ஒரு கணக்கீட்டுப் பொறி மையம் அமைக்கப்பட்டது. அக்கல்லூரியில் மாணவியர் விடுதி ஒன்று கட்டும்

[1984 மார்ச் 27

பணியும் 1983-84-ல் தொடங்கப்பட்டது. 1984-85-ல் கோயம் புத்தூரிலுள்ள அரசு தொழில் நுட்பவியல் கல்லூரியில் மெட்டீரி யல் தொழில் நுட்பவியல் துறை அமைக்கப்படவிருக்கிறது. கோயம்புத்தூர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் மின்னியல் மற்றும் மின்னணுவியல் ஆய்வுக் கூடங்கள் நவீனப்படுத்தப்பட இருக்கின்றன.

8. ஸ்ரீலங்காவிலிருந்து தமிழகம் வந்துள்ள இலங்கைத் தமிழர்களும் மற்றும் தாயகம் திரும்பியவர்களுமான மாணவர் களுக்கு பொறியியல் கல்வி வசதிகளைத் தரும் நோக்குடன் 1983-84-ல் இம்மாநிலத்திலுள்ள அரசு பல்தொழில் பயிலகங்கள் ஒவ்வொன்றிலும் 5 இடங்கள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டு அவர் களுக்கென்றே ஒதுக்கப்பட்டன. மேலும் இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலும் அம்மாணவர்கள் 20 பேர் வரை சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

அண்ணா பல்கலைக் கழகம் :

9. பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் இவை சார் பான அறிவியல் துறைகள் வளர்ச்சிக்காகவும், அவற்றின் மேற் படிப்பு, ஆராய்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கவும் அண்ணா பல்கலைக் கழகம் 1978 செப்டம்பர் 4 ஆம் தேதி நிறுவப்பட்டது. இப் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளில் ஆண்டு தோறும் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை (1982-83-ல் இருந்தபடி) வருமாறு :—

| கல்லூரி. | பட்டப் படிப்பு. | | பட்ட மேற்படிப்பு. | |
|---|---|---|---|---|
| | முழு நேரம். | பகுதி நேரம். | முழு நேரம். | பகுதி நேரம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கிண்டி பொறியியற் கல்லூரி. | 378 | 211 | 258 | 63 |
| சென்னைத் தொழில் நுட்பவியல் நிறுவனம். | 163 | .. | 29 | 16 |
| அழகப்பா தொழில் நுட்பவியல் கல்லூரி. | 120 | .. | 42 | 12 |
| கட்டிடக்கலை மற்றும் வடிவமைப்புப் பள்ளி. | 27 | .. | 19 | ... |
| மொத்தம் .. | 688 | 211 | 348 | 91 |



1984 மார்ச் 27]

1983-84-ல் அச்சுத் தொழில் நுட்பவியல் பி. டெக். வகுப்பும் மின் கணிப்புப் பொறியியலில் பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்பும் இப்பல்கலைக் கழகத்தில் புதிதாகத் தொடங்கப் பட்டன. படிகவியல் ஆய்வகம், மருத்துவ தொழில் நுட்ப வியல் ஆய்வகம் போன்ற வளர்ச்சிப் பணிகளுக்கான திட்ட மானியம் ரூ. 27 இலட்சம் உட்பட இப்பல்கலைக் கழகத்துக்கு மானியமாக ரூ. 207 இலட்சம் வழங்க 1984-85-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10. பூமியில் இயற்கை வளங்களை (மீண்டும் மீண்டும் பயன் படுத்தக் கூடிவற்றையும் பயன்படுத்தினால் தீர்ந்து போகக் கூடியவற்றையும்) வானூர்திகள் மற்றும் செயற்கைக் கோள்கள் மூலம் விரைவாகவும், துல்லியமாகவும், சிக்கனமாகவும் பல் வேறு அறிவியல் துறைக் கருவிகளின் உதவியுடன் கணிப்பு செய்து அவ்வளங்கள் (பரவல், அமைப்பு, மற்றும் தோற்றம்) பற்றிய முழு விவரங்களைச் சேகரிக்க ''தொலைவிலுணர்தல்'' (ரிமோட்சென்சிங்) என்னும் புதிய திட்டம் பயன்படுகிறது. இதன்கீழ் மலைப் பகுதிகளின் அமைப்புப் படங்கள் தயாரிக் கலாம்; கடற்கரை எல்லை மாற்றங்கள், பூமியின் வளங்கள் (கனி வளம், காட்டு வளம், மண் வளம், நில பயன்பாடு போன்றவை) வறட்சியும், மழையும் மாறி மாறி வரும் சுழற்சி, ஆகியவற்றை ஆய்வு செய்யலாம். இம்முறை யைப் பயன்படுத்தும் துறைகளுக்கு பயிற்சி அளிப்பதும் பயிற்றுநர்களுக்கு தீவிர பயிற்சி அளிப்பதும் தேவைப்படும். இந்தத் தொழில் நுட்ப முறையின் நன்மையை உணர்ந்த அரசு நமது மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு இதனைப் பயன்படுத்தும் நோக்குடன் 1982 சனவரியில் அண்ணா பல்கலைக் கழகத்தில் ரூ. 76 இலட்சம் செலவில் ''தொலை விலுணர்தல் நிறுவனம்'' ஒன்றை அமைத்துள்ளது. இம் முறையைப் பயன்படுத்தும் பல்வேறு துறைகளையும், இந் நிறுவனத்தையும் ஒருங்கிணைக்கும் பணியை திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை மேற்கொண்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட அளவுகளில் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் இப்புதிய முறையைப் பல வழிகளில் தங்களுக்குப் பயன்படும் கருவியாக பயன்படுத்த வேண்டும். இந் நோக்கத்தை நிறை வேற்ற தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில ஒருங் கிணைப்புக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

இதர நிறுவனங்கள்.

11. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரிக்கு மானியமாக ரூ. 38 இலட்சமும் சென்னையிலுள்ள கணித அறிவியல் நிறுவனத்திற்கு மானியமாக ரூ. 5 இலட்சமும் வழங்க 1984-85-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 27

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள் :

12. சென்னையில் பெரியார் அறிவியல் தொழில் நுட்பவியல் மையம் உட்பட இம் மாநிலத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்களை அமைத்து நிருவகிக்க ஒரு தனி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

13. சென்னையில் ரூ. 3.85 கோடி செலவில் பெரியார் தொழில் நுட்பவியல் மையத்தையும் ரூ. 1,59 கோடி செலவில் '' கோள்கள் இயங்கும் காட்சி'' நிலையத்தையும் (பிளானிடேரியம்) அமைக்க அரசு ஏற்பு வழங்கியுள்ளது, திரு. கி. கே. பிர்லா வழங்கியுள்ள நிதி உதவியைக் கொண்டு அமைக்கப்படும் இந்த பிளானிடேரியத்துக்கு '' பிர்லா பிளானிடேரியம்'' என்று பெயரிடப்படும். பிர்லா குடும்பத்தினரில் ஒருவரோ அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவரோ இம் மைய ஆளுநர் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்படுவர்.

14. இம்மாநிலத்தில் அறிவியல், தொழில் நுட்பவியல் வளர்ச்சியை ஒருமுகப்படுத்தி ஊக்குவிப்பதற்காக ''தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மன்றம்'' அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. இதற்காக 1984-85-ல் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அம்மன்றத்தின் ஆளுநர்க் குழுவை அமைத்த பின் அது செயல்பட தொடங்கும்.

## VIII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்

### (i) விளையாட்டும், இளைஞர் நலனும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்காக 1984-85-ல் மொத்தம் ரூ. 187 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது மாவட்ட விளையாட்டு மன்றங்கள் 19 உள்ளன. (தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை ஆகிய மூன்று பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 1983-84-ல் அமைக்கப்பட்ட இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றம் உட்பட).



1984 மார்ச் 27]

விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும்.

2. தற்பொழுது பின்வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| | ஆண்டு தோறும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை (8—12 வகுப்புகள்). | 75 |
| (2) மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, பெரிய நாய்க்கன் பாளையம் (8—12 வகுப்புகள்). | 50 |
| (3) இராணி சீதை ஆச்சி மேல்நிலைப் பள்ளி, அண்ணாமலைநகர் (8—10 வகுப்புகள்). | 50 |
| (4) பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பீளமேடு, கோயம்புத்தூர் (8—10 வகுப்புகள்). | 50 |
| மொத்தம் .. | 225 |

3. மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள மாணவர்களின் விளையாட்டுக்களில் வல்லமை பெற்றவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி விடுதிகள் தொடர்ந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு விடுதியிலும் 30 பேருக்குத் தங்கும் வசதி அளிக்கப்படுகிறது.

4. இம்மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஒன்று நிறுவுவது ஆய்விலுள்ளது.

5. விளையாட்டுக்களில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து, அவர்களுக்குத் தீவிரமான பயிற்சி அளித்து, அவர்களது திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை இளஞ்சிறாருக்கான '' மிக இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும்; நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி அளவில் '' இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. 200 தொடக்கப் பள்ளிகளைத் தேர்வு செய்து, ''இளமையில் தெரிந்தெடு'' திட்டத்தினை

[1984 மார்ச் 27

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள் :

12. சென்னையில் பெரியார் அறிவியல் தொழில் நுட்பவியல் மையம் உட்பட இம் மாநிலத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்களை அமைத்து நிருவகிக்க ஒரு தனி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

13. சென்னையில் ரூ. 3.85 கோடி செலவில் பெரியார் தொழில் நுட்பவியல் மையத்தையும் ரூ. 1,59 கோடி செலவில் '' கோள்கள் இயங்கும் காட்சி'' நிலையத்தையும் (பிளானிடேரியம்) அமைக்க அரசு ஏற்பு வழங்கியுள்ளது, திரு. கி. கே. பிர்லா வழங்கியுள்ள நிதி உதவியைக் கொண்டு அமைக்கப்படும் இந்த பிளானிடேரியத்துக்கு '' பிர்லா பிளானிடேரியம்'' என்று பெயரிடப்படும். பிர்லா குடும்பத்தினரில் ஒருவரோ அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவரோ இம் மைய ஆளுநர் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்படுவர்.

14. இம்மாநிலத்தில் அறிவியல், தொழில் நுட்பவியல் வளர்ச்சியை ஒருமுகப்படுத்தி ஊக்குவிப்பதற்காக ''தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மன்றம்'' அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. இதற்காக 1984-85-ல் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அம்மன்றத்தின் ஆளுநர்க் குழுவை அமைத்த பின் அது செயல்பட தொடங்கும்.

## VIII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்

### (1) விளையாட்டும், இளைஞர் நலனும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்காக 1984-85-ல் மொத்தம் ரூ. 187 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது மாவட்ட விளையாட்டு மன்றங்கள் 19 உள்ளன. (தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை ஆகிய மூன்று பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 1983-84-ல் அமைக்கப்பட்ட இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றம் உட்பட).



1984 மார்ச் 27]

விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும்.

2. தற்பொழுது பின்வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| | ஆண்டு தோறும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை (8—12 வகுப்புகள்). | 75 |
| (2) மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, பெரிய நாய்க்கன் பாளையம் (8—12 வகுப்புகள்). | 50 |
| (3) இராணி சீதை ஆச்சி மேல்நிலைப் பள்ளி, அண்ணாமலைநகர் (8—10 வகுப்புகள்). | 50 |
| (4) பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பீளமேடு, கோயம்புத்தூர் (8—10 வகுப்புகள்). | 50 |
| மொத்தம் .. | 225 |

3. மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள மாணவர்களின் விளையாட்டுக்களில் வல்லமை பெற்றவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி விடுதிகள் தொடர்ந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு விடுதியிலும் 30 பேருக்குத் தங்கும் வசதி அளிக்கப்படுகிறது.

4. இம்மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஒன்று நிறுவுவது ஆய்விலுள்ளது.

5. விளையாட்டுக்களில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து, அவர்களுக்குத் தீவிரமான பயிற்சி அளித்து, அவர்களது திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை இளஞ்சிறாருக்கான '' மிக இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும்; நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி அளவில் '' இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. 200 தொடக்கப் பள்ளிகளைத் தேர்வு செய்து, ''இளமையில் தெரிந்தெடு'' திட்டத்தினை

[1984 மார்ச் 27

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள் :

12. சென்னையில் பெரியார் அறிவியல் தொழில் நுட்பவியல் மையம் உட்பட இம் மாநிலத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்களை அமைத்து நிருவகிக்க ஒரு தனி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

13. சென்னையில் ரூ. 3.85 கோடி செலவில் பெரியார் தொழில் நுட்பவியல் மையத்தையும் ரூ. 1,59 கோடி செலவில் ''கோள்கள் இயங்கும் காட்சி'' நிலையத்தையும் (பிளானிடேரியம்) அமைக்க அரசு ஏற்பு வழங்கியுள்ளது. திரு. கி. கே. பிர்லா வழங்கியுள்ள நிதி உதவியைக் கொண்டு அமைக்கப்படும் இந்த பிளானிடேரியத்துக்கு ''பிர்லா பிளானிடேரியம்'' என்று பெயரிடப்படும். பிர்லா குடும்பத்தினரில் ஒருவரோ அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவரோ இம் மைய ஆளுநர் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்படுவர்.

14. இம்மாநிலத்தில் அறிவியல், தொழில் நுட்பவியல் வளர்ச்சியை ஒருமுகப்படுத்தி ஊக்குவிப்பதற்காக ''தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மன்றம்'' அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. இதற்காக 1984-85-ல் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அம்மன்றத்தின் ஆளுநர்க் குழுவை அமைத்த பின் அது செயல்பட தொடங்கும்.

## VIII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்

### (1) விளையாட்டும், இளைஞர் நலனும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்காக 1984-85-ல் மொத்தம் ரூ. 187 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது மாவட்ட விளையாட்டு மன்றங்கள் 19 உள்ளன. (தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை ஆகிய மூன்று பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 1983-84-ல் அமைக்கப்பட்ட இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றம் உட்பட).



1984 மார்ச் 27]

விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும்.

2. தற்பொழுது பின்வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| | ஆண்டு தோறும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை (8—12 வகுப்புகள்). | 75 |
| (2) மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, பெரிய நாய்க்கன் பாளையம் (8—12 வகுப்புகள்). | 50 |
| (3) இராணி சீதை ஆச்சி மேல்நிலைப் பள்ளி, அண்ணாமலைநகர் (8—10 வகுப்புகள்). | 50 |
| (4) பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பீளமேடு, கோயம் புத்தூர் (8—10 வகுப்புகள்). | 50 |
| மொத்தம் .. | 225 |

3. மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள மாணவர்களின் விளையாட்டுக்களில் வல்லமை பெற்றவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி விடுதிகள் தொடர்ந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு விடுதியிலும் 30 பேருக்குத் தங்கும் வசதி அளிக்கப்படுகிறது.

4. இம்மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஒன்று நிறுவுவது ஆய்விலுள்ளது.

5. விளையாட்டுக்களில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து, அவர்களுக்குத் தீவிரமான பயிற்சி அளித்து, அவர்களது திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை இளஞ்சிறாருக்கான ''மிக இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும்; நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி அளவில் ''இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. 200 தொடக்கப் பள்ளிகளைத் தேர்வு செய்து, ''இளமையில் தெரிந்தெடு'' திட்டத்தினை

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள் :

12. சென்னையில் பெரியார் அறிவியல் தொழில் நுட்பவியல் மையம் உட்பட இம் மாநிலத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்களை அமைத்து நிருவகிக்க ஒரு தனி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

13. சென்னையில் ரூ. 3.85 கோடி செலவில் பெரியார் தொழில் நுட்பவியல் மையத்தையும் ரூ. 1,59 கோடி செலவில் ''கோள்கள் இயங்கும் காட்சி'' நிலையத்தையும் (பிளானிடேரியம்) அமைக்க அரசு ஏற்பு வழங்கியுள்ளது, திரு. கி. கே. பிர்லா வழங்கியுள்ள நிதி உதவியைக் கொண்டு அமைக்கப்படும் இந்த பிளானிடேரியத்துக்கு ''பிர்லா பிளானிடேரியம்'' என்று பெயரிடப்படும். பிர்லா குடும்பத்தினரில் ஒருவரோ அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவரோ இம் மைய ஆளுநர் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்படுவர்.

14. இம்மாநிலத்தில் அறிவியல், தொழில் நுட்பவியல் வளர்ச்சியை ஒருமுகப்படுத்தி ஊக்குவிப்பதற்காக ''தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மன்றம்'' அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. இதற்காக 1984-85-ல் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அம்மன்றத்தின் ஆளுநர்க் குழுவை அமைத்த பின் அது செயல்படத் தொடங்கும்.

## VIII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்

### (i) விளையாட்டும், இளைஞர் நலனும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்காக 1984-85-ல் மொத்தம் ரூ. 187 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது மாவட்ட விளையாட்டு மன்றங்கள் 19 உள்ளன. (தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை ஆகிய மூன்று பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 1983-84-ல் அமைக்கப்பட்ட இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றம் உட்பட).





### விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும்.

2. தற்பொழுது பின்வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| | ஆண்டு தோறும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை (8—12 வகுப்புகள்). | 75 |
| (2) மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, பெரிய நாய்க்கன் பாளையம் (8—12 வகுப்புகள்). | 50 |
| (3) இராணி சீதை ஆச்சி மேல்நிலைப் பள்ளி, அண்ணாமலைநகர் (8—10 வகுப்புகள்). | 50 |
| (4) பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பீளமேடு, கோயம்புத்தூர் (8—10 வகுப்புகள்). | 50 |
| மொத்தம் .. | 225 |

3. மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள மாணவர்களின் விளையாட்டுக்களில் வல்லமை பெற்றவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி விடுதிகள் தொடர்ந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு விடுதியிலும் 30 பேருக்குத் தங்கும் வசதி அளிக்கப்படுகிறது.

4. இம்மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஒன்று நிறுவுவது ஆய்விலுள்ளது.

5. விளையாட்டுக்களில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து, அவர்களுக்குத் தீவிரமான பயிற்சி அளித்து, அவர்களது திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை இளஞ்சிறாருக்கான ''மிக இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும்; நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி அளவில் ''இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. 200 தொடக்கப் பள்ளிகளைத் தேர்வு செய்து, ''இளமையில் தெரிந்தெடு'' திட்டத்தினை

[1984 மார்ச் 27

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள் :

12. சென்னையில் பெரியார் அறிவியல் தொழில் நுட்பவியல் மையம் உட்பட இம் மாநிலத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்களை அமைத்து நிருவகிக்க ஒரு தனி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

13. சென்னையில் ரூ. 3.85 கோடி செலவில் பெரியார் தொழில் நுட்பவியல் மையத்தையும் ரூ. 1,59 கோடி செலவில் ''கோள்கள் இயங்கும் காட்சி'' நிலையத்தையும் (பிளானிடேரியம்) அமைக்க அரசு ஏற்பு வழங்கியுள்ளது, திரு. கி. கே. பிர்லா வழங்கியுள்ள நிதி உதவியைக் கொண்டு அமைக்கப்படும் இந்த பிளானிடேரியத்துக்கு ''பிர்லா பிளானிடேரியம்'' என்று பெயரிடப்படும். பிர்லா குடும்பத்தினரில் ஒருவரோ அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவரோ இம்மைய ஆளுநர் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்படுவர்.

14. இம்மாநிலத்தில் அறிவியல், தொழில் நுட்பவியல் வளர்ச்சியை ஒருமுகப்படுத்தி ஊக்குவிப்பதற்காக ''தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மன்றம்'' அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. இதற்காக 1984-85-ல் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அம்மன்றத்தின் ஆளுநர்க் குழுவை அமைத்த பின் அது செயல்படத் தொடங்கும்.

## VIII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்

### (1) விளையாட்டும், இளைஞர் நலனும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்காக 1984-85-ல் மொத்தம் ரூ. 187 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது மாவட்ட விளையாட்டு மன்றங்கள் 19 உள்ளன. (தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை ஆகிய மூன்று பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 1983-84-ல் அமைக்கப்பட்ட இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றம் உட்பட).



1984 மார்ச் 27]

### விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும்.

2. தற்பொழுது பின்வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| | ஆண்டு தோறும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை (8—12 வகுப்புகள்). | 75 |
| (2) மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, பெரிய நாய்க்கன் பாளையம் (8—12 வகுப்புகள்). | 50 |
| (3) இராணி சீதை ஆச்சி மேல்நிலைப் பள்ளி, அண்ணாமலைநகர் (8—10 வகுப்புகள்). | 50 |
| (4) பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பீளமேடு, கோயம்புத்தூர் (8—10 வகுப்புகள்). | 50 |
| மொத்தம் .. | 225 |

3. மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள மாணவர்களின் விளையாட்டுக்களில் வல்லமை பெற்றவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி விடுதிகள் தொடர்ந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு விடுதியிலும் 30 பேருக்குத் தங்கும் வசதி அளிக்கப்படுகிறது.

4. இம்மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஒன்று நிறுவுவது ஆய்விலுள்ளது.

5. விளையாட்டுக்களில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து, அவர்களுக்குத் தீவிரமான பயிற்சி அளித்து, அவர்களது திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை இளஞ்சிறாருக்கான ''மிக இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும்; நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி அளவில் ''இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. 200 தொடக்கப் பள்ளிகளைத் தேர்வு செய்து, ''இளமையில் தெரிந்தெடு'' திட்டத்தினை

அப்பள்ளிகளிலும் செயல்படுத்த 1984–85-ல் ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிகளில் குடியரசு நாள் மற்றும் பொங்கல் நாளன்று நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று, முதலாவது இரண்டாவது இடத்தைப் பெறுவோருக்கு, உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.

6. 1984–85-ல், அந்தந்த விளையாட்டு மன்றப்பகுதியிலுள்ள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஏறத்தாழ 30 உடற்பயிற்சி ஆசிரியர்/உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு இரண்டு அல்லது மூன்று விளையாட்டுகளில் மாவட்ட விளையாட்டுமன்ற பயிற்சியாளர்களைக் கொண்டு ஆறு நாள் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

7. மனமகிழ் மன்றங்கள், விளையாட்டு குழுமங்கள், நுண்கலை மன்றங்கள் ஆகியவற்றை பரீட்சார்த்த அடிப்படையில் சில கல்லூரிகளில், (ஒவ்வொரு கல்லூரியிலும், ''இளைஞர் நல அலுவலர்'' எனக் குறிப்பிடப்பட இருக்கும் பேராசிரியர் ஒருவர் வழிகாட்டுதலின் கீழ்) நடத்திவரும் பொருட்டு, கல்லூரிக்கு ரூ. 12,500 வீதம் 8 கல்லூரிகளுக்கு ரூ. 1 இலட்சம் தர 1984-85-ல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரி மாணவர்களுக்கு ஆரோக்கியமான பொழுதுபோக்கு நடவடிக்கைகளைத் தருவனவாக இம்மன்றங்கள் அமையும் எனக் கருதப்படுகிறது.

8. மாணவர் அல்லாத இளைஞர்களிடம் விளையாட்டையும், உடற்பயிற்சியையும் ஊக்குவிக்கும் வண்ணம், ஊரக விளையாட்டு மையங்கள் நடத்துதல், தனியார் விளையாட்டு மன்றங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி ஆராய்ச்சி மாணவப் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உடற் பயிற்சிக் கல்வி பற்றிய புத்தங்களைப் பிரசுரிப்பதற்கு நிதியுதவியும் அளிக்கப்படுகிறது.

விளையாட்டு அரங்கங்கள் மற்றும் நீச்சல் குளங்கள்.

9. தற்பொழுது நீலகிரி தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும், அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் திறந்த வெளி விளையாட்டு அரங்கங்கள் ஏற்கனவே உள்ளன; அல்லது அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வட ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் கட்டுவதற்கு இதுவரை நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை நேரு விளையாட்டு அரங்குக்கு ஒளி வெள்ளம் பாய்ச்சும் விளக்குகள் அமைக்க ரூ. 25 இலட்சம் மானியம் தரப்பட்டுள்ளது.



10. மாநில மற்றும் மாவட்ட விளையாட்டு மன்றப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப காப்பூதியம், மற்றும் இறப்பு-ஓய்வுப் பணிக்கொடை முதலியன வழங்குவதற்கான ஒரு திட்டம் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது.

(ii) சாரண, சாரணியர் மற்றும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்.

11. தமிழ்நாட்டில் தற்பொழுது 1.42 இலட்சம் சாரண, சாரணியர் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலும் உள்ள சாரண, சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். தமிழ்நாடு சாரண, சாரணியர் இயக்கத்திற்கு ஆண்டு மானியமாக ரூ. 3 இலட்சம் வழங்கப்படுகிறது. சுமார் 4 இலட்சத்திற்கு மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர் இளைஞர் செஞ்சிலுவை அமைப்பில் சேர்ந்துள்ளனர்.

(iii) தேசிய மாணவர் படை.

12. தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்கக தலைமையகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமையிடங்கள் ஐந்து அமைந்துள்ளன. தமிழ் நாட்டின் தேசிய மாணவர் படையில் சேர்க்க அனுமதித்துள்ள மாணவர் எண்ணிக்கை வருமாறு:—

| | பிரிவுகள்/படைகள். | அலுவலர்கள். | மாணவர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதுநிலைப் பிரிவு (மாணவர்). | 45 | 215 | 17,370 |
| முதுநிலைப் பிரிவு (மாணவியர்). | 5 | 38 | 3,680 |
| இளநிலைப்பிரிவு (மாணவர்). | 623 | 621 | 61,650 |
| இளநிலைப்பிரிவு (மாணவியர்). | 51 | 48 | 5,200 |
| மொத்தம் .. | 724 | 922 | 87,900 |

1984-35-ல் தேசிய மாணவர் படைக்காக மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 188 இலட்சம் செலவிடப்படும். இத்துறையில் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், அமைச்சுப்பணியாளர்கள், ஓட்டுநர்கள், அடிப்படை ஊழியர்கள் முதலியோரின் எண்ணிக்கை 1,100 ஆகும்.

13. இவ்வாண்டு குடியரசு நாள் அணிவகுப்பில் விமானப் படைப் பிரிவு மற்றும் இளைஞர் பிரிவில் தமிழக மாணவர்கள் சிறந்த மாணவர்படை வீரர் என முதலிடம் பெற்று விருது பெற்றனர்.

### (iv) தேசீயப்பணித் திட்டம்.

14. 1983-84 நிலவரப்படி, தமிழ் நாட்டிலுள்ள தேசீயப் பணித் திட்டத்தின் விவரங்கள் பின்வருமாறு:—

| | பங்கு பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை. | அம்மொத்த மாணவர்களில் சிறப்புப் பயிற்சி முகாம்களில் பங்கு பெற்றவர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கல்லூரிகள் .. .. .. | 50,000 | 25,000 |
| மேல்நிலைப் பள்ளிகளில் (மேல்நிலை வகுப்புகள்-400 பள்ளிகள்). | 20,000 | 10,000 |
| மொத்தம் .. | 70,000 | 35,000 |

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தேசீய பணித் திட்டம் மேல்நிலைப் பள்ளி நிலையிலும் செயல்பட்டு வருகிறது. தேசீய பணித் திட்டத்தின் கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டு தோறும் பொதுத் திட்டத்தின் கீழ் ரூ. 60-ம், சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ரூ. 100-ம் செலவிடப்படுகிறது. இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும், மைய அரசும் 5 : 7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக் கொள்கின்றன. இதற்காக 1984-85 மாநில அரசு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத் தொகையில் 7/12 பங்கு மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படும். 1984-85-ல் மேலும் 5,000 மாணவர்கள் தேசியப் பணித் திட்டத்தின் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.



## IX. நூலகங்கள், ஆவணக் காப்பகம் அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்வுத்துறை.

### (i) பொது நூலகங்கள்.

பொது நூலகத் துறையின் நூலகப் பணிகள் பற்றிய முக்கிய விவரங்கள் வருமாறு :—

| | நூலகங்களின் எண்ணிக்கை. | இருப்பிலுள்ள நூல்களின் எண்ணிக்கை. | அங்கத்தினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்.) | |
| மாநில மைய நூலகம் (கன்னிமரா நூலகம், சென்னை). | 1 | 3.61 | 0.20 |
| மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின்கீழ் உள்ள நூலகங்கள்:— | | | |
| மாவட்ட மைய நூலகங்கள். | 16 | 97.29 | 10.12 |
| கிளை நூலகங்கள் .. | 1,491 | | |

2. சென்னையிலுள்ள கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள் ஒவ்வொன்றிலும் இரு பிரதிகளை இந் நூலகம் இலவசமாகப் பெறுகிறது. வருடத்தில் மூன்று தேசீய விடுமுறை நாட்களைத் தவிர ஏனைய நாட்கள் அனைத்திலும் (காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை) இந் நூலகம் செயல்படுகிறது. வெளிநாட்டு நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் வாங்குவதற்கென இந் நூலகத்திற்கு 1983-84-ல் ரூ. 11 இலட்சம் தரப்பட்டது. மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தனியாக பாட நூல் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந் நூலகத்திற்கென புகைப் படப் பிரதி எடுக்கும் கருவி ஒன்று ரூ. 1 இலட்சத்தில் வாங்கப்படும்.

3. மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்கள் அனைவரும் 1-4-1982 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்டுள்ளனர். இதனால் நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்கள் 3,198 பேர் பயனடைந்தனர். சில்லறைச் செலவினத்

தலைப்பின் கீழ் ஊதியம் பெற்று வந்த சுமார் 300 பேர்களின் பணியும் 1-4-1982 முதல் முறைப்படுத்தப்பட்டு அவர்களும் அரசுப் பணியாளர்களுக்கான அனைத்து சலுகைகளையும் பெற்று வருகின்றனர். பயிற்சி பெறாத மூன்றாம் நிலை நூலகர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக நூலகவியல் உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள் நான்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4. 1982-83-ல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரியாக ரூ. 1.43 கோடி பெற்றன (சென்னை மாவட்டக் குழு பெற்ற ரூ. 56 இலட்சம் உட்பட), சில மாவட்ட ஆணைக் குழுக்களின் வருமானம், புத்தகங்கள் வாங்குவது போன்ற செலவினங்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, நிதி நிலைமை சரியில்லாத நூலக ஆணைக் குழுக்களுக்கு புத்தகங்கள் வாங்க வசதி செய்யும் பொருட்டு, 1984-85 லிருந்து ஆண்டு தோறும் ரூ. 11 இலட்சம் மானியமாக அரசு வழங்க இருக்கிறது.

5. சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கீழ், 1983-84-ல் சென்னை அசோக் நகரில் ஒரு வட்டார நூலகம் கட்டப்பட்டது. ஐந்து கிளை நூலகங்களும் கட்டி முடிக்கப்பட்டன. மாவட்ட நூலக ஆணைக் குழுக்களும், அவற்றின் கீழ் இயங்கும் கிளை நூலகங்களுக்கு கட்டடம் கட்டும் பணியை படிப்படியாக நிறைவேற்றி வருகின்றன. ஈரோட்டில் உள்ள மாவட்ட மைய நூலகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு 1983-84 இல் ரூ. 5 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

(ii) ஆவணக் காப்பகம்.

தென் ஆசியாவில் தலைசிறந்த ஆவணத் தொகுப்புக்களைக் கொண்ட நிலையமாகத் திகழ்கிறது தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம். இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு நிருவாகத்திற்கும் பயன்படுகிறது. அரசு மற்றும் துறைத் தலைமையகங்களின் ஆவணங்களும் வேறு சில ஆவணங்களும் இங்கு உள்ளன. அனைத்தும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும் நிருவாகத்திற்குப் பயன்படுபவையும் ஆகும். மூன்று நூற்றாண்டுகளுக்கும் முற்பட்ட காலத்திலிருந்து ஆவணங்கள் உள்ளன. இங்கு ஆவணப் பாதுகாப்பிற்கான நவீன முறைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் வரும் ஆராய்ச்சியாளர்களுக்கு, ஆவணக் காப்பகத்தின் ஆராய்ச்சிக் கூடத்தில், சிறந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2. 1982 இல் நிறுவப்பட்ட நுண் நிழற்படக் கருவி ஒன்று நன்கு செயல்பட்டு வருகிறது. ஆராய்ச்சியாளர்கள் பழைய மூல ஆவணங்களை மீண்டும் மீண்டும் கையாளுவதைத் தவிர்க்கும் வகையில் அப்பழைய ஆவணங்களின் நுண் நிழற்படங்கள் எடுக்கப்படுகின்றன. ஆராய்ச்சி செய்வோருக்கு மூல ஆவணங்களைக் கொடுக்காமல், நுண் நிழற் படப் பிரதிகளை வழங்கினால் மூல ஆவணங்கள் மேலும் நீண்ட காலம் சிதிலமாகாமல் இருக்கும்.



மாவட்ட ஆவண மையங்கள்.

3. வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும், நிருவாகத்திற்குப் பயன்படுபவையுமான பல ஆவணங்கள் மாவட்டங்களிலுள்ள பல அரசு அலுவலகங்களிலும் உள்ளன. அவற்றையெல்லாம் சேகரித்து மாவட்டம் தோறும் பாதுகாத்து வரும் நோக்குடன் சிதம்பரம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் முதற்கண் 1982-83 இல் மாவட்ட ஆவண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு.

4. கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு வரலாற்று மற்றும் பிற வாழ்க்கைத் துறைகள் பற்றி ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் ஆர்வமும், திறமையும் மிகுந்தவர்களை ஊக்குவிப்பதற்காக, 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஆண்டு தோறும் மாணவப் பணியிடங்கள் நான்கை வழங்கி வருகிறது.

மாவட்ட விவரச் சுவடித் திட்டம்.

5. மாவட்ட விவரச் சுவடி ஒரு மாவட்டத்தைப் பற்றி முழுமையாக விவரிப்பதாகும். நிருவாகிகளுக்கு வழிகாட்டியாக இருப்பதோடு, பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய சிறந்த தகவல் நூலாகவும் அது இருக்கிறது. எளிதில் கிட்டாதனவாகிய அந்தந்த உள்ளூர்த் தகவல்கள் பலவும் இவ்விவரச் சுவடிகளில் தொகுக்கப்படும். புதுக்கோட்டை மாவட்ட விவரச் சுவடியின் ஆங்கிலப் பதிப்புப் பிரதிகள் விநியோகத்திற்கும் விற்பனைக்கும் தயாராக உள்ளன. அச்சுவடியின் தமிழ்ப் பதிப்பின் தட்டச்சு செய்தபடி அச்சிடுவதற்கு அனுப்பப்படவிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்ட விவரச் சுவடியின் தமிழ் வடிவ அச்சு மெய்ப்பங்கள் திருத்தப்பட்டு வருகின்றன. தருமபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு விவரச் சுவடிகள் தயாரிக்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

பயிற்சி.

6. அரசு அலுவலகம் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ஆவணப் பராமரிப்பு குறித்த பயிற்சி ஒன்றினை தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அளித்து வருகிறது. இதுவரை இத்தகைய 15 நாள் பயிற்சிகள் 29 நடந்து 505 பேர் பயன் பெற்றுள்ளனர். இத் திட்டம் 1984-85-லும் தொடர்ந்து நடைபெறும்.

ஆவணக் காப்பக நூலகம்.

7. மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் 2½ இலட்சம் புத்தகங்கள் உள்ளன. பெரும்பாலானவை ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளவை. பிற மொழிகளிலும் சில புத்தகங்கள் உள்ளன. இந் நூலகத்தில் பொதுவான புத்தகங்களைத் தவிர தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் அச்சிடப்பட்ட வெளியீடுகளும் உள்ளன. பழைய அரசிதழ்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற விவாதப் பதிவுகள், ஆவணப் பட்டியல்கள், பஞ்சாங்கங்கள், தகவல் தொகுதிகள், நீதிமன்றத் தீர்ப்பு அறிக்கைகள், விவரச் சுவடிகள், பழைய தாளிகைகள் முதலிய விலைமதிப்பற்ற நூற்றொகுப்புகள் இந் நூலகத்தில் உள்ளன.

(iii) அருங்காட்சியகங்கள்.

சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள் அருங்காட்சியக இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன. வேலூரில் ஒன்றும், ஈரோட்டில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக ஏற்பளிக்கப்பட்ட மாவட்ட அருங்காட்சியகங்கள் மூன்று அமைக்கப்பட்டு வருகின்றன. சென்னை அருங்காட்சியகத்தில் பல்வேறு காட்சிக் கூடங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டையிலும் சேலத்திலும் உள்ள மாவட்ட அருங்காட்சியகங்கள் பொது மக்களுக்கு அறிவு புகட்டும் பணியை நன்முறையில் செய்வதற்கு ஏற்ற வகையில் 16 மில்லி மீட்டர் திரைப்படம் காட்டும் கருவி, துண்டுப்படம் காட்டும் கருவி ஆகியவை வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

2. சென்னையில் குழந்தைகளுக்கான அருங்காட்சியகம் விரைவில் திறக்கப்படும். சென்னை அருங்காட்சியக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள தேசீய கலைக் காட்சிக் கூடத்தின் இணைப்புக் கட்டிடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(iv) தொல்பொருள் ஆய்வுத்துறை.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தமிழகத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்; வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களை அகழ்வாய்வு செய்தல்; வரலாற்றுக்கு அடிப்படையாக அமைந்துள்ள கல்வெட்டுச் சான்றுகளை கண்டு பிடித்து படி எடுத்து நூல்களாக வெளியிடுதல்; பழங்கலைப் பொருட்களை பதிவு செய்தல்; அகழ்வாய்வு செய்யப்பட்ட இடங்களிலும் மற்றும் வரலாற்றுச் சிறப்புடைய இடங்களிலும் காட்சியகங்கள் அமைத்தல்; ஊர்கள் தோறும் ஆய்வு செய்து தொல் பொருட்கள், ஓலைச் சுவடிகள், செப்புப் படிமங்கள் ஆகியவை சேகரித்தல், பூம்புகாரையொட்டி அகழ்வாய்வு செய்



வதற்கான முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய பணிகளை 1984-85 ஆம் ஆண்டில் தொடர்ந்து செய்து வரும். 1984-85 இல் இத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 38 இலட்சமாகும். தஞ்சை மராட்டிய அரசர் காலத்திய அரண்மனையில் உள்ள தர்பார் கூடம், மணிக் கோபுரம் ஆகியவற்றையும் தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ்காரர்கள் கட்டிய கோட்டையையும் பழமை கெடாது பாதுகாப்பதற்காக 1984-85 இல் ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் ஓங்கு புகழ் எய்திய சேரர்களின் தலைநகரமாகிய கரூரில் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

2. இராசராச சோழன் முடிசூடிய ஆயிரமாண்டு நிறைவு விழாவையொட்டி, தஞ்சையில் அமைக்கப்படவிருக்கும் இராசராசனின் அருங்காட்சியகத்தினை அமைப்பதற்கும், பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1984 டிசம்பரில் நடத்தப்படவிருக்கும் இராசராசன் விழாவினைச் சிறப்புற நடத்த அரசு உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்துள்ளது. அக்குழுவின், ஆலோசனையின் பேரில் உரிய ஆக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராசராசன் கட்டிய கோயில்களைப் பற்றிய வரைபடங்கள் தயாரிக்கவும், அக்காலத்திய கல்வெட்டுக்களில் உள்ள சொற்களை மின் கணிப்புப் பொறி மூலம் வரிசைப்படுத்தி பொருள் விளக்கம் தரவும், அக்காலத்தில் ஏற்பட்ட கலை வளர்ச்சி பற்றிய ஆய்வு நூல் ஒன்று தொகுக்கவும், இவ்விழாவினை ஒட்டி வெளிநாடு மற்றும் இந்நாட்டு வரலாற்று வல்லுநர்களையும் கலை வல்லுநர்களையும் அழைத்து '' ஆசிய தொல்லியல் கருத்தரங்கு '' ஒன்றை நடத்தவும் கருதப்பட்டுள்ளது.

3. மேலும் தமிழகத்தில் கல்லூரி, பள்ளி, ஆசிரியர்கள், பழமையான எழுத்துக்களில் எழுதப்பெற்றுள்ள கல்வெட்டுக்களை படித்துத் தெரிந்து கொள்ளத் தகுதி பெறும் வகையில் திருக்கோயிலூர், பாபநாசம், மயிலாடுதுறை, சேலம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் மொத்தம் 185 ஆசிரியர்களுக்கு 1983–84-இல் கல்வெட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது.

4. வரலாற்றுச் சின்னங்களின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும், மாணவர்கள் மத்தியில் பரப்பும் வகையில் தமிழக அரசின் திரைப்படப் பிரிவின் உதவியுடன் வரலாற்றுச் சின்னங்களை 35 மி.மீ. வண்ணத் திரைப்படங்களாக தயாரித்து இத்துறை வெளியிடவிருக்கிறது.

5. தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அந்தந்த ஒன்றியத்தில் அடங்கியுள்ள வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய செய்திப் பலகைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு தொடர்பு கொண்டு இத்துறை அமைக்கவிருக்கிறது.

[1984 மார்ச் 27

6. தொல்பொருள் ஆய்வுத்துறையின் இரசாயனக்கூடத்தை மேலும் விரிவுபடுத்த எலக்ட்ரான்கள் மூலம் இயங்கும் நுண் நோக்கி ( Electron Scanning Microscope ) வாங்கப்படும். கோயில்களின் துல்லியமான வரைபடங்களை வரைவதற்காக, போட்டோ கிராமெட்டரி கருவி வாங்கவும் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

7. திருமலை மன்னரது 400-ஆவது பிறந்த நாளை நன் முறையில் கொண்டாடுவது பற்றி அரசுக்கு ஆலோசனை கூற குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை வந்து துள்ளது. அதிலுள்ள பரிந்துரைகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

## X. தமிழ் வளர்ச்சி.

### (i) தமிழ் வளர்ச்சித்துறை.

அரசு நிருவாகத்திலும், கல்வி அறிவியல் துறைகளிலும் தமிழ் மொழிப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்குத் தேவையான நட வடிக்கைகளை மேற்கொள்ளுதல் இத்துறையின் முதன்மையான பணியாகும். அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டத்தை செயற்படுத்தும் பணிகளும், தமிழ்மொழி வளர்ச்சி குறித்த பணி களும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம்:

2. தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்க முன்னேற்றம் குறித்து இத்துறையின் இயக்குநர், துறைத் தலைமை அலுவலகங் களையும், மாவட்டாட்சியர் அலுவலகங்களையும், மாவட்டத் தமிழ் வளர்ச்சி ஆய்வு உதவி இயக்குநர்கள் பிற அலுவலகங் களையும் ஆய்வு செய்துவருகின்றனர்.

3. ஆட்சி மொழித் திட்டத்தை முழு அளவில் அரசு அலு வலகங்களில் செயற்படுத்துவதற்கென 1980 ஆம் ஆண்டில் முனைப்புத் திட்டமொன்று தொடங்கப்பெற்றது. முதல் ஆண் டில் 17 அரசுத் துறைகளிலும், இரண்டாமாண்டில் எஞ்சின பிற துறைகளிலும் இத்திட்டம் செயற்படுத்தப்பெற்றது. அடுத்த நிலையில் அரசுச் செயலகம், தன்னாட்சி யுரிமை பெற்ற நிறு வனங்கள், மாநகராட்சிகள் போன்றவற்றிற்கும் இத்திட்டம் விரி வாக்கப்பட இருக்கிறது.

4. அரசு அலுவலர்களிடத்திலும், பணியாளர்களிடத்திலும் அரசின் நோக்கத்தை உணர்த்தி, ஆர்வமூட்டி, தமிழ்த்திட்டச் செயலாக்கத்தில் அவர்கள் மேலும் ஊக்கமுடன் செயல்பட மா வட்டந்தோறும் ஆட்சி மொழிக் கருத்தரங்குகளை நடத்த அரசு



1984 மார்ச் 27]

ஆணையிட்டுள்ளது. முதற் கட்டமாக 1983 டிசம்பரில் கோயம் புத்தூரிலும், 1984 பிப்ரவரியில் மதுரையிலும் அத்தகைய கருத் தரங்குகள் நடைபெற்றுள்ளன. பல்வேறு துறைப் படிவங்களும் நூல்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. பல் வேறு துறைகளுக்குரிய சிறப்புச் சொல் துணையகராதிகள் தயா ரித்து வழங்கப்பட்டு வருகின்றன.

சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்புத் திட்டம் :

5. தமிழில் சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளிலிருந்து சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், மொழி பெயர்த்து வெளியிடும் திட்டத்தின் கீழ் 1983—84-இல் 'The Vicar of Wakefield', 'The Emperor Johns' எனும் இரு ஆங்கில நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு, 1984-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16ஆம் நாள் அன்று திருவள்ளுவர் திருநாளில் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பெற்றன. இத் திட்டம் இனி தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்:

6. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் 1978 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 26 தமிழறிஞர்களுக்கு 1—4—1984 முதல் நிதியுதவியை மேலும் 3 ஆண்டுகளுக்குப் புதுப்பித்தும், புதிதாக 29 தமிழறிஞர்களுக்கு 1—4—1984 முதல் 3 ஆண்டுகளுக்குத் திங்கள் தோறும் ரூ. 250 வீதம் நிதியுதவி ஒப்பளித்தும் ஆணையிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் தற்போது நிதியுதவி பெற்று வருபவர்களின் மொத்த எண்ணிக்கை 164 ஆகும்.

தமிழில் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்:

7. தமிழில் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் 1983-84 இல் 16 நூல்களை வெளியிட நிதி யுதவி வழங்கப்பட்டது. 1984-85 இல் இத்திட்டத்திற்கு ரூ. 60,000 ஒதுக்கீடு செய்யப்பெற்றுள்ளது.

தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் :

8. தமிழில் சிறந்த நூல்கள் எழுதுவதை ஊக்குவிப்பதற்காக சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 1981, 1982 ஆகிய ஆண்டுகளில் வெளியான நூல்களில் பரிசுக் குரியன தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்கு பரிசுகள் வழங்கப்பட் டுள்ளன.

தமிழ் ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும், பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் தமிழ் வகுப்பு நடத்தவும் நிதியுதவி வழங்கும் திட்டம்:

9. வெளி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவுவதற்கும், தமிழில் பட்டய வகுப்பு நடத்தவும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் தமிழ்ப் பணி புரியும் நிறுவனங்களுக்கும் அரசு நிதியுதவி வழங்கப்படுகின்றது. 1983-84 ஆம் நிதியாண்டில் தென் மொழிகள் புத்தக நிறுவனம், பன்னாட்டு திராவிட மொழியியல் பள்ளி, ஆசிய மொழிகள் நிறுவனம், சென்னை; இந்திய மொழிகள் மைய நிறுவனம், மைசூர், திருவேங்கடவன் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டு வரலாறு எழுதும் திட்டம் :

10. **இவ்வி**யக்ககம் தமிழ்நாட்டு வரலாற்று 'நூற்கோவையின் இரு தொகுதிகளாகிய '' தொல் பழங்காலம் '' '' சங்க காலம் '' ஆகியவற்றை ஏற்கெனவே வெளியிட்டு, மூன்றாம் தொகுதியான '' பல்லவர்-பாண்டியர் காலம் '' எனும் நூலின் பெரும் பகுதி எழுதி முடிக்கப்பட்டுள்ளது. இந் நூல் விரைந்து வெளியிடப் படும். நான்காம் தொகுதியான '' சோழப் பெருவேந்தர் காலம் '' என்னும் தொகுதி எழுதப்பட்டு வருகிறது.

தமிழ் நூல் விவர அட்டவணை தயாரிக்கும் திட்டம் :

11. தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் ஓர் அங்கமான தமிழ் நூல் விவர அட்டவணை தயாரிப்புப் பணி 1960 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழ் ஆராய்ச்சியாளர் களுக்கும், அறிஞர்களுக்கும் உதவும் வண்ணம், தமிழில் அச்சாகி பதிவு பெற்ற நூல்களின் அட்டவணை இத்திட்டத்தின் கீழ் தொகுதியாக வெளியிடப்படுகிறது. 1867 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட தமிழ் நூல்களில் ஏறத்தாழ 36,000 நூல் களைப் பற்றிய விளக்கங்கள் கொண்ட தமிழ் நூல் விவர அட்டவணை நூல் தொகுதிக்குரிய 21 நூல்கள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் அறிஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் விருதுகள் :

12. ஆண்டுதோறும் அண்ணா பிறந்தநாள் விழாவில் சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவருக்கு திரு. வி. கலியாணசுந்தரனார் விருது வழங்கப்படுகிறது. இவ்விருதுடன் ரூ. 10,000 பணமும் வழங்கப்படுகிறது. 1983-ல் பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரையார் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்பெற்றது ஆண்டுதோறும் பாவேந்தர் பிறந்த நாளில் சிறந்த கவிஞர் ஒரு வருக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கப்படுகிறது. இவ் விருதுடன் ரூ. 10,000 பணமும் வழங்கப்படுகிறது. 1983-ல





கவிஞர் வகாப் அவர்களுக்கு இவ் விருது வழங்கப்பெற்றது. 1983 ஆம் ஆண்டிலிருந்து 65 வயதைக் கடந்த சிறந்த புலவர் ஒருவருக்கு திங்கள் தோறும் ரூ. 500 காணிக்கை நிதியாக வழங் கும் வகையில் இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டிற்கு பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா காணிக்கை நிதி கவிஞர் திரு. ச. சிவப்பிரகாசம் அவர் களுக்கு வழங்கப்பட்டது.

(ii) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

13. இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது உயர் நிலைத் தமிழாய்வை மேற்கொள்ள பிரெஞ்சு அகாடெமி போன்ற ஒரு தனி நிறுவனம் தேவை எனக் கருதப்பட்டு, அதற்கேற்ப உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு நிறுவப் பட்டது. கடந்த சில ஆண்டுகளாக இந் நிறுவனத்துக்கு அரசு ஆண்டுக்கு ரூ. 6 இலட்சம் மானியம் தந்து வருகிறது. தமிழிய லில் பல்வேறு புலங்களிலும் ஆராய்ச்சி செய்வதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அளித்து வருகிறது. சுமார் 20,000 புத்தகங்கள் கொண்ட நூல கம், மொழிப் பயிற்சிக் கூடம் ஆகியவை இந்நிறுவனத்தில் அமைந்துள்ளன. டாக்டர் பட்டம் மற்றும் டாக்டர் பட்டத் திற்கு மேலான நிலை ஆராய்ச்சிகள் இங்கு நடக்கின்றன. தற் பொழுது 70-க்கும் மேற்பட்டவர்கள் டாக்டர் பட்ட ஆய்வுப் பணி நிகழ்த்தி வருகின்றனர். தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரை யாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றினை இந் நிறுவனம் வெளியிட்டு வருகிறது. இலக்கியம், இலக்கணம், பண்பாடு, வரலாறு போன்ற துறைகளில் தமிழரின் மரபுச் செல்வம் பற்றிய பெருங்கருத்தரங்கு களை இந்நிறுவனம் நடத்தியுள்ளது. தமிழ் இலக்கியக் கொள் கைகள் பற்றிய கருத்தரங்குகள் 103 ஐயும் வாரக் கருத்தரங்குகள் 275 ஐயும் ஆய்வாளர் கருத்தரங்குகள் 70-ஐயும் நடத்தியுள்ளது. தமிழ் இலக்கியம், மொழியியல், வரலாறு பற்றிய சிறந்த நூல் களும், இதுகாறும் வெளியிடப்படாத சில ஓலைச்சுவடிகளின் அச்சிட்ட வடிவங்களுமாக இதுவரை 86 சிறந்த நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நிறுவனம் '' சுவடியியல்'' '' மொழி பெயர்ப்பியல் '' எனும் பட்ட மேற்படிப்பு, பட்டய வகுப்புகளையும் நடத்தி வருகிறது.

14. சிங்கப்பூர், மொரிசியஸ் போன்ற நாடுகளில் குடி யேற்றம் பெற்றுள்ள தமிழ்ச் சந்ததியினர் தானே தமிழ் கற்கும் வகையில், சுற்றுப்புறச் சூழல் அடிப்படையிலமைந்த வகையில் பேச்சுத் தமிழ், இலக்கியத் தமிழ் பாடங்கள் ஒலிப்பதிவு நாடாக் களில் பதிவு செய்யப்பெற்று, பாடப் புத்தகத்துடன் தயாரிக்கப் பட்டு வெளியிடத் தயாராகவுள்ளன. '' ஒலிப்பதிவு நாடாக்க ளில் தமிழ் '' எனும் இந்தத் திட்டப் பணி தமிழில் முதன் முத லாகச் செய்யப்பட்டுள்ள சிறந்த முயற்சியாகும்.

(iii) தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

15. தமிழ்ப் பல்கலைக் கழகம் 15—9—1981 அன்று தொடங்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்திற்கு தஞ்சாவூரில் சுமார் 1,000 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டட வேலைகள் நடந்து வருகின்றன. இப்பல்கலைக் கழகம் தொடங்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதுடன், அக்குழுவிடம் மானியம் பெறும் தகுதியையும் பெற்றுள்ளது. தமிழியலின் பல்வேறு புலங்களில் அந்தந்தப் புலத்தில், மட்டுமின்றி ஒன்றுக்கு மேற்பட்ட புலங்களைச் சேர்ந்த விரிவான ஆராய்ச்சித் திட்டங்களையும் இப்பல்கலைக் கழகம் நடத்துகிறது. சிறந்த நூல்களும் ஓலைச் சுவடிகளும் கொண்ட நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் கலைகளையும், பண்பாட்டையும் காட்டும் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அச்சுப் பிரிவு ஒன்று ; நிழற்படப்பிரிவு ; நுண்நிழற் படப்பிரிவு ; மின்கணிப்புப் பொறிப் பிரிவு ஆகியவையும் நிறுவப்பட்டுள்ளன. பலதரப்பட்ட புலங்களிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. படிப்பு மற்றும் ஆராய்ச்சிக்குப் பின் வழங்கும் டி.எஸ்.சி.டி. லிட். பட்டங்களை இப்பல்கலைக் கழகம் வழங்கும். இந்தியாவில் அல்லது வெளி நாட்டில் பி.எச்.டி. பட்டம் பெற்றவர்களும், ஆராய்ச்சித் திறனை நிறுவியவர்களும் மட்டுமே இப்பல்கலைக் கழகத்தில் டி.லிட். தகுதி பெறச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

பாரதியார் நூல்கள் வெளியீடு :

16. பாரதியார் நூல்கள் அனைத்தையும் நன்முறையில் அச்சிட்டு வெளியிடும் பணியை இப்பல்கலைக் கழகத்துக்கு அரசு ஒப்படைத்துள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டம் :

17. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் முதல் மடலத்தின் முதற் பகுதி மொழியியல் அறிஞர் மறைந்த திரு. தேவநேயப்பாவாணர் அவர்கள் தொகுத்தது—தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் மூலம் அச்சிடப்பட்டு வருகிறது. அவ்வகர முதலியின் பிற தொகுதிகளைத் தொகுக்கும் பணி இனி தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையின்கீழ் தொடரும்.

தமிழ்க் கலைக் களஞ்சிய மையம் :

18, தமிழில் சிறந்த கலைக் களஞ்சியம் உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழில் அறிவியல் கலைக் களஞ்சியம் ஒன்றை 20 மடலங்களிலும் அறிவியல் அல்லாத துறைகளுக்கான (Humanities) கலைக் களஞ்சியம் ஒன்றை 14 மடலங்களிலும் வெளியிடத் திட்டம் தீட்டியுள்ளது. அப்பல்கலைக் கழகத்தின் கலைக் களஞ்சிய மையம் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதியின் (லெக்சிகன்) முழுமையான திருத்திய வடிவம் ஒன்றை (தமிழில் இலக்கிய வழக்கிலும், பேச்சு வழக்கிலும் உள்ள அனைத்துச் சொற்களையும் மற்றும் அறிவியல் துறைகளிலும் பிற துறைகளிலும் உள்ள அனைத்துச் சொற்களையும் கொண்டதாக) வெளியிட தஞ்சையில் ஒரு மையத்தை இப்பல்கலைக் கழகம் அமைத்துள்ளது.



19. உதகமண்டலத்தில் பழங்குடிகள் பண்பாட்டு ஆய்வு மையம் ஒன்றையும் இப்பல்கலைக் கழகம் அமைத்துள்ளது. காஞ்சிபுரத்தில் இந்து அறநிலையத் துறை தரும் ரூ. 15 இலட்சம் மானியத்தைப் பயன்படுத்தி சைவ, வைணவ மற்றும் வேதாந்தத் தத்துவங்கள் குறித்து ஆய்வு செய்யும் மையம் ஒன்றையும் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்துள்ளது.

(IV) உலகத் தமிழ்ச் சங்கம்.

20. உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் நிறுவ நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் நிர்வாகக் குழுவை அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(XI) தமிழ்க் கலைகளும், பண்பாடும்.

தமிழகத்தின் தொன்மை வாய்ந்த பண்பாட்டையும், புகழ்மிக்க பழங்கலைகளையும் இனந்தெரிந்து வளர்க்கவும், அவற்றிற்குப் புத்துயிரும், புதுப்பொலிவும் நல்கவும் தமிழக அரசாங்கம் தொடர்ந்து பல அரிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. செய்தி சுற்றுலா மற்றும் (தமிழ்) பண்பாட்டுத் துறையின்கீழ், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்ப் பழங்கலை இயக்குநகரம், தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு. தமிழ்நாடு இசைக் கல்லூரிகள் முதலிய கலைப் பெரும் அமைப்புக்கள் இந்த முக்கியப் பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.

2. கடந்த 28 ஆண்டுகளாக இசை நாட்டியம், நாடகம் ஆகியவைகளின் வளர்ச்சிக்குப் பல முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 1983-84லிலும் பல முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. தலைசிறந்த கலைஞர்கள் 30 பேருக்கு கலைமாமணி

விருது அளித்து கௌரவித்தது, முந்தைய ஆண்டுகளில் 601 கலைப் பெருமக்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர். திறமைமிக்க இளங் கலைஞர்கள் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 26 கலைஞர்களுக்கு 14 சபாக்களின் மூலமாக நிகழ்ச்சிகள் நடத்த உதவியளித்துள்ளது,

3. மாநிலங்களிடையே கலாச்சார பரிவர்த்தனை திட்டத்தின் கீழ் கலைக்குழுக்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1983-84-ல் தமிழ்நாட்டுக் கலைக்குழு மகாராஷ்டிரா மாநிலம் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தியது. இராஜஸ்தான் கலைக்குழு தமிழ்நாட்டுக்கு வந்து கலை நிகழ்ச்சி நடத்தியது.

4. கிராமியக் கலைகளைப் பேணிப் பாதுகாத்துப் பிரபலப் படுத்தும் வகையில் அக்கலைகளில் ஆர்வமுள்ள இளங்கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து, சிறப்புப் பயிற்சி அளிக்க கிராமியக் கலை நிறுவனம் ஒன்று தொடங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு

5. தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு பின் வரும் சிறப்புத் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

(அ) தமிழ்நாட்டின் உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடையே நுண்கலையறிவைப் பேணி வளர்க்கவும் புதிய அணுகுமுறை நுணுக்கங்களைக் கற்பிக்கவும் உதவும் வகையில் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு ''ஓவிய ஆசிரியர் சிறப்புப் பயிற்சித் திட்டம்'' ஒன்றினைச் செயற்படுத்தி வருகின்றது. இத் திட்டத்தின்கீழ் இதுவரை சுமார் 240-க்கும் மேற்பட்ட ஓவிய ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுப் பலனடைந்துள்ளார்கள். மாநிலந் தழுவிய வரவேற்பையும் ஒத்துழைப்பையும் பெற்றுள்ள இத்திட்டம் 1984-85 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும். மேலும் ஓவியக் கலை வல்லுநர்கள் கையாளும் நவீன முறைகள் பற்றியும் நவீன ஓவியத்தின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையையும் விளக்கும் வரை முறைப் படங்களை விளக்கவுரையுடன் திரைப்படமாகவும் ''வீடியோ'' பதிவாகவும் எடுத்துப் பயிற்சி வகுப்புகளில் பங்கு பெறும் ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மாநிலங்களுக்கிடையே நுண்கலைக் காட்சி நடத்தும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு இவ்வாண்டு ஒரிசா மாநிலத்தைச் சார்ந்த ஓவியக் காட்சியொன்றையும் மணிப்புரியைச் சேர்ந்த ஓவியக் காட்சியொன்றையும் தமிழகத் தலைநகரான சென்னையில் சிறப்பாக நடத்தியுள்ளது.





(இ) ''நுண்கலை'' என்ற பெயரில் ஒரு புத்தகம் அரையாண்டிற்கொருமுறை குழுவினால் வெளியிடப்பட்டு வருகிறது.

(ஈ) தமிழகத்திலுள்ள சிறந்த ஓவியக் கலைஞர்களின் திறமை மிக்க ஓவியங்களை சுற்றுலாத் துறையின் உதவியுடன் அஞ்சலட்டைகளாகத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

(உ) ஓவியம் மற்றும் சிற்பக் கலைத் துறைகளில் அரும்பணி ஆற்றிய கலைஞர்களைச் சிறப்பிக்கும் வண்ணம், ஆண்டுதோறும் இரண்டு சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொருவருக்கும் ''கலைச்செம்மல்'' என்ற விருதையும் ரூ. 5,000 பணமுடிப்பையும் வழங்கி வருகிறது.

அரசு இசைக் கல்லூரிகள்.

6. சென்னையிலும், மதுரையிலும் உள்ள அரசு இசைக் கல்லூரிகளும், திருவையாற்றில் உள்ள கீழ்த் திசைக் கல்லூரியின் இசைப் பிரிவும், இசையையும் பரத நாட்டியத்தையும் தொடர்ந்து பயிற்றுவித்து வருகின்றன. இசைப் பாடல்களைக் கற்கும் மாணவர்கள் பாடல்களின் பொருளை முதலில் உணர்ந்து பின் முறையாக இசையமைப்பைக் கற்றுக்கொள்ள 1983-84 ஆம் ஆண்டில் அரசு இசைக் கல்லூரிகளில் மொழி விரிவுரையாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், கடம், கஞ்சிரா, நுகர் சங்கம் மற்றும் நட்டுவாங்கம் ஆகிய புதிய வகுப்புகள் இக் கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வகுப்புகளில் சேர்ந்து பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்தப் பாரம்பரியமிக்க நுண்கலை வடிவங்களை நன்முறையில் பாதுகாத்து வளர்க்க தனிக் கவனம் செலுத்தப் படுகிறது.

தமிழ்ப் பழங்கலை இயக்ககம்.

7. 1981 ஆம் ஆண்டு புதியதாக தோற்றுவிக்கப்பட்ட இவ்வியக்ககம் தமிழ்ப் பழங்கலைகளைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. தமிழ் முனிவர் என்று போற்றப்படும் அகத்தியர் வாழ்ந்ததாகக் கூறப்படும் பொதிகை மலையை முண்டந்துறை, தோவாளை, குற்றாலம், செங்கோட்டை, களக்காடு, மணிமுத்தாறு ஆகிய ஆறு இடங்களில் முகாம் அமைத்து தேசியப் பணித் திட்டத்தில் ஈடுபட்ட 300 மாணவர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் மூலம் தமிழ் வரலாற்றின் தொன்மையை நிறுவக் கூடியதுமான அரிய குறியீடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் கண்டு பிடித்த ஆதாரங்களைக் கொண்டு அகத்தியர் பற்றிய முழு விவரங்களையும் தமிழரின் தொன்மைப் பண்பாட்டையும் நாகரீகச் சிறப்பையும் தமிழ் பழமையையும் எடுத்துக் காட்டும் ஒரு நூலாக வெளியிடும் திட்டமும் உள்ளது.

8. வரும் 1984-85 ஆம் ஆண்டில் இவ்வியக்ககம் நடைமுறை வழக்கமான செயல் திட்டங்களுடன், பின்வரும் பல புதிய திட்டங்களையும் நிறைவேற்றும் :—

(1) கிராமப் பண்பாட்டு வரலாற்றையும் தொன்றுதொட்டு வழங்கி வருகின்ற கிராமக் கலைகளின் வளர்ச்சியையும் சான்றுகளோடு சேகரித்து புத்தகமாக வெளியிடும் நோக்கத்துடன் செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தொகுப்புக்கள் எடுக்கப்பட்டு வல்லுநர் குழுவின் அங்கீகாரம் பெற்ற பின்னர் புத்தகங்களாக வெளியிடப்படும்.

(2) பண்டைத் தமிழ் மன்னர்கள் மூவரின் வள்ளன்மையை பற்றி 3 திரைப் படங்கள் தயாரிக்க தமிழ்நாடு திரைப் படத் துறையுடன் சேர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு அப்படங்கள் விரைவில் திரையிடப்படவிருக்கின்றன.

(3) நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆன்றோர்களையும் கலை வல்லுநர்களையும் பல தொழில் அறிவு நிறைந்தவர்களையும் அணுகி அவர்தம் அனுபவங்களையும் கருத்துக்களையும் உரையாற்றச் செய்து அவற்றை ஒலிப்பதிவு செய்து பாதுகாத்து வைத்தால் இன்றைய தலைமுறையினருக்கும் வருங்கால சமுதாயத்திற்கும் பெரும் பயன் விளையும். இதற்காக தமிழ் பழங்கலை இயக்ககம் தமிழறிஞர் உரைகளைப் பாதுகாக்கும் திட்டம் என்ற புதிய திட்டத்தினை உருவாக்கி 1984-85-ல் முதற் கட்டமாக ரூ. 1 லட்சம் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாழ்வில் நலிந்த வயது முதிர்ந்த கலைஞர்களுக்கு மானிய உதவி.

9. வறுமையில் வாடும் 1,616 கலைஞர்கள் மாதந்தோறும் இத் திட்டத்தின்கீழ் மாதம் ரூ. 150 வீதம் ஓய்வூதியம் அரசிடமிருந்து பெற்று வருகின்றனர். இந்த ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு அளிக்கப்பட்டு மீண்டும் மூன்று ஆண்டிற்கு ஒரு முறை ஓய்வூதியம் பெறுபவர்களின் பொருளாதார நிலைமையின் அடிப்படையில் புதுப்பிக்கப்படுகின்றது. 1984-85 ஆம் ஆண்டில் இந்த ஓய்வூதிய திட்டத்திற்கு மொத்தம் ரூ. 32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் 200 கலைஞர்களுக்குப் புதிதாக நிதியுதவி அளிக்கப்படும்.

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர்



## இணைப்பு 1.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

| (1) | 1973-74. (2) | 1976-77. (3) | 1982-83. (4) | 1983-84. (5) |
|---|---|---|---|---|
| | | (மாணவர்கள் இலட்சத்தில்) | | |
| அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை— | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | |
| சிறுவர் .. .. | 30.45 | 31.93 | 34.88 | 35.49 |
| சிறுமியர் .. .. | 29.79 | 31.23 | 34.07 | 34.67 |
| மொத்தம் .. | 60.24 | 63.16 | 68.95 | 70.16 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | |
| சிறுவர் .. .. | 13.71 | 14.37 | 15.70 | 15.97 |
| சிறுமியர் .. .. | 13.40 | 14.05 | 15.33 | 15.60 |
| மொத்தம் .. | 27.11 | 28.42 | 31.03 | 31.57 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1982-83இலிருந்து)— | | | | |
| சிறுவர் .. .. | 11.31 | 11.86 | 8.77 | 8.92 |
| சிறுமியர் .. .. | 11.07 | 11.60 | 8.57 | 8.72 |
| மொத்தம் .. | 22.38 | 23.46 | 17.34 | 17.64 |

1982-83லும் 1983-84லும் பல்வேறு வயதுத் தொகுதியினர் எண்ணிக்கை பின்வருமாறு கணக்கிடப்பட்டது—அதாவது 1981 சென்சஸ்படி தமிழக மொத்த மக்கள் தொகையை எடுத்துக் கொண்டு, அந்தந்த வயதுத் தொகுதியினர் 1971 சென்சஸ்-இல் எத்தனை சதவீதம் இருந்தனரோ அதே சதவீதம் 1981லும் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதாகும்.

| (1) | 1973-74 (2) | 1976-77 (3) | 1982-83 (4) | 1983-84 (5) |
|---|---|---|---|---|
| ஆ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை— | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | |
| சிறுவர் .. .. .. | 30.64 | 32.02 | 36.11 | 37.24 |
| சிறுமியர் .. .. .. | 23.74 | 25.50 | 30.22 | 31.50 |
| மொத்தம் .. | 54.38 | 57.52 | 66.33 | 68.74 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | |
| சிறுவர் .. .. .. | 9.10 | 9.74 | 12.56 | 13.29 |
| சிறுமியர் .. .. .. | 5.09 | 5.76 | 7.93 | 8.62 |
| மொத்தம் .. | 14.19 | 15.50 | 20.49 | 21.91 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1982-83விருந்து)— | | | | |
| சிறுவர் .. .. .. | 4.97 | 5.34 | 4.79 | 5.06 |
| சிறுமியர் .. .. .. | 2.42 | 2.68 | 2.59 | 2.85 |
| மொத்தம் .. | 7.39 | 8.02 | 7.38 | 7.91 |
| இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்— | | | | |
| வயதுத் தொகுதி 6-11— | | | | |
| சிறுவர் .. .. .. | 100.6 | 100.3 | 103.52 | 104.92 |
| சிறுமியர் .. .. .. | 79.6 | 81.7 | 88.71 | 90.85 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 90.2 | 91.7 | 96.20 | 97.90 |
| வயதுத் தொகுதி 11-14— | | | | |
| சிறுவர் .. .. .. | 66.3 | 67.3 | 80.04 | 83.18 |
| சிறுமியர் .. .. .. | 37.9 | 41.0 | 51.69 | 55.28 |
| சிறுவரும் சிறுமியரும் .. .. | 52.3 | 54.4 | 66.03 | 69.40 |
| வயதுத் தொகுதி 14-17/14-16 (1982-83விருந்து)— | | | | |
| சிறுவர் .. .. .. | 43.0 | 44.9 | 54.60 | 56.78 |
| சிறுமியர் .. .. .. | 21.8 | 23.1 | 30.26 | 32.67 |
| சிறுவரும் சிறுமியரும் .. .. | 33.0 | 34.1 | 42.57 | 44.87 |
| ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை— | | | | |
| முதல் நிலைப் பள்ளிகள் .. | 26,726 | 27,306 | 28,290 | 28,548 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 5,773 | 5,730 | 5,565 | 5,635 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,823 | 3,020 | 2,260 | 2,351 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. .. | .. | .. | 1,416 | 1,427 |
| மொத்தம் .. .. | 35,322 | 36,056 | 37,531 | 37,961 |

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10 ஆம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்:—

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை : | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 1,06,332 | 1,11,033 | 1,14,713 | 1,15,705 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 66,843 | 67,846 | 66,299 | 66,399 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 65,959 | 72,838 | 34,841 | 36,831 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. .. | .. | .. | 60,517 | 62,087 |
| மொத்தம் .. | 2,39,134 | 2,51,717 | 2,76,370 | 2,81,022 |

ஊ. சராசரி ஒரு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை :

(1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)—

| | | | | |
|---|---|---|---|---|
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 35 | 36 | 41 | 41 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 33 | 33 | 39 | 40 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 24 | 24 | 24 | 27 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 27 | 26 |



(2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)—

| | | | | |
|---|---|---|---|---|
| முதல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 37 | 36 | 39 | 40 |
| நடுநிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 33 | 33 | 33 | 34 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 29 | 30 | 24 | 24 |
| மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | .. | .. | 20 | 20 |

1983-84 இல் (1983 அக்டோபர் மாதம் 1ஆம் நாள் நிலவரப்படி) தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக் கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த புள்ளி விவரங்கள்.

| பள்ளிகளின் வகைகள். | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள். (இலட்சத்தில்) | ஆசிரியர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதல் நிலைப் பள்ளிகள் — | | | |
| அரசு .. .. .. | 1,438 | | |
| நகராட்சி .. .. .. | 1,123 | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 20,991 | | |
| தனியார் .. .. .. | 4,996 | | |
| | 28,548 | 48.06 | 1,15,70[illegible] |

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| நடுநிலைப் பள்ளிகள் : | | | | |
| அரசு .. .. .. | 225 | | | |
| நகராட்சி .. .. .. | 403 | 5,635 | 27.16 | 66,399 |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 3,039 | | | |
| தனியார் .. .. .. | 1,968 | | | |
| மொத்த தொடக்கப் பள்ளிகள் .. | .. | 34,183 | 75.22 | 1,82,104 |
| உயர்நிலைப் பள்ளிகள்—சாதாரணம் : | | | | |
| அரசு .. .. .. | 1,621 | | | |
| நகராட்சி .. .. .. | 72 | 2,141 | 8.97 | 32,048 |
| தனியார் .. .. .. | 448 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | .. | 18 | 0.12 | 414 |
| மெட்ரிகுலேஷன் .. .. | .. | 93 | 0.40 | 1.741 |
| சி.பி. எஸ். ஈ. முதலியன .. .. | .. | 99 | 0.50 | 2,628 |
| மொத்த உயர்நிலைப் பள்ளிகள் | .. | 2,351 | 9.99 | 36,831 |



| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளிகள்—சாதாரணம் : | | | | |
| அரசு .. .. .. | 645 | | | |
| அரசு (தொழில் நுட்பம்) .. | 14 | 1,292 | 14.97 | 56,333 |
| நகராட்சி .. .. .. | 61 | | | |
| தனியார் .. .. .. | 572 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | .. | 26 | 0.30 | 876 |
| மெட்ரிகுலேஷன் .. .. | .. | 52 | 0.52 | 2,158 |
| சி. பி. எஸ். ஈ. போன்ற பள்ளிகள் | .. | 57 | 0.64 | 7,720 |
| மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள் | | 1,427 | 16.43 | 62,087 |
| மொத்தம் உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள். .. .. | | 3,778 | 26.42 | 98,868 |
| மொத்தம் (அனைத்துப் பள்ளிகளும் சேர்த்து) .. .. .. | | 37,961 | 101,64 | 2,81,022 |

மாணவர் 57.47 இலட்சம்.

மாணவியர் 44.17 இலட்சம்.

நிருவாக வாரியாக 1983-84 ஆம் ஆண்டில் இருந்த பள்ளி ஆசிரியர்களின் விவரங்கள்.

| | அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்கள். | | | | | ஆசிரியர் விவரங்கள். | |
|---|---|---|---|---|---|---|---|
| | அரசுப் பள்ளிகள். | ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். | நகராட்சி. | தனியார். | மொத்தம். | ஆண். | பெண். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| தொடக்கப் பள்ளிகள் .. | 6,994 | 70,066 | 9,502 | 29,143 | 1,15,705 | 71,263 | 44,442 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 3,166 | 27,284 | 7,045 | 28,904 | 66,399 | 34.051 | 32,348 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 23,443 | .. | 1,487 | 11,901 | 36,831 | 22,418 | 14,413 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 27,127 | .. | 3,373 | 31,587 | 62,087 | 38,636 | 23,451 |
| மொத்தம் .. | 60,730 | 97,350 | 21,407 | 1,01,535 | 2,81,022 | 1,66,368 | 1,14,654 |



இணைப்பு II.

கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். | 1973-74. | 1976-77. | 1982-83. | 1983-84. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | |
| (1) புகுமுக வகுப்பு .. .. | 72,646 | 84,257 | .. | .. |
| (2) பி.ஏ. .. .. .. | 51,698 | 44,697 | 61,896 | 62,894 |
| (3) பி.எஸ்.சி. .. .. | 49,057 | 48,110 | 78,356 | 79,550 |
| (4) பி.காம். .. .. .. | 14,859 | 19,195 | 29,206 | 30,877 |
| (5) பட்ட மேற்படிப்பு .. | 6,993 | 7,043 | 13,207 | 14,708 |
| மொத்தம் .. | 1,95,253 | 2,03,302 | 1,82,665 | 1,88,029 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| (2) ஆசிரியர்களின் எண்ணிக்கை — | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. | 2,969 | 3,733 | 4,285 | 4,272 |
| (2) தனியார் கல்லூரி, சென்னை. | 7,090 | 7,883 | 9,123 | 9,448 |
| மொத்தம் .. | 10,059 | 11,616 | 13,408 | 13,720 |
| 3. கல்லூரிகளின் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசு .. .. .. | 51 | 51 | 53 | 53 |
| (2) தனியார் .. .. .. | 127 | 138 | 134 | 134 |
| மொத்தம் .. .. | 178 | 189 | 187 | 187 |



பிற கல்லூரிகளுக்கான 1983-84 ஆம் ஆண்டு விவரங்கள்.

| வகை. | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | மாணவர் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| | அரசு. | தனியார். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) கல்வியியற் கல்லூரிகள் .. | 7 | 16 | 2,880 | 236 |
| (2) உடற்பயிற்சிக் கல்லூரிகள் .. | .. | 4 | 423 | 41 |
| (3) புலவர் கல்லூரிகள் .. .. | .. | 15 | 1,481 | 143 |
| (4) சமுதாயப் பணிப்பள்ளி .. | .. | 2 | 252 | 16 |
| (5) கிராமப்புற உயர்கல்வி நிலையம். | .. | 1 | 609 | 83 |
| (6) இசைக் கல்லூரிகள் .. .. | 2 | .. | 505 | 50 |
| மொத்தம் .. | 9 | 38 | 6,150 | 569 |

## இணைப்பு III.

### 1983-84-ல் தொழில் நுட்பக் கல்வி பற்றிய விவரங்கள்.

| (1) | கல்வி நிலையங்களின் எண்ணிக்கை. (2) | மொத்த மாணவர் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1. பொறியியற் கல்லூரிகள்— | | |
| (1) அரசு .. .. .. .. .. .. | 4 | 8,397 |
| (2) தனியார் .. .. .. .. .. .. | 3 | |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. .. .. | 7 | 7,395 |
| 2. பாலிடெக்னிக்குகளும், சிறப்புப் பட்டயப் படிப்பு நிலையங்களும்— | | |
| (1) அரசு .. .. .. .. .. .. | 23 | |
| (2) தனியார் .. .. .. .. .. .. | 51* | 25,655 |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. .. .. | 1 | |
| 3. தொழிற் பாட மேல்நிலைப் பள்ளிகள்— | | |
| (1) அரசு .. .. .. .. .. .. | 11 | 1,680 |
| (2) தனியார் .. .. .. .. .. | 3 | |
| மொத்தம் .. | 103 | 43,127 |

* 1983-84-ல் " தனியார் நிருவாகங்கள் தங்கள் முழுச் செலவில் நடத்தும் பாலிடெக்னிக்குகள் " திட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட 15 பாலிடெக்னிக்குகளும் இவ்வெண்ணிக்கையில் அடங்கும்.

தமிழ்நாடு சட்டப்பேரவை நூலகம் சென்னை-600 008. 14389 4
D
V21:32'r'84
N84-2073

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras 3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Com pany, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode 1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gur gaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

---

© TAMIL NADU LEGISLATIVE COUNCIL SECRETARIAT—PUBLISHED UNDER RULES 196 AND 199 OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.